காதல்

A/503
1038

599 — A/361

வாண்டா வாஸிலெவ்ஸ்கா

ருஷ்யாவின் பிரபல எழுத்தாளர்
களில் ஒருவரான ஸ்ரீமதி வா
வாஸிலெவ்ஸ்கா இந்த நாவ
காதலைப் பற்றிய கதை—
யாகவே எழுதியிருக்கிறார்.
துப் பாருங்கள். இது ஓர் உ
காதல் சித்திரம்.

★

ரூபாய்: மூன்றே முக்கால்
(தபால் செலவு தனி)

A/503

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

~~519~~ ~~A/361~~

ACL.MKU
01010

503

வாண்டா வாஸிலெவ்ஸ்கா

எழுதிய

276

காதல்

(ஓர் அரிய நாவல்)

599 361

தமிழாக்கியவர்:

ஆர். எஸ். ருக்மிணி, எம். ஏ.,

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்

பவானி பிரசுரம்

ராயவரம், புதுக்கோட்டை சமஸ்தானம்

முதல் வெளியீடு ஜூலை 4, 1946
உரிமை பதிவு செய்யப்பெற்றது

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 628
நன்கொடை எண்: 628

ரூபாய் : மூன்றே முக்கால்

(தபால் செலவு தனி)

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க.சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

சக்தி பிரஸ் லிமிடெட்
(சாந்தி பிரஸ்)
ராயப்பேட்டை, சென்னை

பதிப்புரை

இந்நூலாசிரியர் எழுதிய 'வானவில்' என்ற நூலை இரண்டு மாதங்களுக்கு முன் வெளியிட்டோம். 'வானவில்' தமிழ் மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கிறதென்பதற்கு வெளியிட்ட கொஞ்ச நாட்களில் முக்கால்வாசி புத்தகம் விற்றுத் தீர்ந்தது ஓர் அறிகுறி. 'காதல்' எனும் இந்த நாவல் முழுதும் அன்பு கனிந்த—காதல் கனிந்த ஓர் இனிய இலக்கியம்—கவிதை யென்று கூடச் சொல்லலாம்.

இந்த அருமையான நூலை ஸ்ரீமதி ருக்மிணி தமிழாக்கி யிருக்கிறார்கள். இந்த நூலை தமிழாக்குவதில் ஸ்ரீமதி ருக்மிணி மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டார். அவருக்கு எங்கள் நன்றி.

பவானி பிரசுரம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்

காதல்

மரியா, தான் அணிந்திருந்த வைத்திய சாலை - வெள்ளை - மேலங்கியைக் கழற்றி வைத்தாள்.

குழாயைத் திருப்பினாள். ஜலம் சிறு தாரையாக வடிந்தது. இருபத்து நான்கு மணி நேரமாக ஓய்வில்லாமல் செய்து வந்த வேலைக்கு ஒரு முடிவு வந்து விட்டது. வைத்திய சாலைக்கு வெளியிலே இன்னும் இருட்டாகவே இருந்தது. என்றாலும், மரங்களின் வரி-வடிவம் ஆகாசத்தின் வெளிறிய பின்னணித் தோற்றத்திலே தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. அவள் சிநேக பாவத்தோடு அந்தப் புதிய நாளை வரவேற்றாள். கனத்த மழையாகப் பெய்யாமல் இருந்தால், வீட்டுக்கு உல்லாசமாக நடந்து போகலாம் என்று நினைத்தாள். அப்படிப் பெய்தால்தான் என்ன? நடந்தே போகலாம்; உடம்பில் படும் குளிர்ந்த மழைத் துளியையும், இன்பமான காற்றையும் அனுபவிக்கலாம்; நடக்கும்போது தெறித்து விழும் சேற்றின் ஓசையையும் கேட்கலாம் அல்லவா? வெகு நாட்களுக்கு முன்பு, சிறுமியாக இருந்த பொழுது, இந்த மாதிரியான மழை-நாட்களையே அவள் விரும்பினாள். புயல் - காற்றிலே வீட்டை விட்டு வெளியே ஓடுவாள். காற்று அவளுடைய பாவாடையைப் பற்றி இழுக்கும். முகத்திலே மழை அடிக்கும். கூந்தலிலிருந்து தண்ணீர் வடியும். மழைத் துளி விழுந்தோறும் சேற்றிலே சிறிய ஊற்றுக்கள் தோன்றும். இவைகளை எல்லாம் அவளுடைய மனம் பூரித்து மகிழ்ந்து அனுபவிக்கும். இப்படி மழையில் நனைந்து மகிழ்ந்து விளையாடி வீட்டுக்குத் திரும்புவாள். வந்ததும் வீட்டிலே தொல்லைதான். 'பாதரட்சை நனைந்து ஊறி விடும். உடையெல்லாம் சுருங்கிப் போகும். கூந்தல் - நாடாவின் அழகு கெட்டுவிடும்;' ஆகையால் அவளுடைய தாயார் ஓயாமல் முணுமுணுப்பாள்.

திரும்பவும் காற்றும் மழையும் வந்து 'வெளியே வா' என்று அவளை அழைத்து மயக்கி விட்டால், தன் சுய புத்தியைக் காற்றுப் போக்கிலே பறக்க விடுவாள்; வெளியே சுற்றி ஓடி ஆடுவாள்; பொங்கி எழும் களிப் போடு மழையிலே முகத்தை அண்ணாந்து காட்டுவாள்.

இந்தப் பழைய நினைவுகள் உதிக்கவே, மரியா முகத்தில் புன்னகை பூத்தது. ஆமாம்; அதே மன - ஏக்கங்கள் அவள் உள்ளத்திலே எழுந்தன. இதைத்தான் அவளுடைய தாயார் 'காட்டுமிருண்டித் தனம்' என்று குறிப்பிடு வது வழக்கம். ஆனால், இந்தக் காலத்திலோ, பாதரட்சை களைப் பற்றி ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேணும். ஆகையால், வழக்கம்போல டிராமிலே ஏறிக்கொண்டு வீட்டுக்குப் போக வேண்டியதுதான். அப்புறம், தூக்கம், தூக்கம், தூக்கம்! இருபத்து நாலு மணி நேரமாக விழித் திருந்ததற்கு வட்டியும் முதலுமாகத் தூக்கம்!

கதவு படாரென்று திறந்தது.

"மரியா, வா! அவன் கத்துகிறான்! மிகவும் பயங் கரமாகக் கத்துகிறான்!"

மரியா வெகு பரபரப்போடு கைகளைத் துடைத்துக் கொண்டாள்; திரும்பவும் மேலங்கியை அணிந்தாள்; அவ சரத்திலே சிக்கலாய்ப் போன நாடாக்களை அறுத்து எறிந்தாள்.

"எனக்கு ரொம்ப வருத்தம். நீ ரொம்பக் களைத்துப் போயிருக்கிறாய். ஆனால்........"

"உளறாதே ரயா. வா, போகலாம்."

சிவப்பு - நடைபாய் விரித்திருந்த நடை - பாதை வழியே அவர்கள் இருவரும் நடந்தார்கள். நோயாளி கள் படுத்திருந்த அறைகளின் கதவுகள் பாதி திறந்திருந் தன. மருந்துகளின் வாசனை அடித்தது. ஒருவனைத் தள்ளு வண்டியில் வைத்துத் தள்ளிக்கொண்டு போனார்கள். இன்னொருவனை மிகுந்த பரபரப்போடு ரண - சிகிச்சை செய்யும் அறைக்குத் தள்ளிக் கொண்டு போனார்கள்.

"நான் அவனுக்கு ஒன்றுமே செய்ய முடியாது" என்றாள் ரயா. மரியா அதைக் காதிலே வாங்கிக் கொள்ளவில்லை. ஒரு சிறு அறைக்குள் செல்லும் கதவைத் திறந்தாள். திரும்பவும் விரைவிலே அதை மூடினாள். இரண்டு நர்ஸுகள் ஒரு கட்டிலின் மேல் குனிந்து, காயம் அடைந்த ஒருவனைத் தாங்கியபடியே, ஏக காலத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். காயம் அடைந்தவன் அவர்கள் பிடியில் இருந்து விடுதலை அடையத் திமிறிக் கொண்டு இருந்தான்.

அந்த நோயாளியின் தலையிலிருந்த காயங்களைச் சல்லாத் துணியால் கட்டியிருந்தது. அவன் வெள்ளைத் துணியால் சுற்றிய பிரேதம்போல் தோன்றினான்.

"மாட்டேன்! மாட்டேன்! எனக்கு நீங்கள் வேண்டாம்! நீங்கள் யாருமே வேண்டாம்! இங்கிருந்து போங்கள். உங்களால் எனக்கு ஒரு நன்மையும் இல்லை."

மரியா மெதுவாகக் கட்டிலருகே சென்றாள். கட்டுப் போட்டிருந்த தலையில் தன் கையை ஆதரவோடு வைத்தாள். ஒன்றின்மேல் ஒன்றாகக் கட்டி இருந்த கட்டுகளினிடையில் இருந்து கரு விழி ஒன்று அவளை வெறித்துப் பார்த்தது.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று உறுமினான் அந்த நோயாளி; என்றாலும், அங்கு நிற்பது மரியாதான் என்பதை உணர்ந்தபோது அமைதியடைந்தான்; அப்படியும் இப்படியும் அசைந்து ஆடுவதை நிறுத்தினான்.

"என்ன இது? ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாய்? உனக்கே வெட்கமாக இல்லையா? இப்படி எல்லாம் ஆர்ப்பாட்டம் செய்யலாமா?"

கூட இருந்த நர்ஸுகளுக்கு, அறையைவிட்டு வெளியே செல்லும்படி குறிப்பாக உணர்த்தினாள். அவர்கள் அந்தக் குறிப்பை உணர்ந்தார்கள்; அறையை விட்டுச் சந்தடி செய்யாமல் நழுவினார்கள்.

"நான் இதையே நூறு தடவை சொல்லி இருக்கிறேனே......இல்லையா......இல்லையா?"

அவன் குரல் உயர்ந்தது. அதிலே ஒரு கீச்சுத்தொனி! அவன் எந்த நேரத்திலே வெறிபிடித்து அலறுவானே என்று அஞ்சும்படி இருந்தது.

"அடிக்கடி நீ சொன்ன அந்த அதிசயச் சமாசாரந் தான் என்ன?"

"எனக்கு உங்கள் கட்டு வேண்டாம்; ஊசி குத்தல் வேண்டாம்; ரண சிகிச்சை வேண்டாம்; வைத்தியர் வேண்டாம்; வைத்தியசாலை வேண்டாம்; எனக்கு ஒன்றுமே வேண்டாம். உங்களுக்கு என்ன உரிமை? யார் உங்களுக்கு இந்த உரிமை கொடுத்தது? எனக்கு இதெல்லாம் வேண்டாம்."

மரியா கட்டிலின் பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அவள் கை இன்னும் நோயாளியின் கட்டுப்போட்ட தலைமீதே இருந்தது.

"உனக்கு என்னதான் வேண்டும், பிடிவாதக் காரனே?"

"எனக்கு ஒன்றுமே வேண்டாம்! ஒன்றுமே வேண் டாம்! தெரிகிறதா? நான் இறந்துபோகவேண்டும்! அதற்கு எனக்கு உரிமை இல்லையா? நீங்கள் எல்லாம் ஏன் என்னைக் குரங்காட்டம் ஆட்டி வைக்கிறீர்கள்?"

"இறப்பதா? அது மிகச் சுலபமான காரியந்தான். உயிர் பிழைத்திருப்பதைவிட இறந்துவிடுவது சுலபந் தான். ஆனால், நீ கட்டாயம் உயிரோடு இருக்கவேண்டும். இருக்கத்தான் போகிறாய்."

"எனக்கு விருப்பம் இல்லை. நீ ஏன் இங்கே உட்கார்ந் திருக்கிறாய்? ஏன் எனக்குக் காவல் வைக்கிறாய்? இது சிறைச்சாலையா என்ன? நான் கேட்பதற்குப் பதில் சொல்! இது சிறைச்சாலையா?"

மரியா நிதானமாக, அன்பு கனிய, அவனுடைய வெள்ளைக் கட்டுகளைத் தடவிக் கொடுத்தாள்; அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள். ஆழ்ந்த கட்டுகளின் இடையிலிருந்து அனல் வீசும் அந்த ஒற்றைக் கண் அவளை வெகு கவனமாகப் பார்த்துக்கொண்டு இருந்தது.

"நேற்று நீ கட்டுகளை எல்லாம் கிழித்து எறிந்து விட்டாய்; நீயே உனக்குத் துன்பத்தைத் தேடிக்கொள் கிருய். நாங்கள் உனக்காகக் கவலைப்படுகிறோம்; உனக்கு உதவிசெய்ய விரும்புகிருேம். இதைப்பற்றி எல்லாம் உனக்கு அக்கறையில்லை. பிடிவாதமும், கடுகடுப்பும் உள்ள பையன் நீ. அதனுல்தான் நாங்கள் உனக்குக் காவல் வைக்கவேண்டி இருக்கிறது."

"ஓ, அது......அது......"

திடீரென்று அவன் அமைதியாக இருந்தான். கொஞ்சநேரம் ஒன்றுமே பேசவில்லை. மரியாவும் பேசாமல் பக்கத்தில் இருந்தாள்.

"நீ எனக்கு உண்மையைச் சொல்லுவாயா? முழு உண்மையைச் சொல்வாயா? உண்மையைத் தவிர வேறெதையும் சொல்லக்கூடாது" என்று திடீரென்று கேட்டான்.

"என்னுல் இயன்றமட்டும் சொல்கிறேன்."

அதை அவன் மௌனமாகச் சிந்தித்தான். தான் கேட்கவிரும்பும் கேள்வியை எப்படி அமைப்பது என்று தயங்கினுன்.

"நர்ஸ், நீ எனக்கு உண்மையைச் சொல்லமாட்டாய். ஆனுல், இது உனக்கு நேர்ந்தது என்று நினைத்துக்கொள்... வைத்தியசாலைக் கட்டிலில் நீ படுத்திருப்பதாக நினைத்துக் கொள்......குருடனுக......"

"நீ குருடனில்லை" என்ருள் மரியா கடுமையாக.

"ஒரு கண் குருடு; அதுவே மோசமான நிலைமை. கண்ணில்லை, கையில்லை, காலுமில்லை. இந்த நிலைமையில் நீ வாழ, உயிர் வாழ விரும்புவாயா? விரும்புவாயா?"

அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பில் வன்மம் இருந்தது; பிடிவாதம் இருந்தது. அவன் ஒற்றைக் கண் நெருப்புத் தழல்போல் எரிந்தது.

"உண்மையே சொல்லவேண்டும். உண்மையைத் தவிர வேறு எதுவும் வேண்டாம். அப்படியானுல் இந்த

ஒரு முறை உண்மை சொல்ல உனக்குத் தருணம் வாய்க்கும்.''

''உனக்கு உண்மையைச் சொல்லுகிறேன்'' என்று அமைதியாகக் கூறினாள் மரியா.

''நேராகப் படுத்துக்கொள். இரு; நான் தலையணையைச் சரியாக வைக்கிறேன். இப்போது கேள்.''

மரியா அனல் வீசும் அவன் கையைத் தன் கையால் பிடித்துக்கொண்டாள். அவன் அமைதியாக, எதையோ எதிர்பார்ப்பவன் போலக் கட்டிலில் கிடந்தான்.

''எனக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருந்தால், எப்படி இருக்கும் என்று சொல்லமுடியாது. எனக்கு எப்படி இருக்கும்? என் இஷ்டம் என்ன?—என்று எனக்குத் தெரியாது. ஒரு வேளை நானும் இறக்கத்தான் விரும்புவேன்.''

''பார்த்தாயா! நான் என்ன சொன்னேன்?''

''இரு. கொஞ்சம் பொறு.''

திடீரென்று அவள் களைப்பெல்லாம் நீங்கி விட்டது. வேலையை ஆரம்பிக்கும் போது இருக்கும் முழு பலமும் இப்பொழுது அவள் உடம்பில் இருப்பதுபோல் தோன்றியது. அவளுடைய கிரிகோரியைப் பற்றிய எண்ணம் ஒரு இன்ப அலையாக உடலெங்கும் பரவியது.

''என் கணவன்—அவனும் போர் முனைக்குப் போயிருக்கிறான். ஒரு வேளை இதே சமயத்தில் அவனும் உன்னைப் போலவே காயம் அடைந்து கிடக்கலாம். நான் உனக்கு உண்மையைச் சொல்லுகிறேன். அவன் காயம் அடையாமல் வீட்டுக்கு வரமுடியாது. அவன் காலில்லாமல் வந்தாலும் சரி, கையில்லாமல் வந்தாலும் சரி; எப்படியாவது என்னிடம் உயிரோடு வந்தால் போதும். அவன் என்னிடம் வந்துவிட்டால், என் கைகள் அவன் கைகளாக இருக்கும்; என் கண்களின் மூலம் அவன் உலகத்தைப் பார்க்கலாம்.''

இல்லை, அவள் காயம் அடைந்த அந்த நோயாளியிடம் பேசவில்லை, விதியை, சரித்திரத்தை, ஈவு இரக்கமற்ற

இந்த உலகத்தை, தன் கிரிகோரியைத் தன்னிடமே அனுப்பும்படி கெஞ்சி வேண்டிக்கொண்டாள். அவன் குரலைத் திரும்பவும் கேட்பது, அவன் புன்னகை பூத்த முகத்தைப் பார்ப்பது, அவன் கரத்தைத் தொடுவது, அவனுக்குப் பணிவிடை செய்வது, அவன் பக்கத்திலேயே இருப்பது... ...ஆகா! அந்த இன்பத்தைத் திரும்பவும் அனுபவிக்கும் காலம் வருமா? அந்தப் பழைய ஆழமான நம்பிக்கை ஏற்படுமா? இரு ஆத்மாக்களின் ஆலிங்கனத்திலே ஒருமித்து இருக்கும் அமைதி வருமா? தலை சிறந்து விளங்கிய அந்த இன்பநிலை திரும்பவும் ஏற்படும் என்று நினைக்க முடியுமா? அவளுக்குச் சொந்தமானவன்—என்றென்றைக்கும் சொந்தமானவன்—நெடுந்தூரத்துக்கு அப்பால் ரணகளப் பாதையிலே உயிரிழக்காமல் அவன் திரும்பி வந்தால்......அவர்கள் இருவரும் ஒன்றுயச் சேர்ந்து இருந்தால்......இதையெல்லாம் நினைக்க முடியுமா? அவன் ஒருவேளை காலிழந்து, கையிழந்து வந்துசேர்ந்தால்...... இல்லை. அவள் அவனுக்கு அதை விளக்கிக் கூறுவாள். அவனுக்கு நம்பிக்கையை உண்டு பண்ணுவாள். முன்பு எத்தனையோ முறை அவன் அவளுக்கு உதவி செய்தது போலவே, அவளும் அவனுக்கு உதவி செய்வாள்.

"இது உண்மையா?" என்று கடுமையான குரலில் கேட்டான் அந்த நோயாளி. அவன் இருண்ட பார்வை மரியாவின் ஒளி வீசும் முகத்தோடு பொருந்தி விட்டது போல் தோன்றியது.

"ஆம். இது உண்மை. இது முழு உண்மைதான்" என்று ஏதோ சத்தியம் செய்து கொடுப்பதுபோல் பய பக்தியோடு கூறினாள்.

நோயாளி இப்போது முகட்டைப் பார்க்க ஆரம்பித்தான்.

"ஏனென்றால், எனக்கும் ஒரு காதலி இருக்கிறாள்."

"ஆம்; ரொம்ப சரிதான்." இப்போது, தான் சரியான விடை அளித்ததாக அவளுக்குத் தோன்றியது. எந்தப் பிரச்னை அவனை வேதனைப் படுத்திக் கொண்டிருந்ததோ அதற்குத்தான் பதில் சொன்னாள்.

நோயாளி தன் கையை உயர்த்தினன்; தன் முகத்திற்கெதிரே முன்னும் பின்னும் பொருத்தமில்லாமல் அசைத்தான்.

"என்ன சமாசாரம்?"

"தலையணையின் கீழே, இங்கே, தலையணையின் கீழே."

அவள் கையை நீட்டினுள். காகிதத்தின் சலசலப்பு கேட்டது. ஒரு பழைய காப்பிப் புத்தகத்தின் ஒரு பக்கத்தை உறையாக ஒட்டியிருந்தது. மங்கிப் போன நீல நிற எழுத்துக்களில் எழுதியிருந்தது விலாசம்.

"நர்ஸ், அந்தக் கடிதத்தை எடு."

அது ஒரு சிறு கடிதம். பலமுறை கையாடிய துண்டுக் கடிதம்.

"அதை இரைந்து வாசி, நர்ஸ்."

அவள் அந்தக் கடிதத்தைத் தன் முழங்காலின்மேல் விரித்து வைத்தாள். ஈரத்தினுல் எழுத்துக்கள் அங்கங்கே கலைந்து அழிந்திருந்தன:

என் அன்பார்ந்த வஸ்யா! நானும், என் தாயும், என் சிறிய தங்கை பிரோஸ்யாவும், என் சித்தியும், இதர நண்பர்களும் உன்னை நமஸ்கரிக்கிறோம். நீ இருக்கிற இடம் தெரிந்தது. உன் விலாசம் எனக்கு இப்பொழுது தெரியும். ரொம்ப சந்தோஷம். நீ எந்த ஊரிலே காயம் அடைந்து கிடக்கிருய் என்பதை எனக்கு ஏன் எழுதவில்லை? எங்கே இருந்தாலும், நானே வந்து உன்னை அழைத்து வருவேன் என்று உனக்குச் சொல்ல விரும்புகிறேன். உன் உடம்பிலே எங்கே காயம்பட்டிருக்கிறது என்பதைத் தயவு செய்து விவரமாக எழுது. நீ ஒரு வேலையும் செய்ய முடியாத நிலைமைக்கு வந்திருந்தாலும் பரவாயில்லை. என் மனநிலை முன்பு இருந்ததைப் போலவேதான் இன்றும் இருக்கிறது. ஆதலால் நீ எந்த விதமான தப்பெண்ணமும் கொள்ளாமல் எனக்கு எழுத வேண்டும். வீட்டில் எல்லாம் முன்பு இருந்ததைப் போலவே இருக்கிறது. உன் தந்தையும் தாயும் சௌக்கியமாக இருக்கிருர்கள். நாங்கள் யாவரும் உன் வரவை

எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நீ திரும்ப வீட்டுக்கு வரப்போகிறாயா, அல்லது போர்முனைக்குப்போகப் போகிறாயா என்பதைப்பற்றி எனக்கு எழுது. அவசியமானால் நான் வந்து உன்னை அழைத்து வருவேன். உன் பெற்றோரால் வர முடியாது. என்னால் வர முடியும். திரும்பவும் உனக்கு என் நமஸ்காரம். உன் கடிதத்துக்காகக் காத்திருக்கிறேன்.

உன்னை ஆவலோடு எதிர்பார்க்கும், உன்,

ஆல்யா.

கசங்கிப்போன அந்தத் துண்டுக் கடிதத்தை மரியா ஜாக்கிரதையாக மடித்து வைத்தாள். நோயாளியின் ஒற்றைக் கண் விரிந்து திறந்து முகட்டைப் பார்த்த வண்ணமிருந்தது. அந்தக் கண்ணில் தேங்கிய கண்ணீர் பளபளப்பாய்த் தோன்றியது.

"பார்த்தாயா? நானும் உனக்கு அதைத்தானே சொன்னேன்?" என்றாள் மரியா.

"நீ அப்படி நினைத்துக் கொள்ளலாம்......"

"ஆனாலும், நீ ஒரு நூதனமான மனிதன்! உன் ஆல்யாகூட அப்படித்தானே சொல்லுகிறாள்?"

"ஆம், உண்மைதான். ஆனால்...நான் நினைத்தேன்... ஒரு வேளை அவள் அப்படிச் சொல்லலாம். ஆனால், என்னைப் பார்த்தால்......"

"நீ அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அந்தக் கடிதத்தை நீ வாசித்தாயா, இல்லையா?"

"நிச்சயமாய் வாசித்தேன். நேற்றும் வாசித்தேன். இன்றைக்கும் வாசித்தேன். என்னதான் வாசித்தாலும்......"

"ஐயோ, அசட்டு வாலிபனே! நீ சொல்வது உண்மையானால், உன் காதலி உண்மைக்காதலியாக இருக்க மாட்டாள். இல்லை. நீ வீட்டுக்குப் போவாய். நீங்கள் இருவரும் ஒன்றாக வேலை செய்வீர்கள்."

"வேலையா? ரொம்ப அழகான வேலைக்காரனாகத்தான் இருப்பேன் நான்" என்று சொல்லி வெறுப்போடு சிரித்தான்.

"செயற்கைக் காலொன்றை உனக்குக் கொடுப்பார்கள். அப்போது உன்னால் வேலை செய்ய முடியும். உன் மனைவியும் உதவி செய்வாள். பிறகு குழந்தைகள் பிறக்கும். அந்தக் குழந்தைகளும் உதவி செய்வார்கள்."

"குழந்தைகளா?"

"ஆம். குழந்தைகள்தான். ஆனால், இப்போது நீ அமைதியாகப் படுத்திருக்க வேணும். அப்படியானால் காயங்கள் சீக்கிரம் ஆறிவிடும். நீயும் சீக்கிரம் வீட்டில் இருக்கும் உன் ஆல்யாவிடம் போகலாம். நீ அமைதியாக இருப்பாய் அல்லவா?"

"காரியங்கள் எல்லாம் நீ சொல்கிறபடியே இருந்தால், நான் அமைதியாக இருப்பேன்."

"டாக்டர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிவாயா?"

"சரி, சரி. சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டாம்."

"இல்லை. ஆனால், நீ திரும்பவும் ஆர்ப்பாட்டம் செய்து நர்ஸுகளிடம் கடுகடுப்பாக நடந்துகொள்ளக் கூடாது."

நோயாளிக்கு வெட்கத்தினால் முகம் சிவந்துவிட்டது.

"நான் எப்படி......நர்ஸ், நான் என் நடத்தையைக் குறித்து வருத்தம் அடைகிறேன் என்று நீ அவர்களிடம் சொல்லுவாயா?"

"ஒரு நாளும் மாட்டேன். நீயே சொல்லிக்கொள். இவனைப் பார். கடுகடுப்பாக இருக்கும்போது தன்னிஷ்டப்படி நடந்து கொள்வான்; பிறகு, மன்னிப்புக் கேட்க வேண்டி வந்தால், 'நர்ஸ், நீ சொல்வாயா?' என்று கேட்பான்!" என்று நையாண்டி பண்ணினாள்.

"அப்படியானால், நானே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்."

"அதுதான் சரி. நீயே கேட்டுக்கொள். நான் வீட்டுக்குப் போகவேணும். நீ திரும்பவும் தொந்தரவு கொடுக்காமல் படுத்துத் தூங்கு."

படிக்கட்டிலே இறங்கிச் செல்லும்பொழுதுதான், அதிக நேரமாய் விட்டது என்பதை மரியா கவனித்தாள். அவசரமாகச் சட்டைப் பொத்தான்களை மாட்டிக்கொண்டாள். அவள் மனத்தில் சந்தோஷம் கொழுந்து விட்டு எரிந்தது. கிரிகோரி வெகு தூரத்தில் இருந்து, அவளை வாழ்த்தியது போல் இருந்தது. அவன் தன்னுடைய தாம்பிர நிறமான கையால் அவளுடைய கையைப் பிடித்திருந்தது போல் தோன்றியது. அவசரமாக அவள் படிக்கட்டுகளில் இறங்கி ஓடினாள். தலைவாசலில் வாரன்ஸோவ் மீது முட்டிக் கொண்டாள்.

"இன்னுமா இங்கே இருக்கிறாய்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

"எனக்குச் சில வேலைகளினால் தாமதம் ஏற்பட்டு விட்டது."

இருவரும் வெளியே சென்றார்கள். தெருவிலே மங்கிய வெளிச்சம்; பனிக்காற்று சில்லென்று வீசியது; மழை 'சடசட' வென்று பெய்து கொண்டிருந்தது. விண்ணில் ஏற்கெனவே வெளிச்சம் பரவிவிட்டது. மண்ணிலே வீடுகளின் மத்தியில் காலை வெளிச்சம் இருளை இன்னும் சிதறடிக்கவில்லை. மரியா தடுமாறினாள்.

"என் கையைப் பிடித்துக்கொள். இங்கே இருட்டாயிருக்கிறது. மேலும் அங்கங்கே மேடு பள்ளங்கள் இருக்கின்றன."

அவள் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். திடீரென்று அவளுக்கு மிதமிஞ்சிய களைப்புத் தட்டியது. தூரத்தில் சென்ற டிராம் வண்டி ஒன்று, நீலநிற நெருப்புப் பொறி சிதற, ஓடிக்கொண்டிருந்தது. வாரன்ஸோவ் அவள் டிராமில் ஏற உதவி செய்தான். அந்த டிராமில் ஒரே கூட்டம்.

"உனக்கு அதிகக் களைப்பாய் இருக்கிறதா?"

"ஆமாம். ஏன்?"

"நீ தூங்கப் போகுமுன் தேநீர் அருந்த என்னை அழைத்தால் நான் மாட்டேன் என்று சொல்வேனா?"

அவள் புன்னகை பூத்தாள்.

"ஓஹோ! டாக்டருக்கு, அப்படியானால், இந்த ஏழையின் வீட்டிற்கு வர மனம் வந்து விட்டதா. எனக்காகத் தேநீர்தயாராக இருக்கும். நாம் இருவரும் சேர்ந்து அதை அருந்தலாம்."

"ரொம்ப சரி. எனக்கு வீட்டுக்குப் போகவே பிடிக்கவில்லை. அம்மம்மா! என்ன மோசமான காலை நேரம்!"

டிராம் வண்டி ஆடி அசைந்தது; சரிந்து சாய்ந்தது. அதன் ஆட்டத்தோடு ஆட்டமாக அதிலிருந்த மனிதர்களும் கூடவே ஆடினார்கள். மரியா கண்களை மூடிக் கொண்டாள். இப்போது அவளும் கிரிஷாவும் டிராம் வண்டியில் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அசைந்து ஆடாதபடி கிரிஷா ஒரு கையினால் அவளை ஆதரவாக அணைத்துக்கொண்டு இருந்தான். அவனுடைய முரட்டுச் சட்டைத்துணி அவளுடைய கன்னத்தில் படுவதற்கு,அவள் பின்புறமாகக் கொஞ்சம் சாய்ந்தால்போதும்.

ஒரு கிழவி திட்ட ஆரம்பித்தாள். வெளியே போக முயன்றவர் யாரோ அவளைப் பிடித்துத் தள்ளினார்கள். யாரோ வெடுக்கென்று குத்தலாகப் பேசினார்கள். இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் கிரிஷா இருந்தானானால், அவனுடைய உல்லாசமான குரல் தொனிக்கும்; எல்லாரும் சிரிப்பார்கள்; சண்டையிட்டுக் கொண்ட இருவரும் சிரித்துச் சமாதானமாகி விடுவார்கள்.

ஆனால், கிரிஷா இங்கே இல்லை. உந்தித்தள்ளி, மேலே விழுந்து, வெளியேற விரும்பும் மனிதர்களிடமிருந்து அவளைக் காப்பாற்ற, இங்கே வாரன்ஸோவ்தான் இருந்தான். கிரிஷா இங்கே இல்லை. அவனுடைய உல்லாசமான குரல் வேறு எங்கேயோ தொனித்துக் கொண்டிருந்தது. அது எவ்விடத்தில் என்று யார் கண்டார்கள்? மழையும்,

குளிரும், இருட்டுமான இந்தக் காலை நேரத்தில் அவன் எங்கே இருந்தானோ? ஒரு வேளை முன் பின் பார்த்தறியாத ஒரு ரஸ்தாவிலே அணிவகுத்து நடந்து சென்றானோ?—அல்லது, சதுப்பு நிலத்தில் நகர்ந்து சென்று, பாதுகாப்புப் பள்ளங்களில் படுத்துறங்கினானோ? கிரிஷா எங்கே இருந்தானோ?

திரும்பவும் தான் நோயாளியின் படுக்கை அருகில் எண்ணிய எண்ணங்களை நினைத்துக் கொண்டாள். அவன் மாத்திரம் திரும்ப வந்துவிட்டால்.........கண்ணில்லாமல் இருந்தாலும் சரி, காலில்லாமல் இருந்தாலும் சரி, கையில்லாமல் இருந்தாலும் சரி......

" இங்கேதான் நாம் இறங்கவேண்டும்."

அவள் திடுக்கிட்டாள். ஒரு நிமிஷம் அவள் எங்கே இருந்தாள் என்பது அவளுக்கே தெரியவில்லை. ஓகோ, ஆமாம். டிராமில் இருந்தாள். இதுதான் அவள் இறங்கவேண்டிய இடம்.

திரும்பவும் அவர்கள் சேற்றிலே திரிந்தார்கள். வெளிறின வானத்தில் வீடுகளின் வரிவடிவம் பளிச்சென்று தெரிந்தது. ஒளியற்ற இருண்ட தெரு-விளக்குகள், கிளைகளில்லாத பட்ட மரங்களைப்போலத் தலைகளை உயர்த்தி நின்றன. வீடுகளிலே இன்னும் விளக்குகள் அணையவில்லை. இருட்டடிப்புக்காக ஒட்டியிருந்த காகிதச்சந்துகளினூடே அந்த விளக்குகளின் மங்கிய ஒளி தெரிந்தது.

இதோ, இதுதான் அவள் வீடு. படிக்கட்டுகளில் ஏறியபோது அவளுக்கு மூச்சுத் திணறியது. நீலக் காகிதத்தினால் மூடியிருந்த எலக்ட்ரிக் பல்புகள் துயரச் சுடர் விட்டு மினுங்கிக் கொண்டிருந்தன. அந்த மங்கிய வெளிச்சத்தில் வாரன்ஸோவின் முகம் திடீரென்று கிழடாகி விகாரம் அடைந்துவிட்டது போலத் தோன்றியது.

மரியாவின் தாயார் விருந்தாளியைப் பார்க்க விரும்பவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. வந்தவன் அளித்த வாழ்த்துக்கு அவள் பதில் வாழ்த்துக்கூடச்

சொல்லவில்லை. எழுந்து சமையலறைக்குப் போய் விட்டாள்.

"அம்மா, தேயிலைப் பானம் சூடாகவே இருக் கட்டும்."

"சுடச்சுட வேண்டுமானால் வீட்டுக்குச் சீக்கிரம் வரவேண்டும். எத்தனை தடவைதான் திரும்பத் திரும்பத் தண்ணீரைக் கொதிக்கவைப்பது? ஒருதடவை கொதிக்க வைத்தேன்; இறக்கினேன்; திரும்ப வைத்தேன்; திரும்ப இறக்கினேன். அவ்வளவு நேரம்வரை வரவில்லை."

மரியா பழங்காலத்து நாற்காலியிலே சாய்ந்து உட் கார்ந்தாள்; மன நிம்மதி அடைந்தவள்போலப் பெரு மூச்சு விட்டாள்; காலை நீட்டிக்கொண்டாள். கைகள் இரண்டும் நாற்காலியின் பக்கங்களில் தளர்ந்து தொங்கின.

அவளுடைய கண்ணைச் சூழ்ந்திருந்த கருமையையும் உதடுகளின் கடையாந்திரங்களையும் கூர்ந்து பார்த்த படியே, மெல்லிய குரலில், "நீ ரொம்பக் களைத்திருக் கிறாய்" என்றான்.

"ஆமாம். ரொம்பக் களைப்பு." மரியா ஒப்புக்கொண் டாள். அவள் பேச விரும்பவில்லை. இளைப்பாற விரும்பி னாள். வாரன்ஸோவ் வந்ததைப்பற்றி சந்தோஷந்தான். அவன் முன்னிலையிலே அவளுக்கு ஒரு ஆதரவு, ஒரு தன் னம்பிக்கை இருப்பதாக உணர்ந்தாள். இத்தகைய விருந் தாளியையா பகைக்கவேணும்? அதையும் இப்படியா காட்டிக்கொள்ளவேணும்? தாயைப் பரிதாபத்தோடு பார்த்தாள் மரியா. தாய் எப்போதும் இப்படித்தான். எப்போதும் கிரிஷாவின் கட்சியைப் பேச வருவாள். கிரிஷாவின் உரிமைகளுக்கு வக்காலத்துக்கூட தேவையா?

"எதற்காகச் சிரிக்கிறாய் நீ?"

"நான் சிரித்துக்கொண்டு இருந்தேனா?" மரியாவுக்கு ஆச்சரியமாய் இருந்தது. "ஆமாம், ஆமாம். நான் என்ன நினைத்துக்கொண்டு இருந்தேன் தெரியுமா? என் தாய்

மாமியார் உத்தியோகம் பார்க்கிறளே என்று நினைத்துக் கொண்டு இருந்தேன்."

அவன் சிகரெட்டு கொளுத்தியைச் சரியாகப் பற்ற வைக்க முடியவில்லை. சிறு நீல நெருப்புப்பொறி தோன்றி உடனே மறைந்துவிட்டது.

"மேசைமேல் நெருப்புப்பெட்டி இருக்கிறது. எடுத்துக்கொள்."

அவனுக்கு நெருப்புப்பெட்டி அகப்படவில்லை. அவள் நாற்காலியிலிருந்து எழுந்து மேசையருகே சென்று டிராயரை இழுத்தாள். அதிலிருந்த ஒரு புகைப்படம் அவள் கண்ணுக்குத் தெரிந்தது. அந்தப் படம் கிரிஷாவினுடையது. கிரிஷாவை நேரிலே பார்ப்பதுபோல் இருந்தது. அதே குறு குறுத்த பார்வை! அதே பின் சாய்ந்த தலை! கிரிஷா!

"நீ இன்றைக்கு ஏதாவது ரண சிகிச்சை செய்தாயா?"

"ஆம். அது என்னவெனில்......"

அவள் தன் கண்களைத் திருப்பிக்கொண்டாள். வெளித் தோற்றத்தில் வெகு கவனமாகக் கேட்பவள் போலத் தோன்றினள். உண்மையில் ஒரு வார்த்தைகூட அவள் காதில் விழவில்லை. ஏதோ ஒரு அசைவற்ற நிலையில் அழுந்தினள். ஒரு பகற் கனவு. வாரன்ஸோவின் குரல்-ஒலி வெகு தூரத்திலிருந்து வருவதுபோலத் தோன்றியது. அவன் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை. தூரத்தில், வெகு தூரத்தில், கிரிஷாவோடு அவள் சஞ்சரித்தாள். வஸ்யாவைப் பற்றி நினைத்தாள். அவனுடைய கரை கடந்த துயரம், அவன் காதலி எழுதிய கடிதம், அந்தச் சந்தர்ப்பத்தில் கிரிஷா அவளுக்குச் செய்த உதவி—இவை எல்லாம் நினைவுக்கு வந்தன. ஏனெனில், கிரிஷாவின் நினைவுதான் வஸ்யா விஷயத்தில் அவளுக்கு உதவி செய்தது. அவன்தான் அவள் வஸ்யாவுக்குச் சொல்ல வேண்டிய பொருத்தமான வார்த்தைகளைச் சொல்லத் தூண்டிவிட்டான். அவளை வருத்திக்கொண்டிருந்த களைப்பை எல்லாம் அவன்தான் நீக்கியவன்.

கிரிஷாவின் புன்னகைதான் அவள் உதடுகளில் பிரதிபலித்தது. அதுவே வஸ்யாவை வசியம் செய்தது. அவள் வார்த்தைகளைவிட அந்தப் புன் சிரிப்புத்தான் அவனுக்கு நம்பிக்கையை அளித்தது. கிரிஷா!

"......நீயும் அப்படித்தானே எண்ணுகிறாய்?" என்ற சொற்கள் அரையும் குறையுமாய்க் காதில் விழுந்தன. அவள் அதை எதிர்க்க முற்படவில்லை.

"ஆம். அப்படித்தான் எண்ணுகிறேன்."

விட்ட இடத்திலிருந்து கதையைத் திரும்பவும் வாரன்லோவ் சொல்ல ஆரம்பித்தான். ஓடும் ஜலத்தின் அர்த்தமற்ற சலசலப்போசைபோல் கேட்டது அவன் வார்த்தைகள். இதற்கும் கிரிஷாவினுடைய குரலுக்கும் எவ்வளவு வித்யாசம்! திடீரென்று அந்தச் சத்தம் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. அதே மகிழ்ச்சி ததும்பும் சத்தம்; சர்வ சாதாரணமான காரியங்களைப் பேசும்போதுகூட ஒவ்வொரு வார்த்தையிலும் ஒரு மகிழ்ச்சிக் குறி!

வெளியே நடைபாதையில் பாதரட்சை அணிந்த காலடி ஓசை கேட்டது. தேயிலைக் கஷாயப் பாத்திரமும், இரண்டு கோப்பைகளும் கொண்ட தட்டை ஏந்தி தத்யானு பெட்ரோவ்னு வந்துகொண்டிருந்தாள்.

"அம்மா நீ எங்களோடு தேயிலைப் பானம் அருந்தப் போகிறதில்லையா?"

"நான் அருந்திவிட்டேன்" என்று விருப்பம் இல்லாதவள்போல் பதில் சொன்னாள்; தோள்களையும் ஒருமுறை குலுக்கினாள். வாரன்லோவ் இப்படி வீட்டுக்கு வருகிறது அவளுக்கு இஷ்டமே இல்லை. இந்த டாக்டர் அடிக்கடி வீட்டிலே தலைகாட்டத் தொடங்கிவிட்டான். கொஞ்சம் அளவுக்கு மிஞ்சித்தான் போய்விட்டது. மரியா அவ்வளவாக அவனை லட்சியம் செய்ததாகத் தோன்றவில்லை. இருந்தாலும்......என்ன இது? காலமும் வேளையும் இல்லையா அறிமுகமான ஒருவரைப் பார்க்க வருகிறதற்கு? காலையில் எட்டு மணிக்கே வந்துவிட்டானே! ஒழுங்கு தவறிய அந்தக் கூட்டத்திலே

கூடிக்கொண்டு தேயிலைப்பானம் அருந்துவதா? தனக்குப் பிடிக்காத ஒரு காரியத்தை ஆசீர்வாதம் பண்ணுவதற்குச் சமானந்தான் அவர்களோடு அமர்ந்து தேயிலைப் பானம் அருந்துவது. தாய்க்கு இது சரி என்று தோன்றவில்லை. பாதரட்சையை மாட்டிக்கொண்டு பக்கத்து அறைக்குக் குமைந்து நடந்து சென்றாள். அவர்களுடைய செய்கை தனக்குப் பிடிக்கவில்லை என்று உணர்த்தும் பாவனையாகக் கதவைச் சாத்திக் கொண்டாள்.

“உன் கூந்தல் எவ்வளவு அழகாக இருக்கிறது மரியா!” என்றான் வாரன்ஸோவ் திடீரென்று.

மரியா சிரித்தாள்.

“அப்படியா? டாக்டர், இப்பொழுதுதான் கவனித்தீரா? அடடா! கூர்ந்து கவனிக்கும் ஆற்றல் ரொம்பப் பிரமாதமாகத்தான் இருக்கிறது! நான் சிறுமியாக இருந்தபோது, மற்றக் குழந்தைகள் எல்லாரும் ‘சணல் - நார்த் தலைச்சி’ என்று என்னைக் கேலி செய்வார்கள். எனக்கு இதைப்பற்றி ஒரே கவலை. என் கூந்தல் எப்பொழுதும் வெண்மையாகவே இருந்து விடுமோ என்று நினைத்துக் கொள்வேன். அப்புறம், போகப் போக மஞ்சள் நிறமாக மாறிவிட்டது.”

அப்படி இல்லை. அவளுடைய கூந்தல் அதிசய அழகு வாய்ந்தது என்று வாரன்ஸோவ் ரொம்ப நாட்களாகக் கருதி வந்தான். ஆனால், இன்றைக்கு, தேயிலைப் பானத்தைக் கோப்பைகளில் ஊற்றுவதற்காக அவள் குனிந்தபோது, மேசைமேல் இருந்த விளக்கு வெளிச்சம், அவளுடைய நெற்றியின்மேல் சுருள் சுருளாகச் சுருண்டு தொங்கிய கூந்தலில் விழுந்தது; உடனே அந்தக் கூந்தல் முழுவதும் ஒளி விடும் வெள்ளித் தூவானத்தால் ஆன ஒரு பரிவேஷம் போலத் துலங்கியது. ஒளிரும் கூந்தலின் சிறப்பை, தாழ்ந்த கரிய புருவத்தை, அந்த மூக்கின் நேரான அமைப்பழகை அவன் கண்டான். தன் உள்ளத்தில் சுறுக்கென்று தைக்கும் ஒரு வேதனையையும் உணர்ந்தான். அவளுடைய ஒவ்வொரு சலனத்திலும், அசைவிலும், அவள் பெயர்த்து வைத்த ஒவ்வொரு அடி

யிலும் தனிக் களிப்பு விளங்கியது. அவளுடைய அமைப் பின் ஆழத்திலிருந்து உற்பத்தியான நித்திய ஜீவ சக்தி அவளுடைய இளமை - உருவத்திலே பெருகிக்கொண்டு இருந்தது. இருபத்துநான்கு மணி நேரமாக ஓயாமல் ஒழியாமல் வேலை செய்ததனால், கண்களைச் சுற்றி நீலம் பூத்த தூக்கச் சோர்விலும்கூட, இளமையின் பரிபூரணக் களிப்பு அவளுடைய முகத்திலே நிரம்பியிருந்தது. முற் றிலும் களைத்துச் சோர்ந்திருந்த தருணங்களில், வைத்திய சாலையின் நடைபாதையில் அவளைச் சந்தித்தபொழுது இந்தக் காட்சியை வாரன்ஸோவ் கண்டிருந்தான்.

எதனாலும் தகர்த்து எறியமுடியாத இந்த இளமையை அவள் வைத்தியசாலையின் அறைகளுக்கெல்லாம் தாங்கிச் சென்றாள். கல்வியிலும் அனுபவத்திலும் இவளைவிடத் தேர்ந்த பல நர்ஸ்கள் வைத்தியசாலையில் இருந்தார்கள். என்றாலும், அவர்களைப்பார்க்கிலும் வெகு சுலபமாக, வெகு நிச்சயமாக, இருளை, ஜ்வர வேகத்தின் கொந்தளிப்பை, நெருங்கி வரும் மரண தூதரின் நிழல்களைத் தன் இளமை யால் இவளே வென்றாள். இவளுக்கு இந்தச் சக்தி எங் கிருந்து வந்தது? வளைந்த அந்த அதரங்களின் வனப்புக் கொஞ்சங்கூடக் குலையாமல், முகம் எல்லாம் ஏதோ ஒரு வகையான அக - ஒளியால் பிரகாசிக்கும்படி புன்னகை பூத்து மலரச் செய்தது எதுவோ?

இந்தக் கேள்விகளுக்கு விடை பகர அவனுக்கு விருப் பம் இல்லை. அந்தப் புகைப் படத்தை அவ்வளவு பொருள் பட அவள் பார்த்தாளே; வாரன்ஸோவும் அதைக் கவனித்தானே. முதல் தடவையா இது? இல்லை. இதற்கு முன் பல தடவைகளில் கவனித்திருக்கிறான். அவளுடைய புன்னகை, அந்த ஆண்மையின் புன்னகை! கிரிகோரியின் புன்னகை! அவனுடைய புன்னகையின் பிரதிபிம்பமே அவளுடைய புன்னகை. அவள் தன் கணவனைச் சந்தித்து ஒரு வருஷத்திற்கு மேலாயிற்று. என்றாலும் அவன் அவளை விட்டு அகலவில்லை; ஒரு கணங்கூட அகலவில்லை. அவ னுடைய புன்னகையிலே அவளுடைய வாழ்வு. அந்தப் புன்னகையி லிருந்துதான் இந்தச் சக்தியைப் பெற்றாள்.

வாரன்ஸோவ் கரண்டியால் தேயிலைப் பானத்தை மெதுவாகக் கலக்கினான். மரியா சிரித்தாள்.

"ஏன் கலக்குகிறாய்? கலக்கிப் பயன் இல்லை. அதில் சர்க்கரை இல்லை" என்றாள். அவளுடைய குரல், முற்றிலும் வெளிப்படையான ஒரு விஷயத்தை, வெடு வெடுப்பான குணம் உடைய ஒரு நோயாளிக்கு விளக்கிச் சொல்லும்போது தொனிக்கும் தன்மையிலே இருந்தது.

"இல்லை, நான் சும்மா......"

அவன் திக்கு முக்காடினான்.

"இல்லை; நான் சும்மா......"

"சூடு சீக்கிரம் ஆறவேண்டும் என்றுதான் கலக்கினேன். ரொம்பச் சூடு" என்று வியாக்கியானம் பண்ணினான். என்றாலும், அதே சமயத்தில் கரண்டியைக் கீழே வைத்துவிட்டான்.

மரியா கோப்பையை இரண்டு கைகளாலும் ஏந்திப் பிடித்துத் தேயிலைப் பானத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக் குடித்தாள். இளைப்பாறுவது, சூடான தேயிலைப் பானம் அருந்துவது, அந்தச் சிறு இரும்பு-அடுப்பிலிருந்து எழுந்து அறை எங்கும் பரவும் அனலை உணர்வது, இவைகளெல்லாம் என்ன ஆனந்தம்! பேசாமல் மட்டும் இருக்க முடிந்தால் அது இன்னும் ஆனந்தம். அவளுக்குப் பேச விருப்பம் இல்லை. உதட்டை அசைப்பது கூடப் பாரமாகத் தோன்றியது. ஆனால், வெறும் புன்சிரிப்பாலும் தலை அசைப்பாலும் விருந்தாளியை உபசரிப்பது மரியாதை இல்லை அல்லவா?

அவள் ரேடியோவைத் திருப்பிவைத்தாள். ஆம்; இதுவே சரியான வழி. சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டிருக்கலாம். இல்லாவிட்டால், கேட்காமலும் இருக்கலாம். இதனால் பேச்சுக் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படாது.

காற்றுவழியே ஒரு கீதம் தவழ்ந்து வந்தது. பல பல வருஷங்கள் சென்றுவிட்டன. அந்தப் பாடல் வெகு தொலையிலே, பரந்த மைதானத்திலே பிறந்தது. எல்லையற்ற நிலப்பரப்பின் மீது அந்தப் பாடலை ஒரு தென்றல்

சுமந்து வந்தது. கொந்தளிக்கிற பெரிய கடலை நோக்கிப் புரண்டோடிய நதி ஒன்று அந்தப் பாடலை முணுமுணுத்துப் பாடியது. உள்ளக்கிடக்கை ஒரு பாட்டாக உரு எடுத்தது; மனிதக் குரலிலே எழுந்தது; துயரப் பெருக்கிலே மணி ஓசைபோலக் கறங்கியது. அந்தப் பாடலின் வார்த்தைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளத் தேவை இல்லை. அது கிரிஷாவின் பாடல். அவனுடைய ஆனந்தப் புன்னகையிலே, இன்ப இளமை நாட்களிலே, வேனிற் கால வானத்தில் அரும்பிய நட்சத்திரங்களின் கீழே தழைத்திருந்த ஆப்பில் மரங்களின் இடையிலே, ஆப்பில் மரக்கிளைகளின் அடியிலே, இன்னிசையாய்ப் பெருகிவந்த கிரிஷாவின் பாடல் அது; பைன் மரக் காடு வழியாகச் செல்லும் மணற் பாதையிலே, செக்கச் சிவந்த கனிகளோடு அடர்ந்து வளர்ந்த ராஸ்பரிக் காடுகளிலே தொனித்த பாடல் அது; வாயோடு வாயாக, இதயத்தோடு இதயமாகத் தழுவி நின்ற மென் குரலிலே இசைத்த சொல்-செறிவு நிறைந்த பாடல் அது; இளம் பொன் கதிர் படிந்த பாதையில் இருவருமாகச் சேர்ந்து நடந்தபோது முணுமுணுத்த பாடல் அது.

பாடல் முடிந்தது. திடீரென்று யரியாவின் இருதயமும் வேதனையால் குன்றிவிட்டது. உடனே சமாளித்துக் கொண்டாள். இல்லை, இல்லை; கிரிஷா போகவில்லை; பக்கத்திலேதான் இருந்தான். அவனுடைய கலகலத்த சிரிப்பு அவளுடைய காதிலே இன்னும் தொனித்தது. அவனுடைய சொற்கள் இன்னும் காற்றிலே முழங்கியது. தழும்புடைய விரலோடு கூடிய தாம்பிரவர்ணமான அந்தக் கை, பிடித்த பிடியை இன்னும் விடவில்லை. இதோ, ஒரு பிடில் வாத்தியம் கிரிஷாவின் குரலைக் கவர்ந்து அதை ஒரு வானம்பாடியின் பாடலாக மாற்றி அமைத்தது; இன்னிசை அருவியாக நாற்றிசையிலும் பரப்பி விட்டது. அவளுடைய இருதயம் 'கிரிஷா! கிரிஷா!' என்று முணுமுணுத்தது. அந்த வார்த்தையில் ஒரு ஆத்திரம்; விவரிக்க முடியாத ஒரு சந்தோஷம்; ஒரு படபடப்பு. தனக்கு ஒரு கிரிஷா இருக்கிறான். எவ்வளவு பெரிய சந்தோஷம்! ஒரு வேளை வெகு தூரத்திற்கப்பால் எங்கேயோ ஒரு பாதையில் அவன் அலைந்து கொண்டிருக்கலாம்; தற்காப்புக்காக

வெட்டிய பள்ளத்தில் படுத்திருக்கலாம்; அல்லது, படையின் முன்னணியிலே போராடச் சென்றிருக்கலாம்; எப்படி இருந்தால் என்ன? கிரிஷா, அவளுடைய கிரிஷா உயிரோடு இருக்கிறான்.

"ரொம்ப நேரமாய் விட்டது; நான் போக வேண்டும்," என்றான் வாரன்ஸோவ் நெரிந்த குரலிலே. வெகு தூரத்திற்கப்பால் அறிமுகமில்லாத ஒரு நாட்டுக்குப் பிரயாணமாகி, அங்கே கிரிஷாவோடு கைகோத்து உல்லாசமாகச் சுற்றித் திரிந்துவிட்டு ஊருக்குத் திரும்பி வந்தவள் போலக் கண்ணைத் திறந்து பார்த்தாள் மரியா.

"நேரமாய் விட்டதா?" என்றாள் பராக்காக.

அவன் எழுந்து நின்றான். நெரித்த புருவமும் வளைந்த உதடுகளும் அவன் அனுபவித்த வேதனையை உணர்த்தின. அவன் போவதை அவள் தடுக்கவில்லை; தன்னந் தனிமையாக கிரிஷாவோடு இருக்க விரும்பினாள்.

வாரன்ஸோவ் அவசர அவசரமாகச் சட்டையை இழுத்து மாட்டிக்கொண்டான். அவளுடைய கையைத் தொட்டதும் தொடாததுமாகக் கைலாகு கொடுத்துவிட்டு வெளியே சென்றான். குளிர் மிகுந்த காலையிலே, சுறுக்கென்று தைக்கும் வாடைக் காற்றிலே, சுள்ளென்று உறுத்தி ஊடுருவிப்பாயும் மழையிலே நடந்தான். இந்தச் சூழ்நிலைக்குத் தன்னை அர்ப்பணம் செய்துவிட்டான். கடுஞ் சொற்களால் தன்னைத் தானே சபித்துக்கொண்டான். சட்டைப் பைக்குள்ளிருந்த கைவிரல்களை அழுத்தி மடக்கினான். அதே நேரத்தில் ஜனங்கள் நிறைந்த டிராம் வண்டி ஒன்று அவனைக் கடந்து சென்றது. "ரொம்ப நல்லது," என்று சொல்லிக்கொண்டே ஈரமான தெரு வழியாக வேகமாய் நடந்தான். அவனுக்கு ரொம்பக் கோபம். முதலில் தன்மீது கோபம்; பின்பு மரியாமீது கோபம். வெண்மையான ஒளி ஊடுருவும் அந்தக் கூந்தல், மெல்லிய திறமை வாய்ந்த அந்த விரல்கள், அகத்திலிருந்து ஒளிவீசும் அந்தப் புன்சிரிப்பு, அந்த இனியகுரல், எல்லாம் அவனுக்குக் கோபமூட்டின. வசதி மிகுந்த அமைதியான அந்த அறையிலே மேசைமேல் இருந்த அவனுடைய

படமும், சுவரிலே மாட்டியிருந்த படமும் அவனுக்குக் கோபமூட்டின. அவளுடைய கணவனிடத்திலும் அவனுக்குக் கோபந்தான். கிரிஷா அவளைப் பிரிந்து ஒரு வருஷம் ஆயிற்று; ஆனாலும், வைத்தியசாலையில், நோயாளிகள் படுத்திருக்கும் அறைகளிலே அவளோடு சஞ்சரித்தான்; டிராம் வண்டிகளில் அவளோடு பிரயாணம் பண்ணினான்; சாப்பிடும்போது மேசையின் விளக்கு வெளிச்சத்திலே பிறர் அறியாதபடி அவள் பக்கத்திலே இருந்தான்; சொல்லப்போனால், ஒரு நிமிஷங்கூட அவளை விட்டுப்பிரியவில்லை. இதை எல்லாம் தெரிந்துகொள்ளாத முட்டாள் இல்லை வாரன்ஸோவ். குழந்தை ஒன்று விளையாட்டுப் பொம்மையை ஆட்டிவைப்பதுபோல அவள் அவனை ஆட்டி வைத்தாள். ஆமாம்; அவன் அவளுக்கு விளையாட்டுப் பொம்மைதான். பொறுக்க முடியாதபடி இருந்தது அந்த மனிதனுடைய—கிரிஷாவுடைய—பிரசன்னம். அது அவன் உடம்பிலே உறுத்தியது. அந்த கிரிஷா ஒரு வினாடிகூட அவளை விட்டுப் பிரிந்ததாகத் தோன்றவில்லை.

"நான் ஒரு பாதகன்" என்று உரத்த சத்தமாகச் சொல்லிக் கொண்டான். தன் குரலைக் கேட்டுத் தானே திடுக்கிட்டான்; சுற்றுமுற்றும் பார்த்தான். அங்கு ஒருவரும் இல்லை. ஆகையால் அதை ஒருவரும் கேட்டிருக்க முடியாது. தொப்பியைக் கண் வரை இழுத்துவிட்டுக்கொண்டு இன்னும் வேகமாக நடந்தான். அவனுடைய குனிந்த தலைமீது பனிக்கட்டிபோல் குளிர்ந்த மழை படபடவென்று விழுந்தது.

இது இப்படியிருக்க, மரியா மெதுவாக எழுந்து நின்றாள். மேசையைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள். காலடி ஓசை கேட்டது. கதவு திறந்தது.

"கடைசியில், அவன் போய்விட்டானா?"

"ஆம். அதிக நேரமாய் விட்டதல்லவா?"

"ஆமாம். அவன் போகவே மாட்டான் என்று நினைத்தேன்."

"அவன் உனக்கு ஏதாவது தொந்தரவு கொடுத்தானா?"

"ஏன்? அவனுக்குச் சொந்த வீடு இல்லையா, போவதற்கு?"

"அவனுக்குச் சொந்த வீடு இல்லை என்பது நன்றாகத் தெரியும் அம்மா உனக்கு."

"எனக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. இங்கே அவனுக்கு என்ன வேலை?"

மரியா சிரித்தாள்.

"அவன், வேலை விஷயமாக இங்கே வரவில்லை."

"அது எனக்குத் தெரியாதா? என் காலத்தில் நான் இப்படி அநேகரைப் பார்த்திருக்கிறேன்" என்று கோபித்துக் கொண்டாள் தாய். "அதை வைத்து விடு. நான் சுத்தம் பண்ணிக் கொள்கிறேன். நீ போய்த் தூங்கு. வைத்தியசாலையில் உனக்கு இருக்கும் தொல்லை போதாதா? அந்த டாக்டர்கள் வீட்டுக்குமா வந்து உபத்திரவம் பண்ணவேணும்?"

"இருக்கட்டும் அம்மா. இதற்கெல்லாம் இப்படிக் கோபித்துக் கொள்கிறாயே? ஏதோ வந்தான். கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தான். பிறகு போய் விட்டான். அவனுக்கு ஒரு கோப்பை தேயிலைப் பானம் கொடுப்பது உனக்கு எரிச்சலா?"

"இதென்ன அசட்டுத்தனம்? தேயிலைப் பானமல்ல......"

மரியா ஸோபாவைப் படுக்கையாகத் தயாரித்தாள். அவள் தூங்க விரும்பினாள். வேறெதையும் அவள் விரும்பவில்லை. சட்டையைக் கழற்றாமல், கால் மேஜோடுகளைக் கூட அகற்றாமல் இப்போதே தாமதமில்லாமல் படுத்துத் தூங்க வேணும் என்று நினைத்தாள்.

"நீ படுத்துத் தூங்க வேண்டிய சமயத்தில் யாராவது இங்கே இப்படி உட்கார்ந்திருக்கலாமா......?"

தத்யான பெட்ரோவ்ன ரேடியோவை நிறுத்தி விட்டாள். பிடில் வாத்தியம் நடுப்பாட்டில் நின்றது. சங்கீதமும் நின்று விட்டது.

"தூங்கு ; நல்ல வெளிச்சம் வந்து விட்டது."

மரியாவுக்குப் பதில் சொல்லச் சக்தியில்லை. மெல்லிய சூடான அலையொன்று அவளைத் தாக்கி எழுப்பியது. நீல வர்ணமான பாதாளம் ; பொன்னிறமான நுரை ; விளக்க முடியாத பிரகாசம் பொருந்திய உரத்த சங்கீதம் ; இவைகளிலே உலகமும் அவளோடு சேர்ந்து ஊசலாடியது. அது ஒரு கனவு. அந்தக் கனவில் கிரிஷா வரவில்லை. ஆனாலும், அது கிரிஷாவைப் பற்றியது தான். பொன்னிறமான அந்த அலைகள் அவனுடைய புன்னகை! இனிமையான அந்தச் சங்கீதம் அவன் குரல்!

கோபுரத்தில் பதித்த கடிகாரத்தின் மணியோசை வெகு தூரத்தில் கேட்டது. 'டாங், டாங்!' என்ற அந்த மணியோசை இறுக மூடியிருந்த ஜன்னல் - கதவுகளைத் துளைத்துக் கொண்டு புகுந்தது. மரியாவின் கனவில் அந்த மணியோசை பற்பல நிறங்களாகவும், ஒலிகளாகவும் மாறியது; அறிவுக்கு எட்டாத, ஆனால், விவரிக்க இயலாத இன்பத்தைத் தரக்கூடிய வார்த்தைகளாகப் பரிணமித்தது. அந்தக் கனவிலே மெத்தென்று மலரணை போலிருந்த கீழ் நிலைக்கே இறங்கிவிட்டாள் மரியா. அந்த நிலையில் நிறங்களும் இல்லை, ஒலிகளும் இல்லை, வார்த்தைகளும் இல்லை. ஆரோக்கியமும், ஆறுதலும் தருகின்ற ஆழ்ந்த அமைதியும் சாந்தியுமே குடிகொண்டிருந்தன.

சாந்தி மிகுந்த இந்த மோன நிலையிலே அவள் அழுந்திய பொழுது, தான் கனவில் இன்னும் இருப்பது போன்ற எண்ணமும் கூடவே இருந்தது. அந்தக் கனவு நிலையிலே வர்ண விநோதங்கள் இல்லை ; ஓசை-இன்பங்களும் இல்லை ; வடிவக் கவர்ச்சிகளும் இல்லை. என்றாலும், அத்தகைய கனவு - நிலையிலும் வாய்விட்டு விளக்கிச் சொல்லமுடியாத முறையிலே கிரிஷாவோடு நெருங்கிய உள் - தொடர்பு இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

* * * *

இதே சமயத்தில்தான் காப்டன் கிரிகோரி சென்னவ் தன் நினைவுக்கு வந்துகொண்டு இருந்தான். எண்ணத் தொலையாத மைல்களுக்கப்பால் எங்கிருந்தோ—தனக்கு விந்தையான விபத்து ஒன்று நேர்ந்த இடத்திலிருந்து—திரும்பி வருவதுபோல அவனுக்குத் தோன்றியது. அவனுக்கு நேர்ந்த விபத்து என்ன? அது ஞாபகத்துக்கு வரவில்லை கண் கூசும்படி தகர்ந்து நொறுங்குகிற பேரொளியாக இந்த உலகமே உருகிவிட்டதோ எனத் தோன்றியது. இப்பொழுது எல்லாம் அமைதிதான்; அதிசயமான அமைதிதான். இந்த அமைதிதான் தன்னை எழுப்பிவிட்டது என்று கருதினான். தன்னைச் சுற்றிலும் நிகழ்ந்தவை ஒன்றையும் அவன் அறியவில்லை. கண்ணுக்கு நேரெதிரில் ஒரே சாம்பல் நிறம். அந்த நிறத்தில் நீட்டுப் போக்காக அமைந்த பட்டைகள், நேராய் நீண்ட முகடுகள், இடையிடையே நெடிய ஓடைகள் எல்லாம் ராக்ஷஸ ரீதியாகத் திரும்பத் திரும்பத் தோன்றின. இது என்ன? உழுது கிடக்கும் நிலமா? உழவுச் சால்களா? இல்லை. ஒரு வயலில் சாம்பல்-தவிட்டு நிறமான ஓர் இடந்தான். அந்த இடத்தின் மேலே, அதன் உச்சியிலே, அவன் கிடந்தான். அவ்விடத்தில் எல்லாவற்றிற்குப் மேலாக அவன் விழுந்து கிடந்ததற்குக் காரணம் என்னவென்று அவனுக்கே விளங்கவில்லை. அவன் குன்றின் உச்சியிலிருந்து கீழே பார்த்தபோது, நிலத்தில் இறங்குவதற்குக் கடைசியாக வட்டமிடும் விமானத்தில் இருந்து பார்த்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அவன் கண்ட காட்சி. பூமி கோபுரம்போல எழுந்து விட்டதோ என்று தோன்றியது. அது எப்படி இருந்தாலும் சரி; அது ஒரு பயங்கர வேகத்துடன் அவன் கண்களை அணுகியது. நேரே பார்க்கக்கூட முடியாமல் கண்களைச் சுருக்கிக் கொண்டான்; தலையைத் திருப்பிக் கொள்ள முயன்றான். அது முடியவில்லை. என்ன இது? மலை ஏதாவது மேலே விழுந்துவிட்டதா, என்ன? அல்லது, அவன் புதைந்து கிடந்தானா? இல்லையே. சுவாசம் வந்தது; குளிர்ந்த காற்று உதட்டில் படுவதை உணர முடிந்தது. மழையா பெய்தது? அவன் முகம் நனைந்திருந்தது. கை கால்களில் மிகுந்த வலி தோன்றியது. அவனுக்குத் தலை சுற்றியது. ஒன்றுமே புரியவில்லை.

இந்தச் சமயத்தில் மந்தமான ஒரு ஓசை கேட்டது. பழக்கமான ஓசை அது.

“துப்பாக்கிகள்!” காப்டனுக்கு அந்த ஓசை வெகு நன்றாகத் தெரியும்.

திடீரென்று உலகமே ஒரு சுற்றுச் சுற்றியது. எல்லாம் அதனதன் இடத்திலே பொருந்திவிட்டன. சாம்பல் - தவிட்டுநிறத்தில் பட்டை பட்டையாகத் தெரிந்தவைகளும், முகடுகளும், நெடிய ஓடைகளும் வயல்களும் உழவு சால்களும் அல்ல. தன்மேல் விழுந்து கிடந்த மனிதனின் ராணுவ உடையில் இருந்த மடிப்புகள்தான் அவை. இதை உணர்ந்தவுடன், அந்த உடுப்பு வெகு தெளிவாகத் தெரிந்தது. தூரம், பரிமாணம் முதலியவைகளை அளந்து மதிப்பிடும் திறமை அவனுக்குத் திரும்பவும் ஏற்பட்டது. மலையொன்றும் அவன்மேல் விழுந்துவிடவில்லை. அவன் பிணங்களின் கீழே விழுந்து கிடந்தான். ஒரு பெல்ட்டின் தோல், தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு கை, கிழிந்த பாதரட்சை, ஒரு வளைந்த துப்பாக்கி, இவைகள் தெரிந்தன. அவன் பார்வையை ஏதோ தடுத்தது. ஒரு கண்ணாலேதான் அவன் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு முறை பெருமூச்சுவிட முயன்று பார்த்தான். முடியவில்லை. தாங்கமுடியாத சுமையொன்று மார்பின் மேலே அழுத்திக்கொண்டிருந்தது. காரணந் தெரியாத வேதனையொன்று அவனை வருத்தியது. வேதனை முகத்திலேதான் இருந்தது. அது நிச்சயம். மற்றவை? உடலின் மற்றப் பாகங்கள் எல்லாம் அவனுக்கு இல்லையா? அவை குவியலாகக் கிடந்த பிணங்களோடு கலந்துவிட்டனவோ என்று தோன்றியது.

அவன் மனம் குழம்பியது; எங்கெங்கோ அலைந்தது. அந்தக் குழப்பத்தை ஒழுங்குபண்ணப் பார்த்தான். சண்டை முடிந்துவிட்டது. ஜெர்மானியர் போய்விட்டார்கள். இது வெளிப்படையாகத் தெரிந்தது. துப்பாக்கிக் குண்டுகளின் ஓசை தூரத்தில் கேட்டுக்கொண்டிருந்தது. ஒரே பக்கத்தில் சத்தம் கேட்டதனால், படைவீரர்கள் முன்னேறிச் செல்லுகிறார்கள் என்று அறிந்துகொண்டான் செர்னவ். ஆமாம். அவர்கள் ஜெர்மானியரை விரட்டி

விட்டார்கள். தனக்கு என்னதான் நேர்ந்தது என்று நினைத்துப் பார்த்தான். பகைவர் எதிர்த்துத் தாக்கத் தொடங்கிய நேரம் வரைக்கும் நிகழ்ந்த காரியங்கள் நினைவில் இருந்தன. அதற்கப்புறம் கண்கூசும் பிரகாசத்திலே எல்லாம் மயங்கிவிட்டன. அவனுக்கு வேதனையை உண்டுபண்ணியது எது? காயம் பட்டிருக்கிறதா இல்லையா? இதை எல்லாம் அவன் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? அவனால் கையை அசைக்க முடியவில்லை. அவனுடைய கையைப் பயங்கரமான பாரம் ஒன்று அழுத்திக்கொண்டிருந்தது. ஒரு விரலையாவது அசைத்து, அது தன்னுடையதுதான் என்று உணர விரும்பினான். அங்கே கிடந்த பிணக்குவியலிலிருந்து, அந்த அசைவினால், தன்னை உயிருள்ளவனாக அறிந்துகொள்ள விரும்பினான்.

அவன் முயற்சி எல்லாம் வீணாயிற்று. வலதுகை! இடதுகை! அவை எங்கே? அசைக்க முடியாதபடி மரத்துவிட்டனவோ? அவனுடைய கால்கள்! ஒரே ஒரு கால் விரலைத்தான் அசைக்க...ஐயோ! வேதனை!... தாங்க முடியாத வேதனை! பாதம் எங்கே இருந்தது என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. தலை ஒன்றுதான் இருந்ததாக அவனுக்குத் தோன்றியது. அதுதான் உயிரோடு இருந்தது; சிந்தித்தது; இயங்கியது. உடலின் இதர உறுப்புக்கள் எல்லாம் தனக்குச் சொந்தம் என்று அவன் சொல்லமுடியாது. அந்த உறுப்புக்கள் அவனைச் சூழ்ந்து கிடந்த பிணக்குவியலுக்குச் சொந்தமாய்விட்டன. அவன் கண்ணை வெறுடுத்துப் பார்த்தான். மனிதர்கள் மரக் கட்டைகள்போலக் கிடந்தார்கள்; பழைய கந்தைத்துணிக் குவியல்போலத் தோன்றினார்கள். அவர்கள் யார்? ருஷ்யர்களா? ஜெர்மானியரா? அவனுடைய கண்கள் மங்கின. என்றாலும், ராணுவ வீரர்களின் வர்ண முத்திரைகளைப் பகுத்தறிய முடிந்தது. ஆம். அங்கே கிடந்தவர்கள் ருஷ்யர்களே! இந்த உடல்கள் எல்லாம் போர்க்களத்திலிருந்து கொண்டுவந்தவை. ஓரிடத்தில் வரிசையாக வைத்திருந்தவை. அப்படியானால், அவன் இங்கே எப்படி வந்தான்? தான் சாகவில்லை என்பது அவனுக்கு நிச்சயமாய்த் தெரியும். செத்துப்போயிருந்தால் இவ்வளவு பயங்கரமான வேதனைக்கு ஆளாக வேண்

டாமே. அவன் இங்கே இருந்தால் தன்னைப் பிணத்தோடு பிணமாக, இடத்திற்கு இடம் தூக்கி அலைந்தவனும், இங்கு எங்கேயாவது இருக்கவேணும். இதெல்லாம் எப்போது நடந்தது? கண்கூசும் பிரகாசத்தினால் நினைவு இழந்த நேரத்திற்கும், சுயநினைவு வந்து முதன்முதலில் சாம்பல் - தவிட்டு நிறமான ராணுவ உடையைப் பார்த்த நேரத்திற்கும் இடையிலே. ஒரு வினாடி நேரங்கூட இல்லையே.

சாம்பல் நிறமான ராணுவ உடைகள் கிரிகோரியின் கண்ணுக்கு ஆடி அசைவதுபோல் தோன்றின. நோயாளியின் வாய் போல அவனுடைய வாய் சுவைத்தது. அது வெகு அருவருப்பாக இருந்தது. அவன்மனம் முள்போலக் குத்திய அந்திவெளிச்சத்திலே ஆழ்ந்தது; உயிரோடு இயங்குவதுபோல் அசைந்தாடிய மூடுபனியில் மூழ்குவதுபோல் அவனுக்குத் தோன்றியது. திரும்பவும் தன் சுய நினைவு வந்தது. நிமிஷந் தோறும் அதிகரித்த வேதனை, மூடு பனியிலிருந்து—எல்லை அற்ற பெரு வெளியிலிருந்து—அவனைத் திரும்பவும் தன் நினைவுக்குக் கொண்டுவந்தது. ஒரே குளிர்! வெகு சிரமத்தோடு தலையைத் திருப்பினான்; நிலத்தில் படுத்திருந்ததை உணர்ந்தான். ஏதோ கறுப்பும் சிவப்புமான பனிக்கட்டி ஒன்று அவன் உதட்டில் ஒட்டிக் கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்தில் வெறுமையான நிலம்; அதற்கப்பால் பனி;...செங்குத்தான கரை ஒன்று...மலை அடிவாரம்...சில மரங்கள்...நினைத்துப் பார்க்க முயன்றான். ஆமாம்; அந்த மலை அடிவாரம் அவனுக்குத் தெரிந்தது தான். அதிலிருந்துதானே இறங்கி வந்தார்கள். மற்றவர்கள் எல்லாரும் எங்கே போய்விட்டார்கள்? அவன் உரத்த சத்தமாகக் கத்த விரும்பினான். ஆனால், கரகரத்த கமறல்தான் வெளிவந்தது. அப்பா! என்ன குளிர்! நிலம் பனிக்கட்டிபோல் இருந்தது. காற்று கத்திபோல் அறுத்தது.

திடீரென்று ஒரு சத்தம் 'கிறீச்!' என்று கேட்டது. மனித அளவை மீறிய முயற்சியோடு தலையை இன்னும் கொஞ்சம் திருப்பினான். அங்கே யாரோ இருக்கிறார்கள். மேலே கிடந்த மலைபோன்ற குவியலை எடுப்பார்கள்; கைகால்களைக் கட்டியிருந்த பந்தங்களிலிருந்து விடுதலை செய்வார்கள்; பார்க்க முடியாதபடி அவனுடைய கண்களை

அழுத்தி மூடியிருந்த கனமான திரைப் படலத்தையும் அகற்றுவார்கள். வைத்தியப் படையைச் சேர்ந்தவர்கள் எங்கே? அவர்கள் எங்கே?

இப்பொழுது அவனுக்குக் கோபம் பொங்கியது. வேண்டாத நேரங்களில் அங்கும் இங்கும் திரிவார்கள். வேண்டிய நேரத்தில் ஒருவனும் கிட்ட வரமாட்டான். திரும்பவும் கத்தினான். கமறிய குரல்தான் வெளிக்கிளம்பியது. அந்தக் குரலை அவன் எங்கேயோ கேட்டிருந்தான், அது எங்கே கேட்ட குரல்? ஆமாம். அந்தக் காக்கைக் குஞ்சு கூண்டிலிருந்து விழுந்து தரையில் கிடந்ததே! அவன் போய் அதை எடுத்தபோது அது கத்தியதல்லவா? கத்திக்கொண்டே அவனுடைய கையைக் கொத்தியது; கரகரத்த குரலில் கீச்சிட்டுக் கமறவில்லையா? ஆனால், படபடப்போடு கத்திய காக்கைக் குஞ்சின், கிறீச்சுக் குரல்போல் முரட்டுக் குரலாக இல்லை.

திரும்பவும் சறுக்கி*யின் கிறீச்சுச் சத்தம் கேட்டது. கண்ணெதிரே தவிட்டு நிறத்தில் ஏதோ தெரிந்தது. அதென்ன? குதிரையின் தலையா? ஆமாம். கீழே எங்கேயோ இருந்து வந்ததே. பாரத்தைச் சுமந்து நெரிகிற குதிரையின் முதுகு தெரிந்தது. குதிரை எதையோ வெகு கஷ்டத்தோடு இழுத்தது தெளிவாகத் தெரிந்தது. பிறகு, ஒரு ருஷ்யனின் தலை.

கிரிகோரி முழுக் கவனத்தையும் செலுத்திக் கூர்ந்து பார்த்தான். உலகத்தை மறைத்து, பொருள்களின் வரிவடிவத்தைக் குலைத்துப் போர்த்திருந்த மூடுபனியை ஊடுருவிச் சென்றது அவனுடைய பார்வை. தன் சக்தியை எல்லாம் ஒன்றாய்த் திரட்டித் தன்னைத் தழுவிப் பற்றியிருந்த அந்த மூடுபனியிலிருந்து விடுதலை அடைய முயன்றான்.

குதிரை வெகு கஷ்டத்தோடு சறுக்கி ஒன்றை இழுத்தது. அந்தச் சறுக்கியின் மேல் ஒருவன் படுத்திருந்தான். அவனை உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை கம்பளியால் மூடி இருந்தது. இப்

---

* ருஷ்யா முதலிய நாடுகளில் பனிக்கட்டிமீது இழுத்துச் செல்லுகிற சக்கரமில்லாத ஒரு வகை வாகனம்.

பொழுது சறுக்கியை நன்ருகப் பார்க்க முடிந்தது. பனி மூடிய மலைமீது அந்தச் சறுக்கியைக் குதிரை இழுத்துச் சென்றது. குதிரை தன் உடலை எல்லாம் நெரித்து அந்தப் பாரத்தை இழுத்தது. குளம்புகள் பனிக்கட்டியில் வழுக்கின; சேணத்தின் தோல் - வார்கள் அதன் உடலை அறுத்தன. வண்டியை நடத்திச் சென்றவன் அதைத் துரிதப்படுத்தினன்; கூடச் சேர்ந்து தள்ளினன். இவ் விதம் மலைச்சரிவின் நடுவில் வந்து சேர்ந்தார்கள். குதிரைக்கு நடக்க முடியவில்லை; அடிமேல் அடி வைத்தது. ஓ்மே! ஓ்மே! ஓ்மே! வந்து கொண்டிருந்தது.

சறுக்கியை நடத்தியவன் கத்தினன்; துரிதப்படுத்தினன்; தூக்கி நிறுத்தினன்; இழுத்துப் பார்த்தான். ஆனல் அவனுந்தான் வழுவழுப்பான அந்த மலைச் சரிவில் வழுக்கி விழுந்துகொண் டிருந்தான். குதிரைக்கும் வழுக்கியது; அவனுக்கும் வழுக்கியது.

காயம் அடைந்த ஒருவனை அவர்கள் எடுத்துச் செல்கிருர்கள் என்று உணர்ந்தான் கிரிகோரி. சறுக்கியில் கிடந்தவன் அசையவுமில்லை; சத்தம் போடவுமில்லை. கொடிய காயமாக இருக்க வேண்டும்.

“நானும் காயம் அடைந்தவன்தானே!” என்று கிரிகோரி சிந்தித்தான். உடனே ஒரு கோப வெள்ளம் அவன் உள்ளத்தில் பொங்கியது. “எனக்கும் அவனுக்கும் இருபது அடி தூரம்கூட இல்லையே. அந்த அதிர்ஷ்டம் கெட்ட சறுக்கியோடு அவன் மல்லுக் கொடுத்துக் கொண்டிருக்கிருன். இந்தப் பக்கமாகத் திரும்பிப் பார்க்கக் கூடாதா? இங்கே நான் கிடக்கிறேனே! என்னையும் எடுத்துக்கொண்டு போகலாமே! இவ்வளவு யோசனைகூட இல்லையா அந்த மனிதனுக்கு?”

“உண்மையாகவே நான் காயம் அடைந்திருக்கிறேனு? நிச்சயமாகத் தெரியவில்லை. அசைய முடியவில்லை. ஏதோ இரும்புப் பிடியாக பிடித்துக்கொண்டிருக்கிறதே? இந்த லட்சணத்தில் குரலும் போய்விட்டது; கூப்பிடவும் முடியவில்லை.”

கிரிகோரியினுல் அந்தக் குன்றின் சரிவிலே சென்றவர்களைப் பாராமல் இருக்க முடியவில்லை. அந்த உருவ

மும் வரவர மங்கிவிட்டது. குதிரையும் குதிரையாகத் தோன்ற வில்லை; மனிதனும் மனிதனாகத் தோன்ற வில்லை; ஏதோ, உணர முடியாத பெரும் நிழல்போல, பனியின் மேல் அசைந்து அசைந்து சென்றனர். ஒரு வேளை இவை யாவும் கனவோ? பகைவரை எதிர்த்துத் தாக்குவதற்கு முன், தோண்டியிருந்த பள்ளத்தில் கழித்த இரவு தானே? தவறான முறையிலே கை கால்களை முடக்கிக் கொண்டு தூங்கினானா? அப்படியும் ஒரு வேளை இருக்கலாம் அல்லவா? நெஞ்சை அழுத்தி மூச்சு விட முடியாமல் திணற அடித்த பயங்கரமான இராக் கனவா இது? மலைச் சரிவில் எவருமே இல்லை. படையை அணிவகுத்த போது அவன் சுற்றிப் பார்த்த குன்றின் சரிவு தானே அது? மேலே இருந்து ஏதோ ஒன்று விழுந்து அவனை நசுக்கியது. அவன் உடனே எழுந்திருக்க வேண்டும். ஆமாம்; கனவுகளே இப்படித்தான். சக்தியை எல்லாம் திரட்டிக் கத்த வேண்டும் என்று தோன்றும். ஆனால், தொண்டையிலிருந்து சத்தம் ஒன்றுமே எழாது. அப்படியே எழுந்தாலும், அது எவருக்குமே கேளாத மெல்லிய குரலாக இருக்கும். ஆமாம்; இது கனவுதான். திரும்பவும் அதே மூடு பனி புரண்டு வந்தது; அது மிகப் பெரியது; அளவற்றது; உலகம் முழுவதையும் நிரப்புவது; அசைந்தாடி வருவது! துன்புறுத்துவது...இது எப்படி முடியும்? அவன் சாம்பல் நிறமான கோடுகளையும் முகடுகளையும் திரும்பவும் பார்க்க விரும்பினான். ஆனால், அவை திரும்பவும் தோன்றவில்லை. இராணுவ வீரர் அணியும் உடை ஒன்று கந்தலாகக் கிடந்தது. முதன் முதலில் பார்த்த மாதிரி அதை இப்பொழுது பார்க்க முடியவில்லை.

இந்த இடத்திலே படுத்திருப்பது அவனுக்கு விபரீதமாகத் தோன்றியது. மேலே விழுந்து கிடந்த சுமையைப் பொருட்படுத்தாமல் எழுந்து நடந்தால் என்ன? எப்படியும் இது ஒரு கனவுதான். எழுந்து நடந்தால் மறைந்து விடும். கூட இருந்தவர்கள் எல்லாரும் மூடர்களா? அவனைக் குலுக்கி எழுப்பிவிடக் கூடாதா? அவனுக்கு எவ்வளவு கஷ்டம் என்று அவர்களுக்குத் தெரியாதா? அவர்கள் ஏன் இப்படிக் குருட்டுத்தனமாக நடந்து கொள்கிறார்கள்?

திடீரென்று மூடுபனி மறைந்து விட்டது. கையை நீட்டி யாரோ அதைத் திடீரென்று கலைத்துவிட்டது போலத் தோன்றியது. கிரிகோரி பயங்கரமான வேதனையை உணர்ந்தான். பிறகு நடந்த நிகழ்ச்சிகள் யாவும் வெகு தெளிவாக ஞாபகத்திற்கு வந்தன. இல்லை; இது கனவில்லை. உண்மையாகவே அங்கே ஒரு போர் நிகழ்ந்தது. அன்றைக்குக் காலையிலேதான் அவர்கள் பகைவர்களை எதிர்க்க ஆரம்பித்தார்கள்; குன்றின்மேல் இருந்த கிராமத்தை முற்றுகை இட்டார்கள். அப்பொழுது, ஒரு குண்டு வெடித்தது. குண்டு வெடித்த பிறகு ஓடினதாக அவனுக்கு ஞாபகம் இல்லை. அந்தக் குண்டுதான் அவனைக் காயப்படுத்தியிருக்கவேண்டும். காயம் அடைந்து செத்த பிணங்களின் மத்தியிலே கிடந்தான் அவன். பிணங்களைத் தூக்கி எடுத்து ஓர் இடத்தில் குவித்தவர்கள் அவனையும் பிணம் என்றே கருதி இருக்க வேண்டும். காயம் அடைந்த ஒருவனை, அதோ, எடுத்துச் செல்கிறார்கள் அந்தக் குன்றின் சரிவிலே. கத்தினால் தன்னையும் தூக்கிச் செல்வார்கள்; தனக்கும் உதவி கிடைக்கும்—என்று கருதினான் கிரிகோரி. அவனால் கத்தமுடியவில்லை.

அவன் காத்திருக்கவேண்டும். எதற்காக? அவன் இருந்த பக்கமாக யாராவது வரலாம். ஒருவேளை வைத்தியப் படையைச் சேர்ந்தவர்கள் பிணங்களைப் புதைக்க வரலாம். அப்பொழுது அவர்கள் அவனைப் பார்க்கலாம். ஆனால், அதுவரைக்கும் பிரக்ஞை தவறாமல் இருக்க வேண்டுமே. இல்லாவிட்டால் அவனையும் இறந்தவனாகவே கருதி விடுவார்கள். அவர்கள் எப்பொழுது அவன் இருந்த பக்கத்திற்கு வருவார்கள்? இதுதான் கேள்வி. இன்றைக்கே வரலாம்; நாளைக்கும் வரலாம்; அல்லது, அதற்கு அடுத்த நாளும் வரலாம்.

குளிர் மேலும்மேலும் அதிகரித்து உடலில் ஊடுருவிப் பாய்ந்தது. கிரிகோரி அதிக நோவால் வருந்தத் தொடங்கினான். காயம் அடைந்த பாகம் எது என்பதை மட்டும் அவன் அறியக்கூடுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்? இதைக்கூட அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அவனா, அவனுடைய காயமா அல்லது அவனுடைய சூழ்நிலையா, எது வெற்றியடையப் போகிறது?

நேரம் மெதுவாக சென்று கொண்டிருந்தது; அதைச் சகிக்க முடியவில்லை. அவ்வளவு மெதுவாகவா காலம் கடந்து போகவேண்டும்? அங்கே, அந்தக் குன்றின் சரிவிலே, அந்தச் செம்படை வீரன் வழுக்கலான பனிக் கட்டிமீது இன்னும் சங்கடப்பட்டுக்கொண் டிருந்தான். அந்தக் குதிரையும் ஒரு மனிதனின் உயிரைக் காப்பதற் காக மிகவும் முயற்சி செய்துகொண்டு இருந்தது.

திரும்பவும் அதே சாம்பல் நிறமான மூடு பனி. மூடு பனியின் இடைவெளிகளின் மத்தியிலே அதே குதிரை யின் தலை; அதே மனிதன்; கத்திக் கத்தி, அவனுடைய குரல் இப்பொழுது கரகரத்துப் போயிற்று. சறுக்கியின் மீது கம்பளிப் போர்வையால் மூடிய அதே மனிதன்:— இவை யாவும் திரும்பத் திரும்பத் தோன்றின. எல்லாம் மேலே ஏறுவதும், அந்த மாயமான குன்றுச் சரிவு வழி யாக வழுக்கிக் கீழே விழுவதும் திரும்பத் திரும்ப நிகழும் காட்சிகளாக இருந்தன. மேலே ஏறி வெற்றிபெற அந்தக் குன்றுச் சரிவு கொஞ்சங்கூட அவர்களுக்கு இடம் தர வில்லை. வாழ்க்கைப் போராட்டத்தின் வீரர்களைக் கீழே, கீழே, மரணத்துக்கே தள்ளி விட்டது.

* * *

"மரியா, வைத்தியசாலை சூப்பரின்டெண்டு உன்னைத் தேடிக்கொண்டு இருக்கிறார்."

"எதற்காக?"

"எனக்குத் தெரியாது. உன்னை அவர் பார்க்க வேணுமாம். அவ்வளவுதான்."

மரியா ஒரு பாட்டை வாய்க்குள்ளேயே பாடினாள். எதிரில் இருந்த கண்ணாடியைப் பார்த்துத் தலைமயிரைக் கோதி விட்டுக்கொண்டாள். சூப்பரின்டெண்டின் அறையில் மேசை விளக்கு எரிந்துகொண்டு இருந்தது. மரியா உள்ளே புகுந்தவுடன் அவர் தலையைத் தூக்கிப் பார்த்தார். திரும்பவும் மேசைமேல் இருந்த காகிதங்களை ஒழுங்காக அடுக்கினார்.

"மிஹேய்ல் நிக்கிட்டிச், நீர் என்னை அழைத்தீரா?"

"ஆமாம், ஆமாம். ஒரு நிமிஷம் பொறுத்துக்கொள்" என்று குழப்பத்துடன் கூறிவிட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டார். மரியாவுக்கு ஒரே ஆச்சரியம்.

"எதிலாவது தவறு நேர்ந்துவிட்டதா மிஹேய்ல் நிக்கிட்டிச்?"

"இல்லை. இல்லை. ஒரு தவறும் நேரிடவில்லை."

திரும்பவும் கண்களை எடுத்து அவள் முகத்தைப் பார்த்தார். பின்பு எழுந்துவந்து அவள் கைகளைப் பிடித்துக்கொண்டார். அந்தச் செய்கை அவளைப் பய முறுத்தியது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. திடீரென்று ஒரு நடுக்கம் உடல் முழுவதும் பரவியது. முகம் வெளுத்தது.

"மரியா பவ்லோவ்னு, நீ எப்பொழுதும் தைரியமும், அறிவும் உடைய பெண்ணாக இருந்திருக்கிருய்......"

அவளுக்கு ஒன்றும்விளங்கவில்லை. அவள் பார்வையில் கேள்வி நிறைந்திருந்தது அவள் காதில் ஒரு ரீங்காரத் தொனி கேட்டது. இது என்ன இது? என்ன நடக்கிறது இங்கே?

"நாம் என்ன செய்யமுடியும் மரியா......இந்தச் சண்டை........."

"என்ன நேர்ந்தது?" என்று திரும்ப ஒருமுறை கேட்டாள். அந்தக் குரலில் துக்கம் நிறைந்திருந்தது. அது அவளுடைய குரலே அல்ல. திடீரென்று அவளுக்கு ரொம்ப பயம் ஏற்பட்டது. சூப்பரிண்டெண்டு மேசைப் பக்கம் திரும்பி ஒரு துண்டுக் கடிதத்தை எடுத்தார்.

அது மின்வெட்டுப்போல் இருந்தது. கண் கூசும் படியான பேரொளி ஒன்று அறையெங்கும் நிறைந்தது. மரியா நிலை தடுமாறிஞள். விழுந்துவிடாதபடி சுவர்மீது சாய்ந்தாள்.

அவள், சூப்பரிண்டெண்டின் அறைக்குள் நுழைந்து அவருடைய முகத்தில் குழப்பத்தையும் தயக்கத்தையும் பார்த்தபோது "கிரிஷா!" என்ற எண்ணம் அவள் உள் ளத்தில் உதித்தது. அவன் செய்தியைச் சொல்லத்தான்

அழைத்தார் என்று அவளுக்கு நிச்சயமாகத் தோன்றி யது.

"இதோ உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது."

குளிரால் நடுங்கிய விரல்களினால் கடிதத்தை வாங்கி னாள். அது கடிதங்கூட இல்லை. வழக்கமாய் வரும் சாதா ரண அறிக்கைதான். இந்தச் சண்டை ஆரம்பித்த பிறகு இப்படி எத்தனையோ அறிக்கைகளை அவள் பார்த்திருக் கிறாள். ஆனால், அவையெல்லாம் அவளுக்கு வந்தவையல்ல.

மரியா அந்தக் கடிதத்தைப் பிரித்தாள். அதை வாசிக்கவேண்டிய அவசியம் இல்லை. அதில் என்ன எழுதி இருந்தது என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும். தன்னுணர்வின்றி அந்த வெள்ளைக் கடிதத்தின்மேல் கண் களை ஓட்டினாள்.

ஆமாம். அதுதான், வழக்கமாய் வரும் அறிக்கை தான். காப்டன் கிரிகோரி ஐவனேவிச் சொர்னவ் 'தேசத் தின் விடுதலைக்காகவும், சுதந்தரத்துக்காகவும் போராடித் தைரியமாக உயிரிழந்தான்.'

தான் இன்னதுதான் செய்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை. கையிலிருந்த கடிதத்தைக் கசக்கினாள். திரும்பவும் சூப்பரிண்டெண்டு அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டார்.

"மரியா பவ்லோவ்னு! நீ தைரியமாக இருக்க வேண்டும்.

அவள் காரணம் தெரியாமல் புன்னகை செய்தாள்.

"ஆமாம், ஆமாம். எனக்குத் தெரியும்."

பிறகு:

"நான் இப்போது போகலாமா?"

சூப்பரிண்டெண்டு சரியென்று தலையசைத்தார். மரியா விடை பெற்றுக் கொள்ளாமல் வெளியே சென் றாள். திரும்பவும் அதே நடைபாதை. அதில் அதே சிவப்பு நடை-பாய் விரித்திருந்தது. தரையிலே சிகரட்டுத் துண்டு கள் கிடந்தன. வெட்கக்கேடு! இவ்விடத்திலே சிகரட் டுப் பிடிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்த போதி

லும், சிகரட்டுத்துண்டுகளை அங்கங்கே எறிந்திருந்தார்கள். மரியா குனிந்து சிகரட்டுத் துண்டுகளைப் பொறுக்கி, ஒரு மூலையில் இருந்த எச்சில்-தொட்டியில் எறிந்தாள். சிவப்பு நிறமான அந்த நடை-பாய் ரொம்ப அருவருப்பாக இருந்தது. அதன் குரூரத் தோற்றம் இப்பொழுதுதான் அவளுக்குப் புலப்பட்டது. பெரிய கண்ணராவி; கண்ணை உறுத்தியது. அவ்வளவு பகட்டான நிறங்களுக்கு வைத்திய சாலையிலே இடம் கிடையாது. இவ்வளவு நீளமான நடை பாதையும் தேவையில்லை. உயிரற்ற யந்திரம் போல தன்கால் அடிகளை எண்ணத் தொடங்கினாள்; பத்து...... பன்னிரண்டு...மாடிக்குப் போக எத்தனை படிகள் ஏற வேண்டியிருக்கிறது. பன்னிரண்டு படிகள் இருந்தன. இது யார்? ஓகோ, ராய்ஸாதான். என்ன வேடிக்கையான பெயர்! ராய்ஸா......

என்ன நடந்தது? எதற்காக உன்னைக் கூப்பிட்டார்?'' என்று ராய்ஸா நிதானமாகக் கேட்டுக்கொண்டே ஆயுதங்களை பெட்டியில் அடுக்கினாள்.

"ஒன்றுமில்லை."

"ஒன்று மில்லையா?"

மரியாவின் பக்கமாகத் தலையைத் திருப்பிய பொழுதுதான் அவளுடைய விகாரமான முகத் தோற்றத்தைக் கவனித்தாள் ராய்ஸா.

"என்ன சமாசாரம் மாஷா?"

"ஒன்றுமில்லை."

"என்ன அது? ஏதாவது துக்கமான செய்தியா?"

"துக்கமா?"

மரியாவின் உள்ளத்தில் இருந்த மனக் கசப்பை அவளுடைய உதட்டுக் கோணல் உணர்த்தியது. இதை யாராவது 'துக்கம்' என்று சொல்லுவார்களா?

"ஆமாம் எல்லாம் துக்கம்தான்."

"அது என்ன? ஏன் எனக்குச் சொல்ல மாட்டேன் என்கிறாய்?"

மரியா கால் ஓய்ந்தவள்போலத் திடீரென்று நாற்காலியில் உட்கார்ந்தாள். குறை கூறும் குழந்தையைப் போல "கிரிஷா இறந்து விட்டான்" என்று சொன்னாள்.

ராய்ஸா வாய்விட்டு அழுதாள்; அவளுடைய கண்களில் வெகு விரைவில், வெகு சுலபத்தில் கண்ணீர் நிறைந்து விட்டது. அவள் மரியாவிடம் ஓடினாள்.

"மாஷா!"

மரியா அவளை மெதுவாக அப்பால் தள்ளி விட்டாள். தரையில் சித்திரித்திருந்த வேலையில் தோன்றிய தவிட்டு நிறமான முடிவு இடத்தை உற்றுப் பார்த்தாள். அது ஒரு மலராத ரோஜா மொக்குப்போல் இருந்தது.

"கிரிஷா இறந்துவிட்டான்" என்று திரும்பவும் சொல்லித் தன் குரலைத் தானே கேட்டுக் கொண்டாள். கிரிஷா இறந்துவிட்டான்" என்று மூன்றாவதுமுறை உரத்த சத்தமாகச் சொன்னாள்; பயந்து விட்டாள். அது உண்மையாக இருக்காது; உண்மையாய் இருக்க முடியாது! கட்டுக் கதை! . நம்பமுடியாத பொய்! பயங்கரமான வார்த்தைகள்! இவைகளை வாயால்கூட உச்சரிக்கக் கூடாது!

உதவிக்கு அழைக்கிறதைச் சுட்டிக் காட்டுகிற சிவப்பு விளக்குத் தோன்றியது. ராய்ஸா குதித்தெழுந்தாள்.

"நான் போகிறேன்."

"இல்லை, அது நான் வேலை செய்யும் அறையைக் குறிக்கும் வெளிச்சம்" என்று மரியா தன் வழக்கமான குரலிலே கூறிவிட்டு, அவசரமாக ஈரத் துணியினால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

நடை பாதையில் உதவி-டாக்டர் ஒருவனைச் சந்தித்தாள்.

"என்ன சமாசாரம்?"

"ஏழாம் நம்பர் நோயாளி இறந்து கொண்டிருக்கிறான். அதிக வேதனைப்படுகிறான்."

ஏழாவது நம்பரா? ஆமாம். அதிலொன்றும் ஆச்சரியம் இல்லை. இதற்கு முந்தியே அவன் இறந்து விடுவான் என்று டாக்டர்கள் எதிர்பார்த்தார்கள்.

அவள் சந்தடி பண்ணுமல் படுக்கையறைக்குள் நுழைந்தாள். எவன் இறந்து கொண்டு இருந்தான்? கிரிஷாவா? பொய்! கிரிஷா இறக்க முடியாது. அவள் காயமடைந்த மனிதனிடம் சென்ருள். அவனுக்கு ஜுரம் நெருப்பாய்க் கொதித்தது. சுவாசம்விடச் சிரமப் பட்டான். விரல்களினுல் கம்பளியை அவசரமாகத் திருப்பித் திருப்பிப் பிய்த்துக் கொண்டிருந்தான். மரியா அவனைக் குனிந்து பார்த்தாள். அவன் கண் மங்கி யிருந்தது. சுவாசம் மூக்கு வழியாகச் சீழ்க்கைத் தொனி எழுப்பிக் கொண்டு வந்தது. அவனைப் பார்த்த உடனேயே "இவன் வெகுசீக்கிரம் மறு உலகத்துக்குப்போய் விடுவான் என்று தெரிந்து கொண்டாள். அவன் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. முதலில் இருந்தே அவன் பிழைப்பான் என்ற நம்பிக்கை எவருக்குமே இல்லை அடிவயிற்றில் காயம் மிகவும் மோசமான நிலையில் இருந்தது. அவன் வைத்திய சாலைக்கு வந்து சேருமுன்பே அவனுடைய தலைவிதி முடிந்து விட்டது.

காயமடைந்த அந்த மனிதன் வேதனையினுல் முனங்கினுன். மரியா அவனைக் குனிந்து பார்த்தாள்; தன்னை இன்னுர் என்று தெரிந்து கொண்டான் என்று அறிந்தாள். அசாதாரணமான மனே சக்தியினுல் முகத்தில் ஒரு புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள். இந்தப் புன்சிரிப்புக்காகத்தான் காயமடைந்தவர்கள் எல்லாரும் அவளை விரும்பினுர்கள். இந்தப் புன்சிரிப்புத்தான் அவர்களுக்கு நம்பிக்கையையும், துணிவையும், அமைதியையும் கொடுத்து உதவியது. ஆனுல், இங்கே நம்பிக்கையைக் கொடுக்க முடியாது. துணிவையும் கொடுக்க முடியாது. அமைதியைத் தான் கொடுக்க முடியும்.

அவன் தலை மீது வைத்திருந்த பனிக்கட்டிப் பையை மரியா சரியாக வைத்தாள். ஈரம் படிந்த அவனுடைய தலை ரோமம் நெற்றியில் ஒட்டிக் கொண்டு இருந்தது. அவள் மெதுவாக ரோமத்தை ஒதுக்கி விட்டாள்; நடுக்கத்

தோடு கம்பளியைப் பிய்த்தெறியும் விரல்களின்மேல் தன் கையை வைத்தாள்.

ஹா—ஆ!......ஹா—ஆ!......ஹா—ஆ! என்று தன் வேதனையை உணர்த்தினான் அந்த மனிதன்.

"உஷ்! நீ அமைதியாக இருக்க வேணும்."

கட்டிலோடு பொருந்தி யிருந்த சீட்டைப் பார்த்து அவனுடைய மருந்தைத் தயாரித்தாள். உலர்ந்திருந்த வாயிலே அந்த மருந்தை வெகு ஜாக்கிரதையாக ஊற்றினாள். அவன் அமைதியடைந்தான்; சிறிது நேரம் பேசாமல் படுத்திருந்தான். பிறகு, அவன் உதடு அசைந்தது. அவன் கண் எதையோ கெஞ்சிக் கேட்டது. முதலில் அவளுக்கு ஒன்றும் விளங்க வில்லை. அவன் ஒரே வார்த்தையை கரகரத்த குரலில் திரும்பத் திரும்ப விடாமல் சொல்லிக்கொண் டிருந்தான். பின்பு, பொறுமை யிழந்து குரலை இன்னும் கொஞ்சம் உயர்த்த முயன்றான். கடைசியில் அவன் சொல்வது அவளுக்கு விளங்கியது. குரங்குப் பிடியாய் அவன் கூறிக் கொண்டிருந்த வார்த்தை இதுதான்.

"செய்தி...செய்தி...செய்தி..."

"இன்றையச் சண்டைச் செய்தி என்ன வென்று அறிய விரும்புகிறாயா?"

அவன் கண் இமைகள் 'ஆம்' என்பதற்கு அறிகுறியாக மூடின. முகத்தில் தோன்றிய கடுகடுப்பு மறைந்தது. அவன் சொல்ல விரும்பியதை அவள் சரியாகத் தெரிந்து கொண்டாள். அவன்மீது குனிந்தாள்.

"நாம் பகைவரை நன்றாக எதிர்த்திருக்கிறோம். இன்றைக்கு இருபது மைல் முன்னேறிச் சென்றிருக்கிறோம். நூறு கிராமங்களுக்கு மேலாக நமது படைகள் கைப்பற்றி இருக்கின்றனர்" என்று மெதுவாக, அழுத்தந் திருத்தமாகச் சொன்னாள்.

அவன் முகம் மலர்ந்தது. ஜுர வேகத்தால் மங்கியிருந்த கண்களில் ஏதோ ஒரு நோக்கத்தைக் குறிப்பிடும் பார்வை ஏற்பட்டது. இதுதான் அவன் கேட்க விரும்பியது. இதுதான் அவனை வேதனைப் படுத்தியது. ஆனால், ஒரு

நிமிஷத்திற்குள் அவன் திரும்பவும் கம்பளியைப் பிய்க்க ஆரம்பித்தான்; கண்ணொளி மங்கியது. அவன் மரணத்தை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தான். அவன், புலம்பல் நிறைந்த பாதாளத்தின் அந்தகாரத்திலே, வெப்பம் மிகுந்த சூன்யத்திலே, மூழ்கினான். திரும்பவும் அவன் உதடு துடித்தது. ஆனால், இந்தத் தடவை அதிலிருந்து ஒரு சத்தமும் வெளி வரவில்லை. அவன் ஏதோ பேசினான். தனக்குத் தானாகவோ அல்லது தன் சித்தப் பிரமையினால் தோன்றிய ஒரு தோற்றத்தோடோ பேசினான். அவன் உதடுகள் வேகமாக, அவசரமாக அசைந்தன.

தன் உதடுகளும் வேகமாக அசைந்து கொண்டிருந்ததை மரியா திடீரென்று உணர்ந்தாள். அவளும் ஜுர வேகத்தில் முனங்குவதுபோல ஒரே வார்த்தையைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்: "கிரிஷா!"

அவள் தன் சுயநிலையை அடைந்தாள். எப்படி இருந்தாலும் எல்லாம் வெறும் தோற்றங்கள்! கற்பனைச் சுமை! ராக்ஷஸ ரீதியான கனவு! பொய்!

மேலங்கியில் ஒரு காகிதம் சலசலத்தது. காகிதம் உண்மையான ஒரு பொருள்தான். ஆனால், அந்தக் காகிதத்தினால் அவளுடைய மன-நிலையில் வித்தியாசம் ஒன்றும் ஏற்படவில்லை.

காயம் அடைந்த மனிதன் வேதனைக் குரலோடு நெட்டுயிர்த்தான். மரியா தன் நினைவுக்கு வந்தாள். நோயாளியின் தலைமீதிருந்த பனிக் கட்டிப் பையைத் திரும்பவும் சரியானபடி வைத்தாள். நழுவி விழுந்த கம்பளியை நோயாளி மீது சரியாகப் போர்த்தினாள். நோயாளியின் முணு முணுப்புச் சத்தம் அதிகரித்தது. அவனுடைய உலர்ந்த உதடுகள் விந்தையான சொற்களை உளறின; குழம்பிய சொற்றொடர்களைக் குழறின; இன்னது என்று அறிய முடியாதவாறு கதறின. திடீரென்று அவன் முழங்கைகளை ஊன்றிக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான்; நோயாளிகள் படுத்திருக்கும் அறை எங்கும் கேட்கும்படி ஊடுருவுங் குரலிலே அலறினான்:

"முன்னேறிச் செல்லுங்கள்! தாய் நாட்டிற்காக! ஸ்டாலினுக்காக!"

உடம்பெல்லாம் நோகும்படி எழுந்து நிற்க முயன்ருன். மரியா வெகு சிரமத்தோடு அவனை அடக்கி அமர்த்தினள். அவன் அவளைப் பிடித்துத் தள்ளினன். குருட்டுத்தனமாகக் கைகளை அப்படியும் இப்படியும் சுழற்றினன். அவள் அந்தக் கைகளால் அடி படாதபடி தலையைப் பின்பக்கமாக விலக்கிக் கொண்டாள்; கைகளால் அவனை அணைத்த வண்ணமே, திரும்பத் திரும்பக் கூறினள்:

"உஸ்! சும்மா இரு! அமைதியாக இரு! படுத்துக் கொள்! அமைதியாகப் படுக்க வேண்டும்! உஸ்! சும்மா இரு!"

உடல் வலிமை இழந்து களைத்துத் தலையணைகளின் மேல் பின் பக்கமாகச் சாய்ந்து அவன் விழுந்தான்; வேகமாக நெட்டுயிர்த்தான். இப்பொழுது அவன் அசையாமல் கிடந்தான். அவன் முகமெங்கும் மஞ்சள் குளித்தது. அவனுடைய மூக்கு கூர்த்து நீண்டது. அவன் மூச்சு விடுவதாகவே தெரியவில்லை. அவன் இறந்து விட்டான் என்றே அஞ்சினள் மரியா. மறு நிமிஷத்திலேயே அவனுடைய நெஞ்சு பொங்கித் தாழ்ந்தது. சுவாசப் பைகளிலிருந்து வெளியேறிய மூச்சு சீழ்க்கை யடித்தது.

திடீரென்று முற்றிலும் பிரக்ஞை அடைந்து "அது யார்?" என்ருன்

"நான் நர்ஸ்; மரியா; மரியா பவ்லோவ்ன; என்னைத் தவிர இங்கே ஒருவரும் இல்லை."

இந்த வார்த்தைகளைச் சொன்னபொழுது, அவன் தன்னைப் பார்க்கவும் இல்லை; தன் சொற்களைக் கேட்கவும் இல்லை என்று உணர்ந்தாள் மரியா. அவனுடைய கேள்வி அவளைப் பார்த்துக் கேட்டதன்று. அவன் வேறு யாரிடத்திலோ பேசிக் கொண்டிருந்தான்.

மரியா களைப்பு மேலிடவே தட்டுத் தடுமாறினள். ஏதோ ஒன்று மறைந்து விட்டது; ஏதோ ஒன்று தகர்ந்து விட்டது; அணைக்க முடியாத விளக்கு ஒன்று எரியாமல் நின்று போயிற்று. ஆனல், அது என்ன என்று அவ

ளுக்கு ஞாபகம் இல்லை. மறந்து போனது இன்னதென்று நினைத்துப் பார்த்தாள். கிரிஷா இறந்துவிட்டான். அவ னுடைய மகிழ்ச்சியான புன்னகை, அவனுடைய திடமான கரத்தின் பற்று எல்லாம் போய்விட்டன. அவள் எப்பொழுதும் உணர்ந்து வந்த பிரசன்னம்! அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த பிரசன்னம்! நோயாளிகளின் அறையிலே இரவுதோறும் செய்யவேண்டிய கஷ்டமான வேலைகளிலும் ரண சிகிச்சைக் கூடத்தில் உழைக்க வேண்டிய கஷ்டமான நேரங்களிலும் எப்பொழுதும் ஆதரவாக இருந்த கிரிஷாவின் பிரசன்னம்!— அது போய்விட்டது.

நோயாளி திரும்பவும் முணுமுணுத்தான். அதோடு, உலர்ந்த உதடுகளிடையிலிருந்து தளர்ந்த குரலிலே விரைவாக எழுந்து வந்த முணுமுணுப்பும் இடைவிடாமல் தோன்றியது. அவன் யாரோ ஒருவனைப் பார்த்தான்; யாரோ ஒருவனுக்குப் பதில்சொல்லிக் கொண்டிருந்தான்; யாரோ ஒருவனிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய சம்பாஷணைக்கும் வைத்திய சாலைக் கட்டிலுக்கும், மரணம் அடைகிறானே என்ற விஷயத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை.

எங்கேயோ, வெகு தூரத்திற் கப்பால், போர்க்களத்திலே, மிகுந்த கவலையோடு, தீவிரமான நேசத்தோடு தன் தாய் நாட்டின் விஸ்தீரணத்தை அளப்பதற்காக ஒரு பூகோளப் படத்தைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு எதைப் பற்றியோ கவலை; எதைப் பற்றியோ மனக் கலவரம். எதையோ ஒன்றைச் செய்து முடிப்பதற்காக வெகு தீவிரமான ஆசை. அவன், இங்கே, இந்த வைத்தியசாலைக் கட்டிலிலே தன் தாய் நாட்டிற்காக உயிரை விட்டுக் கொண்டிருந்தான். ஆனால், அவனுடைய சிந்தனைகள், கவலைகள், விசாரங்கள் எல்லாம்—எங்கே பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருந்தனவோ அங்கே, எங்கே யந்திரத் துப்பாக்கிகள் 'தடதட' என்று வெடித்துக் கொண்டிருந்தனவோ அங்கே, எங்கே தன் தோழர்கள் யுத்த கோஷம் பண்ணிக் கொண்டு, நித்திரைக் குறைவால் சிவந்துபோன கண்களால் உருட்டி விழித்துப் பற்களை 'நறநற' என்று கடித்து, வரிசை

யாக அணிவகுத்துப் பகைவரைத் தாக்க முன்னேறிச் சென்றார்களோ அங்கே, இருந்தன. இதைத் தவிர அந்த மனிதனுக்கு, அவனுடைய கடைசி நேரத்திலே வேறு ஒன்றுமே இருக்கவில்லை. இந்த எண்ணமே இருந்தது. அவனுடைய உள்ளத்திலிருந்து அனல் கொண்டு வெளியேறிய அந்த முணுமுணுப்புக்களின் பொருளை அறிய முயன்றாள் மரியா. அவனுக்குப் பதில் சொல்லப் பார்த்தாள். உதவி செய்யப் பிரயத்தனம் பண்ணினாள்; ஆனால் மரணம் அடைந்து கொண்டிருந்த அந்த மனிதனோ அவளைப் பார்க்கவும் இல்லை; அவளுடைய வார்த்தைகளைக் கேட்கவும் இல்லை.

மகா பயங்கரமான இந்த இரவு எப்பொழுதுதான் முடிவடையுமோ? மிகவும் மெதுவாகக் கடந்து சென்ற நிமிஷங்கள் முடிவற்ற கால எல்லைக்கே நீண்டு விடுமோ என்று தோன்றியது. மணி ஓடாமலே நின்று விட்டதோ என்றுகூடத் தோன்றியது. நேரமே போகவில்லை. மரியாவின் மனத்தில் எல்லாம் ஒரே குழப்பமாக இருந்தது. கிரிஷா! மரணப் படுக்கையில் இருக்கும் இந்த மனிதன்! ராய்ஸா! வைத்தியசாலை சூப்பரின்டெண்டு! சூப்பரின்டெண்டை அவள் பார்க்கப் போனது எப்போ? நேற்றைக்கா? அதற்கு முந்தின நாளா? ஒரு வருஷத்துக்கு முந்தியா? அல்லது அவள் அவனைப் பார்க்கப் போகவே இல்லையா?

மணி என்ன? கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். அது ஓடவில்லை. காயம் அடைந்தவன் இன்னமும் ஓயாமல் முணங்கி கொண்டிருந்தான். அவனுடைய உதடுகள் மேலும் மேலும் அதிக விரைவாக அசைந்தன. அவனுடைய கரங்கள் கம்பளியை மேலும்மேலும் வேகமாகப் பற்றி இழுத்தன.

யாருக்கோ துக்கச் செய்தி கொண்டுபோகும் இன்னொரு காகிதத் துண்டு! ஆனால், இந்தத் தடவை "காயம் அடைந்து இறந்து விட்டான்!" என்று தான் அந்தச் சீட்டிலே எழுதி யிருக்கும். இந்த மரணச் சீட்டு யாருக்குப் போகிறதோ? யாருடைய வாழ்க்கையின் ஒளியை இருளாக்கப் போகிறதோ? 'இந்த நாளுக்குப்

பின் உன் வாழ் நாட்களிலே உனக்கு இன்பமும் இல்லை; ஆனந்தமும் இல்லை' என்று யாருடைய வாழ்க்கைப் பஞ்சாங்கத்தில் ஒரு நாளைக் கோடு கிழித்துக் காட்டப் போகிறதோ இந்த மரணச் சீட்டு.

மரியா ஜன்னலை அணுகினாள். அதை மூடியிருந்த கறுப்புத் துணியை விலக்கினாள். ஜன்னல் - கண்ணாடி இருப்பதாகவே தெரியவில்லை; மங்கிய சாம்பல் நிற வெளியாகவே தோன்றியது. மரியா விளக்கை அணைத்தாள். பனிக்காலத்தின் வெளிறிய உதய காலம் மெள்ள மெள்ள அந்த அறைக்குள் நுழைய ஆரம்பித்தது. கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த சிறு மேசை, அதன்மேல் இருந்த கண்ணாடி டம்ளர், மருந்துப் புட்டி, தலையணைமேல் பதிந்த நோயாளியின் தலை, அவனுடைய மஞ்சள் குளித்த முகம், குழிவிழுந்த அவனுடைய கண்கள், நடுங்கிக் கொண்டிருந்த அவனுடைய உதடுகள், நெற்றியின்மேல் ஈரமாகக் கிடந்த தலை ரோமம்—முதலியவை யாவும் இருளிலிருந்து வெளிப்படத் தொடங்கின.

இப்பொழுதுகூட அவன் முனங்கிக் கொண்டிருந்தான். ஆனால், அவனுடைய சக்தி எல்லாம் அவனை விட்டு அகன்று விட்டது. கம்பளி மீது அவனுடைய விரல்கள் வெகு விரைவாக ஓடின.

முன்னிலும் அதிக வெளிச்சமாயிற்று. நெருங்கி வந்து கொண்டிருந்த உதய காலம் மரணமடையும் மனிதனுடைய சக்திகளை யெல்லாம் விழுங்கி, ஜீர்ணம் பண்ணி, முடிவில் அவனுடைய நஷ்டத்தினாலே வல்லமை மிகுந்த இருளையும் இரவையும் வென்று விட்டது.

அறையில் இருந்த சகல பொருள்களின் வரிவடிவமும் தெளிவாகத் தோன்றத் தொடங்கியது. அப்பொழுது இரவின் கடைசி இருள் மூலை முடுக்குகளில் பதுங்கியது. மரணத்தில் மூழ்கிக் கொண்டிருந்த மனிதனுடைய விரல்களின் அசைவு நின்று விட்டது. அதை மரியா பார்த்தாள். அவனுடைய உதடுகளும் அசைவற்று மரத்துவிட்டன. சந்தடி பண்ணாமல் இறந்துவிட்டான். அகன்று விரிந்த கூரையைப்பார்த்து விழித்தபடியே திறந்து நின்ற அவனுடைய

கண்களிலே, எவராலும் பதில் அளிக்க முடியாத அவனுடைய கவலைக் கேள்வி நிலையாக நின்று விட்டது.

மரியா பெருமூச்செறிந்தாள்; மணி அடித்தாள். தூங்கி விழுந்து கொண்டே ஒரு வேலைக்காரன் அறைக்குள் வந்தான்.

சற்றும் ஈரமில்லாத குரலில் "அவன் செத்து விட்டான்; நான் வீட்டுக்குப் போகிறேன்" என்றாள் மரியா.

கீழே சென்றாள். கால்கள் மரத்துப்போய் இருந்தன. நடப்பதே கஷ்டமாக இருந்தது. சட்டைப் பொத்தான்களை மாட்டத் தடுமாறினாள். பாதரட்சையின் மேல் அணியும் மேல் உறையைப்பற்றி மறந்தேபோய் விட்டாள்.

அவளுக்குப் பின்னாலே படிகளை இரண்டு இரண்டாகத் தாவி வந்துகொண்டிருந்தான் வாரன்ஸோவ். மரியாவுக்கு வேலை முடிந்த அதே நேரத்தில் அவன் வேலையும் முடிவடைந்தது.

"வீட்டுக்குப் போகிறாயா, மரியா?" என்று சாரமற்ற குரலிலே கேட்டான். அவள் போகிறாள் என்பது அவனுக்கு வெளிப்படையாகத் தெரிந்தது. மரியா அவனைப் பார்த்தாள். அவளுடைய கண்களில் கிரஹிக்கும் சக்தி இல்லை.

"வீட்டுக்குப் போகிறேன்."

அவள் குரலில் ஒரு மந்தம், ஒரு மாறுதல். கண்களைச் சுற்றி கறுப்பு. கன்னத்தில் குழி. வாசற் கதவைத் திறக்காமல் அசைவின்றிச் சலனமற்று நின்றாள். அதைத் திறப்பதுகூட அவள் சக்திக்கு மிஞ்சின காரியம் என்றே தோன்றியது.

"நான் உன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுகிறேன்."

அதை அவள் விரும்பவில்லை.

"வீட்டுக்கா? வேண்டாம். வேண்டாம். வீட்டைத் தவிர வேறே எங்கேயாவது போகலாம்."

கதவருகில் ஒரு மோட்டார்கார் நின்றுகொண்டு இருந்தது. மரியா அதைச் சுற்றிப்போக முயன்றாள்.

ஆனல், வாரன்ஸோவ் சாந்தமாக, அன்பாக அவள் தோளைப்பிடித்து அழைத்துச்சென்று, மோட்டார்காரின் கதவைத் திறந்து விட்டான். தான் செய்வது இன்னது என்று உணராமல் யந்திரப் பதுமைபோல் நடந்தாள். காரில் உட்கார்ந்த பிறகுதான் ஆச்சரியக் குரலிலே "காரா?" என்று கேட்டாள்.

அந்தக் கேள்வியில் உணர்ச்சியில்லை. விடையை எதிர்பாராமல் கடமைக்காகக் கேட்ட கேள்விபோல இருந்தது. அவளுக்காக ஒரு மோட்டார்கார் காத்துக் கொண்டிருப்பது சர்வ சாதாரணமான ஒரு நிகழ்ச்சி போலத் தோன்றியது. கார் மாத்திரம் இல்லாமல் இருந் திருந்தால், அவள் டிராமுக்கு நடந்து சென்றிருக்க முடி யாது. இந்த எண்ணம் அவள் மனத்தில் குழப்பத்தை உண்டுபண்ணியது. ஏன் முடியாது? தினந்தோறும் அவள் டிராமில்தானே வீட்டுக்குப் போகிறாள். இன் றைக்கு ஏன் அப்படிப் போகமுடியாது? என்ன நடந் தது? என்னதான் நடந்து விட்டது? நடந்த காரியத்தை நினைத்து நினைத்துப் பார்த்தாள். பயனில்லை.

"இது வைத்தியசாலை சூப்பரிண்டெண்டின் மோட் டார்கார். நாம் இருவரும் என் வீட்டுக்குப் போகலாம். நீ சொன்னது சரிதான். இப்போது உன்னல் வீட்டுக்குப் போக முடியாதுதான்."

"நான் வீட்டுக்குப் போக முடியாது......முடியாது ......முடியாது......" என்று திரும்பத் திரும்பச் சொன் ஞள். ஆமாம். அவள் செய்ய முடியாத, செய்ய சாத்தியப்படாத, சகிக்க முடியாத ஒன்று இருந்தது.

"கிரிஷா இறந்து விட்டான்" என்று திடீரென்று கூறிஞள். வாரன்ஸோவ் அவள் கையைப் பிடித்தான்.

"எனக்குத் தெரியும், மரியா."

மோட்டார்கார் நின்றது. அவள் இறங்குவதற்கு அவன் உதவி செய்தான். அவர்கள் எங்கே போகிரூர் கள்? அவள் பிரமித்தாள். இது அவள் வீடன்று. இவை அவள் வீட்டுப் படிகளல்ல. அவன் ஏதோ சொன்னன். அது அவள் காதில் விழவில்லை.

பூட்டில் சாவி சுழன்றது. ஒரு முன்கூடம். ஒரு அறை. மரியா கதவருகில் தயங்கி நின்றாள். என்ன செய்ய வேண்டும் என்று அவளுக்குத் தெரியவில்லை.

"உள்ளே வா, மரியா. நீ படுத்துக்கொள்ள வேணும். இளைப்பாற வேணும். நான் தேயிலைப் பானம் தயாரிக்கிறேன். காலை உணவு சாப்பிடலாம்."

உணவிலே அவளுக்கு வெறுப்புத் தட்டிவிட்டது. தலைமீது ஆணியை வைத்து படார் படார் என்று அடிப்பதுபோல திரும்பவும் அதே வார்த்தைகள் அவள் மனத்தில் வேகமாக எழுந்தன. "நான் செய்ய வேண்டும்...... செய்ய வேண்டும்......செய்ய வேண்டும்."

அவள் எதைச் செய்ய வேண்டும்? ஓகோ, ஆமாம். கடமையைச் செய்ய வேண்டும். மாற்ற முடியாத அந்தக் கடமையைச் செய்வதிலிருந்து தப்ப வழிகிடையாது.

அவள் ஸோபாவில் உட்கார்ந்து, ஜன்னல் வழியாகப் பார்த்தாள். மரங்களின் இலையற்ற கிளைகள் காற்றில் அசைந்தாடின. அங்கே, இங்கே......அங்கே, இங்கே....

"ஏன் சட்டையைக் கழற்றிவிடக் கூடாது? இங்கே வெப்பமாக இருக்கிறதே."

அவள் அவனை முறைத்துப் பார்த்தாள். அந்தப் பார்வையில் உணர்ச்சி இல்லை. அவனே அவளிடம் வந்தான்; சட்டையையும் தொப்பியையும் கழற்றி வைத்தான்.

"உன் கால் ஒரேயடியாக நனைந்திருக்கிறதே! இந்தக் காலத்தில் பாதரட்சையின் மேல்உறைகள் இல்லாமல் வெளியே போகலாமா? மோட்டாருக்குள் வந்து ஏற சில அடி தூரந்தான் நடந்தாய். அதற்குள் இப்படி நனைந்து விட்டதே!"

அவள் இன்னும் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் சொன்னது எதுவும் அவளுக்குக் கேட்கவில்லை. அவன் முழங்காலிலே நின்று அவள் பாதரட்சையை நீக்கினான்; ஈரமான மேஜோடைக் கழற்றினான். திடீரென்று கட்டுக்கடங்காத உணர்ச்சியி

ளுல் தன் தலையை அவளுடைய கால்மேல் வைத்துக்கொண்டான், ஒரு நிமிஷம். தன் நினைவில்லாமலே அவன் தலைமேல் கையை வைத்தாள் மரியா. காலில் தலையை வைத்தபடியே தன் கைகளை நீட்டி அவளை அணைத்துக் கொண்டான்.

"மரியா! மரியா!" என்று அவன் குழறினான். அவள் அவனைப் பார்க்கவுமில்லை; அவன் சொன்னதைக் கேட்கவுமில்லை. இதை அவன் உடனே தெரிந்துகொண்டான். அவள் ஜன்னலுக்கப்பால் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் உயிரிழந்து தோன்றின. அவன் தன் உதட்டைக் கடித்துக்கொண்டு எழுந்து நின்றான். அன்போடு அவளை ஸோபாவில் படுக்க வைத்துக் கம்பளியால் மூடினான். அவன் செய்த காரியங்களை அவள் தடுக்கவில்லை. பொம்மைபோல ஆடாமல் அசையாமல் இருந்தாள்.

எலெக்டிரிக் கெட்டிலில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது. அவன் தேயிலைப் பானம் தயாரித்தான். அதை ஒரு கண்ணாடி டம்ளரில் எடுத்துக்கொண்டு வந்து, அவள் பக்கத்தில் ஸோபாவிலே உட்கார்ந்தான்.

"சாப்பிடு. நீ கொஞ்சமாவது சாப்பிட வேண்டும்."

குழந்தைக்கு ஊட்டுவதுபோல கொஞ்சங் கொஞ்சமாகக் கரண்டியால் எடுத்து வாயில் ஊட்டினான். சூடான அந்தப் பானம் உடலெங்கும் பரவி அனல் மூட்டியது. அவள் ஆசையாகப் பருகினாள்.

"நீ ஏதாவது சாப்பிட வேண்டும் மரியா."

அவள் பின் வாங்கினாள். திரும்பவும் அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது.

"வேண்டாம்! வேண்டாம்! வேண்டாம்!"

"இப்படிச் செய்யக் கூடாது மரியா. நீ சாப்பிட வேண்டும்; தூங்க வேண்டும்; இளைப்பாற வேண்டும்."

"வேண்டாம்."

"பிடிவாதம் பண்ணாதே. நீ உயிரோடு இருக்க வேண்டும். நடந்த காரியத்தை மாற்ற முடியாது. நீ கட்டாயம் உயிரோடு இருக்க வேண்டும்."

"கட்டாயமா?" என்று கேட்டாள்.

திரும்பவும் ஜன்னல் பக்கம் திரும்பினாள். மரக் கட்டைபோல் உணர்ச்சியற்ற குரலில் "கிரிஷா இறந்து விட்டான்" என்று கூறினாள்.

"இதைக் கேள், மரியா; நான் சொல்வதைக்கேள். சண்டையில் மனிதர் இறப்பார்கள். சண்டையின் இயல்பே அதுதான். இந்தக் கஷ்டம் உனக்கு மாத்திரம் இல்லை......மனைவிகளையும், குழந்தைகளையும், காதலிகளையும் தவிக்கவிட்டு எத்தனையோ பேர் போய் விடுகிறார்கள் ......இது சண்டை......உயிரோடு இருக்கும் நாம்தான் நம் வேலையோடு அவர்கள் வேலையையும் சேர்த்துச் செய்ய வேண்டும்."

"கிரிஷா இறந்து விட்டானே!" என்று அதே உயிரற்ற குரலில் சொன்னாள்.

"ஆமாம், மரியா. வெற்றிக்காக கொடுத்த விலை அது......இதை நீ தெரிந்துகொள்ள வேண்டும்......கிரிஷாவும், மற்றவர்களும்......"

"நீ உயிரோடு இருக்கிறாயே!" என்று திடீரென்று உரத்த குரலில் தெளிவாகச் சொன்னாள். உதட்டைக் கோணி ஏளனம் செய்தாள்.

வாரன்ஸோவின் முகம் சிவந்தது.

"மரியா, உனக்குத் தெரியாதா......?"

தெரியும். அவளுக்கு நன்றாகத் தெரியும். அவனுடைய இருதயத்தில் கோளாறு. கவலைக்கிடமான ஒரு வியாதி. அதனாலேதான் அவன் போர்முனைக்குப் போகவில்லை. மேலும் அவன் ஒரு கைதேர்ந்த டாக்டர் தன்னால் எந்த வேலையை நன்றாகச் செய்யமுடியுமோ, எங்கே செய்ய முடியுமோ, அங்கே அந்த வேலையைச் செய்துகொண்டு இருக்கிறான்.

ஆனாலும், அவன் முகம் சிவந்தது. கைகள் நடுங்க ஆரம்பித்தன. இதைக் கவனித்த மரியாவின் மனதில் காரணந்தெரியாத ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவன் வருத்தம் அடைய வேண்டும்; அநியாயமாக, அதர்ம

மான வழியிலே தன்னால் இயன்றவரை அவனுக்கு மனவேதனையைக் கொடுக்க வேண்டும். இதைத்தான் விரும்பியது அவளுடைய உள்ளம்.

அவன் அவள் எதிரிலேதான் உட்கார்ந்திருந்தான். அவன் முகம் வெளிறி இருந்தது; துக்கமயமாக இருந்தது. அவனுக்கு இரங்குவதுதான் நியாயம் என்று அவள் உணர்ந்தாள்; ஆனால் உள்ளூர மகிழ்ந்தாள். உண்மையில் அவன்—கைதேர்ந்த டாக்டர், விக்டர் நிக்கோலாயெவிச், புதிய டாக்டர்களை நடுநடுங்கச் செய்பவன்,—வருத்தம் அடையவேண்டுமென்றே விரும்பினாள். இங்கே, அவள் எதிரிலே ஒரு சிறு பையனைப்போல உட்கார்ந்திருந்தான். மேல் உதட்டில் ஒட்டிக்கொண்டிருந்த அவனுடைய சிறு மீசை வெகு வேடிக்கையாகத் துடித்தது.

திடீரென்று தனக்கு நேர்ந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. அந்த எண்ணம் அவளைச் சம்மட்டியால் அடித்தது போலத் தாக்கியது. அந்த பயங்கரமான வார்த்தைகளை அவள் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்துவிட்டாள். விளங்காத பாஷையிலே, அர்த்தந் தெரியாத வாய்ப்பாடு ஒன்றைச் சொல்லிப் பார்ப்பதைப் போல் அந்தச் சொற்களை வாய் விட்டுச் சொல்லிப் பார்த்தாள். அதனால் என்ன பிரயோஜனம்? அவள் கீழே உட்கார்ந்து நடுங்க ஆரம்பித்தாள். மிதமிஞ்சிய ஏக்கம் அவளுடைய கண்ணின் கருவிழிகளை பெரிதாக்கி, இருளடையச் செய்தது. அவள் கைகளை நெரித்துக் கொண்டாள்.

"கிரிஷா இறந்து விட்டான்!"

வாரன்ஸோவ் அவள் அருகில் ஓடினான். அவள் நடுங்கினாள்; மூச்சுத் திணறினாள். மனத்தின் ஆழத்திலிருந்து பொங்கி எழுந்த துக்கம் அவள் உடலை ஒரு குலுக்குக் குலுக்கியது. கடைசியில் கட்டுக்கடங்காமல் உரத்த கூச்சலாய் எழுந்த பயங்கரமான அழுகையிலே முடிந்தது.

வாரன்ஸோவ் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் கை அவளுடைய தோளை அன்போடு தழுவியிருந்தது. குழந்தைபோல அவள் தன் தலையை அவன் தோள் மீது சாய்த்துக் கொண்டிருந்தாள். அவளை அணைத்துக் கொண்டிருந்த கை, எல்லாத் தீங்குகளிலிருந்தும், ஈவு

இரக்கமற்ற விதியின் கொடுமையி லிருந்தும், என் உலகம் முழுவதிலுமிருந்தே அவளைப் பாதுகாக்க முயன்றது போல் தோன்றியது. அந்த நேரத்தில் அவன் மனத்தில் கரைகடந்த அன்பும், இரக்கமும் நிறைந்திருந்தன. உலகத் தார் கைவிடக், மன வேதனையடைந்து, வீடு வாசல் இழந்து, திக்கற்றவளாக இருந்த இவளிடத்தில் அவனுக்கு அளவற்ற அன்பு பெருகியது. நடுங்கிக் கொண்டிருந்த அவளைக் கம்பளியால் மூடினான். இடைவிடாது வடிந்த கண்ணீரைத் துடைக்க முயன்றான்.

அவளுடைய அழுகை விக்கல்களாக மாறியது. பின்பு குழந்தை தேம்பி அழுவதைப் போல் தேம்பி அழ ஆரம் பித்தாள். வாரன்ஸோவ் எழுந்து அவளுக்குத் தூக்க மருந்தைத் தயாரித்தான். முதலில் வேண்டாமென்று தலையசைத்தாள்; பின்பு குடித்து விட்டாள். வாயில் வைத்த கண்ணாடி டம்ளரில் நடுங்கும் பற்கள் ஓசையை உண்டு பண்ணின.

"இப்போது நீ தூங்கி விடுவாய்" என்று சொன்னான். இன்னுமொரு கம்பளியை எடுத்து அவளை நன்றாக மூடினான். தலைக்கு ஒரு தலையணையை எடுத்து வைத்தான். நனைந்திருந்த அவளுடைய நீண்ட கண்ணிமைகள் கன்னத்திலே படிந்தன. பக்கத்தில் உட்கார்ந்து கையைப் பிடித்த வண்ணம் அவள் தூங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவ்வப்போது துக்கத்தால் விம்மினாள். அவளுடைய கன்னமும், ஒளிவிடும் தலைமயிரும் கண்ணீரால் நனைந்திருந்தன. திடீரென்று அவனுக்கு அந்தத் தலைமயிரை முத்தமிட வேண்டும் என்று தோன்றியது. உலகத்தில் கிடைக்கக்கூடிய சகல பாக்கியங்களிலும் இதுதான் சிறந்தது என்று தோன்றியது. ஆனால், ஒரு பெருமூச்சு விட்டு முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான்.

அவன் எழுந்து ஜன்னலண்டை போனான். நெருங்கிய சிறு சிறு துளிகளாக வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. இந்த மழையில் வெளியே போனால் கட்டாயம் நனைந்து விட வேண்டியிருக்கும். வெளி முற்றத்தில் சில மனிதர் ஒரு லாரியிலிருந்து சாமான்களை இறக்கிக் கொண்டு இருந்தார்கள். நல்ல உயரமும், அகன்ற மார்

பும் உள்ள ஒருவன் ஒரே தூக்காக ஒரு கோணிப்பையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான். அவன் முகத்தில் தோன்றிய சிரிப்பு அந்த முகத்தையே ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்தது. சிறுவனொருவன் சேற்றுத் தண்ணீரைத் தாண்டிக் குதிக்க முயன்றான். வெற்றிகிட்டவில்லை. சேற்றின் நடுவே விழுந்து, பீறிட்டுத் தெறிக்கும்படி தண்ணீரைக் கிளப்பி விட்டான். கோணிப்பையைத் தோள்மேல் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்த மனிதன் வாயாரச் சிரித்தான். அவ்வளவு தூரத்திலும் அவன் வெண்மைப் பற்கள் ஒளி வீசிப் பிரகாசித்தன. இதையெல்லாம் வாரன்ஸோவ் பார்த்துக்கொண்டே நின்றான்.

*   *   *   *

உலர்ந்து மஞ்சளான பள்ளத்தாக்கின் லீலிப் பூ ஒன்று ஒரு புத்தகத்தில் இருந்து கீழே விழுந்தது. அந்தப் பூ ஒரு மலைச் சரிவிலே, அடர்ந்த செடி கொடிகளின் பசுமையான வாடை வீசும் நிழலிலே, ஒரு காலத்தில் மலர்ந்திருந்தது. அப்போது பாதிமூடி, பாதி திறந்திருந்த பச்சை இலைகளின் மத்தியிலே வளைந்த புற விதழ்களைப் பெற்ற அந்தப்பூ, கண்ணைப் பறித்தது. போன வருஷத்தில் உலர்ந்து உதிர்ந்த இலைகள் இன்னும் மூடிக் கிடந்த நிலத்தின்மீது இனிமையான வாசனையைப் பரப்பின. கிரிஷாவும் அவளும் அந்த மணத்தைப் பின்பற்றி இந்த மூலைக்கு வந்து சேர்ந்தார்கள். ஈரமும் நிழலும், பனியும் மணமும் நிறைந்த தூக்கத்தில் இருந்து விழிப்பதுபோல் தோன்றியது அந்த இடம். லீலி புஷ்பப் புதரிலே, வசந்த காலத்தின் அழகிலே, மென்மையும் பிரகாசமும் பொருந்திய இலைகளிலே, மெலிந்து நீண்ட தண்டுகளின் மத்தியிலே கைகோத்து நின்றார்கள். அதிலே ஓர் ஒற்றுமை, ஒரு சந்தோஷமான இன்பம். அந்த வெள்ளைப் பூவை விரல்கள் பறித்தன. பறித்த பூ புத்தகத்தின் மத்தியில் அந்த நாளை நினைப்பூட்டும் ஞாபகார்த்தமாகத் தங்கிவிட்டது. அந்த நாட்கள் கடந்து விட்டன. அதன் பிறகு எத்தனையோ நாட்கள்! ஆனால், பள்ளத்தாக்கின் லீலி மலரின் வாசனையோடு பட்டுப்போன்ற இலைகளின் மேல் விழுந்த நீர்த்துளிபோல் பளப்பளபாக இருந்த அந்த நாள் திரும்பி வருமா? ஆமாம்; அப்படி ஒரு நாள்—பள்ளத்

தாக்கின் லீலி புஷ்பத்தின் ஒரு நாள்—இருந்தது. அந்த நாள் அவளுடையது; கிரிஷாவினுடையது.

இப்போது, அந்த நாளின் நிழல்தான் மனத்தில் மிஞ்சியிருந்தது. எல்லாம் நம்பிக்கை அற்ற வெறும் ஞாபகம்; பரிகாசம் பண்ணுகிற ஒரு சின்னம். பட்டுப் போன்ற அந்த வெள்ளை இதழ்கள் மஞ்சளாக மாறி விட்டன. மணி போல் திரண்டிருந்த குண்டலங்கள் தட்டையாக உலர்ந்து விட்டன. அதிலிருந்த ஜீவ ரசம் மறைந்துவிட்டது. அதன் இனிய மணம் காற்றில் கலந்து மறைந்தது. அந்தப் பசிய தளிர் இலைகள் உலர்ந்து பழுப்பேறி விட்டன. அவைகளின் நரம்புகள் ஒளி ஊடுருவும் மெல்லிய சிலந்தி வலை போன்றிருந்தது.

"அந்த நாள்! பள்ளத்தாக்கின் லீலி புஷ்பத்தின் நாள்...—"

"ஏதாவது சொன்னாயா மரியா?"

பார்வை அற்ற கண்ணினால் வாரன்ஸோவை ஏறெடுத்துப் பார்த்தாள். அவன் ஒருவன் உலகத்திலே, இந்த அறையிலே, இருக்கிறான் என்பதையே மறந்து விட்டாள். இவ்வளவு நேரமாக அவன் இங்கே அனுதாபத்தோடும், என்றுமே மாறாத சகிக்க முடியாத ஆவல் நிறைந்த பார்வையோடும், அவளையே கவனித்துக் கொண்டிருந்தான்.

"பிரமாதமான காரியம் ஒன்றுமில்லை."

வாடி வதங்கிய அந்தப் பூவை அவள் கையில் வைத்துக் கொண்டிருந்தாள். அதை ஒரு சுற்றுச் சுற்றினாள்; இறகை விட அது இலேசாக இருந்தது. இதுவா ஒரு காலத்தில் அவளுக்கு அத்தனை இன்பத்தைக் கொடுத்தது? இதுவா உயிரும், மணமும், அழகும், வசீகரமும் பொருந்தி விளங்கியது? அந்த நாள் எங்கே? திரும்பவும் அடைய முடியாத விதத்திலே மறைந்து விட்டதா? இந்தப் பூவை அவள் எதற்காகப் பறித்தாள்? வெண்மையும், மென்மையும், வாசனையும் நிறைந்த இந்தப் பூவைப் பறித்து இதன் விதியில் ஏன் குறுக்கிட்டாள்?

கவிதை நிறைந்த புத்தகம் அது. அதில் பள்ளத்தாக்கின் லீலியைப் பற்றிய கவிதைகள் இருந்தன. ஒரு

காலத்தில் கிரிஷாவும் அவளும் ஒன்றுசேர்ந்து கவிதை வாசித்திருக்கிறார்கள். பூக்களின் மணத்தைப் போலவே கவிதையில் உள்ள வார்த்தைகளும் சங்கீதம் நிறைந்து மகிழ்ச்சியை அளித்தது. ஆனால் பள்ளத்தாக்கின் லீவியின் நாட்களும் முடிவடைந்து விட்டது; கவிதையின் நாட்களும் முடிவடைந்து விட்டது. தட்டுத் தடங்கலின்றி இசைக்கும் இந்தப் பாடல்களுக்கு மக்களின் துன்பம், துக்கம், பாழடைந்த தலையெழுத்து இவைகளைப் பற்றி ஏதாவது தெரியுமா? பூக்களைப் பற்றியும் காதலைப் பற்றியும் எழுதியிருந்த அந்தக் கவிதைகள் சந்தோஷமாக இருப்பவர்களுக்குத் தான் உரியது. ஆனால், பூக்கள் வாடி விட்டன; காதல் ரத்தப் பெருக்கெடுத்துக் கிடக்கிறது; வெகு தூரத்திற்கு அப்பால் பூமிக்கடியிலே அழுகி நாறுகிறது; தாங்கமுடியாத வேதனையின் புலம்பலிலே அது கலந்துவிட்டது; மரணத்தில் அணைந்துபோன கண்களின் ஆதரவற்ற பார்வையாக இருக்கிறது. இல்லை. இது கவிதைக்குக் காலமில்லை. கவிதை! அமைதியும் சங்கீதமும் இல்லாத இடங்களிலே அவைகளைக் காட்டி மனிதனை ஏமாற்றும் கவிதை! திடீரென்று உள்ளத்தில் எழுந்த சிந்தனைகள் மின்னல் வேகத்தில் தாக்கி, எல்லாவற்றையும் தகர்த்துக் கந்தல் கந்தலாகக் கிழித்து நாற்றிசைக் காற்றிலே சிதறடித்து விட்டது.

அப்படியானால், இவை யாவும் நிச்சயமாகவே உண்மைதானா? ஒருவேளை பொய்யாக இருந்தால்? இது போன்ற காரியங்கள் முன்னால் நடக்கவில்லையா?

யாரோ கண்கூடாகப் பார்த்ததாகக் கொண்டு வந்த ஒரு செய்திதான். பார்த்தபோது அது முற்றிலும் தவறு என்று தெரிய வந்தது.

ஆனால், இதை ஒருவரும் கண்கூடாகப் பார்க்கவில்லை. நெருங்கிய உறவினருக்கு அனுப்பும் வழக்கமான ஒரு அறிவிப்புதான் வந்தது. அசட்டுப் பெண்ணே, எதில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறாய்? எதற்காக உன்னையே ஏமாற்றிக் கொள்கிறாய்? அவர்கள் சொல்லிய படியே எல்லாம் நடந்தது என்று நிச்சயமாக உனக்குத் தெரியும்......

"மரியா, நான் உனக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால்......"

அவள் கவனமாக அந்தப் பூவைப் புத்தகத்துக்குள் திரும்ப வைத்தாள்.

"நான் உனக்குச் சொல்ல விரும்புகிறது என்ன வென்றால்......இது அனாவசியமாயிருக்கலாம். ஆனால்... எனக்குத் தெரியும்...ஆனால் உன் பக்கத்தில் எந்த நேரத்தி லும், நீ விருப்புகிற எதையும் செய்வதற்கு உனக்கு உதவியாக ஒரு அடிமை காத்துக்கொண்டு இருக்கிறான் என்பதை நீ ஒருநாளும் மறந்துவிடக் கூடாது."

அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஒரு இகழ்ச்சி! ஒரு பெருமை!

"தயவு செய்து அதைப் பற்றிப் பேசவேண்டாம்."

அவளுக்கு இனிமேல் என்ன உதவி வேணும்? நடந்த காரியத்தை யாராவது மாற்ற முடியுமா? இல்லை. யாருமே இதற்கு உதவி செய்ய முடியாது. அவள் என்றைக்குமே தனியாக இருக்கவேண்டியவள்தான். இதைப் பற்றி யெல்லாம் வாரன்ஸோவுக்கு என்ன தெரியும்? நண்பனாக இருக்கலாம்; கைதேர்ந்த டாக்டராக இருக்கலாம்! அன்பே உருக்கொண்ட மனிதனாகவும் இருக்கலாம்; இருந்தாலும் என்ன? அவன் எப்போதாவது காதலில் மூழ்கிய இளம் பெண்ணாக இருந்திருக்கிறானா? அல்லது கணவனையே உலகமாகக் கருதிய மனைவியாக இருந் திருக்கிறானா? என்றைக்குமே நிரந்தரமாக, தான் காதலித்த காதலனோடு கூட்டு வாழ்க்கை நடத்தலாம் என்று நினைத் திருக்கிறானா? என்றைக்காவது அவன் மலர் நிறைந்த ஆப் பில் மரங்களின் அடியிலே பிரகாசிக்கும் நட்சத்திரங்களைக் கண்டு களித்திருக்கிறானா? வனங்களிலே பனியால் நனைந்த பள்ளத்தாக்கின் லீலியைக் கண்டு மகிழ்ந்திருக் கிறானா?

"மரியா, நீ இப்படி மனமுடைந்து போகக்கூடாது. உனக்கு இந்த உரிமை கிடையாது. இப்படிக் கஷ்டப் படுகிறவள் நீ ஒருத்திமட்டும் இல்லை. எத்தனை பெண்கள் இதே சமயத்தில் உன்னைப்போன்ற இதே நிலைமையில் இருக்கிறார்கள் என்று நினைத்துப்பார்."

அவள் தலையை ஆட்டினாள். வாரன்லோவுக்கு என்ன தெரியும்? எத்தனை முறை சந்தோஷமாக-அவர்கள் தான், அவர்கள் மட்டும்தான்...இல்லை, அவர்களைப்போல் வேறு இரண்டுபேர் இருக்கவே முடியாது. அவளுக்கும் கிரி கோரிக்கும் இடையே இருந்த அன்பை வேறு எங்குமே காணமுடியாது. வேறு பெண்களும் ஆண்களும் இருக்க லாம். ஏனில்லை? அனேகர் இருக்கிறார்களே. ஆனால், அவ ளுடைய காதல்—கிரிகோரியுடைய காதல்—வித்தியாச மானது; ஒப்பற்றது; திரும்ப அனுபவிக்க முடியாதது என்று அவள் நினைத்திருந்தாள்.

"எல்லாம் சொல்லி முடிந்துவிட்டதா? நான் என்ன செய்யவேணும் என்கிறாய்? நான் செய்யும் காரியத்தில் என்ன தப்பு இருக்கிறது? முன்னாலே செய்ததுபோலவே இப்போது நான் வேலை செய்யவில்லையா? நிச்சயமாகச் செய்கிறேன். நான் எப்போதும் ஒரேமாதிரிதான் வேலை செய்கிறேன். ஒரேமாதிரிதான் ஜீவிக்கிறேன். அப்படியிருக்க இந்தக் கதையெல்லாம் எதற்கு?"

"நீ சொல்வதெல்லாம் பொய், மரியா. உன்னையே நீ அழித்துக்கொள்கிறாய். உன் வாழ்க்கையைச் சிதற டித்துக் கொள்கிறாய். நான் குருடன் இல்லை. மன வேதனைக்கு இடங்கொடுத்து உன்னை வதைத்துக் கொள்கிறாய்......"

"வதைத்துக் கொண்டால் என்ன?"

"நீ உன்னை அடக்கி ஆளவேண்டும்."

அவள் வெறுப்புடன் சிரித்தாள்.

"நான் என்னை அடக்கி ஆளவில்லையா? எதை நீ குற்றமாகக் கொள்கிறாய்? நான் ஆற்றில் குதித்து விட்டேனா? தலை முடியைப் பிய்த்து எறிந்துகொண்டு ஆர்ப்பாடத்தோடு தெருவில் சுற்றி அலைகிறேனா? அல் லது கையை மடக்கி சுவற்றைக் குத்திக் குத்தி அதை நாசம்பண்ணி விடுகிறேனா? எது எப்படி இருந்தாலும் என் சொந்த அலுவல்களில் நீ ஏன் தலையிடுகிறாய்? என் இஷ்டப்படி ஜீவிக்க என்னை விட்டுவிடு. அதைத் தடுக்க சட்டம் ஒன்றும் இல்லையே. உனக்கு ஏன் என் மேலும், என் காரியங்கள் மேலும் இத்தனை கவலை?"

அவன் தலையைக் கவிழ்த்துக் கொண்டான். கை விரல்களை மூடி மூடித் திறந்தான்.

" இங்கே வீணாக உட்கார்ந்திருப்பதைவிட வேறு வேலை உனக்கில்லையா? நான் உன்னை உபசரிப்பதுகூட— அதுதானே சரியான வார்த்தை?—இல்லையே. சாதாரணமாகச் சம்பாஷிப்பதும் இல்லையே. அப்படி இருக்கும் போது இதெல்லாம் எதற்காக?"

" காரணம் இருக்கிறது. மரியா! காரணம் இருக்கிறதென்று உனக்கு வெகு நன்றாகத் தெரியும்." இதைச் சொன்னபோது அவன் முகத்தில் அசடு வழிந்தது. அவள் முகத்தைக்கூட அவன் பார்க்கவில்லை.

" காரணமா? டாக்டரே, அத்தனையும் தப்பு. சமய சந்தர்ப்பமற்ற பேச்சு. களைப்பை உண்டு பண்ணும் கபடச் சொற்கள்."

" நான் பேசுகிறது உனக்குச் சலிப்பாக இருக்கிறதா? நான் நினைத்தது என்னவென்றால்......"

" நீ என்ன நினைத்தாயோ அது எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு காரியம்......"

" என்ன காரியம்? "

அவள் சாய்வு நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து உட்கார்ந்தாள். கண்களை மூடிக்கொண்டாள்.

" ஒரு காரியத்தில் நீ எனக்கு உதவிசெய்ய முடியும்." ஆனால் நீ 'மரியா, நீ இதைச் செய். அதைச் செய்' என்று தான் சொல்லிக் கொண்டிருக்கிறாய்."

" மரியா, ஏன் இப்படிக் கோபித்துக் கொள்ளுகிறாய்? சரி, என்ன சமாசாரம் சொல்லு. நீ எனக்கு ஒன்றுமே சொல்லவில்லையே......? "

" நான் உனக்குச் சொல்லவில்லையா? " அவள் ஆச்சரியம் அடைந்தாள்.

" ஆமாம். நீ சொல்வது சரிதான். நான் உனக்குச் சொல்லவில்லை. நான் பெரிஸோவ்க்காவுக்குப் போகிறேன்."

" பெரிஸோவ்க்காவுக்கா? "

"ஆமாம். நியூயார்க்குக்கும் அன்று; ஷாங்காய்க்கும் அன்று. பெரிஸோவ்க்காவுக்குத்தான்."

"பெரிஸோவ்க்காவுக்கா போகிறாய்? என்ன அது? விளங்கவில்லையே."

"ஆமாம். சாதாரணமாகப் போகிற மாதிரிதான், ஒரு ரயில்வண்டியில் ஏறிக்கொண்டு போகப்போகிறேன்."

அவன் கொஞ்ச நேரம் சும்மா இருந்தான்.

"ரொம்ப நாள் அங்கே தங்கிவிடுவாயா, மரியா?"

"இல்லை. ரொம்ப நாளைக்குத் தங்கமாட்டேன். எனக்கு இன்னும் ஒருமுறை அந்த இடத்தைப் பார்க்க ஆசையாய் இருக்கிறது. ஒருமுறை. இன்னும் ஒரே ஒரு முறை."

"அது உனக்கு நன்மையாக இருக்குமா?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. எப்படித் தெரியும்? 'மரியா, எது வேணுமானாலும், எப்போது வேணுமானாலும் என்னைக் கேள்' என்று முன்னாலே நீ சொல்லவில்லையா? கேள்வி கேட்காமல் நான் விரும்புவதை நீ செய்ய முடியாதா? நான் பெரிஸோவ்க்காவுக்குப் போக நீ உதவிசெய்ய மாட்டாயா? நானே ஏற்பாடு செய்வதாயிருந்தால், வைத்தியசாலை சூப்பரிண்டெண்டிடம் பேச வேண்டி யிருக்கும். அது என்னால் முடியவேமுடியாது. ஆனால் நீ......"

அவன் கொஞ்சநேரம் இதைப்பற்றி யோசித்தான்.

"இது சாதிக்கக்கூடிய காரியந்தான். வைத்திய விஷயமாக ஒரு வைத்தியசாலையை நான் நேரில் பார்வையிட வேண்டுமென்று ஒரு தடவை சொன்னேனே, உனக்கு அது ஞாபகம் இருக்கிறதா? அந்த வைத்திய சாலைக்குப் போக பெரிஸோவ்க்காவுக்கு அடுத்த ஸ்டேஷனில்தான் இறங்கவேணும். ஆகையால் நீயும் நானும் சேர்ந்தே போகலாம்."

"நாம் இரண்டுபேரும் சேர்ந்தா போக வேணும்? நான் தனிமையாகப் போக விரும்புகிறேன். தன்னந் தனிமையாகப் போக விரும்புகிறேன்."

"ஆத்திரப்படாதே மரியா. நாம் இருவரும் சேர்ந்து புறப்படலாம். நீ பெரிஸோவ்க்காவில் இறங்கிவிடு. திரும்பும்போது இருவரும் சேர்ந்து வரலாம். என் காரியத்துக்கு ஒரு நாள் போதும். உனக்கும் ஒரு நாள்போதும் என்று நினைக்கிறேன். பெரிஸோவ்க்கா ரொம்பப் பாழடைந்து விட்டது என்று சொல்லிக் கொள்கிறார்கள்."

"அது எனக்குத் தெரியாது. எனக்கு ஒன்றுமே தெரியாது, என் கண்ணாலே பார்க்கவேணும்."

அவள் கடிகாரத்தைப் பார்த்தாள்.

"நீ வெளியே எங்கேயாவது போகிறாயா, மரியா?"

"இல்லை, ஆனால் நீ போகவேண்டாமா?"

"ஆமாம், இதோ போகிறேன். இன்றைக்கு என்னைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது."

"எனக்கு யாரைக் கண்டாலும் பிடிக்கவில்லை; இனிமேல் எப்பொழுதும் பிடிக்கப்போகிறதேயில்லை. எதற்காகப் பிடிக்கவேணும்?"

"என்னைக் கூடவா?"

"நீயானால் என்ன, வேறு யாரானால் என்ன? பொதுவாகச் சொல்லப்போனால்......"

"சரி, மரியா, உன்னை நாளைக்குச் சந்திக்கிறேன். பெரிஸோவ்க்காவுக்குப் போக உனக்கு அவ்வளவு ஆசையாக இருந்தால், அடுத்த வாரம் போய் வரலாம்."

"ஆசையாகத்தான் இருக்கிறது. ரொம்ப நாளாக இந்த ஆசைதான். ஏன் நான் அங்கு போகக்கூடாது என்று எனக்குத் தெரியவில்லை."

"ஏன் கூடாது? நன்றாய்ப் போகலாம். ஆனால் என்னத்திற்கு?"

"ஐயோ!......"

"சரி, சரி, மரியா. நான் சொன்னதை மன்னித்துவிடு. நமஸ்காரம். போய்வருகிறேன்."

அவள் அவனோடு வாசல் வரைக்கும் போனாள். அப்புறம் அவசரமாகத் தன் அறைக்கு வந்து சேர்ந்தாள்.

இன்னும் இரண்டு மூன்று நிமிஷம் மிஞ்சி இருந்தால் அவள் ரேடியோவில் யுத்தச் செய்தியைக் கேட்டிருக்க முடியாது.

ரேடியோவைத் திருப்பி வைத்தாள். எத்தனை தடவையோ இப்படி ரேடியோவைத் திருப்பி வைத்துக் கேட்டிருக்கிருள்! இல்லை. அப்படிச் சொன்னால் போதாது. ரேடியோவின் அந்த யுத்தச் செய்தியைக் கேட்டே வாழ்ந்தாள்.

"......நமது படைகள் பகைவரை எதிர்த்துக் கைப்பற்றியிருக்கும் இடங்கள்......"

இடங்களின் பெயர்கள். கண்ணை மூடிக்கொண்டு அந்தப் பெயர்களைக் கேட்டாள். முன்பெல்லாம் இந்த மாதிரிச் செய்தி ஒவ்வொன்றும் கிரிஷாவின் வாழ்த்தாக, அவனிடமிருந்து நேரே கிடைத்த செய்தியாக நினைத்துவிடுவாள். ரேடியோவில் சொன்ன இடங்கள் ஏதாவது ஒன்றில் கிரிஷா இருப்பான். படைகள் கிராமத்தைக் கைப்பற்றினாலும், பட்டணத்தைத் தகர்த்தெறிந்தாலும், அணிவகுத்த படைகளை முறியடித்தாலும், முன்னேறிச் சென்றாலும், பகைவரைத் தாக்கிஅழித்துச்சிறைபிடித்துக் கொள்ளையடித்தாலும், எல்லாம் கிரிஷா மயந்தான்; எல்லாம் கிரிஷாதான் செய்துவிட்டான். படைகள் பாடிக்கொண்டு செல்கிற உணர்ச்சி ததும்பும் பாடல்களெல்லாம் கிரிஷாவுக்காகத்தான் ஏற்பட்டன. சந்தோஷமான வெற்றி முழக்கத்தோடு மாஸ்கோ நகரம் பீரங்கிக் குண்டுகள், பல நிறமான வாண வேடிக்கைகள், இவைகள் மூலமாக கிரிஷாவைத்தான் வாழ்த்தியது.

இன்னும் கிராமங்கள், சிற்றூர்கள், ரெயில்வே ஸ்டேஷன்கள் எல்லாம் மேலும் மேலும் வந்துகொண்டிருந்தன. ஆனல், இப்போது அவைகள் கிரிஷாவின் வாழ்த்துச் செய்திகள் அல்ல; அகண்ட வெளியைக் கடந்துவரும் அவனுடைய இன்பமான குரலும் அன்று. அந்தக் குரல் நிரந்தரமாக அணைந்துவிட்டது. கிரிஷா இப்போது படைகளை எதிர்க்கவில்லை, பட்டணங்களையும், நகரங்களையும் கைப்பற்றவில்லை; கிராமங்களை விடுதலை செய்யவில்லை; அடிமேல் அடி வைத்து முன்னேறிச் செல்லவில்லை. ரேடியோச்

செய்தியில் சொன்ன பகைவர்களின் டாங்கிப் படைகளை அழித்தது அவனில்லை; இப்போது எண்ணிக் கொண்டிருக்கும் ஜெர்மானியக் கைதிகளைச் சிறைபிடித்தது அவன் இல்லை; இப்போது சொன்ன பீரங்கியைக் கைப்பற்றியதும் அவனில்லை.

"பெரிஸோவ்க்கா......" என்றான் ரேடியோச் செய்தி அறிவிப்போன்.

இல்லை, அது அவர்களுடைய பெரிஸோவ்க்கா இல்லை. அவர்கள் வாழ்ந்த பெரிஸோவ்க்காவோ இன்பமான இடம்; அவர்கள் முதன் முதலில் சந்தித்துக் காதல் கொண்ட இடம். அந்த இடத்தைச் சில மாதங்களுக்கு முன்பே பகைவர்களிடமிருந்து நம்மவர்கள் மீட்டு விட்டார்கள். எத்தனையோ பெரிஸோவ்க்கா இருக்கலாம்... அவளுக்குத் தெரியாத எத்தனையோ பெரிஸோவ்க்கா இருக்கலாம். ஆனால் ஒரே ஒரு பெரிஸோவ்க்காதான் கிரிஷாவின் இன்பக் குரலை, விரைந்து செல்லும் காலடி ஓசையை, மாலைக் காலத்தில் பாடிய பாட்டைக் கேட்டது.

இரண்டு கைகளாலும் முகவாயைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ரேடியோச் செய்தி ஒன்றும் காதில் விழவில்லை. ரேடியோ தன் போக்கிலே யந்திர ஆலைகளில் வேலை செய்யும் ஸ்திரி புருஷர்கள், வயல் வெளிகளில் கஷ்டப்பட்டுக் கூட்டுத் தொழில் நடத்தும் ஸ்திரி புருஷர்கள், தொலை தூரத்தில் பதக்கங்களும், விருதுகளும் பெற்ற ஸ்திரி புருஷர்கள், இவர்களைப் பற்றியெல்லாம் செய்திகள் சொல்லிக் கொண்டு இருந்தது. இவைகள் எல்லாம் வெகு தூரத்தில் நிகழ்ந்தவைகள். ஆனால், இங்கே, விளக்கைக்கூட ஏற்றாத இந்த அறையிலே; கிரிஷாவும், டோனட்ஸ் புல் வெளிகளில் வெளியே சென்ற வாலிபரைப் பற்றிய அவன் பாட்டும் தான் இருந்தன.

அந்தப் பாட்டு காற்றிலே மிதந்து வந்தது; உலகத்தில் வேறெங்குமே காணமுடியாத அந்த மென்மையான, உல்லாசமான குரலிலே மிதந்து வந்தது. அது அவளுக்கு வெகு தெளிவாகக் கேட்டது. அதன் ஒவ்வொரு வார்த்தையும், இராகத்தின் ஒவ்வொரு நுணுக்கமும் தெளிவாகக்

கேட்டது. இருளிலிருந்து பொங்கி வழிந்த அந்தப் பாட்டு, அதன் துடிதுடிக்கும் பரிமாணத்திலே உலகெங்கும்நிறைந்து நின்றது. முன்னொரு காலத்தில் இந்தப் பாட்டு கிரிகோரியைப் பற்றியதுதான் என்று அவள் நினைத்திருந்தாள். கிரிகோரி—டோனட்ஸ் புல்வெளியில் பெரிய காரியங்களைச் செய்வதற்காக வெளியே சென்ற உல்லாசமான வாலிபன், சென்னியில் வந்து அடிக்கும் கடுங் காற்றிலே சந்தோஷமாக, முழு மனத்தோடு வேலை செய்தவன் தன் பலத்திலும், தன் மகிழ்ச்சியிலும், தன் வாலிபத்திலும் மனம் பூரித்திருந்தவன்—அந்தப் பாட்டைப் பாடினான். அந்த வார்த்தைகளும், இராக ஆலாபனமும் அவனுடையதுதான்.

அந்தப் பாட்டின் பல்லவி கணீரென்று ஒலித்தது; உலகமெங்கும் பரவியது. கிரிஷாவினுடைய பாட்டு! கிரிஷாவினுடைய பாட்டு!

பக்கத்து அறையில் பாதரட்சைகளின் ஓசை கேட்டது. கதவு 'கிறீச்' என்று திறந்தது.

"ஏன் இருட்டில் உட்கார்ந்திருக்கிறாய்? அவன் போய்விட்டானா?"

பிரகாசமான விளக்கு வெளிச்சம் அறையில் திடீரென்று நிறைந்தது. மரியா எதிர் பாராத விளக்கு வெளிச்சத்தில் கண் கூச, உருட்டி விழித்தாள். கிரிஷாவினுடைய பாட்டு, அந்த முரட்டுத் தனமான தடையினால், அமைதியாகி விட்டது. ரேடியோவில் பேசுபவன் ஏதோ நிலக்கரிச் சுரங்கத்தைப் பற்றிய விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

"இன்றையச் செய்தியை நான் கவனிக்க வில்லை. அவன் இன்னும் இங்கே இருக்கிறான் என்று நினைத்தேன். இன்றைக்குச் செய்தி என்ன?"

மரியா அதை நினைத்துப் பார்த்தாள். ஒன்றும் ஞாபகத்திற்கு வரவில்லை. தத்யானா பெட்ரோவ்னா தோளை மட்டும் ஒரு முறை குலுக்கினாள்.

* * * *

ரயில் வண்டி நாட்டுப் புறத்துச் சிறிய ஸ்டேஷன் ஒன்றில் வந்து நின்றது. மரியா வண்டியை விட்டுக் கீழே

இறங்கினுள். வாரன்ஸோவுக்குப் பிரிவு உபசாரம் சொல்லவும் மறந்து விட்டாள். வண்டி திரும்பவும் புறப்படுகிற வரைக்கும் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். சேறு நிறைந்த பாதை வழியாக நடந்து, முழுவதும் இடிந்து பாழாய்க் கிடந்த ரயில் ஸ்டேஷனைத் தாண்டி, கண்ணிலிருந்து அவள் முற்றிலும் மறையும் வரைக்கும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஈரமான மூடுபனித் திரையிட்ட அந்தக் குளிர்ந்த வெளியிடத்திலே, அவனுடைய பார்வையில் அவள் ரொம்பச் சிறியவளாகவும், ஆதரவு இல்லாதவளாகவும், ஏகாங்கியாகவும் தோன்றினுள். அவளைத் தொடர்ந்து செல்வதற்காக வண்டியின் கதவை நோக்கி ஓடினுன். அதற்குள் வண்டிச் சக்கரங்கள் ஓட ஆரம்பித்து விட்டன. தண்டவாளங்களின் மேல் கீச்சொலி எழுப்பிக் கொண்டே ரயில் வண்டி வேகமாக ஓடியது.

மரியா மிகவும் தளர்ச்சி அடைந்து மெதுவாய் நடந்து சென்றுள். பசைபோல் ஒட்டிய சேற்றில் அடி பெயர்த்து நடப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. இந்த வருஷத்துக் குளிர் காலத்தில் கெண்டைப் பனி இல்லாதது ரொம்ப விநோதமாகத்தான் இருந்தது. வெறுமையான வயல்களின்மேல் கற்றை கற்றையாகமூடுபனி கவிந்திருந்தது. பறந்து சென்ற ஒரு காக்கைக்கூட்டம் 'காகா' என்று கத்திக் கொண்டே அவளைக் கடந்து சென்று பைன் மரக் காட்டுக்கு அப்பால் நிலத்திலே இறங்கியது. மரியா சுற்றுமுற்றும் பார்த்தாள். எங்கே பார்த்தாலும் இந்த உலகமே சாம்பல் வர்ணமாக—சகிக்க முடியாத சாம்பல் வர்ணமாகத் தோன்றியது. மழை பெய்யவில்லை என்றுலும் காற்றில் ஈரம் நிறைந்திருந்தது. ஆகையால் அவளுடைய முகத்திலே குளிர்ச்சியான பனித்துளிகள் படிந்தன.

அவள் சென்ற பாதை உயரமான பைன் மரங்கள் நிறைந்த காட்டுப் பக்கமாகத் திரும்பியது.

இப்பொழுது மரியா அந்தக் கிராமத்தில் முதன் முதலாகப் பார்த்த கட்டடம் சிறிய யந்திர ஆலை, யுத்தத்திற்கு முந்திய நாட்களில் அந்தக் கிராமத்தில் இந்த ஆலை

யின் யந்திரங்களிலிருந்து எழுந்த கடகடப்புச் சத்தமும், வேலையாட்களின் ஆரவாரமும் நெடுந் தூரமட்டும் வெகு தெளிவாகக் கேட்கும். யந்திர ஆலை, கிராமத்திலே வாழ்ந்த வேலையாட்களை வேலைக்கு அழைப்பதற்காக காலையில் ஒரு முறை சீழ்க்கை அடித்து அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி விடும். மத்தியானம் அவர்கள் சாப்பிடப் போவதற்காகத் திரும்பவும் சீழ்க்கை அடிக்கும். இந்த யந்திர ஆலையின் சீழ்க்கை-ஒலி காதைத் துளைக்கும். பழைய சிநேகிதனைக் கண்டு புன்னகை செய்வதுபோல இந்த யந்திர ஆலையைப் பார்த்து ஒரு முறை புன்னகை செய்ய வேண்டுமென்று மரியாவுக்குத் தோன்றியது.

ஆனால், அன்றைக்குக் காலையில் அங்கே யந்திர ஆலையைக் காண வில்லை. பைன் மரங்களுக்கு இடையிலே அவள் பார்த்ததெல்லாம் ஒரு விநோதக் காட்சி. அது, பிரளய காலத்திற்குமுன் இந்த உலகத்திலே இருந்ததாகச் சொல்லுகிறார்களே, ராக்ஷச வடிவமான பெரிய மிருகங்கள், அந்த மிருகங்களின் எலும்புக் கூடுகளை நினைப்பூட்டும் காட்சியாக இருந்தது. பீரங்கிகளின் முற்றுகையினால் யந்திர ஆலைக் கட்டடம் முழுவதும் தகர்ந்து போகவில்லை. சிமைச் சுண்ணும்பிற்குள்ளே அமைக்கும் எஃகுச் சட்டக்கூடு தகர்ந்து போகாமல் அப்படியே இருந்தது. ஆனால், வெடிகுண்டுகளின் எதிரொலி இரும்பு உத்தரங்களை நசுக்கி முறுக்கி விட்டது. குழந்தைகள் களி மண்ணைப் பிசைந்து செய்கிற பொம்மை வீடுகளை ஒரே மிதியாய் மிதித்துச் சப்பையாக்குவது போல ஆலையின் கூரையைப் பெயர்த்தெறிந்து, சுவர்களைத் தரையோடு தரையாகச் சாய்த்து விட்டது. கீழே விழுந்து கிடந்த சுவர்களின் சாம்பல் நிறம், மாமாத் என்னும் பழங்காலத்து யானையோ, பிரளய காலத்திற்கு முற்பட்டதும், உரு இழந்ததுமான ஏதோ விநோத ராக்ஷச மிருகமோ பைன் மரக் காட்டுக்குள்ளே பதுங்கி இருப்பதுபோல் தோன்றிய கற்பனைச் சித்திரத்தை வற்புறுத்திக் காட்டியது.

மரியாவுக்குத் தன் இருதயம் சுருங்குவது போலத் தோன்றியது. இப்பொழுது உரு இழந்து கிடந்த இந்தக் கட்டடத்திலேதான் அவளுடைய கிரிஷா ஒரு எஞ்சினியராக முதன் முதலில் வேலைக்கு அமர்ந்தான். ஓடிக் கொண்

டிருந்த யந்திரங்களின் இயக்கங்களையும், டைனமோக்களின் மூச்சு நாடியையும், பெரிய பாய்லர்களின் நீராவி அழுத்தல்களையும், சக்கரங்களின் சுழற்சி வேகத்தையும், மாற்றுப் பட்டைகளின் மெல்லிய சலசலப்பு ஓசையையும் மேற்பார்வை செய்வதற்காக அறைக்கு அறை அங்கும் இங்கும் விரைவாகச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தான்.

ரஸ்தாவின் இரு பக்கங்களிலும் அழுக்குப் படிந்த சாம்பல் வர்ணமான பனிக் கரைகள் அமைந்திருந்தன. இந்தப் பனிக் கரையின் அடியில் இருந்து கசிந்து வடிந்த நீர் அந்தப் பனிக் கரையை உருக்கித் தகர்த்து எறியக் கீழே முயன்று கொண்டிருந்தது. இலை இல்லாத செடிகளின் மேல் நீர்த்துளிகள் துள்ளி நடுங்கின. பைன் மரக் கிளைகளிலிருந்து சொட்டிக் கொண்டிருந்த நீர்த்துளிகள் மென்மேலும் அகன்று வளர்ந்த குழிகளை வகுத்து நிலம் முழுவதையும் அருவருக்கத் தக்க அழுகிய சேறுக்கிக் கொண்டிருந்தது.

இந்தக் கிராமத்திலே ஒரு இளவேனிற் காலம் வெகு மகிழ்ச்சியாக இருந்தது. பைன் மரக் கிளைகள் சூரியப் பிரகாசத்தில் மூழ்கிக் கிடந்தன. கண் கூசும்படி வெண்மையாக இருந்த ரஸ்தா வழியாக அவளைச் சந்திக்க வந்து கொண்டிருந்த கிரிஷா பூட்ஸ் மாட்டியிருந்த கால்களால் வழி நெடுகப் புழுதியைக் கிளப்பி விட்டான்.

வர வர பைன் மரங்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது. அவை உயரத்திலும் குறுகிக் குறுகி, முடிவிலே அழகில்லாத குறுஞ் செடிப் புதர்களாகத் தோன்றின.

வான வளையத்திலே கிழிந்த கந்தை போலத் தோன்றிய சாம்பல் நிறமான மூடு பனியையும், ஈரம் நிறைந்த வானத்தையும் தவிர வேறொன்றும் தெரியவில்லை. இடை இடையே காக்கைக் கூட்டங்கள் மெதுவாகப் பறந்து அவளைக் கடந்து சென்றன.

தூண்களோடு கூடிய வெண்மையான பள்ளிக்கூடக் கட்டடத்தின் அருகில் வந்து கொண்டிருந்தாள் மரியா.

ஆனால் இப்பொழுது அங்கே பள்ளிக்கூடம் இல்லை. பாழடைந்த ஒரே குவியல்; சிதறிக் கிடந்த செங்கற்கள்; நெருப்பணைந்த பிறகு கிடக்கின்ற கரும் சாம்பல் — இவை தவிர அங்கே வேறொன்றும் இல்லை.

மரியாவுக்கு ஒரு விநோதமான சிந்தனை உதித்தது. ஏதோ பாதை தவறி வந்து விட்டாளா? இறங்க வேண்டிய ஸ்டேஷன் மாறி விட்டதா? தப்பான திசைக்குச் செல்லும் ரஸ்தாவிலே செல்கிறாளா? இதற்கு முன் ஒரு போதும் அவள் வராத ஒரு இடத்திற்கே வந்து விட்டாளா? இந்தப் புதிய கிராமம் முன் ஒரு காலத்தில் இருந்து இப்பொழுது இல்லாமல் போய் விட்டதா?

இல்லை; இல்லை; நிச்சயமாக இல்லை. அப்படி ஒன்றும் நிகழவில்லை. ஸ்டேஷனை முற்றிலும் எரித்து விட்டார்கள்; உண்மைதான். ரொம்பப் பழக்கமான அந்த ஸ்டேஷன் பெயரை யாரோ ஒருவன் ஒரு பலகையில் எழுதி, பாதி எரிந்துபோன ஒரு கம்பத்திலே அதை அறைந்திருந்தான். வழியிலே பார்த்த பைன் மரக் காடும், யந்திர ஆலையும் முன் இருந்த இடத்திலேயே இருந்தன. இதோ இங்கே தெரிகிற பாழடைந்த குவியல், சில மாதங்களுக்கு முன் உயரமான தூண்களும், கிரேக்க ரீதியில் கட்டி இருந்த முகப்புகளும் உடைய பெரிய பள்ளிக்கூடமாக இருந்தது. மரியாவும் கிரிஷாவும் சற்றுநேரம் காட்டிலே உலாவி வருவதற்காக அந்த வழியாகச் சென்ற போதெல்லாம், அவன் அந்தப் பள்ளிக்கூடத்தின் கிரேக்க ரீதியான முகப்பையும் உயரமான தூண்களையும் குறிப்பிட்டுப் பல தருணங்களில் கேலிபண்ணிச் சிரித்திருக்கிறான்.

கிரேக்க ரீதியான முன்பக்க முகப்பும், உயரமான தூண்களும் அழிந்து மறைந்த செய்தியைக் கிரிஷாவுக்குச் சொல்ல வாயைத் திறந்தாள். கிரிஷா தன் பக்கத்திலே இல்லை என்பது உடனே ஞாபகத்துக்கு வந்து அவளுடைய சிந்தனைப் போக்கை அடக்கி ஆண்டு விட்டது. கிரிஷா அவள் பக்கத்திலே இன்றைக்கு நடந்து செல்ல வில்லை. அவள் பார்த்த காட்சிகளை அவன் கூட இருந்து பார்க்க வில்லை. அவன் போரில் இறந்தான்; அவளை விட்டு ஒரே அடியாகப் பிரிந்து விட்டான். அவளோ இங்கே, ஆழம் தெரியாத

இந்தச் சேற்றிலே, அவளுடைய காதல்—வாழ்க்கை ஆரம்பித்த இடத்தையும், அந்த இடத்தில் உள்ள காட்சிகளையும் பார்த்து, அந்த இன்ப நாட்கள் தன் வாழ்க்கையில் உண்மையாக இருந்தவை என்பதை உறுதிப் படுத்துவதற்காக வந்திருந்தாள்.

இங்கேதான் தெரு ஆரம்பித்தது. ஆனால், இப்பொழுது தெரு இல்லை. சாம்பலும், கரிந்து போன கற்களும் நிறைந்த சிறு குவியல்கள்தான் இருந்தன. செங்கல்லால் கட்டி எழுப்பிய புகைப் போக்கிகள், வானை நோக்கித் தூக்கிய ரத்தம் படிந்த கைகள் போல, அங்கங்கே எழுந்து நின்றன. உடைந்த செங்கல்கள் வழியாக நீர் வடிந்து கொண்டு இருந்தது.

ரஸ்தாவின் இருபக்கங்களிலும் பயங்கரமாகப் பாழடைந்த குவியல்கள் வரிசையாகக் கிடந்தன. ஒரு சுவராவது, ஒரு ஜன்னலாவது மிஞ்சவில்லை. இங்கே ஒரு காலத்தில் வீடுகள் இருந்தன என்பதை நம்ப முடியவில்லை. இரும்புக் கட்டில்களின் துருப்பிடித்த சட்டங்கள்தான், இங்கே ஒரு காலத்தில் மனிதர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு அறிகுறியாக இருந்தன.

நித்திரையில் நடக்கும் நோயாளியைப்போல மரியா நடந்து சென்றாள். அறிமுகமான—அவ்வளவு நன்றாக அவளுக்கு அறிமுகமான—அந்த இடங்களை வகை தொகை அறிய முயன்றாள். ஆனால் அங்கே இருந்தவை எல்லாம், கொட்டிப் பரப்பிக் குழம்பிக் கலந்து சிதறுண்ட செங்கல் குவியலும், உருத்தெரியாதபடி தீப்பட்டுக் கருகி நாசமாய்ப்போன குப்பை கூளமுமாகக் கிடந்தன. ரஸ்தாவின் திருப்பத்திலே இருக்கும் வில்லோ மரம், ரயில் பாதையில் கொடிகாட்டுகிறவனுடைய குடிசைக்கு எதிரே இருந்த கிச்சிலி மரம், கிளப்புக்குப் பக்கத்தில் இருந்த பழத் தோட்டம் முதலிய முக்கியமான அறிகுறி அடையாளங்கள் யாவும் மறைந்துவிட்டன. மரங்கள் ஒன்றும் அங்கே இல்லை. இரக்கமற்ற கரங்கள் எல்லாவற்றையும் ஒரே அடியில் அறுத்தெறிந்து விட்டன. மிகப் பெரிய மரத்தின் வலிமைமிக்க அடிமரமும், இலை போர்த்த கிளை—முடியும், எல்லாம் அந்தக் கரத்திற்கு

ஒரு புல்லின் மெல்லிய தாள்போல இருந்திருக்க வேண்டும்.

எதைப் பற்றியும் நிச்சயம் இல்லாதவளாக, மரியா சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் எங்கே இருந்தாள்? ஆமாம்; சரிதான். இங்கேதான் பாலம்—அந்தச் சிறு பாலம் இங்கேதான் இருந்தது. அருவி அரித்த மலைப் பள்ளத்தின்மேல் ஈரம் படிந்து கறுப்பான மூன்று பலகைகள் குறுக்கே பாலமாக அமைந்திருந்தன. அந்தப் பலகைகளின் பக்கத்தில் கைப்பிடிக்காக இருந்த அளிப் பாச்சுக்கள், கீழே நொறுங்கிக்கிடந்த பெரிய உத்தரக் கட்டைக்குப் பக்கத்திலே முறிந்து கிடந்தன.

அவள் பாலத்தின்மேல் நடந்து அந்த மலைப் பள்ளத்தைத் தாண்டினாள். கண்ணெதிரே தெரிந்த காட்சியால் பிரமை அடைந்து நின்றாள். இங்கே, வலது பக்கத்திலே, பத்தடிக்கப்பால் ஒரு வீடு இருந்திருக்கவேண்டும். அந்த மூலை வீட்டிலே ஒரு குடும்பத்தார்; அவளுக்கு ரொம்பச் சிநேகிதமானவர்கள். அவளுக்குக் குழந்தைகள் பலர். இன்னும் சற்று அப்பால் இன்னொரு சிறு வீடு. அதிலே ரொம்ப வயதுசென்ற கணவனும் மனைவியும் இருந்தார்கள். அவர்களுடைய வீட்டிலே பெரிய எல்ம் மரம் ஒன்று இருந்தது. அதற்கும் அப்பால் அதோ அங்கே......

ஆனால், அங்கே இப்பொழுது ஒன்றுமே இல்லை. மூலை வீடும் இல்லை; சிறு வீடும் இல்லை; தெருவும் இல்லை; ஒன்றுமே இல்லை. எரிந்து கரியான வரிசைகள்தான் வெகு தூரத்தில் தெரிந்த நிலப்பரப்பு வரைக்கும் சமதளமாகப் பரந்து தெளிவாகத் தெரிந்தன. இதற்கு முன்பு இங்கே ஒன்றும் வாழவும் இல்லை, வளரவும் இல்லை என்பதுபோல யாவும் காட்சி அளித்தன.

அவள் விரல்களை இறுக மூடிக்கொண்டு வந்தவழியே திரும்பினாள். அதே பாலத்தின் வழியாக மலைப் பள்ளத்தைத் தாண்டினாள். அவளுடைய பெற்றோரின் வீடு இருந்த இடத்தை அடைந்தாள். சேறு அவளுடைய பாதரட்சையின் மேல்—உறையில் அடை அடையாக ஒட்டிக்கொண்டது. சேற்றால் கனத்துவிட்ட காலைத் தூக்கி வைத்து நடப்பது ரொம்பக் கஷ்டமாக இருந்தது. மழைநீர்

நிறைந்த பள்ளங்களில் கால் மாட்டிக்கொண்டது. அடிவைக்குந்தோறும் பாதரட்சையின் மேல் — உறைக்குள்ளிருந்து தண்ணீர் பீறிட்டு வெளியே தெறித்தது. முழங்கால் வரைக்கும் மேஜோடு நனைந்துவிட்டது. உடம்பு குளிர்ந்து ஈரமாக இருந்தாலும் வேர்வைக்குக் குறைவில்லை. தலையில் இருந்த பனிக் குல்லாவுக்குள் அடங்கி இருந்த கூந்தலில் ஒரு கற்றை வெளியேறி முகத்திலே அவலட்சணமாக ஒட்டிக்கொண்டிருந்தது.

இப்பொழுது அவள் எரிந்துகிடந்த ஒரு வீடு இருந்த இடத்திலே நடந்து சென்றாள். ஈரமான கரிக் கட்டைகள் அவளுடைய பாதங்களின் கீழ் 'சரசர' என்று நெரிந்தன. இங்கே இன்னொரு இரும்புக் கட்டிலின் சட்டங்கள். அதை அணுகினாள். பக்கத்திலே ஒரு இரும்படுப்பின் சிறு கதவு திறந்து கிடந்தது. அடுப்பு இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டது. இந்த இடத்திலே அவள் தேடிய பொருளை எப்படிக் கண்டெடுப்பாள்? தேடிய பொருளை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?

அவளுடைய உள்ளம் அந்தப் பொருளுக்கு ஒரு அடையாளம் குறித்திராதா? நிச்சயமாகவே குறித்திருக்கும். அவளுடைய உள்ளம் அதை எப்படியாவது தெரிந்து கொள்ளும். நெருப்புக்கு இரையான இடங்களை ஒவ்வொன்றாக ஆராய்ந்தாள்; ஒரு இடத்தில் இடறிவிழுந்தாள். நுரையீரலிலிருந்து திணறித் திணறி மூச்சு எழுந்தது. இங்கு எங்கேயோதான் அவள் கிரிஷாவை முதன் முதலில் சந்தித்த சிறிய வீடு இருந்தது. அவன் வேலிக்கு வெளிப் பக்கத்திலே நின்றுகொண்டிருந்தான். நல்ல உயரம்; பிரகாசமான தலை ரோமம். வழி கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக அங்கே நின்றான். அந்த வீட்டில் இருந்த செவிட்டுக் கிழவிக்கு அவன் என்ன கேட்டான் என்று தெரியவில்லை. அவள் தன் அழுக்குக் கைக்குட்டையை விரல்களினால் காதின்புறமாகத் தள்ளிவிட்டு, அவன் சொல்வதைக் கேட்க முயன்றாள். கிரிஷா உரத்த சத்தமாகச் சிரித்துக்கொண்டே அந்தக் கிழவியின் காதில் உல்லாசமாகக் கத்திப் பேசினான்.

மரியா, ராஸ்பரிச் செடிகள் அடர்ந்த புதரிலிருந்து இடுக்கமான பாதை வழியாக வந்து, கிரிஷா விசாரித்த

பாதையைப் பற்றி பதில் அளித்தாள். தாம்பிர வர்ணமான அவனுடைய கையை வேலிச் சட்டத்தின் மேல் தாங்கலாக ஊன்றியிருந்தான். இது அவளுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. இன்று, அதே கையை தன் கண்ணெதிரிலே கண்டாள். சொல்ல முடியாத வேதனைக்கு ஆளாகும் முறையிலே அந்தக் கையின் விரல்களை ஒன்றன் பின் ஒன்றாகச் சிந்தித்தாள். அந்த நடுவிரலிலே இருந்த தழும்பு வெகு தெளிவாகத் தெரிந்தது. அந்தத் தழும்பு அவனுக்கு எப்படி வந்தது என்று அவனிடம் கேட்க வேண்டும் என்று கருதினாள். குழந்தைகளுக்கு இயல்பான நோண்டிப் பார்த்து ஆராயும் குணம் தன்னுள்ளத்திலும் அன்றைக்குத் தோன்றக் காரணம் என்ன என்று அவளுக்கு விளங்கவில்லை. இப்படிக் கேட்பது விவேகமாக இராதே என்று நினைத்து நாணம் அடைந்தாள். கிரிஷா, மகிழ்ச்சி பொங்கும் கண்களோடு அவளைப் பார்த்தான். அவனுடைய புன்னகை—கிரிஷாவைப் பற்றிய சகல விஷயங்களும் மகிழ்ச்சிதான். அவனுடைய கண்கள், அவனுடைய நடை, குரல் எல்லாம் மகிழ்ச்சிதான். அவனைப் பார்க்கும் ஒருவனை, முதன் முதலில் கவருவது, அவனுடைய ஆரவாரமாக வழிந்து பாயும் மகிழ்ச்சிதான்.

இப்படித்தான் ஆரம்பித்தது, பழங்காலத்தில் வெளி வந்த மூடத்தனமான நாவல்களில் பிரமாதப் படுத்தியிருக்கும் 'கண்டதும் காதல்' என்ற விஷயம். இப்படிப்பட்ட 'கண்டதும்–காதல்' வாழ்க்கையிலும் யதார்த்தமாகவே நிகழ்வதுண்டு. அதற்கு கிரிஷாவும் அவளுந்தான் சாட்சிகள். கிரிஷா உடனே தேடி வந்த வழியை முற்றிலும் மறந்துவிட்டான். ஐந்தாறு அடிவைத்து நடந்து தலைவாசல் வழியாக உள்ளே வருவதற்குக் கூடப் பொறுமையில்லை. நின்ற இடத்தில் இருந்தபடியே ஒரே தாவுத் தாவி, வேலியைத் தாண்டி அவள் பக்கத்திலே வந்து நின்றுகொண்டான்.

என்ன இது? அந்த வேலியின் சிறு அடையாளம் ஒன்றைக்கூடக் கண்டுபிடிக்க முடியாதா? இப்படியா எல்லாம் உருத் தெரியாமல் மறைந்து போகவேணும்? கீழே பாழாய்க் கிடந்த கற்குவியல்களை, குளிரால் மரத்து ஈரமாயிருந்த விரல்களால் கிண்டத் தொடங்கினாள்.

செங்கல்களின் கூரான பக்கங்கள் அவளுடைய விரலை அறுத்தன. அந்த வேலியின் சின்னஞ்சிறு சிராய், அதன் மரக்கட்டையில் ஒரு சிறு துண்டு அவள் கைக்கு அகப் படாதா? அவளுடைய உள்ளம் அதன் உரு அடையாளத் தைத் தெரிந்துகொள்ளுமே! அந்த வேலியின் மரக்கட்டை, அந்தத் தாம்பிர வர்ணமான கரத்தின் தொடுகையைத் தன் னிடத்திலே பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருக்குமே! அவளுடைய விரல்கள் அதைத் தொட்டுப் பார்த்து உடனே தெரிந்து கொள்ளுமே! திரும்பவும் அவளுடைய கரம் கடைசி முறையாக கிரிகோரியின் கரத்தை இந்த விதமாகப் பற்றிக்கொள்ள முடியுமே!

ஆனல், அணைந்த கரிக்கட்டைகள், நொறுங் கிய செங்கல்கள், தேவர்களால் மட்டுமே இன்னவை என்று தெரிந்து கொள்ளக்கூடிய எரிந்து மலிந்த துண்டு துக்குணிப் பொருள்கள் யாவும், இன்னவை என்று பாகு பாடு செய்யமுடியாமல் தவிடு பொடியாக, குளிர்ந்த ஊமைப் பண்டங்களாக அங்கே கிடந்தன.

புகல் அற்று முட்டுப்பட்டு நின்ருள்; எப்படியாவது, ஏதாவது ஒரு ஞாபகச் சின்னத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற மன உறுதியோடும், புது ஊக்கத் தோடும் குதித்து எழுந்தாள். ராஸ்பரிச் செடிகள் எரிந்து போயிருக்கலாம். ஆனல், பரந்த கிளைகளோடு வளர்ந்த வயதான அந்த ஆப்பில் மரங்கள் அங்கேதான் இருக்க வேண்டும். அந்த மரங்களின் ஏதாவது ஒரு துண்டு, ஒரு அடிமரத்துண்டு மண்ணுக்குமேலே எங்கேயாவது நீட்டிக்கொண்டிராதா? ஒரு காலத்தில் பசுந்தழைகளும் இனிய கனிகளும் தாங்கிய அழகிய மகுடத்தோடு விளங் கிய மரங்கள் அல்லவா அந்த ஆப்பில் மரங்கள்! ஆப்பில் மரத் தோட்டத்திலே, ஒரு ஆப்பில் மரத்தின் அடியிலே இரவில் இருவருமாக உட்கார்ந்து, கிளைகளினூடே பிரகா சித்த நட்சத்திரங்களை வெகு நேரமாய்ப் பார்த்துக்கொண் டிருப்பார்களே; அந்த நட்சத்திரங்கள் பொன்—ஆப்பில்— பழங்கள்போல அவர்களுடைய தலைக்குமேலே பிரகாசித் துக்கொண் டிருக்குமே!

இன்பம் என்னும் தேவதை தன் புருவ 'நிழலில் விளங்கிய கருவிழியால் அந்தக் காதலர் இருவரையும்

கடைக்கணித்துப் பார்த்தாள். கடந்து சென்ற அந்த ஆனந்த நாட்களில் பசுமையான இலைகள் போர்த்த ஆப்பில் மரங்களின் கிளைகளுக்கு இடையிலே பொன்போன்ற பெரிய நட்சத்திரங்கள் அவர்களுடைய தலைக்கு மேலே வானத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்தன. வெகு தொலைவிலே எங்கேயோ யாரோ பாடின பாட்டுக் கேட்டது. ஆனால், அந்தப் பாட்டின் சொற்கள் தெளிவாக இல்லை. ஏனென்றால், அத்தகைய நேரங்களில் சுற்றுப் பிரதேசங்களிலெல்லாம் ஒரே இன்ப கீதந்தான் இருக்கும்; எல்லாம் கிரிஷாவாகத்தான் இருக்கும்.

மரியா துயரக் குமுறலோடு பெருமூச் செறிந்தாள். அங்கே ஆப்பில் மரங்கள் இல்லை. ஒரு மரத்தின் அடித்துண்டுகூட எங்குமே இருக்கவில்லை. யுத்த ராக்ஷசனுடைய கொடிய கரங்கள் அவற்றை வேரோடு பறித்து எறிந்து விட்டன.

இப்பொழுது மரியா மெதுவாக நடந்து பனித் தீவுகளினூடே ஓடிய சிற்றோடையின் பக்கத்திலே நின்றாள். தேடும் முயற்சியின் கடைசி எல்லை இதுதான். இந்தச் சிற்றோடைதான் அந்தக் கிராமத்தின் கடைசி எல்லை. இதற்கப்பால் வயல்களும், மணற் பள்ளங்களும், காடுகளுந்தான். அவள் அந்தச் சிறு கிராமத்தின் தெரு வழியாக நடந்து, ஊரின் எல்லைக்கே வந்து விட்டாள். அல்லது, வரவில்லையா? அந்தக் கிராமத்தின் தெரு வழியாக நடந்தாளோ அல்லது வேறெந்த இடத்திலாவது நடந்தாளோ என்று அவளுக்கே தெரியவில்லை.

மரியா ஈரமான செங்கல்களின் மேல் சோர்ந்து உட்கார்ந்தாள். கிரிஷா இறந்து விட்டான் என்பதை ஆறாத் துயரத்தோடு அந்தராத்மாவின் மூலஸ்தானமெல்லாம் துயரக் கோயிலாகும்படி திரும்பவும் ஒரு முறை உணர்ந்தாள். அவன் இனிமேல் உயிரோடு இருக்கப்போவதில்லை. எரிந்து சாம்பலாகக் கிடந்த அந்தக் கிராமத்திலே, அவர்கள் இருவரும் பரஸ்பரக் காதல்கொண்டு இன்புற்ற அதே இடத்திலே அவன் இரண்டாவது முறையாக மரணம் அடைவதுபோல அவளுக்குத் தோன்றியது. இனி அந்த நஷ்டத்தைச் சரிக்கட்ட முடியாது. அவன் முற்றிலுமாக

மறைந்து விட்டான். அவனுடைய சமாதி எங்கே? இந்தச் சிறு கிராமத்திலே, ஒரு தெரு, ஒரு குடிசை, ஒரு சிறு தோட்டம் அடங்கலுமாகப் பாழான நாசக் குப்பையிலே ஒரு வேனிற்காலத்தில் அவர்களுடைய காதல் பிறந்த இந்த இடத்திலே அவளால் தேடமுடியவில்லை என்றால், இரக்கமற்ற யுத்தக்காட்டிலே, எல்லை அற்ற போர்க் களங்களிலே, குரூரமான போர் முனைகளிலே அவளுடைய கிரிஷாவின் சமாதியை அவள் எப்படித் தேடி கண்டு பிடிக்க முடியும்?

"மரியா பாவ்லோவ்னுதானே இது?"

மரியா ஆச்சரியத்தால் மூச்சுத் திணறினுள். எங்கிருந்தோ ஒரு மனித உருவம் திடீரென்று முளைத்து அவள் எதிரிலே நின்றது. ஒரு கிழவி, கம்பளியால் உடம்பைப் போர்த்திக்கொண்டு ஊன்று கோலின்மேல் குனிந்தவளாக நின்றுள். அந்தக் கிராமத்திலே, எப்படிச் சாம்பல் நிறமாக எல்லாம் மாறி இருந்ததோ அப்படியே இவளும் ஒடுங்கிச் சாம்பல் நிறமாக—நரை விழுந்தவளாக இருந்தாள்.

"என்னை உனக்குத் தெரிகிறதா? நான்தான் கொலொவ்கிஞ. நான்தான் உனக்குத் தினந்தோறும் பால் கொண்டுவந்து தந்தேன்."

அந்தக் கிழவியின் முகத்திலே, அவளுடைய உதடுகளின் அசைவிலே மரியாவுக்கு நல்ல பழக்கம் உடைய சில அறிகுறிகள் தோன்றின.

"கொலொவ்கிஞவா?" என்று சந்தேகத்தோடு கேட்டாள் மரியா, தன்னை விட்டு நழுவி ஓடப்பார்த்த ஞாபக சக்தியை எட்டிப் பிடிக்க முயன்றவள் போல.

"நம்மவர்களிலே இளமைப் பருவத்திற்குத் திரும்பினவர்கள் எவரும் இல்லையே? என்று சொல்லிக் கொண்டே தன் கைக்கோலின்மேல் இன்னும் நன்றுகச் சாய்ந்து நின்றுகொண்டு, மரியாவைக் கூர்ந்து பார்த்தாள். "நம்மவர்களில் எவருமே இல்லை" என்றுள் பின்னும் ஒரு முறை.

இப்பொழுது மரியா அந்தக் கிழவியைத் தெரிந்து கொண்டாள். அந்தக் கிழவியின் முகத்தில் இருந்த

சுருக்குகளும், நரைத்த கூந்தலும் ஒரு நிமிஷ நேரத்திற்குள் மறைந்தன. அவை இருந்த இடத்திலே சிவந்து திரண்ட கன்னங்களும், பளபளப்பான கருங்கூந்தலும், புன்னகையால் ஒளிரும் வெண்மையான பற்களும் தோன்றின. இந்த இளமைத் தோற்றம் மறைந்து விட்டது. திரும்பவும், பறக்கவிட்ட நரைத்தலையும், சுருக்குப்படிந்த முகமும் உடைய கிழவியின் உருவமே மரியா கண்ணெதிரே நின்றது.

"உன் பழைய ஊரைத் திரும்பவும் பார்க்க வந்தாயா?"

மரியா தன்னுணர்வில்லாமலே தன் கைகளைப் பிசைந்தாள். "ஆமாம், வந்தேன்; எனக்கு இந்த ஊரைப் பார்க்க......"

"ஆமாம்; இப்பொழுது இங்கே எல்லாம் இப்படித்தான் இருக்கிறது" என்றாள் கொலொவ்கினா, தன் ராஜ்யத்தைப் பார்க்க வருகிற ஒருவனுக்கு எல்லாவற்றையும் சுட்டிக்காட்டுகிற அரசிபோல. "ஒன்றுமே மிஞ்சவில்லை; எல்லாவற்றையும் தரையோடு தரையாக எரித்து விட்டுப் போனார்கள். இனிமேல் நாம் இப்படித்தான் வாழவேணும்."

மனிதர் வாழும் இடம், அருகில் இருக்கிறது என்பதை இப்பொழுதுதான் மரியா தெரிந்து கொண்டாள். களிமண் பூசிய ஒரு செங்கல்-குவியல். சுள்ளிகள், புதர்கள் ஓட்டுப் பலகைகள், கித்தான்கள் எல்லாம் மனிதரின் குடியிருப்புக்கான இடங்களில் கூரையின் ஸ்தானத்திலே இருந்தன. எல்லாம் காட்டு விலங்குகள் வாழும் புதர்கள் போல் தோன்றின. கோணலாக முறுக்குற்று, துருப்பிடித்திருந்த ஒரு குழாய், புகை-போக்கியாக நின்றது. அதிலிருந்து சிறு கற்றையாகப் புகை மேலே எழுந்து சென்றது. இந்தப் புதரிலேதான் மனிதர்கள் வாழ்ந்தார்கள்.

"இந்த இடத்தில் இருந்தவைகளை எல்லாம், ஒரு செங்கல்லைக்கூட விடாமல் எரித்துவிட்டுப் போனார்கள். தகரப் பாத்திரங்களிலே பெட்ரோல் எண்ணெயை எடுத்துக் கொண்டு கண்ணுக்குத் தென்பட்ட பொருள்களில்

எல்லாம் ஊற்றினார்கள். வீடுகள், வைக்கோல் கிடங்குகள், தானியக் களஞ்சியங்கள், லாயங்கள், மாட்டுத் தொழுவங்கள், எல்லா இடங்களிலும் எல்லாவற்றின் மேலும் ஊற்றித் தீ மூட்டினார்கள். நாங்கள் திரும்பி வந்தபோது, நான் வாழ்ந்த வீடு இருந்த இடம்கூடத் தெரியவில்லை. அது இருக்கட்டும். கிரிகோரி ஐவனோவிச் எங்கே? அவன் எங்கே இருக்கிறான்?''

மரியா பதில் சொல்ல முயன்றாள். அவள் உண்மையைத்தான் சொன்னாள். அது நிகழ முடியாதது; இருந்த போதிலும் அதுவே உண்மைச் செய்தி. அந்தச் செய்தியை அவள் சொன்னபோது, தன் குரலைத் தானே உற்றுக் கேட்டாள்; அது தன் குரல்போல் இல்லை; வேறு யாரோ ஒருவருடைய குரல்போல் இருந்தது.

''கிரிகோரி இறந்து விட்டான்.''

மரியா இந்தச் செய்தியோடு சேர்த்துச் சொன்ன வார்த்தைகள் ஒரு யந்திரப் பதுமையின் வார்த்தைகள் போலத் தொடர்ந்தன. அவை அவளுடைய சொந்த வார்த்தைகள் அல்ல. சர்க்கார் அறிக்கையின் வார்த்தைகள். அவளுடைய காதுக்கே அந்த வார்த்தைகள், பொருத்தமில்லாமல் கட்டிவிட்ட செய்தியாகத் தொனித்தன.

''அவன் வீரர்களின் மரணத்தை அடைந்தான்.''

அவள் அந்த வார்த்தைகளைச் சொன்னபோது, அவற்றின் பொருத்தமின்மையைக் கண்டு வெட்கம் அடைந்தாள். அன்னியனைப்பற்றி அத்தகைய வார்த்தைகளை ஒருவன் எழுதலாம், வாசிக்கலாம், கேட்கலாம்; நெருங்கிய உறவான ஒருவனைப்பற்றி, ஒருத்தியின் கணவனைப் பற்றி, அந்த விதமாகச் சொல்லுவது பொருத்தம் அற்றது.

கொலொவ்கினா அந்த வார்த்தையைப்பற்றியாவது, அவள் சொன்ன மாதிரியைப் பற்றியாவது வியப்பு அடையவில்லை. அவள் அதைச் சாதாரணப் போக்கிலே ஏற்றுக்கொண்டாள். கொலொவ்கினாவின் கருத்திலே, கிரிகோரி ஒரு வசந்த காலத்தின் தலைசிறந்த இன்பமாக விளங்கவில்லை. அவளுக்கு அவன் யந்திர ஆலையில்

எஞ்சினீராக வேலைபார்த்தவன்தான். அதோடு அவளு டைய புள்ளிப் பசுவின்பாலை வாங்கும் வாடிக்கைக்காரன். இப்பொழுது அவன் "வீரர்களின் மரணத்தை அடைந் தான்" என்று சொல்லத் தகுந்தவர்களில் ஒருவன்தானே.

மரியாவுக்கு, தான் தன்னந்தனிமையாக உலகத்திலே இருப்பதாக திடீரென்று தோன்றியது. தனக்கு அறி முகமான ஒருத்தியைச் சந்தித்ததற்காக அவள் துக்கம் அடைந்தாள். கொலொவ்கினு போய்விடவேண்டும் என்று அவள் விரும்பினாள். அலட்சியம் செய்கிற பார்வையோடு அவள் தன்னைப் பாராதபடி அவளுடைய புதருக்குள் ஒழிந்து போக மாட்டாளா என்று விரும்பினாள்.

"என் கணவனும் போய்விட்டான். அவன் முதிர் வேனிற் காலத்திலே நம்முடைய ஊரில் மரணம் அடைந்த வர்களோடு போய்விட்டான். என் பிள்ளைகளை ஜெர்மானி யர் தூக்கிலிட்டார்கள். அதோ அங்கே, யந்திர ஆலைக்குப் பக்கத்திலே இருக்கும் அந்த மரங்களிலேதான் தூக்கி விட்டார்கள்."

ரொம்பச் சாதாரணச் செய்தியைச் சொல்லுகிற விதமாக அவள் அதைச் சொன்னாள். நாடோடியாக நடக்கிற இயல்பான ஒரு செய்தியைச் சொல்லுகிற காரி யார்த்தமான குரல் தொனித்தது அவள் அதைச் சொன்ன போது. மரியா அதைக் கேட்டதும் தன் மனமே புண் ணாகும்படி, ஏதோ ரொம்ப இழிவான காரியத்தைச் செய்தவள்போல, வெட்கம் அடைந்தாள்.

"ஆமாம், அந்த மரங்களிலேதான்."

மரியா அந்தக் கிழவியின் கண்ணைத் தொடர்ந்து அவள் சுட்டிக் காட்டிய திசையைப் பார்த்தாள். கொலொவ்கினு சாம்பல் நிறத்தோடு ஈரமாக இருக்கும் நிலப்பரப்பை ஏறெடுத்துப் பார்த்தாள். ஒரு காலத்தில் அங்கேதான் யந்திர ஆலை இருந்தது. இப்பொழுது அது நெருப்பால் கருகி புகைச்சல் வீசும் காடாக இருந்தது.

"அங்கே போர் நடந்ததா?"

"அங்கே போர் ஒன்றும் நடக்கவில்லை. நமது வீரர் கள் அவர்களை முற்றிலும் வளைத்துக் கொண்டார்கள்.

அப்பொழுது ஜெர்மானியர்கள் தாமாகவே இங்கிருந்து ஓடிப்போய் விட்டார்கள்.''

"போர் நடக்கவில்லை என்கிறாயே. அப்படியானால் அவர்கள் ஏன்......?"

"யாருக்குத் தெரியும்? ஜெர்மானியன் ஜெர்மானியன் தான். அவர்கள் இங்கே ஒருமாதம் இருந்தார்கள்; ஊரில் இருந்தவர்களை எல்லாம் வீட்டைவிட்டுத் துரத்தினார்கள்; ஒவ்வொரு வீட்டிலும் குடிபுகுந்தார்கள். அதனாலே, நாங்கள் காட்டிலே எங்கே எல்லாம் இடம் கிடைத்ததோ, அங்கே எல்லாம் ஒளிந்திருக்க நேர்ந்தது. அவர்கள் ஊரைவிட்டுப் போனபோது ஒன்று விடாமல் எல்லாவற்றையும் எரித்து விட்டார்கள்; பந்தங்களைக் கொளுத்திக்கொண்டு அங்கும் இங்கும் ஓடி, ஒன்றையும் விடாமல் எல்லாவற்றையும் நாசம் செய்தார்கள். வேலி, மரக்கட்டையைக்கூட விடாமல் நாசம் செய்தார்கள் என்றால், வீடுகளைப் பற்றிக் கேட்க வேண்டுமா?"

"மரங்களைக் கூடவா?" என்று கேட்டாள். திடீரென்று அவளுடைய உள்ளத்திலே விநோதமான நம்பிக்கைச் சுடர் தோன்றியது. ஒருவேளை அந்த ஆப்பில் மரம் தப்பிப் பிழைத்திருக்கலாம்; அதை அவள் பார்க்கத் தவறி இருக்கலாம். கொலோவ்கின் அதை அவளுக்குச் சுட்டிக் காட்டலாம். அப்பொழுது மரியாவுடைய கண்கள் சாம்பலும், கற்களும் நிறைந்த நிலப்பரப்பிலே ஆப்பில் மரம் இருப்பதைப் பார்க்கும். பொன்மயமான காதலும், காதலரின் பெருமூச்சும் சுமந்து பாரம் அடைந்து தொங்குகிற பரந்து நீண்ட கிளைகளிலே நட்சத்திரங்கள் அரும்பி இருக்கும்.

"எரிப்பதற்கு முந்தியே மரங்களை எல்லாம் வெட்டி எறிந்தார்கள்; அவற்றை விறகாக உபயோகித்தார்கள். ஆப்பில் மரமானாலும், பேரி மரமானாலும், அவர்களுக்கு எல்லாம் ஒன்றுதான். அவர்களுக்கு அதைப் பற்றி என்ன கவலை? ஒரு வேளை பகையினாலே அப்படிச் செய்திருக்கலாம். குறுஞ்செடிகளைக் கூட அவர்கள் வெட்டி எறிந்தார்கள். ஒன்றையும் விடவில்லை. எல்லாவற்றையும் வெட்டித் தள்ளினார்கள். சிறு சிம்பைக்கூட விட்டு

வைக்கவில்லை. நமது கிராமத்தில் இருந்ததே, ஒரு லைலாக் செடி, ரொம்பப் பெரிதாக; ஞாபகம் இருக்கிறதா? அது, தன் அளவிலே ஒரு காடு போலத் தோன்றுமே; அதைக் கூட வேரோடு, ஒரு சுள்ளியும் தப்பிவிடாமல், வெட்டித் தள்ளினார்கள். ஜெர்மானியர்களின் செய்கையே இப்படித் தான்.''

மரியா ஸ்டேஷனுக்குத் திரும்பினாள். வழியிலே அந்த மரப் பாலம் இருந்தது. அவர்கள் இருவரும் ஜோடியாக எத்தனை தடவை அந்தப் பாலத்தைத் தாண்டியிருக்கிறார்கள். அழுக்குப் படிந்து அசைந்தாடிய அந்தப் பாலத்தின் பலகைகளைப் பேராவலோடு பார்த்தாள். கிரிஷாவின் அடிச்சுவடுகளின் அடையாளங்களை அதிலேயாவது பார்க்கலாம் என்று நினைத்தாளா?

கிரிகோரிக்குப் பின், இரும்பு ஆணிகள் அடித்த ஆயிரக் கணக்கான ஜெர்மன் பூட்ஸ் கால்கள் இந்தப் பாலத்திலே நடந்து சென்றனவே. அவை கிரிஷாவின் ஞாபகச் சின்னமான அடிச் சுவடுகளை முற்றிலும் மிதித்துத் தேய்த்து மறைத்திருக்குமே.

குளிரால் நடுங்கினாள் மரியா. அவளுடைய பற்கள் தாளம் போட ஆரம்பித்தன. அவள் இப்பொழுது தான், தன் பாதங்கள் நனைந்திருப்பதையும், மழையினால் தன் சட்டை ஊறியிருப்பதையும், குளிரால் தன் முகம் உணர்ச்சி அற்றிருப்பதையும் உணர்ந்தாள். மெதுவாகத் தள்ளாடி, நடக்கமுடியாமல் நடந்து, தெருவைக் கடந்து ஸ்டேஷனை நோக்கிச் சென்றாள். 'மரணச் சடங்குக்குப் போய் விட்டுத் திரும்புவது போலத் திரும்புகிறேன்' என்று தனக்குள்ளே நினைத்துக்கொண்டாள். அவள் கிரிஷாவின் மரணச் சடங்குக்குப் போய் வந்தாளா? இல்லை, அவனுடைய மரணச் சடங்கு நடந்த நேரத்திலே அவள் எப்படி அங்கே இருந்திருக்க முடியும்? அவன் 'வீரர்களின் மரணத்தை அடைந்தான்.' ஆகையால் அவனை எங்கே அடக்கம் பண்ணினார்கள் என்று ஒருவருக்குமே தெரியாது. ஒருவேளை, சுக்கல் சுக்கலாக அவனுடைய உடல் சிதறிப் போயிருக்கலாம். ஒருவேளை, அவனிடமிருந்து மிஞ்சியதெல்லாம் ஒரு பிடி சாம்பல்தானோ,

என்னவோ! அப்படியானால், அவன் உடலைத் தேடுவதில் என்ன பயன்?

ஆமாம்; அவனுக்குக் கிடைக்கக் கூடிய மரணச் சடங்கெல்லாம் இவ்வளவுதான்; அவர்களுடைய இளமைப் பருவத்தையும், காதல் நாட்களையும் இன்பமாகக் கழித்த இடத்திற்கு வந்து போனதுதான் அவள் அவனுக்குச் செய்யக்கூடிய மரணச் சடங்கு. கிரிகோரியின் சமாதி மிகப் பெரியது. எந்த இடத்திலே முழங்கால் இட்டுக் குனிந்து, ஈரமான நிலத்தை முத்தம் இடவேண்டும் என்று ஒரு பொழுதும் அவளால் தெரிந்துகொள்ள முடியாது.

அவள் நடந்து சென்றாள். அவளுடைய கண்கள் நேர் எதிரே ஒன்றையுமே பாராமல் விழித்து நோக்கின. இந்தக் கிராமத்திலேதான் அவர்கள் இருவரும் சேர்ந்து நடந்தார்கள். அவள் அவனைச் சந்திப்பதற்காக வெளியே ஓடினாள்; அவன் வீட்டுக்கு வருகிற வரைக்கும் காத்திருக்க மாட்டாள். இருவருக்கும் பொதுவாக இருந்த வீட்டுக்குச் சேர்ந்தே திரும்பி வந்தார்கள். பாட்டி அவ்தோத்தியாவுக்கு, எதையும் நன்றாய்ச் செய்யத் தெரியாது; ராஸ்பரி இலையினால் பானம் தயாரித்துக் கொடுப்பாள். மரியா உறுதி மொழி சொல்கிற வரைக்கும் கிரிகோரி பானம் நிறைந்த கோப்பைகளைச் சந்தேகத்தோடு ஆராய்ந்து பார்ப்பான்.

"என் இப்படிச் சந்தேகப் படுகிறாய்? நானே கோப்பைகளைக் கழுவினேன்."

"நீயா கழுவினாய்? உன் மேல் ஆணையாகச் சொல்கிறாயா?"

"ஆமாம். நான்தான் கழுவினேன். இதென்ன அசட்டுத்தனம்?"

நல்லகாலம், பாட்டி அவ்தோத்தியாவுக்குக் காது மந்தம். அதனாலே அவளுக்குக் கிரிஷாவின் சந்தேகத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. கன்னத்திலே கையை வைத்துக் கொண்டு, அடுப்பங்கரை அருகில் நின்றபடியே அவள் தயாரித்த ராஸ்பரிப் பானத்தை இருவரும் அருந்துவதைச் சந்தோஷமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள். அவள் சூப் தயாரிப்பாள்; பலவிதமான தோசை, அடை முதலிய

பணியாரங்கள் செய்வாள். சூப்பை ஏதாவது துருப் பிடித்த பாத்திரத்திலே தயாரித்து விடுவாள். அவள் எதைச் சமைத்தாலும் சந்தேகம் ஏற்பட்டு விடும். ரொம்ப நல்ல எண்ணத்தோடுதான் இந்தப் பணிவிடைகள் எல்லாம் செய்வாள்; என்றாலும், எல்லாவற்றிலும் சந்தேகம் கொண்டு, தங்களைத் தற்காத்துக் கொள்வதிலே, இருவரும் ரொம்ப அக்கரையாக இருப்பார்கள். இதிலே ரொம்ப நேரம் போய் விடும். காலையிலும் மாலையிலும் ஓயாமல் கழுவிச் சுத்தம்பண்ணுகிற நாகரிகம் எல்லாம், பாட்டிக்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கும். 'பூதத்தை எழுப்பி விடாமல் இருப்பதற்காக' என்று அடிக்கடி சொல்லு வான் கிரிகோரி. அப்படிச் சொல்லிக் கொண்டே பாத் திரங்களைக் கழுவுவதற்கும், சமைப்பதற்கும் பக்கத்துக் கிணற்றிலிருந்து தன் கையாலேயே தண்ணீர் மொண்டு வருவான். சில வேளைகளில் அவனே பாத்திரங்களைக் கழுவுவான். அவன் இப்படி எல்லாம் பாட்டியின் மனம் புண்படச் செய்தாலும், அந்தப் பாட்டி அவ்தோத்தியா வுக்கு கிரிகோரி ஒரு தெய்வ விக்கிரகமாகவே விளங் கினன்.

"கிரிகோரி!" என்ருள் மரியா உரத்த சத்தமாக. உடனே நின்ருள். சாம்பல் நிறமான தாழ்ந்த வெளி வானத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அதே வானம்! அவர் களுடைய காதல் நாட்களிலே இருந்த அதே நீல வானம்! பொன் ஒளி பரந்து பிரகாசமாக இருந்த வானந்தான். அவர்கள் இங்கே இருந்த நாட்களிலே ஒரு போதும் மழை பெய்ததே இல்லையா? அதை நினைத்துப் பார்க்க முயன்ருள்; முடியவில்லை. பின்பு, திடீரென்று எல்லாம் ஞாபகத்திற்கு வந்துவிட்டன. பள பள என்று பிரகாசிக்கிற மழைத் துளிகளால் கனத்திருக்கும் ராஸ்பரிச் செடிகள் அவளு டைய மனக் கண்ணெதிரே தோன்றின. ஆப்பிள் மரத் தின் இலைகளில் சள சள என்று மழை பெய்யும் சத்தம் அவளுடைய காதுகளில் ஒலித்தது. ஆமாம்; அந்த நாட் களிலும் சில தருணங்களில் மழை பெய்தது. என்ருலும் அந்த நாட்களை அவள் பொன் மயமான காலமாகவே ஞாபகத்தில் பதித்திருந்தாள். நீல வானமும், நறுமணம் கமழும் ஏராளமான மலர்களும், யாவும் கொஞ்சி

குலாவும் காதல்-சூரியனுடைய உதாரகுணத்தினல் இன்பமான ஒளியோடு பொலிவுற்றிருந்தன.

சேறு அவளுடைய பாதத்தைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டது; அவள் அடி பெயர்த்தபோதெல்லாம் உரத்த சத்தமாகச் சப்புக் கொட்டிக் கொண்டு இருந்தது. காற்று அடித்துக் கொண்டு போகிற கந்தைத் துணிகளைப் போலக் காகங்கள் திரும்பவும் பறக்கத் தொடங்கின.

மனச் சலிப்பைத் தரும் ஒரே சாம்பல் நிறம்! மனந்தளரத் தூங்கி வழிகிற நிறம்! மங்கி மழுங்கி மனத்தைத் தளரச் செய்கிற நிறம்! வானம் சேறு மிகுந்த ரஸ்தாப் போலவும், ரஸ்தா சாம்பல் நிறத்தோடு ஈரமான வானம போலவும் தோன்றிய ஓர் இடத்திலே, குறுஞ்செடிகளின் மேலே விழுந்த சூரிய கிரணம் போல் ஊதா வர்ணமான ஒளி ஒன்று கண் கூசும்படி அவளுக்கு எதிலே தெரிந்தது.

மரியா மூச்சு ஒடுங்க அங்கே நின்றுள். ரஸ்தாவை விட்டு அப்புறமாகச் சென்றுள். சேற்றிலே சறுக்கி விழுந்து ஒரு பள்ளத்தில் இறங்கினுள். அந்தப் பள்ளத்தின் சரிவுகளிலே முளைத்திருந்த, பழுத்துக் காய்ந்த மஞ்சள் வர்ணமான புல்லைப் பிடித்துக்கொண்டு பள்ளத்தின் மறு கரையின் மேல் ஏறினுள். ஊதா வர்ணமான வில்லோச் செடிகள் பள்ளத்தின் மறுகரை ஓரமாக வளர்ந்திருந்தன. அந்த வில்லோச் செடிகளின் மென்மையான வளைகின்ற சிம்புகளும், இளந்தளிர்க் குருத்துக்களும், அந்திப் பொழுதில் மறையும் சூரியனின் செங்கதிர்பட்டு ஒளிருகிற மாலைக் காலத்து மூடுபனி போலத் தோன்றியது. ஊதா வர்ணமான வில்லோச் செடியின் சிம்புகள் பைன் செடிகளினிடையிலே கிரிஷாவின் மகிழ்ச்சியான புன்னகை போல், கிரிஷாவின் களிக்கின்ற கண்களைப் போல் பிரகாசித்தன. அந்த வில்லோச் செடியை அணைத்துத் தழுவ விரும்பினவள் போல இரண்டு கைகளையும் விரித்தாள்; நனைந்திருந்த அந்த வில்லோச் செடிகளை அணுகினுள். மேல் நோக்கி எழுந்த வில்லோக் குருத்துக்கள் அவளுடைய கைகளை வருடித் தமது தொடுகையால் அவளைக் கொஞ்சிக் குலாவின. பின்னல் மொட்டுக்களாகப் போகிற சிறு

சிறு முகிழ்கள் கிளைகளில் விளங்கின. அந்த முகிழ்களில் காலைப் பனித்துளி படிந்து பிரகாசிப்பது போல மழைத் துளிகள் படிந்து பிரகாசித்தன. இங்கே தான், இந்தப் பசுமையான வில்லோக் காட்டிலே தான், மென்மையான இலைகளின் சலசலப் பொலியின் மத்தியிலே, சின்னஞ் சிறு அலை வீசுவது போலக் கிளைகளை அசைத்தாடும் மென்மையும் பசுமையுமான இளந்தளிர் இலைக் கடலிலே தான் மரியாவும் கிரிஷாவும் முதன் முதலில் முத்தம் இட்டார்கள்.

அவள் முன்னே நடந்து சென்றாள். நனைந்த சிம்புகள் அவளுடைய முகத்தில் அடித்தன. புத்தி தடுமாறினவள் போல மேலும் நடந்தாள். கிரிகோரியைக் கண்டு விட்டதாகத் திடீரென்று உணர்ந்தாள். கை நிரம்ப வில்லோக் கிளைகளை வாரி எடுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டாள். அதே நேரத்தில் தொடர்பற்ற கொஞ்சும் மொழி சிலவற்றை முணுமுணுத்தாள். முடிவில் அழுகையும், தேம்புதலும் அவளுடைய உள்ளத்தைக் கிழித்தெறியவே, நீர் ஊறிய சேற்றிலே தளர்ந்து விழுந்து, ஆறாத் துயரத்தோடு வாய் விட்டுப் புலம்பி, அழுகை வெறிக்கு ஆளானவள் போல, அழத் தொடங்கினாள். இவ்வளவு நேரமாக அவளுடைய உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த துக்கம் மலையிலும் பெரியதாக இருந்தது. தனக்கு மட்டும் மன உறுதி வெகு திடமாக இருக்குமானால், ஊதா வர்ணமான இந்த வில்லோக் காட்டிலே படுத்தபடியே தன் உயிரை விட்டு விடவேண்டும் என்று விரும்பினாள். ஏனென்றால் இந்த வில்லோக் காடுதானே கிரிகோரி அந்த நாளில் அவளுக்கு அளித்த முத்தத்தையும், அவள் கிரிகோரிக்கு அளித்த முத்தத்தையும் ரஸ்தா வழியாகச் சென்றவர்கள் பாராதபடி திரை இட்டு மறைத்தது. அந்தக் காதலின்ப நாளிலே அவர்கள் பரஸ்பரம் பரிமாறிக் கொண்ட முத்தம் அதரத்தின் ஸ்பரிசமாக இராமல், ஒன்றுபட்ட இரண்டு உள்ளங்களின் கலப்பாக இருந்தது. அந்த இன்பம் எல்லாம் இனி ஒரு பொழுதும் திரும்பி வராது. யுத்தச் சூறாவளி அதை நாற்றிசையிலும் சிதறடித்து விட்டது. ஜெர்மானியரின் ராணுவ பூட்ஸ்கள் அதைத் தரையோடு தரையாக மிதித்துத்

தேய்த்துவிட்டன. ஜெர்மானிய வெடிகுண்டுகள் அதைச் சுக்கல் சுக்கலாகத் தகர்த்தெறிந்தன. ஜெர்மானியத் தோட்டாக்கள் அதைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து எறிந்துவிட்டன.

அவள் வாயிலே களிமண் சுவையை உணர்ந்து தன் நினைவுக்கு வந்தாள். அந்திப் பொழுதாயிற்று. ஊதா வர்ணமான வில்லோக் கிளைகள் தம் நிறம் இழந்து அந்தி வெளிச்சத்தின் மூடுபனியையும் ஈரத்தையும் போர்த்துக் கொண்டன. திரும்ப ஒரு பொழுதும் பிழைத்து எழுந்திருக்க முடியாதபடி கிரிகோரி இரண்டாவது முறையாக ஒரே அடியில் மரணம் அடைந்துகொண்டிருந்தான். மரியா வெகு சிரமப்பட்டு எழுந்தாள். அவளுடைய கை கால்கள் குளிரால் மரத்திருந்தன. அவள் சட்டையில் ஒட்டிக்கொண்டிருந்த களிமண்ணை யந்திரப் பதுமையின் இயல்பிலே துடைத்து எறிந்தாள். ஆனால், அந்த முரட்டுத் துணியில் முன்னிலும் அதிகமாகக் களிமண் ஒட்டிக் கொண்டது. களிமண்ணைத் தட்டிவிட முயன்றதிலே, தன் கைகளை அழுக்காக்கிக் கொண்டாளே தவிர வேறு எந்த நன்மையும் அடையவில்லை. அவள் நடக்கமாட்டாமல் ஸ்டேஷனுக்கு நடந்தாள். முன்னே இறங்கி ஏறின அந்தப் பள்ளம் இப்பொழுது தாண்ட முடியாத ஒரு மலைப் பள்ளம் போல் இருந்தது. அவள் திரும்பவும் இடறி விழுந்தாள். திரும்பவும் எழுந்திருக்கும் முன் போதுமான சக்தி அடையச் சற்று நேரம் இளைப்பாற வேண்டியதாயிற்று.

அப்படி அடிக்கடி ஏன் இளைப்பாறினாள் என்று அவளுக்கே தெரியவில்லை. அவள் வந்த வழியாகவே ஏன் திரும்பினாள் என்பதற்கும் அவளுக்குக் காரணம் புலப்படவில்லை. பைன் மரக் காட்டிற்குள்ளே இருள் குடிகொண்டிருந்தது. யந்திர ஆலையின் பாழடைந்த கட்டடம் அந்த இருள்—திரையின் வழியாகப் பார்த்தபோது முன்னால் தோன்றியதைவிடப் பெரிதாக, பிரளய காலத்துக்கு முந்திய சென் ராக்ஷச மிருகம் போலக் காட்சியளித்தது.

அவள் தட்டுத் தடுமாறிச் சென்றாள். தான் எங்கே சென்றாள் என்று கவனிக்கவில்லை. மழை பெய்ய ஆரம்பித்தது. குளிர் நடுக்கியது. முகத்தில் வழிந்த மழைத்

துளிகள் உதட்டில் பட்ட பொழுது உப்புக் கரித்தன. அது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. வெடித்த உதடுகளி லிருந்து ரத்தம் சொட்டியது. அவள் தன் கைகளைப் பார்த் தாள். கூரான செங்கல்கள் அறுத்த இடங்களிலே ரத்தம் இருந்தது. இது யாருடைய ரத்தம்? கிரிகோரியுடைய ரத்தமா? இல்லை. கிரிகோரியுடைய ரத்தமாக இருக்க முடியாது. அவன் காயங்களை அவள் கட்ட வில்லையே. அது மாத்திரமன்று; அவனுக்கு ஒருவரும் சகாயம் பண் ணவுமில்லை; அவனை மரணத்திலிருந்து ரட்சிக்கவுமில்லை; அவன் காயங்களினால் சாகவுமில்லை. 'வீரர்களின் மரணத்தை அடைந்தான்.' ஆமாம். அந்த அறிக்கை அப்படித்தான் சொல்லியது. போர்க்களத்திலே தாய் நாட்டுக்காகவும், ஸ்டாலினுக்காகவும் தன் உயிரை இழந்து விட்டான்.

இதைப்பற்றி யெல்லாம் நினைக்கும் பொழுது பத் திரிகைகளின் மூலம் அறிமுகமான உயிரற்ற சொற்றொடர் கள் எதற்காக நினைவுக்கு வரவேணும்? அவை சரியான சொற்றொடர்தான். எத்தனையோ இதயங்களின் துடி துடிப்பும், எத்தனையோ மக்களின் உயிர் நாடியும், தாய் நாட்டுக்காகவும் ஸ்டாலினுக்காகவும், உயிரிழந்த போர் வீரர்களின் தொகுதியும் எல்லாம் இந்தச் சொற்றொடரி லேயே அடங்கி இருந்தன. இந்தக் கருத்தை வெளியிட மற் றெந்தச் சொற்றொடரும் சரியாக அமையாது.

கிரிஷாவின் பெயரால் மரணச் சடங்குகளைச் செய்து விட்டுத் திரும்பி வரும் வழியிலே அவள் எண்ணிய எண் ணங்கள் அவளுக்கே ஆச்சரியமாக இருந்தன. ஆனால், இவைகளை யெல்லாம் அவளா நினைத்தாள்? அவள் தய வில்லாமல் தாமாகவே எழுந்த எண்ணங்கள் அல்லவா இவைகள்?

ஸ்டேஷனிலிருந்த மனிதர் அவளை ஆச்சரியத்தோடு முறைத்துப் பார்த்தார்கள். ரயில் வண்டி வருவதற்கு இன் னும் ஒரு மணி நேரம் இருந்தது. அந்த ஸ்டேஷனில் ஆட் டங்கொடுத்த ஒரே ஒரு நாற்காலி இருந்தது. அவள் அதில் உட்கார்ந்து தரையை நோக்கிய வண்ணம் பொறுமை யாக ரயில் வண்டியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

ரயில் வண்டி வந்தவுடன் வாரன்ஸோவ் கீழே குதித்தான். அவள் அவனை உடனே பார்த்து விட்டாள். ஏனென்றால் அவனைத் தவிர அந்த வண்டியிலிருந்து வேறு யாரும் இறங்கவில்லை. அவன் பயந்து நோக்கிய பார்வையை அவள் கவனிக்கவில்லை. அவள் வண்டியில் ஏற அவன் உதவி செய்தான்.

"மரியா, நீ ஒரே அடியாக நனைந்து போயிருக்கிறாய். உன் கைகள் ரத்த மயமாக இருக்கின்றன."

அவள் குனிந்து தன் கைகளைப் பார்த்தாள்; பிறகு அவனைப் பார்த்தாள். தங்களை யாராவது கவனிக்கிறார்களா வென்று ஒரு முறை சுற்றிப் பார்த்தாள். ரயில் வண்டிக்குள் இருட்டாக இருந்தது. பிரயாணிகள் எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவள் அவன் பக்கமாகக் குனிந்து, பரமரகஸ்யம் ஒன்றைச் சொல்பவள் போல, "கிரிகோரி இறந்து விட்டான். உனக்குத் தெரியுமா?" என்று மெதுவாகச் சொன்னாள்.

பனிக்கட்டி போல் குளிர்ந்திருந்த அவள் கையைக் தன் கையினால் அழுத்திப் பிடித்துக் கொண்டான். அவன் அந்தக் கையை விடவில்லை.

"மரியா, மரியா. இது வரைக்குமா நீ......"

அந்த வாக்கியத்தை அவன் முடிக்கவில்லை. குறுகிய பார்வையுடைய அவள் கண்களிலே திகில் தோன்றியது.

அவள் தலையை அசைத்தாள். இல்லை. அவளுக்குப் புத்தி தடுமாறிப் போகவில்லை. இன்றுவரை கிரிகோரியின் மரணத்தில் அவளுக்கு நிச்சயமில்லை. அறிவிப்பில் வந்த செய்தியை அவள் முற்றிலும் நம்பினாள். ஆனாலும் தான் இழந்த காதலின் முழு பயங்கரமும் இது மட்டும் அவளுக்கு விளங்கவில்லை. பாழடைந்த அந்தக் கிராமத்தில் வில்லோச் செடிகளின் மத்தியிலே இன்றைக்குத்தான் அவள் கிரிகோரியைப் புதைத்து விட்டு வந்தாள். எத்தனையோ முறை உணர்ச்சியற்ற கண்களினால் வாசித்த அந்தச் செய்தி—'வீரர்களின் மரணத்தை அடைந்தான்' என்றசெய்தி—இன்றைக்குத்தான் அவளுக்கு விளங்கியது.

ஜன்னல் வழியாக வெளியே பரவி இருந்த இருட்டைப் பார்த்துக் கொண்டே அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் சோகம் நிறைந்திருந்தது. ரயில் வண்டி அசைந்தாடிக் கலகலத்துச் சென்றது.

* * *

" உனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது" என்ருள் தத்யான பெத்ரோவ்ன.

" தந்தியா? யாரிடமிருந்து?"

" நான் பார்க்கவில்லை. அது உன் மேசை மேல் இருக்கிறது."

மரியா மெதுவாகக் கையுறைகளேயும், சட்டையையும் கழற்றி வைத்தாள். காயம் அடைந்த ஏதாவது ஒரு நோயாளியின் சுகத்தை விசாரிப்பதற்காக யாராவது அடித்த தந்திச் செய்தியாக இருக்கும். மோசமான நிலையில் இருப்பவர்களைப் பற்றி வேண்டுமென்றே தந்தி அடித்தார்களோ என்றுகூடத் தோன்றும். நூறு, ஆயிரம் மைல்களுக்கு அப்பாலே ஒரு தாய்க்கு, மனைவிக்கு, சகோதரிக்கு, நிகழப் போகும் துக்கம் ஒருவாறு தெரிந்திருக்கலாம்; தங்கள் அன்புக்கு உரியவன் வாழ்க்கைப் போராட்டத்தில் தோல்வியடைந்து இறப்பதாக, விவரிக்க முடியாத ரகஸ்ய முறையிலே, அவர்களுக்கு அபாய அறிவிப்புக் கிடைத்திருக்கலாம்.

அவளுக்கு அப்படி ஒன்றுமே தோன்ற வில்லையே; வழக்கப்படியான அறிவிப்பு வருமளவும் ஒன்றுமே தெரிய வில்லையே. அப்படி இருக்க இத்தகைய விவரிக்க முடியாத முன்னறிக்கைகளை அவள் எப்படி நம்ப முடியும்? கிரிஷா அவளை விட்டு ஒரு நிமிஷங்கூடப் பிரியாமல் இருந்தான். அவள் அவன் பிரசன்னத்தை உணர்ந்தாள்; குரலைக் கேட்டாள். சிரிப்பைப் பார்த்தாள். ஆனலும், அதெல்லாம் பொய்யாகப் போய் விட்டது. அவ்வளவு நிச்சயமாக அவன் உயிரோடு இருக்கிருன் என்று நினைத்துக் கொண்டிருந்த பொழுது அவள்......

அவள் தந்தியைப் பிரித்தாள். கவலையீனமாக ஒட்டியிருந்த துண்டுக்கடிதத்தில் எழுதியிருந்த இரண்டு வரிகளைப்

படித்துப் பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. திரும்ப ஒரு முறை வாசித்தாள். அவளால் தடுக்க முடியாத ஒரு நடுக்கம், ஒரு குளிர், உடலெங்கும் ஓடியது.

தத்யானு பெத்ரோவ்னு பழைய பாதரட்சைகளைத் தேய்த்து நடக்கிற சத்தம் பரவி அடுத்த அறையில் கேட்டது.

"உன் உடம்புக்கு என்ன? தந்தியில் என்ன சமாசாரம்?"

மரியா பிரமை பிடித்தவள் போலத் தன் தாயை முறைத்துப் பார்த்தாள்.

"இப்போது என்ன நடந்து விட்டது?" என்று வெடுவெடுப்பாகக் கேட்டாள் தத்யானு.

"தந்தி......அந்தத் தந்தி..."

மரியா அந்தத் தந்தியைப் பிரித்தாள். திக்கித்திக்கி அதைச் சத்தமாக வாசித்தாள்.

'கிரிகோரி ஐவனேவிச் காயப்பட்டு எங்கள் வைத்தியசாலையில் கிடக்கிருன். சோன்யா.'

மரியாவின் கையிலிருந்த தந்தியை வெடுக்கென்று வாங்கினுள் தத்யானு. தன் உதடு அசைய, தானே ஒரு முறை வாசித்துப் பார்த்தாள். பிறகு திடீரென்று அழ ஆரம்பித்தாள்.

"அவன் உயிரோடு இருக்கிருன்! உயிரோடு இருக்கிருன்! உயிரோடு இருக்கிருன்!"

தன் மகளைத் திரும்பிக்கூட பாராமல் பக்கத்து அறைக்குச் சென்ருள். கிரிகோரி இறந்தவர்களின் மத்தியிலிருந்து எழுந்ததும், திரும்ப உலக வாழ்க்கைக்கு வந்ததும் எல்லாம் அவளுக்காகத்தான்; அவளுடைய மகளுக்காக அல்ல என்று எண்ணும்படி இருந்தது அவளுடைய செய்கை. அவள் வாய்விட்டுப் பிரார்த்தனை செய்வது மரியாவுக்குக் கேட்டது. 'அவள் பிரார்த்தனைதான் பண்ணுவாள். எது நடந்தாலும் கடவுளின் பிரதிமையிடம் பிரார்த்தனை பண்ணுவதைத்தான் அவளிடம் எதிர்பார்க்கலாம்.' என்று எரிச்சலோடு நினைத்துக் கொண்டாள் மரியா.

திரும்பவும் ஒரு முறை தந்தியைப் படித்துப் பார்த்தாள். போர் முனையின் பின்னணியில் உள்ள ஏதோ ஒரு வைத்தியசாலையில் சோன்யா வேலை செய்து கொண்டிருந்தாள். கிரிஷா எப்படி அங்கே போயிருக்க முடியும்? போர் முனையின் முன்னணியில் அவன் இருந்ததாக அல்லவா அறிக்கை வந்தது? அந்தத் தந்தியில் சோன்யா என்ற பெயரைத் தவிர வேறெதுவும் அவளுக்கும் புரியவில்லை.

கணவன் இறந்ததைக் குறிப்பிட்ட அறிக்கைக் கடிதத்தை எடுத்து அதைக் கவனமாகப் பார்த்தாள். இறந்ததைப் பற்றிய அறிவிப்புதான். அதைப் பற்றிச் சந்தேகமே தேவை இல்லை. அது வைத்தியசாலையில் இருந்து வரவில்லை. கிரிஷா வேலையாயிருந்த படைப் பகுதியிலிருந்து வந்திருந்தது. இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? சோன்யாவைவிடப் படைப் பகுதிக்கு விஷயம் சரியாகத் தெரியாதா? இந்த விஷயத்தில் சோன்யா எப்படித் தலையிட்டாள்?

அவள் தன் கைகளை நெற்றிச் சென்னியில் வைத்து அழுத்திக் கொண்டாள். தாய் சொன்ன அந்த வார்த்தையை—'உயிரோடு இருக்கிறான்' என்ற அந்த வார்த்தையை உச்சரிக்க—ஏன்? நினைக்கவே பயந்தாள். அப்புறம் இது தவறு, மூடத்தனமான தவறு என்று தெரிந்துவிடும்.

தத்யானு பெட்ரோவ்னு திரும்ப அறைக்குள் வந்தாள். அவள் முகம் மலர்ந்திருந்தது. அவள் தன் மகளைப் பார்த்தாள்; பார்த்தவுடன் ஆச்சரியத்தால் திடுக்கிட்டு நின்றுவிட்டாள்.

"என்ன செய்கிறது உனக்கு? கைகாட்டி மரம் போல ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் நிற்கிறாயே! கிரிஷா உயிரோடு இருக்கிறான்!"

"எனக்குத் தெரியாது" என்று வெகு சிரமப்பட்டு முனகினாள். "எனக்கு ஒன்றுமே தெரியாது."

"அந்தத் தந்தி! அந்தத் தந்தி!"

இரண்டு கசங்கிய துண்டுக் காகிதங்கள் பக்கத்துக்குப் பக்கமாக மேசைமேலே கிடந்தன. ஒன்று

மரணத்தை வற்புறுத்தியது. மற்றொன்று அவன் உயிரோடிருப்பதை வற்புறுத்தியது. இவ்விரண்டில் எதை அவள் நம்புவது? எதை நம்ப முடியும்?

"எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை" என்றாள் மரியா. அவள் குரலில் உயிரில்லை. அவளுடைய மனத்தின் ஆழத்தில் எங்கேயோ ஒரு துளி சந்தோஷம் ஏற்பட்டது; தருணம் வாய்க்கும்பொழுது அது கொழுந்துவிட்டு எரியத் தயாராகக் காத்துக் கொண்டு இருந்தது. ஆனால் மரியா அதை நசுக்கப் பார்த்தாள். அது பரவிவிடாதபடி தடுக்க விரும்பினாள். கிரிகோரியை இரண்டு முறை இழக்க முடியாது. அந்தக் கொடுமையை, பயங்கரத்தை மற்றொரு முறை அவளால் தாங்க முடியாது. அவளுடைய மனம் புண்ணாக நொந்தது. சந்தோஷமோ, துக்கமோ, எதற்கும் அஞ்சியது. சந்தோஷத்தை வரவேற்றால் அது கடைசியில் துன்பத்தைவிட மோசமாக முடிந்து விட்டால்......?

"இதில் விளங்குவதற்கு என்ன இருக்கிறது. அவன் வைத்தியசாலையில் இருப்பதாகச் சோன்யா சொல்லுகிறாள்."

"ஆமாம்." 'ஆனால் கிரிகோரியைப் பற்றி சோன்யாவுக்கு என்ன தெரியும்?' என்று மரியா தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். திடீரென்று அவள் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. அவள் தந்தியின் மேல்விலாசத்தைப் பார்த்தாள். ஒருவேளை வேறே யாருக்காவது போயிருக்க வேண்டிய தந்தியோ, என்னவோ? இல்லை. அந்தத் தந்தியின் மேல்விலாசம் அவளுடையதுதான்.

அவள் அங்கும் இங்கும் அலைந்தாள். கையுறைகளை எடுத்து மாட்டிக்கொண்டாள்.

"நீ எங்கே போகிறாய்?"

"நான் வெளியே போகவேணும்; பிறருடைய அபிப்ராயத்தைக் கேட்கவேணும்; இதைப் பற்றிய விஷயங்களைக் கண்டுபிடிக்க வேணும்."

"திரும்பவும் அந்த வாரன்ஸோவிடம்தான் போகிறாயா?"

" ஆமாம். வாரன்ஸோவிடம்தான் போகிறேன்.

வாரன்ஸோவிடம்தான் போகவேணும். அவளுக்கு அவனைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? அவன் அந்தத் தந்தியை வாசிக்கவேணும். வாசித்து அபிப்பிராயத்தைச் சொல்லவேணும். புத்தி தடுமாற்றமில்லாத ஒருவன் எல்லாவற்றையும் அவளுக்கு விளக்கிச் சொல்லவேணும். இது எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவுக்கும் நல்லது. இல்லையென்றால் அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிடும்.

" நீ எங்கும் போகக்கூடாது. உனக்கு என்ன, பைத்தியமா பிடித்திருக்கிறது? இப்போதுதான் செத்து விழுபவள்போல வேலையிலிருந்து வந்தாய். திரும்பவும் வெளியேபோக விரும்புகிறாய்! நான் போய் வேலைக்காரனிடம் சொல்லுகிறேன். வாரன்ஸோவைத் தவிர உனக்கு வேறு கதியில்லை என்று தோன்றினால், வேலைக்காரனின் மகன் அவனை அழைத்து வரட்டும். நீ இங்கே உட்காரு."

மரியா கீழ்ப்படிந்தாள். அது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவளுடைய உடல் அவளுக்கு இப்பொழுதுகூட திடீரென்று அவள் காலில் பலம் குன்றி விட்டது போலத் தோன்றியது. யாரோ அவளுடைய கால் எலும்புகளை அகற்றிவிட்டது போல இருந்தது. மரியா ஒரு நாற்காலியில் விழுந்தாள். அவளைச் சுற்றிச் சுற்றி அசைந்தாடியது அந்த அறை.

தாயின் வார்த்தைக்குப்பணிந்து தேயிலைப் பானத்தைப் பருகினாள். அதனால் தன் உதடு வெந்து போவதைக்கூடக் கவனிக்கவில்லை மேசைமேல் அந்த இரண்டு கடிதத் துண்டுகளும் கிடந்தன. ஒரு நிமிஷங்கூட அவள் கண்கள் அந்தத் துண்டுகளை விட்டு அகலவில்லை. அதில் எது உண்மை? எது அவளுடைய எதிர் காலத்தை நிர்ணயிக்கப் போகிறது?

தேதியைப் பற்றிய எண்ணம் அவள் மனத்தில் பளிச் சென்று உதித்தது. மரண அறிவிப்பின் தேதி தெரியும். எத்தனையோ முறை அதைத் தனக்குத்தானே சொல்லிப் பார்த்துக்கொண்டாள். அவளுடைய இறந்த கால வாழ்க்

கைக்கும், வருங்கால வாழ்க்கைக்கும் இடையிலே ஆழங் காண முடியாத மடுபோல இருந்தது அந்தத் தேதியைப் பற்றிய விவரம். அது அந்த நாளுக்கும் இந்த நாளுக்கும் இடையே தானாக எழுந்து நின்ற வானளாவிய பெருஞ் சுவர்போல இருந்தது ஆனால் அந்தத் தந்தி......

எண்கள் ! எண்கள் ! எண்கள் ! வரிசை வரிசையான எண்கள் ! இவைகளுக்கு எல்லாம் என்ன அர்த்தம் ? எப்படி இவைகளைத் தெரிந்துகொள்ள முடியும்? எப்படி அந்த அர்த்தத்தை உணர்ந்துகொள்ள முடியும் ? அவள் நினைத்துப் பார்த்தாள். அவளுடைய எண்ணங்கள் காற்றினால் அலைசடிப்படும் மூடு பனிபோல கட்டுக்கடங்காமல் அலைந்து திரிந்தன. இன்றைக்கு என்ன தேதி ? இது என்ன மாதம்? என்ன வருஷம் ? வருஷத்தை ஞாபகத்துக்குக் கொண்டுவருவதுகூட அவளுக்குச் சிரமமாக இருந்தது. ஆமாம் ; இந்த வருஷம்......

" அந்தத் தந்தியில் திரும்பத் திரும்ப எதைப் படித்துப் பார்க்கிறாய் ? "

" தேதி. அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை."

" எங்கே ? நான் பார்க்கட்டும்."

தத்யானா பெத்ரோவ்னா இரும்புச் சட்டமிட்ட தன் மூக்குக் கண்ணாடியை மாட்டிக்கொண்டாள். அதன் விளிம்பு உடைந்திருந்தது. அதை வெள்ளை நூலினால் கட்டியிருந்தது. அதை இன்னும் சரிபண்ணவில்லையே என்று மரியா நினைத்தாள். அவள் இதை எப்போதும் மறந்துவிடுவாள். வைத்தியசாலைக்குப் போகும் வழியில் எப்போதும், 'மூக்குக் கண்ணாடி, மூக்குக் கண்ணாடி, மூக்குக் கண்ணாடியை மறந்துவிடக் கூடாது' என்று சொல்லிக் கொள்வாள். வைத்தியசாலையில் வேலைத் தொல்லைகள் அவளை நெருக்க ஆரம்பித்த உடனே மூக்குக் கண்ணாடியை மறந்துவிடுவாள்.

" நான் எதைப்பற்றி நினைத்துக்கொண் டிருக்கிறேன்? இப்போது கிரிஷா......" மரியா தன் நிலைமையை உணர்ந்து தானே திடுக்கிட்டாள்.

" இரு. இங்கே ஏதோ இருக்கிறது. ஆமாம். இல்லை. எனக்கு அது விளங்கவில்லை. ஏதோ எண் இருக்கிறது.

ஆனல் அது என்னவென்று தெரியவில்லை. எதற்காகத் தேதியைப்பற்றிக் கவலைப்படவேணும்? இது ஒரு தந்தி. அது போதாதா உனக்கு? தந்தி கொஞ்சம் தாமதித்து வந்தால்தான் என்ன? இந்தமாதிரிக் காரியங்கள் நடப்பது சகஜந்தான். சில வேளைகளில் தந்தியைவிடக் கடிதமே சீக்கிரம் கிடைத்துவிடும். அவள் ஒரு கடிதம் எழுதியிருந்தால் நமக்கு விவரம் தெரிந்திருக்கும். இந்தத் தந்தியினல் நமக்குத் தெரிந்ததெல்லாம் அவன் உயிரோடு இருக்கிருன் என்ற விஷயம்தான்.''

வாசல் மணி கணீரென்று சப்தித்தது. கதவைத் திறக்க தத்யான பெத்ரோவ்ன அவசரமாக எழுந்து சென்றுள்.

" என்ன நேர்ந்தது, மரியா?''

வாரன்ஸோவுக்கு மூச்சுத் திணறியது. வழி நெடுக அவன் ஓடிவந்திருக்கிருன் என்பது தெளிவாகத் தெரிந்தது. இப்போது நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

" ஒரு தந்தி வந்திருக்கிறது. கிரிகோரி உயிரோடு இருக்கிருன். காயம்பட்டு வைத்தியசாலையில் இருக்கிருன் '' என்று அவசரமாகச் சொன்னுள் தத்யான பெத்ரோவ்ன. அந்த அவசரத்தில் அந்த இளம் டாக்டரின் மேல் தனக்கு இருந்த எல்லா வெறுப்பையும் மறந்து விட்டாள்.

" கிரிகோரியா? உயிரோடா?"

" இதோ இருக்கிறது அந்தத் தந்தி.'' என்று வந்தவனுக்கு முகமன் கூருமலே ஒரு கடிதத்தை நீட்டினுள் மரியா.

" இது என்ன, மரியா?"

அவள் தவறு செய்துவிட்டாள். வாரன்ஸோவிடம் அவள் கொடுத்த கடிதம் மரணத்தைப் பற்றியது.

" இல்லை. எனக்குச் சித்த ஸ்வாதீனம் இல்லையென்று நினைக்கவேண்டாம். அது தவருன கடிதம். இதை வாசித்துப்பார்!''

வாரன்ஸோவ் அந்தத் தந்தியைக் கவனமாக வாசித்துப் பார்த்தான்.

"தயவுசெய்து தேதியைப் பார். அது தெரியவில்லை."

அந்தச் செய்தியை அவன் திரும்பத் திரும்ப வாசித்தான். அவன் கை நடுங்கியது.

"மரியா நான் சொல்வதை நீ நம்பவேணும். இதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்......"

அவன் என்ன சொல்லிக்கொண் டிருக்கிறான்? அவளுடைய உணர்ச்சிகளைப் பற்றி அவனுக்கு என்ன கவலை? அவளுக்கு இப்போது தேவையானது எல்லாம் தேதி தான்.

"தேதி! தேதியைப் பார்! எனக்கு அது விளங்கவில்லை."

"ஆத்திரப்படாதே, மரியா. தேதியைப் பார்த்து விடுவோம். ஏனென்றால் இந்தத் தேதி இருக்கிறதே......"

"என்ன தேதிக்கு?" என்று பேசவிடாமல் இடைமறித்தாள். அவள் இருதயம் படபடவென்று அடித்துக் கொண்டிருந்தது.

"இந்தத் தேதி மரண அறிவிப்பைவிட முந்தியது..."

மரியா கல்லாகச் சமைந்துபோனாள். வாரன்ஸோவின் சத்தம் வெகுதூரத்தில் இருந்து வருவதுபோலத் தோன்றியது. அப்படியானால், கிரிஷா......

"அதனால் ஒன்றும் நிச்சயம் பண்ணிவிட முடியாது. முதலில் வந்தது வெறும் வழக்கத்தை ஒட்டிய அறிவிப்பு. இது வைத்தியசாலையிலிருந்து உனக்கென்று அனுப்பப் பட்ட ஒரு செய்தி.

இதில் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்று வெளிப் படையாகத் தெரிகிறது. இந்தத் தேதிக்கு அர்த்தமே இல்லை, ஒரு அர்த்தமும் இல்லை.

"நானும் அதைத்தான் சொன்னேன். அவள் கேட்காமல் பைத்தியக்காரிபோல விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள்" என்று கோபமாகச் சொன்னாள் தத்யானா பெத்ரோவ்னா.

"விக்டர், இதைக் கேள். எனக்கு நிச்சயமாகத் தெரிய வேண்டும்; கட்டாயமாகத் தெரியவேண்டும். தெரிகிறதா?"

"சரி. சரி. அதற்கு ஏன் இவ்வளவு குழப்பம்? ரயிலில் ஏறி அங்கே போய்ச் சேர். அவ்வளவுதான். அவன் வைத்தியசாலையில் காயம்பட்டுக் கிடக்கிருன். எங்கும் ஓடிப் போய்விடமாட்டான்." தத்யாஞ பெட்ரோவ்ஞவுக்கு ஒரே கோபம்.

"இல்லை. அப்படித் திடீரென்று போஞல் ஒன்றும் நடக்காது. முதலில் வைத்தியசாலை சூப்பரிண்டெண்டுக்கு ஒரு தந்தி அடித்து, பதிலைப் பார்த்துக் கொள்வோம்."

"ஆமாம். அதஞல் உண்மையைத் தெரிந்துகொள்ளலாம்."

அவள் நிலை கொள்ளாமல் பதட்டமாய் அங்கும் இங்கும் அலைந்தாள்.

"என் கைப்பெட்டி எங்கே?"

"இப்போது கைப்பெட்டி எதற்காக? உடனே போய்விடப் போகிருயா? அட கஷ்டமே! இந்தக் காலத்து மனிதருக்கு எல்லாம் தலைகீழ்ப் பாடமாக இருக்கிறதே! அவர்களுக்கு துயரம் அடையவும் தெரியவில்லை, சந்தோஷம் அடையவும் தெரியவில்லை." தத்யாஞ பெத்ரோவ்ஞ தோளைக் குலுக்கிக் கொண்டாள். மெதுவாகச் சமையலறைக்கு நடந்து சென்ருள். சமையலறையில் பாத்திரங்களைக் கோபமாகத் தூக்கிவைத்து சுத்தம் செய்து கொண்டே தனக்குள்ளே முறுமுறுத்துக் கொண்டிருந்தாள்.

"எனக்குத் தெரியாது. எனக்கு ஒன்றுமே தெரியாது. நான் மாத்திரம் இதை நம்ப முடியுமாஞல்......"

"சாந்தமாக இரு, மரியா. நாம் தந்தியடிக்கலாம். இரண்டே நாளில் பதில் கிடைத்துவிடும். சூப்பரின்டெண்டெண்டுக்குத் தந்தி யனுப்புகிறேன். எனக்கு அவரை வெகு நன்ருகத் தெரியும்."

"ஒரு வேளை......"

"ஒருவேளை எல்லாம் இப்பொழுது வேண்டாம். உன்னை வேதனைக்கு ஆளாக்கிக் கொள்ளாதே. தற்போது

நமக்கு ஒன்றும் தெரியாது. என்றாலும் சோன்யா கோஸ்லோவ் தப்புச் செய்திருப்பாள் என்று நான் நினைக்கவில்லை. வேறு படைத் தொகுதியில் காயம் அடைந்தவர்களைத் தூக்கிச் செல்பவர்கள் அவனைக் கண்டு பின்னணியில் உள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றிருக்கலாம்.

"இதெல்லாம் நடக்கிற காரியந்தான். தெரியுமா?"

"விக்டர், அதற்குள்ளாக..."

அவன் சொன்னது அவளுக்குப் புரியவில்லை.

"அதற்குள்ளாக என்ன நடந்துவிடும்?"

"ஒன்றுமில்லை. அதைப்பற்றி கவலைப்படாதே."

அதை அவள் சொல்லியிருக்கக் கூடாது. அந்த வார்த்தைகள் அவள் வாயைவிட்டே வந்திருக்கக்கூடாது. ஆனால், ஸோன்யா தவறான செய்தி அனுப்பவில்லை என்ற எண்ணம் அவள் மனத்தைவிட்டு அகலவே இல்லை. கிரிஷா அந்த வைத்தியசாலையில் இருந்திருக்கிறான். ஆனால் இப்பொழுது அவன் இறந்துவிட்டான். தந்தி வந்து சேருவதற்குள் இறந்துபோயிருப்பான். ஏனென்றால் தந்தி வந்து சேரப் பல நாட்கள் சென்றிருக்கும். அறிவிப்பில் குறித்த தேதியில் அவன் இறக்கவில்லை. நேற்றோ, இன்றோதான் இறந்திருக்கிறான். ஒருவேளை இதே நேரத்தில் வைத்திய சாலையில் சவமாகக் கிடப்பான். அல்லது நாளைக்கு இறந்து விடுவான். அப்பொழுது உலகம் திரும்பவும் இருண்ட பாதாளமாக மாறிவிடும். எல்லையற்ற அந்தப் பாலைவனத்தில் அவள் ஒரு நோக்கமும் இல்லாமல் அலைந்து திரிய வேண்டி வரும்.

"இரண்டு நாள் பொறுமையாய் இருந்தால் எல்லாம் தெரிந்துவிடும்" என்று வாரன்ஸோவ் சொன்னான். மரியா ஆறுதல் அடைந்தாள். அவன் வார்த்தைகளில் சாந்தமும் உறுதியும் நிறைந்திருந்தது. அந்த வார்த்தைகள் அவளுக்கு நம்பிக்கையை அளித்தன.

"அப்புறம், நீ அவனிடம் போகலாம். அல்லது அவனை இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிடலாம். தந்தியை அனுப்பிவிட்டு, நான் அந்த வைத்தியசாலைக்கு டெலி

போனில் பேசிப் பார்க்கிறேன். அதுதான் சரி. இப்போதே போய்ப் பேசுகிறேன்."

"தயவுசெய்து......"

அவள் தன் கைகளைக் கூப்பி உதவி செய்யும்படி பரிந்து வேண்டிக்கொண்டாள். இது ஏன் அவளுக்கு முதலிலேயே தோன்றவில்லை! டெலிபோன்! அந்த வழியாக எல்லாம் அதி சீக்கிரத்தில் தெரிந்துவிடும். ஒருவேளை கிரிகோரியே......ஒருவேளை டெலிபோனின் மூலமாக அவன் குரலைக் கேட்கலாம். கிரிஷாவின் குரல்......

வாரன்ஸோவ் போய்விட்டான். மரியா நாடியிலே கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். எதிரில் இருந்த இரண்டு கடிதத் துண்டுகளில் அவள் கண்கள் பதிந்தன. ஒன்று மரணத்தின் தூதன்! மற்றொன்று வாழ்வின் தூதன்!

* * *

உலகமே சிவந்த மூடுபனியாக இருந்தது. ரத்தம் போல் சிவந்திருந்த அந்த மூடுபனியில் காப்டன் செர்ஞவ் மனம்போனபடி அலைந்தான். தனக்கு என்ன நேர்ந்தது என்று அவனுக்கே தெரியவில்லை. ஒரு காரியத்தை மட்டும் உறுதிசெய்துகொண்டான். தன்னை இன்னான் என்று ஒருவரும் தெரிந்துகொள்ளக்கூடாது. தாய் நாட்டின் பரந்த வெளிகளிலே, கோடிக் கணக்கான மற்ற மனிதர்களிலே கலந்து, கிரிகோரி செர்ஞவ் என்பவன் இல்லாமற் போனான் என்று யாவரும் கருதும்படி மறைந்து விட வேண்டும் என்பதே அவன் ஆசை.

வைத்தியப் படையைச் சார்ந்த ரயில் வண்டியின் சக்கரங்கள் விடாமல் சுழலும்பொழுது 'ஆமாம்-ஆமாம்-ஆமாம்-ஆமாம்' என்று அவைகளின் பாஷையிலே விடை கூறியதுபோல் தோன்றியது. அந்தச் சக்கரங்கள் அவன் விருப்பத்தை ஆமோதித்து அவனுக்கு உற்சாகத்தை அளித்தன. நல்ல வேளையாக அவனுடைய கடிதங்களும், ஆள் அடையாளம்காட்டும் சீட்டுகளும் காணமல் போய் விட்டன! உதவி செய்கிற கரங்கள் பிணநாற்றத்திலிருந்து அவனை விடுதலை செய்து சறுக்கியில் வைத்துக் கொண்டு போன நேரம்வரைக்கும்—இருபத்து நாலு மணி நேரமாக

அந்த மலைப் பள்ளத்தில் இருந்த நிலப்பரப்பிலே செத்த பிணங்களோடு கிடந்தான். அந்த நேரத்திலேதான் ஆள் அடையாளச் சீட்டுகளும், இதர தஸ்தாவேஜுகளும் காணமற் போயிருக்க வேண்டும். நல்லவேளை. அவனால் பேசமுடியாத நேரத்திலே அந்தச் சீட்டுக்களும் கடிதங்களும் அவன் செய்தி ஒன்றையும் தெரிவிக்கவில்லை.

வைத்தியசாலைப் படுக்கையறையின் வாசனையும், இன்பமான மயக்கத்தைத் தரக்கூடிய குளோரபாம் மருந்தின் மணமும் வீசின. டாக்டரின் மூக்குக் கண்ணாடி மின் வெட்டுப் போல மின்னியது. பின்பு மயக்கத்தின் படுகுழியில் ஆழ்ந்து விட்டான்.

திரும்பவும் சக்கரங்களின் சுழற்சி ஓசை கேட்டது. அவைகள் அவனுக்கு ஏதோ சொன்னது போலத் தோன்றியது. அது இன்னது என்று அவனுக்குத் தெரியவில்லை. அது, ஏதோ வரப்போகும் காரியத்தைப் பற்றிய உருவமற்ற முன் அறிவிப்பு போலத் தோன்றியது. திரும்பவும் கண்ணெதிரே உலகம் கரைந்துவிட்டது. கடைசியில் எல்லாம் அதனதன் இடத்திலே அமைந்தன. ஒரு வைத்தியசாலைப் படுக்கையறை. அதிலே ஒரு கட்டில். அவன் என்றுமே பார்த்திராத பனிமூடிய மலைச் சிகரங்கள் அந்த ஜன்னல் வழியாகத் தெரிந்தன. இப்பொழுது காப்டன் சேர்ஞவ் 'இனி நான் ஒருபோதும் போர்முனைக்குச் செல்ல முடியாது. எனக்கு ஒரு கையில்லை, ஒரு கால் நசுங்கி விட்டது. முகத்திலும் ஏதோ கோளாறு இருக்கிறது' என்று சொல்லிக் கொண்டான்.

"என் முகத்திலே என்ன காயம்?" என்று பக்கத்தில் மருந்து கொடுத்துக் கொண்டிருந்த நர்ஸை வெடுவெடுப்பாகக் கேட்டான்.

"ஒரு காயமும், நெருப்புப் பட்டு வெந்த புண்களும். அவை சீக்கிரம் ஆறிவிடும்" என்று அந்த நர்ஸ் மலர்ந்த முகத்தோடு கூறினாள். ஆனால், அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. காயத்தைக் கட்டிய கட்டுகள் ரொம்பச் சங்கடமாக இருந்தன. அந்தக் கட்டுகளின் வழியாக அவள் முகத் தோற்றத்தை வெகு கவனமாகப் பார்த்தான்.

"சாதாரண காயந்தான், நீ பேசாமல் படுத்திருந்தால் வெகு சீக்கிரம் ஆறிவிடும்."

முகத்தின் வலது பக்கத்தில் கொடிய குத்துவலி ஆரம்பித்தது. இழந்துபோன கை இருந்திருக்கவேண்டிய இடத்திலும் அதே குத்து வலி. கட்டிலில் விரிந்து கிடந்த வெள்ளைக் கம்பளியைப் பார்த்தான். அவன் கை இருக்க வேண்டிய இடத்தில் மடித்துச் சுருட்டிய கம்பளி நீண்டு கிடந்தது. அதன் கீழே ஒன்றும் இல்லை. ஆனாலும் நோவு அதிகமாகவே இருந்தது. அந்த வலி அவனை இரவெல்லாம் தூங்க விடவில்லை. நர்ஸ் என்ன சொல்ல முடியும்? அவன் உடலே அவனுக்குப் பொய் சொல்லும் பொழுது, நர்ஸ் சொல்வதை எப்படி நம்ப முடியும்? இல்லாத கையல்லவா இப்போது வேதனை கொடுத்துக் கொண்டு இருக்கிறது!

அதற்குமேல் அவன் நர்ஸையும் கேள்வி கேட்கவில்லை, டாக்டர்களையும் கேள்வி கேட்கவில்லை.

நர்ஸ் கதவண்டையில் சென்றவுடன், திருட்டுத்தனமாக ஒரு கண்ணாடியை எடுத்து தனது முகத்தைப் பார்த்துக் கொண்டாள். அவள் டாக்டரைக் காதலிக்கிறாள் என்பது அங்கிருந்த நோயாளிகள் எல்லோருக்கும் தெரியும். அவர் வரும் சமயமாகி விட்டது. எந்த நிமிஷத்தில் வருவாரோ தெரியாது. ஆனால், அது முக்கியமான விஷயமல்ல அந்த நர்ஸ் தன் வெள்ளை மேலங்கியின் பைக்குள் கண்ணாடியைத் திணித்துக் கொண்டாள். இதுதான் முக்கியமான விஷயம்.

"நர்ஸ், எனக்குத் தாகமாய் இருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கொடு. இல்லை. இந்தப் பக்கத்திலிருந்து வேண்டாம், அந்தப் பக்கத்திலிருந்து எடுத்துக் கொடு" என்று சொன்னான் ஒரு மனிதன்.

ஒரு வேளை இந்தத் தந்திரம் அவளுக்குத் தெரிந்துவிடுமோ? தானும் தண்ணீர் கேட்கலாமா? கேட்டாலும் அவள் கொண்டு வரமாட்டாள். அவன் மனத்தில் இருப்பதை அவள் தெரிந்து கொள்வாள்.

"என் கட்டு! அது விழுகிறது! இங்கே, இந்தப் பக்கத்திலே."

நர்ஸ் கட்டிலின் மேல் குனிந்தாள். அவனுடைய விரல்கள் அவசரமாகவும் ஜாக்கிரதையாகவும் அவள் சட்டைப் பைக்குள் நுழைந்தன. கிடைத்து விட்டது! வட்டமான, ஜில்லிட்ட, மழமழப்பான கண்ணாடி கிடைத்து விட்டது! கண்ணாடி பொய் சொல்லாது. அவனை ஏமாற்றாது.

"உன் கட்டு சரியாகத்தான் இருக்கிறது."

"அப்படியா? எனக்கு என்னவோ......"

நர்ஸ் அவன் கட்டிலை விட்டு அகன்று சென்றாள்.

இப்போது அவன் சரியான சமயத்தைத் தான் எதிர்பார்க்க வேணும். அதற்கு அன்றைக்கே சந்தர்ப்பம் கிடைத்தது. படுக்கை அறையில் நர்ஸும் இல்லை, டாக்டரும் இல்லை. பக்கத்துக் கட்டிலில் கிடந்த மனிதன் தூங்கிக் கொண்டிருந்தான். சாப்பிடும் நேரம், கட்டுக் கட்டும் நேரம் தவிர மற்ற நேரத்தில் அவனுக்கு எப்போதும் தூக்கம்தான்.

வட்டக் கண்ணாடி பயங்கரமான உண்மையைச் சுட்டிக் காட்டியது. அவன் கண் குழி விழுந்து, அடையாளம் கண்டு பிடிக்க முடியாதபடி உருவிழந்து இருந்தது. காப்டன் செர்ஜைவ் ஒரு நூதனப் பொருளைப் பார்ப்பது போலக் கவலையோடு பார்த்தான். காயம் ஆறிவிடும். தாடை எலும்பு முறிந்து விட்டது. தையல்களும், தழும்புகளும் எஞ்சி நிற்கும். எப்படியோ அவன் கண்ணாடியைப் பார்த்துவிட்டான். இடம் பெயர்ந்து உரு விழந்த கண்ணைப் பார்த்துவிட்டான். அந்தக் கண்ணின் தோற்றம் அவனுக்கு அறிமுகமானதன்று. அதில் நூதனமான குரூரம் நிறைந்திருந்தது.

கிரிகோரி திரும்பவும் ஜாக்கிரதையாகக் கட்டைக் கட்டிக் கொண்டான். அதுவரை தெளிவில்லாமலும் உணரமுடியாமலும் இருந்த விஷயம் இப்போது தெளிவாகத் தெரிந்துவிட்டது. பாதி உருவத்திலே இருந்த அவனுடைய தீர்மானத்தை, வைத்தியப் படையைச் சார்ந்த ரயில் வண்டிச் சக்கரங்கள் உறுதிப்படுத்திய பொழுது அவை உண்மையைத்தான் கூறின. அப்படித்தான் இருக்கவேண்டும். அப்படித்தான் இருக்க நேரிடும். அதைத் தவிர வேறு வழியில்லை.

புண்ணெல்லாம் ஆறிச் சுகமடைவதற்கு, வெகு நாட்கள் சென்றன. காப்டன் கிரிகோரி செர்ஞவ் பொறுமையாகக் காத்திருந்தான். ஒரே ஒரு கண் சரியாக இருந்தது. வைத்தியசாலைப் படுக்கை அறை, டாக்டர்கள், நர்ஸுகள், சுவர்களில் மாட்டி இருந்த படங்கள், இவைகளை அந்த ஒற்றைக் கண்ணால் தெளிவாகப் பார்த்தான்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தெரிந்தது ஒரு படம். காப்டன் செர்ஞவ் அதை ரொம்ப நேரம் பார்த்தான். அவன் சண்டை ஆரம்பித்த நாள் முதலாக முன்னணியிலே நின்றவன். அதனால் அந்தப் படத்தைப் பார்ப்பதற்கு அவனுக்கு உரிமை யுண்டு. தூக்கம் வராத சமயத்திலே, இழந்துபோன கை தாங்கமுடியாத வேதனை உண்டு பண்ணிய நேரத்திலும், குறைபட்ட கை துடித்த நேரத்திலும், அந்தப் படத்தில் இருந்த மனிதனோடு காப்டன் செர்ஞவ் பேசினான்.

அந்தப் படத்தில் தெரிந்த மனிதனுடைய கோடிக் கணக்கான படை வீரரில் செர்ஞவும் ஒருவன். தனக்குள்ளே நிதானமான திட நம்பிக்கை, உண்மையான ஒரு பாசத் தொடர்பு, என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் ஒரு பந்தம் இருப்பதை அவன் உணர்ந்தான். அந்த முகத்தைப் பார்த்து, வார்த்தையின் உதவி இல்லாமலே காரியங்களைச் சொல்வதில் அவனுக்கு ஒரு உற்சாகம் ஏற்பட்டது.

இதுவரைக்கும் தன் வாழ்க்கையை ஆக்கி அமைத்த எல்லாக் காரியங்களிலிருந்தும் தான் பிரிந்து போவதாக அவனுக்குத் தோன்றியது. கடந்து சென்ற நாட்கள்— போர்முனையில் கழித்த நாட்கள்கூட—அர்த்தமற்றுத் தோன்றின. இப்போது அவன் மேலே எங்கேயோ, அந்தப் படத்திலிருந்த மனிதனோடு நேருக்கு நேராக நின்று கொண்டிருந்தான். தன் ஆத்மாவின் தன்னந்தனிமையான மோனத்திலே அந்தப் படத்துக்குத் தன் உறுதியான பக்தியை காணிக்கையாகச் செலுத்தினான்.

படுத்தபடியே மணிக்கணக்காக அந்தப் படத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தான். வாழ்க்கைச் சக்கரம் சுழன்றுகொண்டு இருந்தது. வெளியே நடைபாதையில் காலடி ஓசை கேட்டது. பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த

மனிதன் குறட்டை விட்டான். படுக்கையறையின் ஒரு மூலையில் இருந்த மனிதன் வேதனையால் முனங்கினான். யாரோ சிரித்தார்கள். டிராம் வண்டி மூலை திரும்பும் பொழுது ஏற்படும் சத்தம் வெகு தூரத்தில் கேட்டது. ஆனால், இதெல்லாம் முக்கியமான விஷயங்களல்ல; பொய்யான காரியங்கள். அளவிட முடியாத தூரம், முடிவில்லாத உயரம், ஆழ்ந்த நிசப்தம், அந்தப் படத்திலிருப்பவனோடு பேசிய சம்பாஷணை—இவைதான் உண்மையில் நிகழ்ந்த காரியங்கள். அந்தச் சம்பாஷணை அவனுக்கு மட்டுந்தான் தெரியும். அது சம்பாஷணை கூட இல்லை—ஏனென்றால், அந்தத் தலைவன் மட்டும்தான் பேசினான்; அந்தச் சம்பாஷணையில் வார்த்தைகள் இல்லை. ஏனென்றால் அது எல்லா வார்த்தைகளையும் கடந்த பேசாத பேச்சு. எந்தப் பேச்சுக்கும் மேலான பேச்சு. ஆனால், அந்த மோன நிலையிலிருந்து, மொழிகள் இல்லாமலே வாசாலமாகப்பேசிய அந்த அமைதியிலே இருந்து அவனை, வைத்திய சாலை ஜனங்கள் பிடிவாதமாகவும், இரக்கமில்லாமலும் கீழே இழுத்துத் தள்ளினார்கள். கட்டுக் கட்டுதல்; மருந்து கொடுத்தல்; ஜ்வர நிலையைக் கணக்கிடுதல்; இவை எல்லாம் தொட்டுப் பார்க்கக்கூடிய உண்மைகளை அவனுக்கு நினைப்பூட்டின. 'வேலைக்கு உதவாத, போரிலிருந்து மீண்ட வீரன்' என்றது நடைபாதையின் காலடி ஓசை. 'வேலைக்கு உதவாத, போரிலிருந்து மீண்ட வீரன்' என்று குறட்டை விட்டான் பக்கத்துக் கட்டிலில் இருந்த மனிதன். 'வேலைக்கு உதவாத, போரிலிருந்து மீண்ட வீரன்' என்றது தெருவில் முழுங்கிச் சென்ற டிராம் வண்டி.

இத்தகைய சந்தர்ப்பங்களில் காப்டன் செர்னாவ், மற்றவர்களுடைய பார்வைக்கு, தான் எப்படித் தோன்றினான் என்பதை நினைத்துப் பார்த்தான். அறுந்து போய்க் குட்டையாய்த் தொங்கிய கை, வெள்ளைக் களிமண்ணால் மூடிக் கனமான கட்டுப்போட்டிருந்த அவலக்ஷணமான கால், எல்லாவற்றிற்கும் மேலாக உருத்தெரியாமல் மாறி, முகமூடி அணிந்திருந்த முகம் இவைகளை—நடுங்கவைக்கும் தெளிந்த தோற்றத்தில் நினைத்துப் பார்த்தான்.

இதுவரைக்கும் எல்லாம் சரியாகத்தான் நடந்தது. காப்டன் செர்னாவ் என்று ஒருவன் இல்லை. மலைப்

பள்ளத்தின் பக்கத்தில் உள்ள மூடுபனி நிறைந்த நிலப் பரப்பிலே அவனை விட்டுவிட்டார்கள். ஏதோ ஒரு பொதுக் கல்லறையில் ஈர மண்ணின் கீழே அவன் புதைந்து விட்டான். வெகு நாட்களுக்கு முன்பே அவனைப் பற்றிய விஷயங்கள் யாவும் மறைந்துவிட்டன. ஒரு வைத்திய சாலையில் இருந்து மற்றொரு வைத்தியசாலைக்கும், ஒரு வைத்தியப் படை—ரயில் வண்டியிலிருந்து மற்றொரு வைத்தியப் படை—ரயில் வண்டிக்குமாக அலைந்து கொண்டு இருந்த அலைச்சலிலே தன் போக்குவரத்தைப் பற்றிய சகல அறிகுறிகளையும் அழித்துவிட்டான்.

ஒரு நாள் "உன் உறவினர் எங்கே இருக்கிறார்கள்?" என்று ஒரு நர்ஸ் கேட்டாள்.

"எனக்கு உறவினர் கிடையாது" என்று தயங்காமல் பதிலளித்தான் செர்னுவ்.

ஆனால், வஞ்சனை செய்ததாக அவனுக்குத் தோன்றியது; துக்கம் அவன் நெஞ்சை அமுத்தியது. அந்தச் சிரிப்பு, உலகத்திலேயே ஈடு இணையில்லாத அந்தச் சிரிப்பு; பிரகாசமான சணல் நார் போன்ற தலைமுடி! அவளுக்கே தனி அழகான அந்தக் கழுத்து!—இவைகளை நாடியது அவன் மனம். அவள் மாத்திரம் வந்துவிட்டால்......அவள் மாத்திரம் அவன் கட்டிலின் மேலே குனிந்து நின்றால்... ...துரோக சிந்தனையே இல்லாத அந்தக் கண்களை அவன் பார்க்க முடிந்தால்......அவள் அதரங்கள், அவன் அடிக்கடி முத்தமிட்ட அந்த அதரங்கள், ஏதாவது மெதுவாகச் சொல்லும். உதவி செய்யும் அந்த மென்மையான கரங்கள் அன்பு கனிய அவன் நெற்றியைத் தடவும்.

அவன் தன் உள்ளத்தில் எழுந்த ஆசையைப் பார்த்து "நான் உனக்கு இசைய மாட்டேன்" என்றான். அவனுடைய ஆசை ஓசையில்லாமல் மெல்ல மெல்ல அடி பெயர்த்து அவனுடைய கட்டிலைச்சூழச் சுற்றித் திரிந்தன. அதன் காலடி ஓசை மரியாவின் காலடி ஓசை போலத் தோன்றியது. அவனுடைய உள்ளத்தில் எழுந்த ஆசை மரியாவின் குரல் எனத் தோன்றும் அதே குரலிலே மிகவும் கனிந்த மொழிகளை அவன் செவிகளில் ஓதிக்கொண்டு இருந்தன. ஞாபகங்கள் அவன் உள்ளத்தில் பொங்கி

எழுந்தன. இந்த வைத்தியசாலையின் அறையிலே வேலிக்குப் பின்பக்கத்தில் ராஸ்ப்பரிச் செடிகளின் இடையிலே நீலக் கைக்குட்டையைத் தலையில் கட்டிக் கொண்டு வந்த மரியாவை முதன் முதலில் சந்தித்த நேரத்திலிருந்து அவளோடு அநுபவித்த இன்ப நேரங்களை எல்லாம்—காதல் நாட்களை எல்லாம்—திரும்பத் திரும்பச் சிந்தித்தான். அந்தச் சிந்தனை—உலகத்திலே வாழ்ந்தான். இந்த ஞாபகங்கள் அடர்ந்து தழைத்து, மலர்கள் நிறைந்து, சுயேச்சையாக வீசுகின்ற இனிய சங்கீதக் காற்றாக அவன் மீது மோதின. காப்டன் இந்த ஞாபகங்களை எதிர்த்துப் போராடி அவைகளை மறக்க முயன்றான்.

எவ்வளவு சந்தோஷத்தோடும், நம்பிக்கையோடும் தங்கள் இளம் வாழ்க்கையை அவர்கள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்தார்கள்! அந்த ஜீவியத்தில் அவன் தன் மகிழ்ச்சி நிறைந்த சக்தியை, கட்டுக்கடங்காத தன் சந்தோஷத்தை, சிறந்த எதிர்கால வாழ்வைத் தன் காதலிக்கு அவனால் கொடுக்க முடிந்தது. அந்தக் கிரிகோரி செர்னுவ் என்ற என்ஜினீயர் இப்போது இல்லை. தளர்ச்சியடைந்த ஒரு போர் வீரன்தான் வைத்தியசாலைக் கட்டிலில் கிடந்தான்.

இப்பொழுது அவன் அவளுக்கு எதை அளிக்கமுடியும்? அவளுக்கு என்ன வெகுமதி கொண்டுவர முடியும்? அங்கஹீனமடைந்த தன் வாழ்க்கையோடு அவளை என்றென்றைக்கும் கட்டி வைப்பதைத் தவிர வேறெதை அவன் அவளுக்குக் கொடுக்க முடியும்? அவளுடைய துலக்கமான கண்களை இருளாக்கி, அவளுடைய புன்னகையை அறவே ஒழித்து நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்ட அவளுடைய அதரங்களிலிருந்து எப்பொழுதும் எழுந்து கொண்டிருக்கும் ரீங்காரப் பாட்டை அழுத்தி அடைத்து விடுவதா? இல்லை. அது ஒருபோதும் முடியாது. அவளிடம் ஒருபோதும் திரும்பிச் செல்லவே கூடாது. அவளைக் காதலித்து, தேசத்திற்காகத் தன் உயிரைக் கொடுத்த ஒருவனைப்பற்றி அவளுக்கு இருக்கும் ஞாபகங்களை எல்லாம் தூய்மையாகவும், பிரகாசமாகவும் இருக்கும்படி விட்டுவிட வேண்டியதுதான்.

அப்புறம்? அவன் தன் வாழ்க்கையைத் திரும்பவும் புது வழியிலே ஆரம்பிக்கலாம். ஆனால், ரோஜா இதழ்

போன்ற அவளுடைய அதரங்கள் மற்றொருவனைப் பார்த்து புன்னகை பூக்குமே; அவளுடைய கண்களை—ஒரு பொழுதும் உண்மைக்கு மாறாக நடந்து கொள்ளாத கண்களை—வேறு புருஷருடைய கண்கள் சந்திக்குமே! இதை எல்லாம் நினைத்தபோது, அவனுடைய உள்ளம் வேதனையால் துடித்தது. இருந்தபோதிலும், அப்படித்தான் செய்ய வேண்டும்; இனிமேல் அவனுடைய வாழ்க்கை அவளில்லாமலே செல்லவேண்டும்.

"என் இன்பமே! நான் உன்னை ஏமாற்றமாட்டேன். எனக்கு ஜோதியாக இருப்பவளே! உன் இளமையை நஞ்சாக்க மாட்டேன். உன் வாழ்வைப் பாழடிக்க மாட்டேன். ஒரு நொண்டியோடு உன் வாழ்வை என்றென்றும் கழிக்கும்படி உன்னைக் கட்டிவைக்க மாட்டேன்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான் காப்டன் செர்ஜுவ். அவனுடைய உதடுகள் ஜுரத்தால் உலர்ந்திருந்தன.

அந்த ஜுரம் அவனுக்குப் பெரும் பகைவனாக இருந்தது. அது அவன் மனத் திடத்தைக் குலைத்து அவனுக்குத் துன்பத்தை விளைவித்தது. வசீகரமான தோற்றங்கள் பல அவன் கண் முன்னே எழுந்தன. கையை நீட்டித் தொட்டுப் பார்த்தால் எல்லாம் முன்பு இருந்தபடியே மாறிவிடும் என்று அவனுக்குத் தோன்றியது. அப்படி இருக்க, எதற்காகத் துன்பப்படவேணும், எதற்காக உலகத்தைத் துறக்கவேணும்? இதயத்துக்கு இதயம் பேசிய பேச்சு, செய்து கொடுத்த சத்திய வாக்கு என்றைக்காவது சோபையிழந்து மங்கி மறைந்து விடுமா? ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல், ஒரு பாட்டைப்போல சந்தோஷமாகக் கழித்த நாட்கள் ஒரே அடியாகவா அஸ்தமித்து விடும்?

என்ன மாறுதல் அடைந்து விட்டது இப்பொழுது? இன்னும் அவன்—அவளோடு அன்புடன் காதல் வார்த்தையாடிய அதே மனிதன் உயிரோடுதான் இருக்கிறான். அப்படியானால், வேறு என்ன மாறுதல் நேர்ந்து விட்டது?

இத்தகைய துரோக சிந்தனைகளையெல்லாம் அவனுடைய ஆசைகள் எழுப்பி விட்டன. முன்னே இருந்த அதே கிரிகோரியும் அதே மரியாவும்தானே அவர்கள்?

காப்டன் செர்னுவ் கனவு கண்டுகொண்டு இருந்தான். அந்தக் கனவில் தோன்றியது மரியாவின் உலகம். மரியாவின் சிரிப்பும், குரலும், அவளுடைய பிரகாசமான கூந்தலின் மணமும் நிறைந்த உலகத்துக்குள் நழுவிச் சென்றுகொண்டிருந்தான் செர்னுவ். தன் நினைவுக்கு வந்த பொழுதெல்லாம் 'இதற்கு ஜுரம் தான் காரணம்' என்று ஒரு சாக்குப் போக்கைச் சொல்லித் தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டான்.

அவர்கள் ஒரு தந்தி அடிப்பார்கள். உடனே மரியா வந்து விடுவாள். அவனை அன்னியரிடம் விடாமல் தானே கவனிப்பாள். அவள் இதோ இருக்கிருள். எதிரே சிரித்துக்கொண்டு இருக்கிருள். அவள் அவனுக்கு நோவு தோன்ருமல் மெதுவாகக் காயங்களைக் கட்டி விடுவாள். அவன் கேட்காமலே குறிப்பறிந்து தண்ணீர் கொடுப்பாள். ஒரே ஒரு தந்தி அடித்தால் இவ்வளவும் வெகு சுலபமாக நடந்து விடும்.

அவன் தந்தியில் குறிக்க வேண்டிய விஷயத்தையும், மேல் விலாசத்தையும் நர்ஸுக்குச் சொல்லுவான். 'நான் காயமடைந்து வைத்தியசாலையில் இருக்கிறேன். உடனே வரவேண்டும்' இதற்குமேல் ஒன்றும் தேவையில்லை. அவள் உடனே வருவாள். அன்றைக்கே போர்க்களத்தில் அவனை வேதனைக்குள்ளாக்கிய பயங்கரத் தோற்றங்களை எல்லாம் தன் ஒளிவீசும் புன்சிரிப்பினுல் துரத்தி விடுவாள். அவன் வாழ்க்கையின் தன்மையே மாறிவிடும்.

"இந்தக் கனவுகளுக்கெல்லாம் காரணம் என் ஜுரக் கோளாறு தான்!" என்று தனக்குள் தானே அடிக்கடி நியாயம் சொல்லிக் கொள்வான் செர்னுவ். ஆனுல், மாலையில் ஜுரம் ஏறின உடனே அதே கனவுலகில் மன மகிழ்ச்சியோடு மூழ்கிவிடுவான். தன் மனுே திடத்தாலும் உறுதியாலும் தானே எழுப்பிய உயர்ந்த சுவர்களையும் இருப்புக் கிராதிகளையும் இரவில் வரும் திருடனைப்

போல் தகர்த்து எறிவான்; பிறகு அவனுடைய காதல்-நாயகி இருக்கும் நந்தவனத்திற்கு நழுவிச் சென்று விடுவான்.

ஜுரம் விட்டபோது,தான் கண்ட கனவுகளைப் பற்றிய எண்ணமும் கூடவே வரும். தோல்வி யறியாத அவனுடைய மன உறுதியை மீறி வந்த கனவுகளைப்பற்றி வருத்தப்படுவான். ஆனல், மாலை நேரம் வந்தவுடனே அந்தக் கனவுகளும் வந்துவிடும். அவைகளைத் தடுக்கவே முடியாது.

இப்படியே நாட்கள் ஓடிச் சென்றன.

ஒரு நாள் காலையில் காயங்களைக் கட்டும் அறைக்கு ஒரு புதிய நர்ஸ் வந்தாள். அவள் இளமை வாய்ந்தவள்; குழந்தை என்றே சொல்லும்படி இருந்தாள். பார்த்த மாத்திரத்தில் அவள் புதிதாக வேலைக்கு வந்தவள் என்று தெரிந்தது.

"அவன் கட்டுகளைப் பிரி" என்ருன் டாக்டர். தேர்ந்த அவளுடைய கைகள் கிரிகோரியின் தலையில் இருந்த கட்டுகளைப் பரபர என்று அவிழ்த்தன.

அவன் கீழே படுத்தபடி அவளைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவளுடைய வட்டமுகம் மனோரம்மியமாக இருந்தது. மிகுந்த கவனத்தோடும், கவலையோடும் அவள் தன் வேலையைச் செய்தாள். அவளுக்கென்று தினசரி வேலைகளை இன்னும் குறிக்கவில்லை. அதற்குப் பதிலாக அவள் முகத்தில் ஆழ்ந்த கவனம் தெளிவாகத் தோன்றியது.

கட்டைப் அவிழ்க்கும் வேலை முடிந்தது. அவள் முகத்தில் ஒரு பயங்கரம்; ஒரு வெறுப்புத் தட்டியது. அது ஒரு நிமிஷந்தான் முகத்தில் நின்றது. உடனே வெட்கத்தினல் அவள் கன்னம் சிவந்தது. அவள் கண்களில் கண்ணீர் நிறைந்தது. இத்தனையும் ஒரு விநாடியில் தோன்றி மறைந்து விட்டது. ஆனாலும், அதைக் கிரிகோரி பார்த்து விட்டான்.

வெகு நேரத்திற்குப் பிறகு கட்டிலில் படுத்துக் கொண்டு வெறுப்போடு சிரித்தான். அந்தச் சிரிப்பில்

கசப்பு கலந்திருந்தது; பயங்கரம் தோன்றியது. இந்தக் கோரமான முகத்தைத்தான் அவன் மரியாவுக்கு வெகுமதியாக அளிக்க விரும்பினான்! இந்த முகத்தைத்தான் அவள் பார்க்க வேண்டும். பார்த்துப் பார்த்துத்தான் முன் நாட்களில் "உன் கண்களைக் காதலிக்கிறேன். மற்ற எல்லாவற்றையும் விட உன் கண்களைத்தான் காதலிக்கிறேன்" என்று சொன்ன அந்த வார்த்தைகளை நினைத்துக் கொள்ள வேண்டும்.

தன் மனத் திடத்தால் தான் எழுப்பிக்கொண்ட உயர்ந்த சுவர்களையும், இருப்புக் கிராதிகளையும் அந்தக் கொதிக்கும் ஜுரத்தில்கூட செர்ஞவ் கடந்து விடவில்லை. ரோஜா மலர் நிறைந்த அந்த நந்தவனம் மலர்ந்திருக்கலாம். ஆனால், கதவின் இடுக்கு வழியாகக்கூட அவன் அதை எட்டிப்பார்க்க விரும்பவில்லை.

* * *

அப்புறம் அவனை வேறு ஒரு வைத்தியசாலைக்கு மாற்றிவிட்டார்கள். அவன் வேலை செய்த படைத் தொகுதியிலிருந்து—,போர் முனையிலிருந்து,—மரியாவிடமிருந்து—அவனைப் பிரித்த பிரயாணத்தின் அடுத்த கட்டம் ஆரம்பித்தது. ஜனத் தொகையின் மத்தியிலே, தன் தாய்நாட்டின் நட்டநடுவிலே தான் மறையும் விஷயத்தில் இன்னும் ஒரு அடி எடுத்து வைத்தாயிற்று.

ஒரு நாள் காலையில் காப்டன் செர்ஞவ், வைத்தியசாலையின் நடைபாதையில் தனக்குப் பழக்கமான ஒரு குரலைக் கேட்டான். அதைக் கேட்டவுடன் அவன் திடுக்கிட்டான். கரகரத்த அந்தக் குரல் யாருடையது? ஆமாம். நிச்சயமாக அவன் அந்தக் குரலை இதற்கு முன்பு கேட்டிருக்கிறான்.

"அது யார்?"

பக்கத்துக் கட்டிலில் உட்கார்ந்திருந்த மனிதனுக்கு அவன் என்ன கேட்கிறான் என்று விளங்கவில்லை.

"அந்தக் குரல்;—நடை பாதையில் கேட்கும் அந்தக் குரல்—யாருடையது?"

"ஓ, அதுவா? அது நம் நர்ஸுடைய குரல். அவள் பெயர் சோன்யா கோஸ்லோவ்."

அவனுக்குத் திடீரென்று எழுந்து ஓடவேண்டு மென்று தோன்றியது. கட்டிலில் இருந்து எழுந்து, வைத்தியசாலையை விட்டு நழுவி, தன்னை ஒருவரும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத இடத்திற்குத் தப்பி ஓடி விட வேண்டுமென்று விரும்பினான். இதற்காக எவ்வளவு தூரம் போக முடியுமோ, அவ்வளவும் போய்விட்டாலும் நல்லதுதான். நாள் கணக்காக மனிதரின் முகத்தையே காணமுடியாத சைபீரியப் பைன்மரக் காடுகளில் சலசலக்கும் பெரிய ராக்ஷஸ உருவமான மரங்களின் நிழல் படிந்த இடங்களுக்கு ஓடிவிட வேண்டும் என்று நினைத்தான். மரியாவை விட்டு ஓடிவிட வேண்டும். அவளிடமிருந்து ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் போய் விட வேண்டும். இல்லாவிட்டால், தனக்கு மரியாவின் மீது உள்ள காதல் தன்னைக் காட்டிக்கொடுத்து விடும்; தன் மன உறுதியைத் தொலைத்துவிடும். இத்தகைய சம்பவங்களிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேணும்—என்றெல்லாம் விரும்பினான்.

இப்படி எல்லாம் விரும்பினாலும், அவனால் எழுந்து ஓட முடியவில்லை. அவன் ஒரு நொண்டி; அவனுக்குக் கையில்லை; கால் முறிந்துவிட்டது. அவனுக்கு அடிக்கடி உதவி வேணும். நடப்பதற்குத் தாங்கலாக ஒருவனின் தோள் வேணும். வேறு ஒரு கரத்தின் உதவி வேணும். திடீரென்று ஒரு சிந்தனை எழுந்தது: இப்படி உருவிழந்த அவனை சோன்யா கோஸ்லோவ் எப்படி அடையாளம் தெரிந்து கொள்வாள்?

அவன் இப்பொழுது சோன்யாவுக்குத் தெரிந்திருந்த என்ஜினீயர் கிரிகோரி செர்னவ் இல்லை. இதை அவன் இன்றும் என்றும், ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சிந்தனைக்கு அவன் பழக்கமாக வேண்டும். அவன் இப்போது நாசத்தின் வடிவமாகவே இருந்தான். அவன் உதவியற்று வைத்தியசாலையில் ஒரு கட்டிலில் கிடந்தான். அடர்ந்த கட்டுகள் அவன் முகத்தை மறைத்திருந்தன. இல்லை. அவனை ஒருவருமே அடையாளம் கண்டுபிடிக்க முடியாது.

ஆனாலும், கதவு திறந்தபொழுது அவன் இருதயம் படபட என்று அடித்துக்கொண்டது. அது அவள்தான்;

சோன்யா கோஸ்லோவ்தான்; மரியாவிடமிருந்து தூதாக வந்தவள்போல் தோன்றினாள். அவள் அணிந்திருந்த வைத்தியசாலை மேலங்கியின் மடிப்புகளில் மரியாவின் மணம் வீசியது. அவளுடைய கண்களில் மரியாவின் தோற்றம் தெரிந்தது. அவள் மரியாவின் சிநேகிதை. அவனைவிட அதிக நாட்களாக மரியாவை அறிந்தவள். இப்போது மரியா எங்கே இருக்கிறாள்? என்ன செய்துகொண்டு இருக்கிறாள்? இதெல்லாம் நிச்சயமாக அவளுக்குத் தெரிந்திருக்கும். மரியா சௌக்கியமாக இருக்கிறாளா என்று மாத்திரம் அவளைக் கேட்க முடிந்தால்......மரியாவிடமிருந்து அவனுக்குக் கடிதம் வந்து எத்தனையோ மாதங்கள் சென்றுவிட்டன. கிரிகோரிக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. ஒருவேளை மரியாவுக்கு ஏதாவது நடந்திருந்தால்......அவள் வியாதியாகப் படுத்திருந்தால்... ஏன் இந்த எண்ணம் அவனுக்கு முதலிலேயே தோன்றவில்லை? அது அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. சுகத்தோடும் பலத்தோடும் சோபித்திருந்த மரியாவையே அவன் பார்த்திருந்தான்; களைப்படையாத மலர்ந்த முகமுடையவளைத்தான் பார்த்திருந்தான். ஆனால், இப்போது அந்த நிலைமை மாறியிருக்கலாம். இப்போது போர் நடந்துகொண்டு இருந்த காலம்! எல்லாருக்கும் வாழ்க்கை கடினமாக இருந்தது.

இதோ, சோன்யா வந்து விட்டாள். கட்டில்களுக்கு இடையிலே நடந்துகொண்டு இருக்கிறாள். அவன் வாயைத் திறந்து, மெதுவாகச் 'சோன்யா' என்று சொன்னால் போதும். உடனே அவன் பக்கத்தில் வந்து விடுவாள். அப்புறம் அவள் மூலமாகச் சகல காரியங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

அவன் உதட்டைக் கடித்துக்கொண்டு சோன்யாவை வெகு கவனமாகப் பார்த்தான். பிறகு, அப்படி முறைத்துப் பார்ப்பது தவறு என்று நினைத்தான். அப்படி விடாமல் யாரையாவது முறைத்துப் பார்த்தால், அது அவர்களுக்குத் தெரிந்துவிடும். தன்னையே எப்போதும் முறைத்துப் பார்த்துக்கொண் டிருக்கும் நோயாளியை அவள் கவனிக்கவேண்டி வந்துவிடும். அவள் அதைப்பற்றி யோசிக்க ஆரம்பிப்பாள். ஊடுருவிச் செல்லும்

பெண்மை அழகு வாய்ந்த அந்தக் கண்கள் அறிந்து கொள்ளக்கூடிய கிரிகோரி செர்னுவின் அடையாளம் ஏதாவது இன்னும் அவனிடம் மிஞ்சியிருந்தால் என்ன செய்வது?

அவளை விட்டுத் தன் கண்ணைத் திருப்பிக் கொள்வது அவனுக்குச் சிரமமாக இருந்தது. ஆனாலும், கண்ணைத் திருப்பிக்கொண்டு, கடைக்கண்ணால் அவளைப் பார்த்தான். அவள் நெருங்கி வந்து கொண்டிருந்தாள். அவனுக்கு ஆசையை அடக்க முடியவில்லை. அவன் பார்வை அவளைத் தொடர்ந்து சென்றது. மரியாவிடமிருந்து வந்த ஒரு வாழ்த்துச் செய்தி அவள், மரியாவின் அதரங்களில்மலர்ந்த புன்னகை, மரியாவின் கைபடுதல்—இவைகளைத் தன்னோடு கொண்டு வந்திருந்தாள் சோன்யா. தொலை தூரத்தி லிருந்து மரியா அனுப்பிய செய்திதான் சோன்யா. திடீ ரென்று அவனுக்கு மூடத்தனமான ஒரு எண்ணம் தோன்றியது—ஒருவேளை உண்மையாகவே அவளை மரி யா அனுப்பியிருந்தால்...? வைத்தியசாலை ரிக்கார்டுகளி லிருந்து எப்படியோ அவன் இருக்குமிடத்தைத் தேடிப் பிடித்துச் சோன்யாவை முதலில் அனுப்பி இருக்கிறாளோ? தொடர்ந்து அவளும் வருவாளோ?

இதென்ன அசட்டுத்தனம்! சோன்யா இங்கே வேலை செய்து கொண்டிருக்கிறாள். அவ்வளவுதான். இந்த வைத் தியசாலையில் அவள் நர்ஸாக வேலை செய்கிறாள். இதற்கு மேல் ஒன்றும் இல்லை.

அந்த நர்ஸ் அவனுடைய கட்டிலின் அருகே வந்தாள். அவனுக்குக் கொடுக்கவேண்டிய மருந்தைப் பக்கத்தில் இருந்த சிறிய மேசையின்மேல் வைத்தாள்.

"பிரயாணத்துக்கு அப்புறம் உடம்பு எப்படி இருக் கிறது?" என்று கேட்டாள் அவள்.

குரல்! அவள் குரல் மாறவில்லையே! அவன் எல்லா வற்றையும் இழந்துவிட்டான். அவனுக்குள்ளே நிகழ்ந்த நீடித்த போராட்டம், வேதனையால் அவன் துடிதுடித்த இரவுகள், நம்பிக்கை இல்லாமல் கனவுகளை எதிர்த்து நின்ற எதிர்ப்பு—எல்லாம் வீணாகிவிட்டன.

"நான் நன்றாகத்தான் இருக்கிறேன்" என்று கஷ் டத்தோடு பதிலளித்தான். பதில் சொன்ன போது

தன் குரலை வேண்டுமென்றே மறைக்க அவனுக்குப் போதுமான சக்தியில்லை. ஆனாலும் அவனுடைய குரல் அவனுக்கே புதிதாகத் தோன்றியது. நர்ஸ் அவனைக் கடந்து சென்றாள். அவன் குறை தீர்ந்தவன் போல பெரு மூச்சு விட்டான். அதே சமயத்தில், தான் விவரிக்கமுடி யாத ஏதோ ஒன்றை இழந்ததுபோல அவனுக்குத் தோன் றியது. தான் விரும்பிய ஏதோ ஒரு பொருள் மறைந்தது போன்ற உணர்ச்சி அவனுக்குத் துக்கத்தை விளைத்தது.

சோன்யா மருந்து கொடுத்துக்கொண்டே படுக்கை யறையில் நடந்து சென்றாள். இன்னும் மூன்று கட்டில் தான் பாக்கி—இரண்டு கட்டில்—ஒரே கட்டில். அவள் படுக்கை அறையை விட்டு வெளியே சென்று விட்டாள். தன் காலடி ஓசையால் யாராவது எழுந்து விடுவார்களோ என்று மெதுவாக நடந்தாள்.

அன்று முதல் அவன் எப்போதும் சோன்யாவுக்காகக் காத்திருந்தான். அவள்தான் அவனுக்கும் மரியாவுக்கும் இடையிலே ஒரு சங்கிலித் தொடர்பாக இருந்தாள்.

மரியாவைப் பற்றி அவனுக்கிருந்த நினைவுகளை உருக் கொண்டு வந்தவள் போல் அவள் விளங்கினாள். அவள் கொஞ்ச நாளைக்கு முன் மரியாவைப் பார்த்திருக்கலாம். மரியாவின் கடிதத்தைத் தன் மேலங்கியின் பைக்குள்ளே வைத்திருக்கலாம். சோன்யா கோஸ்லோவின் வேலை முறை வரும் நாட்களை எண்ணத் தொடங்கினான் கிரி கோரி.

சோன்யா வேலைக்கு வந்த நாட்கள் விசேஷமான தன்மை உடையவை. அந்த நாட்களுக்கு அவனுடைய மன நிம்மதியைக் குலைத்து மயங்க வைக்கும் வசீகர சக்தி இருந்தது. ஒவ்வொரு முறையும் அவள் அவன் கட்டிலை அணுகிய போது, அவன் இருதயம் தளர்ந்து ஒடுங்கி யது.

அவளுக்கு மரியாவின் சாயல் கொஞ்சங்கூட இல்லை. மெலிந்த உடல்; சாதாரணமான அழகும் தவிட்டு நிற மான கூந்தலும் உடையவள். அவள் உறுப்புகளில் எதையாவது அழகென்று சொல்லவேண்டுமானால், அன்பு கனிந்த அந்தத் தவிட்டு நிறக் கண்களைத்தான்

சொல்லவேண்டும். இந்தக் கண்கள்தான் மரியாவைக் கண்டவை. வெளித் தோற்றத்தில் எவ்வளவோ வேற்றுமை இருந்தாலும், அவளுக்கும் மரியாவுக்கும் இடையிலே பொதுவாக ஏதோ ஒரு ஒற்றுமை இருந்தது. நோயாளிகளோடும், காயமடைந்தவர்களோடும் உறவாடும்பொழுது, மரியாவிடம் தான் கண்ட அதே ஓசையற்ற நடையும், ஜாக்கிரதையான அன்பு கனிந்த செயல்களும்தான் அந்த ஒற்றுமையாக இருக்கலாம்.

சோன்யா எதையும் கவனிக்கவில்லை. எதையும் சந்தேகிக்கவில்லை. கொஞ்ச நாளைக்குப் பிறகு கிரிகோரிக்கு இதைப் பற்றித் திடமான உறுதி ஏற்பட்டுவிட்டது. அவள் அவனைத் தெரிந்து கொள்ளவில்லை; தெரிந்து கொள்ளவும் முடியாது. முன்பு இருந்த மனிதன் அல்ல அவன். இப்போது அவன் முற்றிலும் மாறி இருந்தான். மரியா கூட......

எவ்வளவு வேடிக்கையான பொருத்தமற்ற எண்ணம்! மரியாகூட அவனைத் தெரிந்துகொள்ள மாட்டாளா? சோன்யாவோடு அவன் நெருங்கிப் பழகினதில்லை. உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரைக்கும் கட்டுப் போட்டுக் கொண்டிருந்த இந்த மனிதன்தான், தனக்குத் தெரிந்த உல்லாசமான வாலிப எஞ்ஜினீயர் செர்ஜுவ் என்று எப்படித் தெரிந்து கொள்வாள் அவள்? அவன் ஒரு குளிர்ந்த ஈரமான மழை நாளில் போர்க்களத்தில் இறந்துவிட்டான் என்றல்லவா அவள் நினைத்துக் கொண்டிருப்பாள்?

ஆனால், அன்றைக்கு மருந்து கொடுக்கும் சமயத்தில் திடீரென்று "நீ சண்டைக்கு முன்பு எஞ்ஜினீயராக இருந்தாயா?" என்று நர்ஸ் சோன்யா கேட்டாள்.

இதைக் கேட்டவுடன் அவன் உள்ளம் மரத்து விட்டது. உடல் நடுங்கியது. அதை அவன் காட்டிக்கொள்ளக் கூடாது. தன் மனக் குழப்பத்தை அவள் தெரிந்து கொள்ளக் கூடாது. அவன் கூரையைப் பார்த்த வண்ணம் கவலையற்ற குரலிலே பதில் சொன்னான்.

"எஞ்ஜினீயரா? இல்லை. நான் பட்டாளத்தில் இருந்தேன். எதற்காகக் கேட்கிறாய்?"

அவள் அவனை வற்புறுத்தவில்லை. ஆனால், எதற்காக அப்படிக் கேட்டாள்? தற்செயலாகக் கேட்டாளா? அல்லது ஊகித்துத்தான் கேட்டாளா? அவள் தன் கட்டிலை விட்டு அகன்று போகும் வரைக்கும் அவன் அவளைப் பார்க்கவே இல்லை. அவள் படுக்கையறைக்குள் வந்த போது, அவளைக் கவனியாதது போல் இருந்தான். ஆனால் சந்தேகமும், கேள்வியும் நிறைந்த அவன் கண் அவளுடைய ஒவ்வொரு செயலையும் திருட்டுத்தனமாகக் கவனித்தது.

காயமடைந்த மனிதர்கள் கடிதமெழுதிக் கொண்டு இருந்தார்கள். சோன்யா, செர்ஜவின் படுக்கையின் அருகில் வந்தாள்.

"நீயும் கடிதம் எழுத விரும்புகிறாயா?"

அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"கடிதமா? இல்லை. நீ கேட்டதற்காக வந்தனம். நான் யாருக்கு எழுதுவது?"

"ஒருவேளை யாராவது உன் கடிதத்துக்காகக் காத்திருக்கலாம்" என்று நிதானமாக, அமைதியான குரலிலே கூறினாள்.

என்ன இது? அவனைப் பரிசோதிக்கிறாளா? அவனைப் பிடிக்கப் பொறி வைக்கிறாளா? அல்லது அதிகாரமாகக் கேள்வி கேட்கிறாளா?

"என் கடிதத்தை யாரும் எதிர்பார்க்கவில்லை." வெடுக்கென்று பதில் வந்தது.

"அது உனக்குத் தெரியாது. ஒருநாளும் தெரியாது" என்றாள் சோன்யா. அந்த விடையில் அர்த்தம் நிறைந்திருந்தது.

"என்னைத் தயவுசெய்து தொந்தரவு பண்ணவேண்டாம். எனக்குக் களைப்பாய் இருக்கிறது" என்று மரியாதை இல்லாமல் உறுமினான்.

அவள் சிரித்துக்கொண்டே போய்விட்டாள்.

அடுத்த இரண்டு நாட்களில் எல்லாம் வழக்கம் போல் நடந்தது. தூரத்தில் அவள் இருக்கும் போது

அவளை உன்னிப்பாகக் கவனித்தான். கிட்டவரும் போது தூங்குவதுபோல் பாசாங்கு செய்தான். முன்னெச்சரிப் போடு அடுத்தபடியாக என்ன நடக்கப்போகிறது என்று எதிர்பார்த்திருந்தான்.

அவள் மருந்தைக் கரண்டியால் எடுத்து அவனுக்குக் கொடுத்தாள். அவன் அதைத் தன் கையில் வாங்கிச் சாப்பிட விரும்பினான். ஆனால், அவன் கை நடுங்கியது; மருந்தெல்லாம் கம்பளியில் சிந்திவிட்டது. அவள் மருந்தை அவன் வாயில் ஊற்றினாள். பிறகு, தனக்கு வழக்கமான குரலில் "அதை விழுங்கி விடு ஆண்டிரே கிரிகோரிவிச்" என்றாள். அவனுக்கு என்னமோ அந்தக் குரலில் ஒரு ஏளனம் தென்பட்டது போல் தோன்றியது.

ஆண்டிரே கிரிகோரிவிச்! அதுதான் அவனுடைய புதுப் பெயர். அதை சோன்யா உச்சரிக்கும் பொழுது, ஏன் குரலை அழுத்தி உச்சரித்தாள்?

அந்த மருந்து மனதுக்குப் பிடிக்காமல் கசப்பாக இருந்தது. கிரிகோரி அதை 'மடக்' கென்று ஒரே விழுங்காக விழுங்கி விட்டான்.

சோன்யா அவன் அருகில் நின்று கூர்ந்து பார்த்து ஆராய்ந்தாள். உடனே கிரிகோரி கண்வரைக்கும் கம்பளியை இழுத்துப் போர்த்துக் கொண்டான். சோன்யா அமைதியாகச் சென்று விட்டாள். கம்பளியின் மேலிருந்த ஒற்றைக் கண் ஒரு கேள்விக் குறியோடு அவளைத் தொடர்ந்து சென்றது.

இல்லை. இதெல்லாம் வெறும் கற்பனைதான். தன்னை யாராவது கண்டுபிடித்து விடுவார்களோ என்ற பயத்தால் ஏற்பட்ட கற்பனைதான். எப்படி அவள் அவனைத் தெரிந்துகொள்ள முடியும்? அவள் அவனுடைய குரலை முதல் நாள் கவனித்திருக்கலாம். அதற்குப் பிறகு அவள் எதையுமே கவனிக்கவில்லை.

"என்னை அடையாளம் கண்டு பிடித்து விடுவதைப் பற்றி எனக்குத் திகில் இருந்தாலும், அதைத்தானே என் மனம் விரும்புகிறது! நான் முன்னால் இருந்த அதே மனிதன்தானா என்று அறிய என் மனம் ஆவலாகத்

துடித்து நிற்கிறதே'' என்று காயமடைந்த அந்த மனிதன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

மாலை நேரம். இன்னும் விளக்கேற்றவில்லை. மூலை முடுக்குகளிலிருந்து இருள் ஊர்ந்து வந்தது. இன்றைய வேலை-முறை யாருடையது? சோன்யாவுடையதுதான். எந்த நிமிஷத்திலும் அவள் வந்துவிடலாம்.

இதோ அவள் வந்துவிட்டாள். கட்டில்களுக்கு இடையிலே நடந்து வந்தாள். அவள் நடை மரியாவின் நடையைப் போலவே இருந்தது. மெதுவாக, அன்பு கனிய நடக்கும் தனி நடை.

வைத்தியசாலையில் மரியா வேலை செய்து கொண்டிருந்த அந்தக் காலத்தில் அவன் அங்கே, முதன் முதலில் சந்தித்த போது மரியா இப்படித்தான் நடந்தாள்.

சோன்யா அவன் அருகில் வந்தாள். பக்கத்தில் நின்று கொண்டு தர்மாமீட்டரை அவனிடம் கொடுத்தாள்.

பிறகு மெல்லிய குரலிலே "கிரிஷா, இதை மரியாவுக்குத் தெரிவிக்க வேணும்'' என்றாள்.

இதைக் கேட்டதும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. மூச்சு முட்டியது. அவன் இப்போது ஏதாவது செய்தாகவேணும். இல்லாவிட்டால் எல்லாம் நாசமாய் விடும்.

"அது என்ன, நர்ஸ்? நீ என்னமோ சொன்னாயே?''

"கிரிகோரி, நீ நான் சொன்னதை நன்றாகக் கேட்டுக் கொண்டிருந்தாய். கேட்காத மாதிரி பாசாங்கு பண்ணாதே.''

"என் பெயர் கிரிகோரி இல்லை. இது உனக்கு நன்றாய்த் தெரியும்.''

"எனக்குத் தெரியும். உன் பெயர் ஆண்டிரே கிரிகோரிவிச்.'' என்று கேலி பண்ணினாள். அவன் அருகில் வந்து குனிந்து பார்த்தாள்.

"கிரிகோரி நீ இப்படிச் செய்யாதே; இது தவறு."

"என்னைத் தனியாக விட்டுவிடு. உனக்கென்ன பைத்தியமா?"

சோன்யா தன் தோளைக் குலுக்கினாள். அறையை விட்டு அகன்றாள். தூக்கமில்லாத அந்த நீண்ட இரவுகளில், அவன் மனத்தில் தோன்றிய எண்ணங்களை எல்லாம் ஒட்டுக் கேட்டு அறிந்தவள் போல் சகல விஷயங்களையும் அறிந்திருந்தாள்.

அவன் அடைந்த கஷ்டமெல்லாம் போதாதா? எல்லாக் கஷ்டமும் தீர்ந்து விட்டது; வெற்றி கிட்டியது; முன் நிகழ்ந்தவை எல்லாம் மறைந்து விட்டன—என்று நினைத்துக் கொண்டிருந்தபோது வந்து சேர்ந்தாள் இந்தச் சோன்யா. அவன் சிரமங்களையும், வேதனைகளையும், சிரமப்பட்டுக் கட்டி எழுப்பிய மனச் சுவர்களையும் ஒரே வார்த்தையால் தகர்த்து விட்டாள். வாரக் கணக்காக அனுபவித்த துன்பத்தினால் எழுந்த இரும்புக் கிராதிகளைத் தன் மென்மையான கையினால் உடைத்து எறிந்து விட்டாள்.

இதை எல்லாம் நினைத்துப் பார்த்தால், தான் இன்னமும் பாசாங்கு செய்வது வேடிக்கையாகவே தோன்றியது. அவள் சந்தேகிக்கவில்லை; நிச்சயமாகத் தெரிந்து கொண்டாள். ஒரு நண்பனிடம் பேசுவது போல அவளிடம் பேசி, தன் குறைகளை எல்லாம் சொல்லி, தான் என்றுமே ஆண்டிரே கிரிகோரிவிச்சாக இருந்து விட அவள் உதவியை நாடினால் என்ன? இது மிகவும் சிறந்த வழி அல்லவா?

ஆனால், அதற்கு அவள் சம்மதிப்பாளா? பெண்களுக்குப் பிடிவாதம் அதிகம். எப்போதும் ஆண்களைவிடத் தாங்களே புத்தியில் உயர்ந்தவர்கள் என்று காட்டிக் கொள்வதில் விருப்பம் உடையவர்கள். மேலும் அவன் மனத்தை அவள் அறிந்துகொள்ள முடியுமா? இது மட்டுமா? நன்றாகப்பழகாத ஒருத்தியிடம் தன் மனத்தின் அந்தரங்க எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் எப்படிச் சொல்வது?

திரும்பவும் சோன்யாவின் வேலை-முறை வந்த பொழுது, அவன் கோபமாகவும் வெடுவெடுப்பாகவும் இருந்தான். இதைக் கண்ட சோன்யா, "நான் உன்னைப் பற்றி என்னென்னவோ நினைத்துக் கொண்டிருந்தேன், கிரிகோரி; அது தவறு என்று இப்பொழுதுதான் தெரிய வந்தது. நீ ஒரு அற்பன்" என்று நிதானமாகச் சொன்னாள்.

* * *

வாரன்ஸோவ் தான் வசித்துவந்த அறையில் டெலிபோனுக்காகக் காத்துக் கொண்டு இருந்தான்; அறையில் மேலும் கீழுமாக நடந்தான். பச்சை ஷேடு போட்டிருந்த விளக்கு ஒன்று அறை எங்கும் மங்கலாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அப்படியானால் கிரிகோரி அனேகமாக உயிரோடு இருக்கிறான் என்றுதான் சொல்ல வேணும். இதற்காக அவன் சந்தோஷப்பட வேணும். மரியாவுக்காகவும், கிரிகோரிக்காகவும் உண்மையாகவே சந்தோஷப்படவேணும்.

எந்த நேர்மையான மனிதனும் அப்படித்தான் செய்திருப்பான். ஆனால், வாரன்ஸோவ் சந்தோஷம் அடையவில்லை. எதிர்பாராத சுக-செய்தியைக் கேட்டவுடன் ஒரு நிமிஷம் சந்தோஷம் அடைந்தான். பிறகு அது மறைந்து விட்டது. அந்த ஒரே நிமிஷத்தை மறுபடியும் நினைத்துப் பார்க்க முயன்றான்; அந்தச் சந்தோஷச் சுடர் திரும்பவும் தனக்குள்ளே பிரகாசிக்க வேண்டுமென்று விரும்பினான். முடியவில்லை.

"நான் இகழ்ச்சிக்கு உரிய ஒரு மனிதன்" என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னான். அதனால் ஒரு பிரயோசனமும் ஏற்படவில்லை. இந்த விதமாக "உன்னை நான் திரும்பவும் இழந்து விடுகிறேன்" என்று உரத்த சத்தமாகச் சொல்லிக் கொண்டான். அந்தச் சத்தம் அவனைத் திடுக்கிடச் செய்தது. தன் வார்த்தைகளை யாராவது கேட்டிருக்கக் கூடுமோ என்று சுற்றுமுற்றும் பார்த்தான். கதவு மூடியிருந்தது. மேலும், அந்த நேரத்தில், சமீபத்திலே யாரும் இல்லை.

ஆமாம். அவன் மற்றக் காரியங்களை நினைப்பதில் பய னில்லை. ஒரே ஒரு காரியத்தைத்தான் அவன் எண்ணிப் பார்க்க முடியும். அவன் மரியாவை இரண்டாவது தடவை இழந்துவிடப் போகிறான். அவர்கள் வாழ்க்கை யில் இரண்டாந் தடவை கிரிகோரி குறுக்கிடப் போகி றான். திரும்பவும் மரியா கிரிகோரியை தெரிந்தெடுத்து, வாரன்ஸோவை புறக்கணித்து விடுவாள். அவன் மனத் தில், குணமாகி வேதனை இல்லாமல் இருந்த பழைய புண் திரும்பவும் தோன்றி ரத்தத்தை உறிஞ்சிக் குடித்தது.

நர்ஸ்களுக்காக நடந்த வகுப்பிலே முதல் நாளிலேயே அவன் பார்த்த பிரகாசமான கூந்தலை உடைய நர்ஸ், மரியா! சில நாட்களுக்குள்ளேயே அவன் அவளைக் காதலித்தான் என்பதைத் தனக்குள்ளே ஒப்புக் கொண் டான். ஆனால், அவளுக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரி யாது. உபாத்தியாயர், மாணவி என்ற வித்தியாசமே அவள் அவனைக் காதலிக்காமல் இருப்பதற்கு போதுமான தடையாக—பெருத்த அகழியாக—இருந்தது.

அந்த வகுப்புப் பாடங்களை நடத்துவது அவனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. தெளிந்த அவளுடைய கண்கள் வெகு கவனத்தோடு அவனைப் பார்த்தன. அவள் பார்வையில் அவன் கை தேர்ந்த ரண வைத்தியனாகத் தோன்றினான்; தன்னைக் காதலிப்பவனாகத் தோன்ற வில்லை. அவள் எப்பொழுதும் ஒரு சிறந்த மாணவியாக விளங்கினாள். அவளிடத்திலே குழந்தை இயல்பான ஆர்வமும் படிப்பிலே உற்சாகமும் இருந்தன. பிறகு அவள் வேலையை ஒப்புக் கொண்டு, முதன் முதலில் பெரி ஸோவ்க்காவுக்குச் சென்றாள். அடிக்கடி அவன் பெரி ஸோவ்க்காவுக்குச் சென்று, தன் காதலை அவளுக்கு வெளியிட விரும்பினான். அதற்குப் பதிலாக, சுருக்கமான கடிதம் ஒன்றை எழுதி அனுப்பினான். அவள் அதற்குப் பதில் எழுதினாள். அந்தப் பதிலில் காதலின் சின்னம் ஏதாவது தென்படுமோ என்று தேடிப் பார்த்தான்; வெறும் சிநேக பாவத்தைத் தவிர வேறு ஒன்றையும் அதில் காணவில்லை. அவன் திரும்பவும் எழுதினான். எத் தனையோ தடவை எழுதினான். எல்லாம் உணர்ச்சியற்ற, ஒன்றையும் குறிப்பிடாத சாதாரணமான கடிதங்கள்!

அவளும் அதே மாதிரியான கடிதங்களைத்தான் பதிலாக அனுப்பினாள்.

அப்புறம் கிரிகோரி வந்து சேர்ந்தான். அவன் காதல் நாடகத்துக்கு ஒரு முடிவு வந்து விட்டது. அவனுக்கு கிரிகோரியை ஏற்கெனவே தெரியும். அவனை அடிக்கடி பார்த்திருந்தான். ஆனால், அந்த அழகான வாலிப எஞ்ஜினீயர், தன் வாழ்க்கையில் குறுக்கிடுவான் என்று அவனுக்கு எப்படித் தெரியும்? என்றைக்குமே தன்னால் எழுப்பமுடியாத புன்னகையையும், காதலையும் மரியாவின் உள்ளத்திலே கிரிகோரி எழுப்பிவிடப் போகிறான் என்று வாரன்ஸோவுக்குத் தெரியுமா? என்ன காரணத்தால் அவள் கிரிகோரியைத் தெரிந்து கொண்டாள்? அவள் ஏன் தன்னை—வாரன்ஸோவை—தெரிந்து கொள்ளவில்லை?

சிநேகமா? ஆமாம். அந்தச் சிநேகம் உண்மையானதுதான். ஆனால், அதில் ஏதோ குறை யிருப்பதாகத் தோன்றியது. மணமாகி தம்பதிகளாக அவர்கள் இருவரும் திரும்பி வந்தபோது, வாரன்ஸோவ் நண்பன் என்ற முறையிலே அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி போகத் தொடங்கினான். அப்போது மரியாதான் அவனுக்கு ஏதோ ஆதரவு அளிப்பதுபோல நடந்து கொள்வாள். ஆதரவு அளிப்பதா? ஒருவேளை தாயின் ஸ்தானத்திலே இருந்து உபசரித்திருக்கலாம். அந்த நாட்களில் ஏற்பட்ட வேதனை வரவரக் குறைந்து, மழுங்கி, முடிவிலே தணிந்தது. காயத்தினால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்துப் பார்த்துப் பழகியவன்போல, இந்தத் துக்கத்துக்குப் பழகி விட்டான் வாரன்ஸோவ்.

அப்புறம், கிரிகோரி போர் முனைக்குச் சென்று விட்டான். வாரன்ஸோவ் விஷயத்தில் மரியாவின் மன நிலை மாறியது. இப்போது அவன் உதவி அவளுக்குத் தேவையாய் இருந்தது. அவன் ஒரு விளையாட்டுப் பொருள் அல்ல என்று அவள் உணர்ந்தாள். ஆதரவளிக்கும் குரலிலே இப்போது அவன்தான் பேசினான். அவள் அதை எதிர்க்கவில்லை. அவளுக்கு ஒரு நண்பன், ஒரு ஊன்றுகோல் வேண்டியிருந்தது. ஏகாந்தமான மன நிலை அவளுக்குப் பெரும் பாரமாய் இருந்தது.

அவர்கள் பேசும் விஷயங்களில் பெரும்பாகம் கிரிகோரியைப் பற்றியது தான். அதனால் என்ன? அவன் மரியாவுடன் சம்பாஷிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்த தல்லவா?

லோபி ஒருவன் சிரத்தையோடு பணந் திரட்டுவதைப் போல், தான் கிரிகோரியைச் சந்திக்கு முன்பு நிகழ்ந்த காரியங்களை எல்லாம் வாரன்ஸோவ் கூறியபொழுது, அவள் அவற்றைச் சேகரித்து நினைவில் வைத்துக் கொண்டாள். கிரிகோரியைப் பற்றி அவன் என்ன சொன்னாலும், அது அவளுக்கு முக்கியமாகவே தோன்றியது. கிரிகோரி என்ன சொன்னான், எப்படிச் சிரித்தான், கூட்டத்திலே எதைப்பற்றிப் பேசினான் என்றெல்லாம் அறிய விரும்பினாள். வாரன்ஸோவ், அவள் கட்டளைக்குக் கீழ்ப் படிந்தவன் போலத் தன் ஞாபக சக்திகளை எல்லாம் ஆராய்ந்தான். தன் கணவனைப் பற்றிய விஷயங்களை எல்லாம் விரிவாகச் சொல்லும்படி கேட்பாள். இந்தக் காரியங்களை சும்மா கேட்டுக் கொண்டு இராமல், அவனும் அவைகளை ரசித்து அனுபவிக்க வேணும் என்று அவள் விரும்பினாள். தானும் அவனோடு கூட இராமல் அந்த நாட்கள் கடந்து விட்டனவே என்று வருந்தினாள். தான் அறிவதற்கு முன்னமே தன் கணவனை அறிந்திருந்த குற்றத்திற்காக வாரன்ஸோவிடத்திலும் அவளுக்குப் பொறாமை ஏற்பட்டது.

இவ்விதம் அவர்களுக்குள் நட்பு வளர்ந்தது. வாரன்ஸோவ் இதனால் ஏமாந்து விடவில்லை. மரியா, ஒரு நாளும் தன்னைக் காதலிக்கமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும்.

உலகம் முழுவதும் அவளுக்கு கிரிகோரி மயமாகவே தோன்றியது. அவள் அனுபவங்களெல்லாம் கிரிகோரியின் மூலமாக அடைந்தவை; கிரிகோரிக்காக அவள் அனுபவித்தவை. யுத்தம், தான் வைத்தியசாலையில் செய்துவந்த வேலை, எல்லாம் அவனோடு தொடர்புற்று இருந்தது; அவனுடைய தன்மயத்தால் நிறைந்திருந்தது. ஆனாலும், வாரன்ஸோவுக்கு அவளைப் பார்ப்பதிலும், அவளுக்கு நண்பனாக இருப்பதிலும் சந்தோஷம் ஏற்பட்டது.

அவனுக்கே தெரியாமல் அவனுடைய உள்ளத்தின் ஆழத்திலே ஒரு நம்பிக்கை பதுங்கியிருந்தது. என்றைக் காவது ஒரு நாள் தருணம் வாய்க்கலாம்; நிலைமை மாற லாம். அவள் இதயத்தோடு நெருங்கிய மனிதனாகலாம். இதுதான் அந்த நம்பிக்கை. இது எப்படி நடக்கும் என்ப தைப் பற்றி அவன் நினைக்கவேயில்லை. நித்திரை இல்லா மல் கசந்துவிட்ட இரவுகளிலும் கூட கிரிகோரி இறந்து விடுவான் என்ற எண்ணம் அவன் மனதில் உதிக்கவில்லை. கிரிகோரி தொலை தூரத்தில் இருந்தான். என்றைக்கும் அப்படி தூரத்திலேயே அவன் இருந்து விடுவான் என்று நினைத்தான். அப்போது அவளுக்கு இன்றியமையாத நண் பன் கிரிகோரியல்ல, வாரன்ஸோவ்தான். அவனைப் பிரிந்து அவள் உயிர் வாழ முடியாது.

ஆனால், இப்போது அந்த மனக்கோட்டை எல்லாம் தகர்ந்து விட்டது. அவன் தன்னையே நிந்தித்துக்கொண் டான். தன்மீது வெறுப்பு அடைந்து விரல்களை இறுக மூடிக்கொண்டான். இதெல்லாம் சாதாரணமான காலத் தில் ஊர், பேர் தெரியாமல் இறந்து போன ஒரு எஞ்ஜினீ யரைப் பற்றி இருந்தால் பரவாயில்லை. ஆனால், இவை காப்டன் செர்னுவைப் பற்றியவை; யுத்தம் ஆரம்பித்த முதல் நாளிலேயே அதில் சேர்ந்து, தான் காட்டிய தைரி யத்துக்காக இரண்டு விருதுகளைப் பெற்று, தாய் நாட்டின் விடுதலைக்காகவும், சுதந்திரத்துக்காகவும் போராடிய சிறந்த வீரனுகிய செர்னுவைப் பற்றியவை.

பாதகன்! பாதகன்! பாதகன்!" என்று பல்லைக் கடித்துக் கொண்டு கூறினுன். திரும்பவும் மன வேதனை வந்து விட்டது. 'நான் அவளை இழந்து விடுவேன். திரும்ப ஒரு முறை அவளை இழந்து கொண்டு இருக்கிறேன்' என்று கதறியது அவன் மனம். திரும்ப ஒரு முறை அவன் தன் வாழ்க்கையின் இன்பத்தை எல்லாம் இழந்து விடுவான்; அவளுடைய மந்திர சக்தியை, காந்தி நிறைந்த அவளுடைய அழகை இழந்து விடுவான்.

டெலிபோன் மணி காதைத் துளைத்துக் கொண்டு ஒலித்தது.

"ஹல்லோ! யார் அது?"

டெலிபோனில் சீறலும் குமுறலும் கேட்டது. சம்பாஷணை சிதைந்து வந்தது. அவசரமான குரல்கள் ஒன்றோடொன்று குறுக்கிட்டன.

"ஹல்லோ! ஹல்லோ! ஹல்லோ!"

டெலிபோன் ஒரு குமுறல் குமுறியது. சத்தம் எல்லாம் அடங்கி விட்டது.

"இது வாரன்ஸோவ். வாரன்ஸோவ் பேசுகிறேன். அது நீயா, சாஷா?"

டெலிபோனில் கேட்ட பலவகையான சத்தங்களுக்கு மேலாக, இன்னாருடையது என்று அடையாளம் கண்டு பிடிக்க முடியாத குரல் ஒன்று கேட்டது.

"விக்டரா? இது சாஷாதான். உனக்கு என்ன வேணும்?"

"சாஷா! இதைக் கவனமாகக் கேள், சாஷா! ஹல்லோ! ஹல்லோ! ஆமாம். நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். சாஷா, உங்கள் வைத்தியசாலையில் காப்டன் செர்னாவ் என்பவன் காயமடைந்து கிடக்கிறானா?"

"அவன் பேர் என்ன?"

"செர்னாவ்! சார்ல்ஸ், யூஜினி, ரோமன், நிக்கோலாஸ், ஆல்கா, விக்டர்!"

"செர்னாவ்?"

"ஆமாம். அதுதான்"

"இரு, நான் கண்டுபிடித்துச் சொல்லுகிறேன். டெலிபோன் தொடர்பை விட்டு விடாதே. நான் வேறு ஒரு டெலிபோனில் பேசுகிறேன்."

வாரன்ஸோவ் பொறுமையாகக் காத்திருந்தான். வெகு தூரத்தில் யாரோ பேசிக்கொண்டிருந்த சம்பாஷணை விட்டு விட்டுக் கேட்டது. டெலிபோனில் வேலை செய்பவர்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள். யாரோ ஒருவன் தந்திச் செய்தியைக் கட்டுக் கட கட என்று அடித்துக் கொண்டிருந்தான்.

"செர்னாவ்தானே அந்தப் பெயர்?"

" ஆமாம். ஆமாம்."

" அவன் பெயரின் முதலெழுத்துக்கள் என்ன ? "

" இ. ஐ. இரிகோரி ஐவனேவிச்."

" அப்படி இங்கே யாரும் இல்லை. இங்கே இருப்பதெல்லாம் ஒரு செர்னிஷெவ், ஒரு செர்ன்யாக், ஒரு செர்ன்யாக் கோவ். அவ்வளவுதான்.

வாரன்ஸோவ் டெலிபோனில் ஓயாமல் கத்தினான்.

" அப்படி இருக்காது. இரண்டு மாதத்துக்கு முன்பு அவன் அங்கே இருந்தான் ! இரண்டே மாதத்துக்கு முன்பு தான் ! "

" இரு, நான் பார்த்துச் சொல்லுகிறேன்."

திரும்பவும் டெலிபோனில் குமுறலும் சத்தமும் கேட்டது. வாரன்ஸோவ் டெலிபோனில் ஊதிப் பார்த்துக் கொண்டான். தனக்குப் பதில் கிடைக்காமல் போய் விடுமோ என்ற பயம் ஏற்பட்டது அவனுக்கு.

" இந்த வருஷத்தில் அந்தப் பெயர் கொண்ட ஒரு மனிதனும் இங்கே இருந்ததில்லை."

" ஆனல், எங்களுக்குத் தந்தி வந்திருக்கிறதே ! தந்தி ! அவன் அங்கே கட்டாயம் இருக்க வேண்டும் ! "

" டெலிபோன் ஆபீஸிலிருந்து பேசுகிறோம். நீங்கள் இன்னும் பேசிக்கொண்டு இருக்கிறீர்களா ?"

" ஆமாம் ! ஆமாம் ! நாங்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம். நாங்கள் இன்னும் பேசிக் கொண்டு தான் இருக்கிறோம். தந்தி வந்தது. ஒரு தந்தி எங்களுக்கு வந்தது."

" அதில் என் கையெழுத்தா இருந்தது ? "

" இல்லை. அதில் ஒரு நர்ஸ் கையெழுத்திட்டிருந்தாள். அவள் பெயர் சோன்யா கோஸ்லோவ் ! கோஸ்லோவ் ! "

" கோஸ்லோவ் ? ஆமாம். கோஸ்லோவ் என்று இங்கே ஒரு நர்ஸ் இருக்கிறுள்.'

"அவனைக் கேட்டுப் பார்! நர்ஸ் கோஸ்லோவைக் கேட்டுப் பார்!"

திரும்பவும் டெலிபோனில் பலவிதமான சத்தங்கள். கடைசியில் அந்த ஒலிக் குழப்பத்தினூடே மெல்லிய குரல் ஒன்று கேட்டது.

"நர்ஸ் கோஸ்லோவுக்கு இன்று வேலை முறை இல்லை."

வாரன்ஸோவ் டெலிபோனைக் கீழே வைத்தான். அப்புறம்தான், அவளுக்கு நன்றி பாராட்ட வில்லையே என்று நினைத்தான். டெலிபோனில் பேசியபோது அவன் தன்னை ஆயத்தம் பண்ணிக் கொள்ள வில்லை; எதையும் தெரிந்து கொள்ள வில்லை. இந்த எண்ண மெல்லாம் அவனுக்குப் பிறகுதான் தோன்றியது.

டெலிபோன் சம்பாஷணை முடிந்து விட்டது என்பதைக் காட்ட மணி அடித்தது.

"நீங்கள் பேசி முடித்து விட்டீர்களா?"

"ஆமாம்" என்று கவலையோடு சொன்னான். அவனுக்கு ஒரே களைப்பாய் இருந்தது. அவன் இதை மரியாவிடம் நாளைக்குச் சொல்லும்போது, அவள் என்ன சொல்வாள்?

"டெலிபோனில் பேசத் தொடர்பு கிடைக்க வில்லை என்று சொல்லிவிட வேண்டும்" என்று தீர்மானித்துக் கொண்டான்.

* * *

"நீ ஏன் தூங்கப் போகாமல் இருக்கிறாய்?"

மரியா பெருமூச்சு விட்டாள். எழுந்து விளக்கை அணைத்தாள். அவளுடைய தாய் ஒரு விநோதமான மனுஷி. முதலிலே அலக்ஷியம் செய்தாள் என்று மரியாவைக் கடிந்து கொண்டாள். இப்பொழுது தூங்க வேண்டும் என்றாள். அதுவும் இந்த இரவிலே; எல்லாம் ஒரு முடிவுக்கு வருகிற இந்த இரவிலே தூங்க வேணும் என்றாள்.

மரியா சந்தடி பண்ணுமல் நடந்து ஜன்னலை அணுகிஞள். அதை மூடியிருந்த கறுப்புத் திரையை நீக்கிஞள். அவளுக்கு அந்தச் சிறு அறையில் மூச்சு முட்டியது. வெளியே சென்று குளிர்ந்த காற்றை சுவாசித்து, கன்னங்களில் வாடையை உணர்ந்து, அதன் ஈரமான காற்றின் இறக்கைகள் வீசுவதை அனுபவிக்க விரும்பிஞள். ஆனல், ரொம்ப நேரமாகிவிட்டது. மழையிலே தயங்கித் திரிவதில் ஒரு நன்மையும் இல்லை. மேலும் வாரன்லோவ் எந்த நிமிஷத்திலும் வரலாம். தூங்காமல் அவனுக்காகக் காத்திருக்க அவள் தீர்மானித்து விட்டாள்.

"எனக்கு ஏன் சந்தோஷம் இல்லை?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். பின்னல் என்ன நடந்தாலும், இப்பொழுது ஒரு மணி நேரம்—ஒரு நிமிஷ நேரமாவது அவள் சந்தோஷமாக இருக்கக் கூடாதா? ஆனல் அவளுடைய உள்ளத்திலிருந்தே எழுந்து வந்த அடக்கு முறைச் சட்டம் ஒன்று அவளுடைய உள்ளத்தையே விலங்கிட்டுக் கட்டி வைத்தது போல் இருந்தது. எப்பொழுதும் இப்படித்தான் இருக்குமோ, என்று நினைத்தாள். அவள், இனிமேல், எப்பொழுதுமே நிஜமான சந்தோஷத்தையும், துக்கத்தையும் அனுபவிக்க முடியாமல் போய் விடுமா? எல்லாம் ஒரே குழப்பமாக, உருமழுங்கி இருந்தது. காற்றிஞல் சிதறுண்ட மேகம் போல, அவளுடைய உணர்ச்சிகளெல்லாம் தெளிவில்லாமல் மந்தாரமாக இருந்தன.

இல்லை. துரதிர்ஷ்டம் ஒருவனுக்குப் பெருந்தன்மையைக் கொடுக்கும் என்பது உண்மையில்லை. துன்பத்துக்கு ஆளாகிறவன் வெறுமையாகி, வறுமையை அடைவான். துயரம் ஒருவனுடைய உள்ளத்திலே பகையையும், கோபத்தையுமே விளைக்கும். அவளுடைய வாழ்வு இன்பமாக இருந்தது; ஆமாம், அது உண்மைதான்; அது மாயா விநோதக் கதையும் அன்று, கட்டுக் கதையும் அன்று. அவள் அப்படி இன்பமாக வாழ்ந்த காலத்திலே அவள் மாட்சிமையான ஆழ்ந்த சந்தோஷத்திலே மூழ்கி இருந்தாள். அப்பொழுது அவளுடைய இன்பம் பொங்கி வழிந்தது. எல்லாருக்கும் பங்கிட்டுக் கொடுப்பதற்குச் சந்தோஷமான புன்னகைகள் அவளிடத்தில் ஏராளமாக

இருந்தன; பிறருக்குச் சொல்லத் தகுந்த சமயோசிதமான புத்தி போதனைகள் இருந்தன. எல்லோரும் தன்னைப் போலவே இருக்கவேண்டும் என்னும் ஆசை அவளுடைய உள்ளத்திலே ஆத்திரமாக இருந்தது.

அப்படி இருந்த போதுதான் கிரிகோரி இறந்து விட்டான் என்ற செய்தி வந்தது. துன்பங்கள் பெருந்தன்மை அளிக்கும்! அப்படியா? இல்லை. ஒழுங்காக வளருகிற குழந்தைகளுக்குச் சொல்லுகிற மாயா விநோதக் கதைகளிலே அமைக்கிற நீதி அது. அது பொய்! கபடம்! கட்டுக் கதைக்கு ஏற்ற பொய்! அவளைப் பாருங்கள். அவளுடைய உள்ளத்திலே கோபம் தழைத்தது. வெறுப்பு மிகுந்தது. அவளுடைய உள்ளம் சாகுபடி செய்யாத நிலத்தைப் போல் இருந்தது. விஷக் கனிகள் முதிர்ந்த நச்சுச் செடிகள் அந்த நிலத்திலே காடாக வளர்ந்து விட்டன.

இப்பொழுது மற்றொரு விதமான செய்தியும் வந்திருக்கிறது. இது உண்மையா, பொய்யா? போகப் போகத்தான் தெரியும். அது எப்படி முடிந்தாலும், அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய முறையிலே அவள் அதை அங்கீகரிக்க முடியாது. அவள் அந்த நிலைமையில் இல்லை. முன்னொரு காலத்திலே இருந்த கள்ளங் கபடில்லாத பழைய மரியா இப்பொழுது இல்லை. இப்பொழுது துன்பங்கள் அவளை முறுக்கி விட்டன. அவளில் ஏதோ ஒன்று தகர்ந்து போய்விட்டது.

துன்பம்! சோன்யா தவறு செய்யவில்லை என்றால், அந்தத் தந்திச் செய்தி பொய் இல்லை என்றால், எல்லாம் கனவாக இராவிட்டால், ஒரு பொழுதும் துரதிர்ஷ்டம் ஏற்பட வழியில்லை. ஏதோ தவறான செய்தியைப் பற்றிய சந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டதாகவே முடியும்.

அந்தத் தந்திச் செய்தி! அந்தச் செய்தி வந்த துண்டுக் காகிதத்தை எடுப்பதற்காகத் தடவிப் பார்த்துக்கொண்டே மேசையை அணுகினாள். அது அங்கே இருந்தது. இரண்டு செய்திக் காகிதங்களும் அங்கே இருந்தன. ஒன்று மரணச் செய்தியைக் கூறியது. மற்றொன்று அவன் உயிரோடு இருக்கிறான் என்ற செய்தியைக் கூறியது.

வாசல் மணி அடித்தது போல அவளுக்குத் தோன்றியது. இமைப்பொழுது அவள் இருதயத் துடிப்பு நின்றது. மறு நிமிஷத்தில் தான் நினைத்தது தவறு என்று தெரிந்து கொண்டாள். வாசலில் மணி அடிக்க வில்லை; அவள் காதில் தான் மணியடித்தது போல் தோன்றியது. வாரன் ஸோவ் போய் எவ்வளவு நேரமாய்விட்டது! இதற்குள் அவன் எதையாவது கண்டு பிடித்திருப்பானா? எதைக் கண்டு பிடித்திருப்பான்? சந்தோஷமான செய்தியையா, துக்கச் செய்தியையா? அது துக்கச் செய்தியாயிருந்தால், அதை எப்படி, அவளுக்கு வருத்தப்படாத விதத்திலே சொல்லலாம் என்று தன் அறையில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருப்பான். அவளுடைய கனவு அவளை ஏமாற்றி விட்டது. கிரிகோரி இல்லாமல் குளிர்ந்து, இருள் நிறைந்து, வெறுமையானவள் போல உலகத்துக்கே அவள் திரும்பவும் செல்ல வேண்டும் என்னும் செய்தியைச் சொல்ல வழி வகைகளைத் தேடிக் கொண்டு இருப்பான். அவன் அதைக் கூடியவரை தள்ளி வைப்பான். சாக்குப் போக்குகள் சொல்ல ஆரம்பிப்பான்.

எவ்வளவு மெதுவாகக் காலம் கடந்து சென்றது! இப்போது ஒரு மணி நேரம் ஆனதா, ஒரு நிமிஷம் ஆனதா? அவள் அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் அவள் தன் தாயின் அறைக்குப் போக வேணும். தத்யானா பெட்ரோவ்னா கட்டாயம் விழித்துக் கொள்வாள்; அப்புறம் வசவு மொழிகளைப் பொழிவாள். அப்படிச் செய்யாமல் பொறுமையாய் இருப்பதே சரி.

ஒரு வேளை இரவு முழுவதும் வாரன்ஸோவுக்கு டெலிபோனில் பேச முடியாமல் இருந்திருக்கலாம். எத்தனையோ பேர் அவள் காரியத்தை விட முக்கியமான காரியங்களை கிரிகோரி காயமடைந்து படுத்திருந்த அந்த நகரத்திற்கு டெலிபோனில் பேசியிருக்கலாம். கோடிக் கணக்கான மனிதரின் உயிர்களைப் பாதுகாக்கும் பொறுப்புடைய டாங்கிகள், ஆகாய விமானங்கள், துப்பாக்கிகள் முதலியவைகளைப் பற்றி டெலிபோனில் பேசிக் கொண்டு இருந்திருக்கலாம். இந்த நெருக்கடியில் சோர்ந்து போகிற ஒரே ஒரு உள்ளம், ஒரே ஒரு மனித உயிர், எரிகிறதா, மங்கி எரிந்து கொண்டிருக்கிறதா, அல்லது அணைந்து

விட்டதா என்று அறிவதற்கு டெலிபோனில் இடம் கிடைக்குமா?

அவள் கண்கள் இருளில் பார்க்க நன்ருகப் பழகி இருந்தன. ஆகையால், அந்த இருட்டில் சாமான்களின் வரி வடிவம் கண்ணுக்கு நன்ருகப் புலப்பட்டது. அதோ, அந்த மேசைமேல் கிரிஷாவின் படம் இருந்தது. அவள் நாற்காலியின்மேல் முழங்காலில் நின்று, அந்தப் படத்தைக் கையில் எடுத்துக்கொண்டாள். இருட்டாய் இருந்தால் என்ன? அந்தப் படத்தில் இருந்த கிரிஷாவின் உறுப்புக்களெல்லாம் அவளுக்குத் தெரியாதா? ஒவ்வொரு கோடும், நிழலமைப்பும், தலையின் வடிவமும், இமைகளின் வளைவும், மனதை மகிழ்விக்கும் குதூகலமான கண்களும், வளைந்த புருவமும், பின்னல் வாரிவிட்ட கூந்தலும், அஞ்சாத கிரிஷாவின் சிரித்த முகமும் அவளுக்கு மனப்பாடமாகத் தெரிந்தவை.

அவள் குதித்தெழுந்து கதவருகே ஓடினாள். திரும்பவும் அது அவளுடைய கற்பனைதான். கதவண்டை ஒருவரும் இல்லை. முன் அறையில் ஒரே நிசப்தம் குடி கொண்டு இருந்தது.

மரியா ஜன்னலருகே சென்று வெளியே எட்டிப் பார்த்தாள். இரவு காரிருள் மிகுந்து நிசப்தமாக இருந்தது. வரப்போகும் காரியங்களை எதிர்பார்த்துத் துடித்து நிற்கும் உள்ளங்களைப் பற்றியும் மனிதரின் துக்கத்தைப்பற்றியும் அந்த இரவுக்கு என்ன கவலை? வலது பக்கத்திலே ஒரு வீடு பெரிய கறுத்த ஜன்னல்களின் மூலமாகக் கொட்டாவி விடுவது போலத் தோன்றியது. அங்கே மனிதர்கள் நித்திரை செய்து கொண்டு இருந்தனர். மேல் மாடியில் மாத்திரம் யாரோ ஒருவன் விழித்துக் கொண்டு இருந்தான். ஜன்னலில் இருட்டடைப்புக்காகத் தொங்க விட்டிருந்த கறுப்புத் திரையில் சிறிது இடைவெளி தெரிந்தது. அதன் வழியாகக் கோடு கிழித்ததுபோல் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. அந்த நீடித்த இருள் சூழ்ந்த இரவிலே ஜன்னலுக்குப் பின்பக்கத்தில் நின்றுகொண்டு கூர்ந்து கவனித்தவன் யார்? நேசித்த நோயாளியின் படுக்கையருகே உட்கார்ந்து தூங்காமல் விழித்திருந்தது யார்? தன்னைப்

போல்—மரியாவைப்போல்—துக்கப்பட்டுக்கொண்டு இருந்தது யார்?

அடுத்த அறையிலே அவளுடைய தாய் வழக்கம் போல் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். அந்த சந்தர்ப்பத்தில் தாய்க்கும் மகளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லாததுபோல் தோன்றியது. மரியாவின் ஏகாந்த நிலை பரிபூரணமானது. அதை எதுவுமே எதிர்க்க முடியாது. அதில் நம்பிக்கைக்கு இடம் இல்லை. அவளுக்கு நேர்ந்ததைப் பற்றிக் கவலைப்பட இந்த உலகத்தில் யாருமே இல்லை. வாரன்ஸோவும் அளவுக்குமிஞ்சிக் காலதாமதம் செய்துகொண்டு இருந்தான்.

அவளைப் போலவே வாரன்ஸோவும் தூங்கவில்லை. இது உண்மைதான். அவளுக்கு ஏதாவது உறுதியான செய்தி கூறவேண்டுமென்று அவன் முயன்றுகொண்டிருந்தான். தன் அறையில் உட்கார்ந்து, தனக்காகவும், அவளுக்காகவும் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தான்.

அவள் மாறிவிட்டாள் என்பதற்கு, இதோ, இன்னும் ஒரு அத்தாட்சி: அவள் தன்னைப் பற்றியே ஓயாமல் நினைத்துக் கொண்டிருந்தாள். வேறு யாரைப் பற்றியும் நினைக்கவில்லை. துன்பம் மனிதருக்குப் பெருந்தன்மையைக் கொடாமல் அவர்களுடைய மனத்தைக் கெடுத்து, நெஞ்சின் ஈரத்தை உலர்த்தி, முடிவிலே, அவர்களைப் பாழாக்கிவிடும் என்பதற்கு, இதோ, இன்னும் ஓர் அத்தாட்சி.

அவள் கையினால் கண்களைத் தடவினாள். அவள் கண்கள் எரிந்தன; நொந்தன. இப்போது அறையில் வெளிச்சம் கொஞ்சம் அதிகமாய் இருந்தது. பச்சை நிறத்தோடு பளபளப்பாக இருந்த முகக் கண்ணாடியின் மேற்பரப்பு கொஞ்சம் கொஞ்சமாக தெளிவடைந்து வருவதைப் பார்த்தாள். புகைப்படத்தில் இருந்த கிரிஷாவின் கண்கள் அந்த மங்கிய வெளிச்சத்தில் தெளிவாகத் தெரியவில்லை; ஆனாலும், அவை தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை அவள் உணர்ந்தாள். மேசைமேல் பூ வைக்கும் பாத்திரத்தில் வாடி உலர்ந்திருந்த பூங்கொத்து தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. அந்தக் கொத்தை வெகு நாட்களுக்கு முன்னரே எடுத்து வெளியில் எறிந்திருக்கவேண்டும்

என்று நினைத்துக் கொண்டாள். முன் நாட்களில் அவள் இப்படி உதாசீனமாக இருந்திருக்கவே மாட்டாள். ஆனால் அவைகளை எல்லாம் முன்பு கவனித்ததுபோல இப்பொழுது கவனிப்பதில்லை. சந்தோஷமென்னும் பசுமையான மரத்திலிருந்து ஒடிந்து விழுந்து உலர்ந்துபோன பூங்கொத்தைப் போலவே அவளுடைய வாழ்க்கையும் இப்பொழுது தோன்றவில்லையா?

நோயாளியின் வெளிறிய முகம்போல் உதய காலத்தின் வெளிச்சம் வெளியே பரவியது. இன்னும் சற்று நேரத்தில் அவள் வேலைக்குச் செல்ல வேண்டும். இது வரைக்கும் வாரன்ஸோவ் வரவில்லை. ஒரு வேளை அவன் தூங்குவதற்காகத் தன் வீட்டிற்குப் போயிருக்கலாம். பயனில்லாமலே ஒரு இரவு கழிந்து விட்டது. முந்தின நாள் மாலையில் இருந்த விதமாகவே எல்லாம் இந்தக் காலையிலும் இருந்து விடலாம்.

மனச் சலிப்பை உண்டுபண்ணும் ஈரமான மழை நாள்—துயரம் மிகுந்த பனிக்காலத்தில், பனி மழையும் கெண்டைப் பனியும் இல்லாமல் இருளடைந்திருக்கும் நாள்—கிரிஷா இல்லாத இன்னொரு நாள் உதயமாயிற்று. இந்த நாள் காலையிலும், ஒன்றுமே புதிதாக நடந்து விடாது என்றே தோன்றியது. கிரிஷா இறந்து விட்டான். இனிமேல் ஒருநாளும் திரும்பி வரமாட்டான், என்ற உணர்ச்சியையே கொடுத்த மற்ற நாட்களைப் போலவே இருந்தது இந்த நாளும்.

அடுத்த அறையில் கட்டில் 'கிறீச் கிறீச்' என்று சத்தம் செய்தது. தத்யானா பெத்ரோவ்னா சத்தமாகக் கொட்டாவி விட்டாள். அவள் கைகால்களை நீட்டியபோது ஏற்பட்ட சொடக்குச் சத்தம் மரியாவின் காதில் விழுந்தது. வெளியே காலடி ஓசை கேட்டது. தத்யானா பெத்ரோவ்னா தன் மெலிந்த தோளை ஒரு கம்பளிச் சால்வையில் போர்த்துக் கொண்டு, அறைக்குள்ளே எட்டிப் பார்த்தாள்.

"இதற்குள் எழுந்துவிட்டாயா? இன்னும் ரொம்ப நேரம் இருக்கிறதே!"

"வழக்கமாகப் போகிற நேரத்திற்கும் சீக்கிரமாகவே இன்று வேலைக்குப் போகவேணும்" என்று மரியா கையால் கூந்தலைக் கோதிக் கொண்டே கூறினாள். அவள் தூங்கினாளோ இல்லையோ என்பதை அவளுடைய தாய் ஒரு நாளும் நினைக்க மாட்டாள்.

சமையல் அறையில் தண்ணீரின் சலசலப்புச் சத்தம் கேட்டது. தத்யானா பெத்ரோவ்னா அடுப்பில் கெட்டிலை வைத்தாள். மரியா களைப்படைந்து களையிழந்த தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தாள். இளமையும், சந்தோஷமும், எதற்கும் தோல்வியடையாத மனப்பான்மையும் உடையவனாகப் புகைப்படத்திலே தோன்றிய கிரிஷா, அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். மரியா பெருமூச்சு விட்டாள். சோன்யாவின் தந்தி மூடத்தனமான ஒரு தப்புச் செய்தி என்று தனக்குள்ளே நிச்சயித்துக் கொண்டாள். முதல் தந்தி, சட்ட ரீதியாக வந்த மரண அறிவிப்புச் செய்தி; இதுதான் உண்மையான செய்தி.

* * * *

மேலும் மேலும் டெலிபோன் மணியடித்தது. தந்திகள் பறந்தன. கடைசியில்,

"மரியா, அது உண்மைதான். கிரிகோரி உயிரோடு இருக்கிறான். அவன் கொடிய காயமடைந்து, இப்போது நொண்டியாக இருக்கிறான். அதனால், உன்னைப் பார்க்காமல் அவன் ஒளிந்து கொள்ள விரும்பினான்."

அவள் நின்ற நிலையிலே இந்தச் செய்தியைக் கேட்டபோது வாரன்ஸோவின் கண்களை நேராகப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவள் முகம் செத்த பிணம்போல் வெளிறி இருந்தது. கைகளைக் கெட்டியாகக் கோத்துப் பிடித்துக்கொண்டிருந்தாள்.

ஒரு முறைகூட கண் சிமிட்டாமல் விரிந்த கண்களோடு அவனை முறைத்துப் பார்த்தாள்.

அவன் சொன்னது என்னவென்று அவளுக்கு விளங்கவில்லை. அவன் வார்த்தைகளின் அர்த்தம் அவளுக்குத் தெரியவில்லை. கிரிகோரியா மறைந்து விட விரும்பினான்? வாரன்ஸோவ் என்ன உளருகிறான்? கிரிகோரி

உயிரோடா இருக்கிறான்? அப்படியானால் இதுவரைக்கும் நடந்த மற்ற காரியங்களின் விவரம் என்ன?

"எனக்கு இது ஒன்றும் விளங்கவில்லை" என்றாள் வறண்ட குரலிலே.

"அவன் உயிரோடு இருக்கிறான். அவனைக் கண்டு பிடித்தாயிற்று. அவனை இங்கே அழைத்து வரவேணும்."

"நான் போய் அழைத்து வருகிறேன்." அவள் உடனே போவது போல எழுந்தாள்.

வாரன்ஸோவ் தன் கையை அவள் தோளின் மேல் வைத்தான்.

"இல்லை, மரியா. நாம் இரண்டு பேரும் சேர்ந்து போகலாம். நாம் ஆகாய விமானத்தில் போகலாம். ஒரு வேளை உனக்கு உதவி வேண்டியிருக்கும். நாம் இரண்டு பேரும் போவதுதான் நல்லது."

அவளுக்கு அது பிடிக்கவில்லை. அதை மறுக்க விரும்பினாள். திரும்பவும் வாரன்ஸோவா? இந்தக் காரியத்திலா? எதற்காக? எதற்காக அவன் உதவி?

கிரிகோரி உயிரோடு இருக்கிறான். அவள் போய் அவனை அழைத்து வர வேண்டியது தான். இதிலென்ன கஷ்டம்? எளிதில் செய்யக் கூடிய நேரான காரியம் தானே.

ஆனால், அவள் கால்கள் நடுங்கின; பலம் குன்றியது; உலகம் இருண்டுவிட்டதுபோல் தோன்றியது; காதில் ஏதோ சத்தம் கேட்டது......ஆமாம். வாரன்ஸோவ் கூட இருப்பது நல்லது தான். அவனும் வரட்டும்.

"ஆகாய விமானம் நாளைக் காலையில் புறப்படுகிறது. இரண்டு பேர் பிரயாணம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டேன். நான் வந்து உன்னை அழைத்துச் செல்லுகிறேன்." அவன் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். "நாளைக் காலை ஒன்பதரை மணிக்கு உன்னை அழைத்துச் செல்ல வருவேன். இப்போது நான் போக வேணும். புறப்படுவதற்கு முன்பு, எல்லாக் காரியங்களையும் கவனிக்க வேணும்."

மூடு பனிக்குள்ளே இருந்து அவனுடைய குரல் வருவது போல அவளுக்குத் தோன்றியது. அதற்குப் பிறகு,

அடுத்த நாள் காலே ஒன்பதரை மணிவரைக்கும் தான் கழித்த நேரத்தைப் பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியாது.

அவள் ஆடை அணிந்து, தொப்பியை மாட்டி, கையுறைகளை இழுத்து விட்டுக் கொண்டு தயாராகக் காத்திருந்தாள். கடைசியில் வாசல் மணி அடித்தது. வாரன் ஸோவ்! ஆகாய விமானம் நிற்கும் இடம்! அவள் கதவைத் திறக்க ஓடினாள். கூடத்தில் இருந்த பெட்டியில் அவளுடைய கெண்டைக்கால் மோதி நொந்தது. அவள் கதவைத் திறந்தாள். அது வாரன்ஸோவ் இல்லை. ஒரு பையன் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு கடிதம் இருந்தது.

"டாக்டர் வாரன்ஸோவிடமிருந்து"

"என்ன? எங்கே? எங்கே அவன்?" அவளுடைய பயங்கரமான கத்தலைக் கேட்டு அந்தப் பையன் பின் வாங்கினான்.

"டாக்டர் விமானத்தில் சென்று விட்டார்."

"அவன் எப்படிப் போக முடியும்?"

நின்ற இடத்தின் கீழ் நிலம் வாய்பிளப்பதுபோல அவளுக்குத் தோன்றியது. என்ன இது? இன்னும் என்ன புதிய கஷ்டம்? இந்தப் பயங்கரமான தப்பெண்ணங்களுக்கு, தவறுகளுக்கு, மன வேதனைகளுக்கு ஒரு முடிவே கிடையாதா?

"டாக்டர் ஆகாய விமானத்தில் சென்று விட்டார்" என்று ஜாக்கிரதையாக அவளைக் கவனித்த வண்ணம் சொன்னான். அவள் கொஞ்சம் அசைந்தால் அவன் ஓடிவிடத் தயாராக இருந்தான். அவளுடைய முகத் தோற்றத்தைப் பார்த்து விட்டு, அவள் ஒரு பைத்தியக்காரி என்றே நினைத்து விட்டான் அந்தப் பையன். கடிதத்தைப் படிக்கக் கண்களைத் தாழ்த்தினாள் மரியா. இதுதான் சரியான சமயம் என்று அந்தப் பையன் இருண்ட மாடிப் படிகளின் வழியாக ஒரே ஓட்டமாய் ஓடி மறைந்தான்.

அவள் அந்தக் கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்தாள்; அதன் கருத்தைத் தெரிந்து கொள்ள முயன்றாள்.

முணுமுணுத்து வாசிப்பது அதன் கருத்தை நன்ருய் உணர்ந்து கொள்ள உதவியாக இருக்கும் என்பது போல வார்த்தைகளை மெதுவாய், ஒவ்வொன்ருய்ச் சொல்லிப் பார்த்தாள்.

"அவனுக்கு மனவெழுச்சிகளை உண்டுபண்ணக் கூடாது"—ஓகோ, அவளுடைய பிரசன்னம் அவனுக்கு மனவெழுச்சிகளை உண்டு பண்ணுமா? "அவன் பிணியாளி." அதனுல் என்ன? எத்தனையோ பேர் பிணியாளி களாக இருக்கவில்லையா? அதற்கும் கிரிகோரிக்கும் என்ன சம்பந்தம்? என்னை ஏன் விட்டுவிட்டுப் போய்விட் டான்? ஒரு வேளை இதெல்லாம் பொய்யாக இருக்க லாமோ? வாரன்ஸோவ் அவளை ஏமாற்றி விட்டானு? கிரி கோரி உயிரோடு இல்லை என்ற செய்தியை அவளிடம் சொல்ல அவன் அஞ்சினுை?

இல்லை. கிரிகோரி உயிரோடு இருக்கிருன். அவளுக் காகக் காத்துக் கொண்டு இருக்கிருன். அவளே போய் அவனை அழைத்து வர வேண்டும். கிரிஷாவின் கண்களைப் பார்த்து, அவன் கையணைப்பில் சேர்ந்து, அவன் குரலைக் கேட்டு, அவன் மார்பின்மேல் உராய்ந்துகொண்டு அழுவ தனுல் ஏற்படும் இன்பங்களை அனுபவிக்காமல் அவள் எப்படிக் காலந்தள்ள முடியும்? அவளுடைய நடவடிக்கை களை நிச்சயம் பண்ணவும், அவளை ஒரு குழந்தையைப் போல் வீட்டிலே விட்டுச் செல்லவும் வாரன்ஸோவுக்கு என்ன அதிகாரம்? கிரிகோரியை முதலில் பார்ப்பதற்கு அவனுக்கு என்ன உரிமை?

அவள் கைகளை இறுக மடக்கிக் கொண்டாள். அந்த நிமிஷம் அவள் வாரன்ஸோவை மனமார வெறுத் தாள். அவனுக்கு என்ன உரிமை? அவனுக்கு என்ன உரிமை?

மரியா அவசரமாக வீட்டை விட்டு வெளியே சென் ருள். டெலிபோன்! ஆகாய விமானம் புறப்படும் இடத் திற்கு டெலிபோனில் பேச வேணும்! இன்றைக்கு அங்கே ஒரு விமானம் பறந்து போகும். கட்டாயமாகப் பறந்து போகும். அவள் எப்படியாவது தனக்கு அதில் ஒரு இடம் தேடிக்கொள்ளவேணும். வாரன்ஸோவ்

போய்ச் சேருவதற்கு முன் அவள் போய்ச் சேர வேணும். கிரிகோரியை முதலில் அவள்தான் பார்க்க வேணும்!

"அடுத்த விமானமா? அது பறந்து செல்ல இன்னும் மூன்று நாட்கள் ஆகும். நீ எந்த உரிமையோடு முதலில் விமானத்தில் செல்ல விரும்புகிறாய்?"

மரியா டெலிபோனைக் கீழே வைத்தாள். மூன்று நாட்கள்! மூன்று நாட்களில் வாரன்ஸோவ் கிரிகோரியை அழைத்துக்கொண்டு திரும்பிவந்துவிடுவான். முதலுரிமை யோடு விமானத்தில் பறக்க அவளுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அவள் உரிமை பாராட்டக்கூடிய அவ்வளவு பெரிய உத்தியோகத்தில், இல்லை. அவள் செய்யக் கூடியது எதுவுமே இல்லை.

திரும்பவும் அவளை மூடு பனி சூழ்ந்து விட்டது. அந்த மூடுபனிக்குள் இருந்து பார்த்தபோது வரி வடிவம் ஒன்றும் தெளிவாக இல்லை. அந்த மூடு பனிக்குள்ளே வார்த்தைகளுக்கு அர்த்தமும் இருக்கவில்லை. காலம், கால மாகவும் தோன்றவில்லை. இன்னதென்று விவரிக்க முடி யாத பயமும் திருடனைப் போலப் பதுங்கி நுழைந்த திகிலும் அந்த மூடு பனிக்குள்ளே தோன்றி விட்டன. அந்தப் பயம் எங்கும் பரவி அவளுடைய உள்ளத்தைப் பற்றிக் கொண்டது. அவளுடைய இருதயத்திற்குள்ளே, தாங்க முடியாத வேதனையை உண்டுபண்ணிய கட்டி ஒன்று தோன்றியிருப்பது போல உணர்ந்தாள்.

தத்யானா பெத்ரோவ்னா வீட்டில் அங்கும் இங்கும் பம்பரமாகச் சுற்றிக் கொண்டு இருந்தாள். கழுவினாள்; ஒட்டடை அடித்தாள்; அதையும் இதையும் கிரிகோரிக் காக ஆயத்தம் பண்ணிவைத்தாள். தெய்வ விக்கிரகத்தின் முன் முழங்காலில் நின்று சத்தமாகப் பிரார்த்தனை பண்ணி னாள்; அப்படி நன்றி செலுத்தி பிரார்த்தனை செய்த போது இடை இடையே பெருமூச்சு விட்டாள். மரியா அவளுக்கு உதவி செய்ய முயன்றாள்; ஒரு பூ வைக்கும் பாத்திரத்தை எடுத்துக் கழுவ ஆரம்பித்தாள். அது கை தவறி தரையில் விழுந்துவிட்டது. உடனே தத்யானா

பெத்ரோவ்னு அவளைச் சமையலறையிலிருந்து துரத்தி விட்டாள்.

"நீ உன் அறைக்குப்போ. எல்லாவற்றையும் நானே செய்து கொள்கிறேன்."

தலைக்கு மேலே எங்கேயோ ஒரு ஏரோப்ளேனின் இரைச்சல் கேட்டது. கிரிகோரியை அழைத்துவர மேலே ஏதோ ஒரு விமானம் பறந்து சென்றது. அவர்கள் ஏன் இப்படி அவளைப் பழித்தார்கள்? ஏன் இப்படி அவளுக்கு மன வேதனையை உண்டுபண்ணினுர்கள்? இதையெல்லாம் இப்போது நினைத்துப் பயனில்லை. நேரத்தைப் போக்கிக் காத்திருப்பதைத் தவிர அவள் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை.

ராய்ஸாவின் காதலன் போர்முனையிலிருந்து லீவில் வீட்டுக்கு வந்திருந்தான். மரியா அவளுடைய வேலையையும் ஏற்றுக்கொண்டாள்; எதைப் பற்றியும் நினைக்க நேரமில்லாமல் செய்து கொண்டாள். கட்டுகள், அயோடின், மருந்துகள், வைத்தியசாலைக் குறிப்பேடுகள்—இவைகளில் மனதைச் செலுத்தினுள். தவறில்லாமல் வேலைசெய்யும் ஒரு யந்திரப் பதுமையாகத் தன்னை மாற்றிக் கொள்ள முயன்ருள். கரண்டியில் துளித் துளியாக மருந்தை விட்டாள். அந்தத் துளிகள் பச்சையாக இருந்தன; முட்டை வடிவமாக இருந்தன. இந்த மருந்துத் துளிகளைத் தவிர உலகத்தில் வேறு ஒன்றுமே கிடையாதென்று அவளுக்குத் தோன்றியது. தெர்மாமீடர் நோயாளியின் ஜுரத்தைக் குறிப்பிட்டது. அப்போது தெர்மாமீடரில் தெரிந்த மெல்லிய பாதரசக்கோடு ஒன்றே இந்த உலகமாக அவளுக்குத் தோன்றியது.

அவளைச் சுற்றியிருந்த சூழ்நிலையின் தோற்றமே மாறி விட்டது. அந்தப் பொருள்கள் எல்லாம் இப்போது நன்ருகப் பழகின, கவர்ச்சியற்ற பொருள்களாக இல்லை. அவள் முன்பு கவனிக்காத பல நுணுக்கங்களை அந்தப் பொருள்களில் இப்போது கவனித்தாள். அவைகளுக்கு உயிரும், குண வேற்றுமைகளும் அமைந்து விட்டனவோ என்று தோன்றியது. நூல்களும், காயத்தைக் கட்டுவதற்காக வைத்திருந்த துணிச் சுருள்களும் ஒன்ருேடு ஒன்று

சிக்குண்டு, சித்திர வேலைப் பாடோடு துலங்கின; கண்ணாடி டம்ளர்களின் விளிம்புகள் வித்யாசமான நிறங்களைக் காட்டின; கரண்டிகளில் குறுக்கும் நெடுக்குமான மெல்லிய கீறல்கள் தோன்றின. கம்பளி மெத்தென்று இருப்பதாகமட்டும் தோன்றவில்லை; வெள்ளி போன்ற நரைத்த ரோமம் நிறைந்த ஒரு காடுபோலவும் தோன்றியது. அதைப் போர்த்தியிருந்த மனிதன் அசைந்த பொழுதெல்லாம், அந்த வெள்ளி ரோமம் பயத்தால் நடுங்குவது போலவும் தோன்றியது.

மாயா விநோதக் கதைகளில் சொல்வது போலப் பொருள்கள் எல்லாம் உயிர் பெற்று, தங்கள் இஷ்டம் போல அசைந்தன. இது வரைக்கும் அறியாத புதிய ரகசிய உலகம் ஒன்று அவள் கண்ணுக்குப் புலப்பட்டது. மரியா பிடிவாதமாக அதையே பார்த்து, அதன் நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து கொண்டாள். தன் மனத்தை நிரப்பியிருந்த முக்கியமான விஷயத்தைப் பற்றி நினைக்காமல் இருப்பதற்கு இதுதான் சிறந்தவழி என்று தெரிந்து கொண்டாள். ஆனால், அவ்வப்போது, உஷ்ணக் காற்றைப்போன்ற ஏதோ ஒன்று அவளுடைய உடலைச் சுற்றி வட்டமிட்டது.

ரண சிகிச்சைகள், கட்டுகள்; டாக்டரோடு படுக்கையறையைச் சுற்றி வருதல்; இரவு வேலை; திரும்பவும் படுக்கை அறைகளைச் சுற்றிவருதல்; திரும்பவும் ரண சிகிச்சை;—இப்படியே சென்றது அவள் நேரம்.

"நீ கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேணும்" என்று ஒரு நாள் அவளிடம் ஒரு நர்ஸ் சொன்னாள். மரியா முடியாது என்று தலையை அசைத்தாள். கூடாது! கூடாது! கூடாது! உலகமே புரண்டு போனாலும் ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூடாது! அவசியமானால், அவள் இன்னும் அதிகமாக வேலை செய்யவேணும்; ஓய்வு மட்டும் எடுத்துக் கொள்ளக் கூடாது. வைத்தியசாலையை விட்டு, வீட்டுக்குப் போய், சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தாவது, கட்டிலில் படுத்தாவது காலத்தைப் போக்கினால் அவளுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் என்றுதான் தோன்றியது. இங்கே, இந்த வைத்திய சாலையிலேதான், அந்த முக்கியமான காரியத்தைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியும்.

தான் எந்தக் காரணத்திற்காக இப்படி ஓய்வு,ஒழிவு இல்லாமல் அரும்பாடுபட்டு வேலை செய்கிறாள் என்றுகூட அவள் நினைத்துப் பார்க்கவில்லை. அவள் வெகு ஜாக்கிரதையாக அதைப்பற்றி நினைக்காமல் இருக்க முயன்றாள். பயங்காளி போல அந்த விஷயத்தைத் திரும்பிப் பாராமல் ஓடி விட்டாள்.

சாயங்காலமானபோது, நர்ஸுகள் வேலை சமயத்தில் இளைப்பாறும் அறைக்குச் சென்றாள். அங்கே ஒரு கோப்பைத் தேயிலைப் பானத்தைப் பருகினாள். கண் மயங்கியது. திடீரென்று அவளுக்குத் தூக்கம் வந்து விட்டது. மேசையின் ஓரத்தில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு தன்னை மறந்து தூக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்.

பிறகு நர்ஸ் தத்யானா, மரியாவின் தோள்மேல் கையை வைத்தாள்.

"மரியா, உன் கணவனைக் கொண்டு வந்து விட்டார்கள்."

இந்தச் சந்தோஷமான செய்தியைக் கூறிய வயதான அந்தப் பெண்மணியின் அழகற்ற, சுருக்கம் விழுந்த முகம் மலர்ந்திருந்தது. மரியா திடீரென்று விழித்துக் கொண்டாள். வாரன்ஸோவ் வாசலருகே நிற்பதைப் பார்த்தாள். அவன் முக மலர்ச்சியோடு இருக்கவில்லை.

"வா. அவன் காத்துக் கொண்டு இருக்கிறான்" என்றான் அவன். மரியா அவன் வார்த்தைக்குக் கீழ்படிந்து, அவனோடு சென்றாள். அவள் காதில் ஒரு ரீங்காரத் தொனி கேட்டுக்கொண்டு இருந்தது. அவள் இருதயம் 'படபட' வென்று அடித்தது. வாசற்படியில் அவள் தடுமாறி விழப்போனாள். வாரன்ஸோவ் முழங்கையைப் பிடித்து அவளைத் தாங்கி நிறுத்தினான்.

"அவன் சுகமாக இருக்கிறான். பிரயாணத்தால் அவன் களைப்படையவில்லை."

மரியா அவசரமாக நடந்தாள்—இல்லை, ஓடினாள் என்றே சொல்ல வேண்டும். வாரன்ஸோவ் அவளைப் பிடித்து நிறுத்தினான். அவள் ஆச்சரியத்தோடு அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

"மரியா, நான் உன்னை எச்சரிக்க வேண்டும்......"

அவளுடைய உடல் முழுவதும் செயலற்றுப் போகும்படியான குளிர் நடுக்கம் ஒன்று அவளைத் தாக்கியது. கை விரல்களும் கால் விரல்களும் மரத்துப் போய்விட்டன. இன்னும் என்னென்ன கொடிய விபத்துக்கள் அவளுடைய வாழ்விலே நேரிட இருந்தனவோ? அவள் நினைத்ததெல்லாம் தவறு? கிரிஷா இறந்து விட்டானு?

ஆனல், நர்ஸ் தத்யானு, 'உன் கணவனைக் கொண்டு வந்து விட்டார்கள்' என்று தெளிவாகச் சொன்னுளே! திடீரென்று மின்வெட்டுப் போல அவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. ஏன் 'கொண்டுவந்து விட்டார்கள்' என்று சொன்னுள்? ஏன் 'அவன் வந்து விட்டான்' என்று சொல்லவில்லை? இதென்ன அசட்டுத்தனம்! அவன் காயமடைந்து, நொண்டியாகி, வைத்தியசாலையிலே படுத்துக் கிடந்தான் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியும்.

இப்போதுதான் அந்த வார்த்தை அவள் சுய உணர்வைத் தொட்டசைத்தது. ஆனல், அவளுக்கு அதன் அர்த்தம் புரியவில்லை. அந்த வார்த்தையின் தொனி வித்தியாசமாகவும் வெறுமையாகவும் அவள் காதில் ஒலித்தது.

"என்னை எச்சரிக்க வேண்டுமா?"

"ஆமாம். எச்சரிக்க வேண்டும். கிரிகோரி படுகாயமடைந்திருக்கிருன்; இன்னும் அதிக வியாதியாய் இருக்கிருன். நீ ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நான் சொல்வது உனக்கு விளங்குகிறதா?"

இல்லை; அவளுக்கு அது விளங்கவில்லை. வான் ஸோவின் முகம் வெளுத்திருந்தது. அவன் அவளைப் பார்க்கவில்லை.

"ஏன்?"

"குழந்தைத் தனமாகக் கேள்வி கேட்காதே" என்றுன் செயலற்ற குரலிலே.

அவர்கள் படிக்கட்டில் நின்று கொண்டிருந்தார்கள். அவன் ஏன் தன்னை அங்கே நிறுத்தினுன் என்று அவளுக்கு விளங்கவில்லை.

"அவன்........மரியா," அவன் முகம் பயங்கரமாக மாறிவிட்டது. "அவன் ஒரு நொண்டி."

திரும்பவும் குளிர் நடுக்கம் ஏற்பட்டது. அது அவள் மூளையில் எங்கிருந்தோ ஆரம்பித்து உள்ளங்கால் வரைக்கும் பரவி ஓடியது.

"நீ உன்னை அடக்கி ஆள வேண்டும், மரியா. அவனைப் பார்த்த உடனே நீ........"

அதே பனிக்கட்டித் தன்மையான குளிர் நடுக்கம் இரும்புப் பிடியாக அவளுடைய உடலைப் பற்றிக்கொண்டிருந்தது. அவளுடைய கன்னத்தின் சருமம் மரத்துப் போய்விட்டது; உதடுகள் சுருங்கி நோவெடுத்தன.

"அவன்......அவனுக்கு மன நிம்மதியைக் கெடுக்கும் உரோச குணம்......அவன் பயந்திருக்கிறான்......அதனால் நீ......"

அவள் ஒரு வார்த்தையும் சொல்லாமல் தலையை ஆட்டினாள். வாரன்ஸோவ் அவள் கையை ஒரு முறை அழுத்தினான். அந்த அழுத்தலை அவள் கவனியாதது போல் இருந்தாள். திரும்பவும் நடைபாதையில் தன் இயல்பான நடையில் நடக்க ஆரம்பித்தாள். ஆனால், தான் நடக்காமல், நின்ற இடத்திலேயே நிற்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. தான் உயிரோடு இல்லாதது போலவும், ஒரு பனிக்கட்டிச் சிலையாக மாறிவிட்டது போலவும் அவளுக்குத் தோன்றியது. அவள் இருதயத்தை இரும்புப் பிடியாகப் பிடித்து அழுத்தியது திகில் இல்லை; திகிலைவிட பயங்கரமானது அது. வாரன்ஸோவ் மட்டும்......வாரன்ஸோவாவது......

இதோ கதவு வந்து விட்டது. திரும்ப ஒரு முறை வாரன்ஸோவ் அவள் கையைப் பிடித்து அழுத்தினான்; கதவைத் திறந்து விட்டான். அவள் அவனுக்கு முன்னாலே படுக்கையறைக்குள் நுழைந்தாள்.

அவள் உடலில் ரத்தம் பனிக்கட்டியாக உறைந்து போய் இருந்தது நல்லதுதான். அவள் உடல் முழுவதும் உணர்ச்சியற்று மரத்துப்போய் இருந்ததும் நல்லதுதான்.

அங்கே, சாய்வு—நாற்காலியில், ஒரு ஜடப்பொருள் உட்கார்ந்துகொண்டுஇருந்தது.பார்த்தவுடனே பின்வாங்கி ஓடிவிடவேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது. நல்ல வேளையாக மரத்துப்போன அவளுடைய உடல் உணர்ச்சி வேகத்துக்கு இடங்கொடுக்கவில்லை. மரியா சாய்வு-நாற்காலியின் அருகே சென்றாள்.

கட்டுகளை எல்லாம் அவன் தலையில் ஒரு பக்கமாக ஒதுக்கி இருந்தது. அவன்தான் அதை விரும்பி இருக்க வேண்டும். பார்த்தமாத்திரத்தில் அவள் அதைக் கவனிக்க வேண்டுமென்று அவன் விரும்பியிருக்கலாம். பயங்கரமான, நீல நிறமான வெந்த புண்கள்! கிழிந்த இடங்களைத் தைத்த தையல்களின் தழும்புகள்! குழி விழுந்த, கோரமான கண்! அவளுடைய கண்கள் அவனை நன்றாகக் கவனித்தன. சட்டையின் ஒரு கை வெறுமையாகத்தொங்கியது. அசைவற்ற ஒரு காலை சீமைக் களிமண்ணால் மூடி, கட்டுகள் கட்டி இருந்தது. இதுதான் கிரிகோரி.

அதிசயிக்கத் தக்க மனத்திடத்தால் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டாள், மரியா. சாய்வு நாற்காலியின் அருகே சென்றாள்; அதன் எதிரே மண்டியிட்டு நின்றாள். அப்படிச் செய்வதுதான் சரியான காரியம் என்று அவளுக்குத் தோன்றியது. மற்றொரு மரியா அவளுக்குப் பக்கத்திலே நின்றுகொண்டு இருந்தாள். அந்தப் புதிய மரியா, இவள் நடத்தையை எல்லாம் கவனித்து, இன்னின்ன காரியங்களை, இப்படி இப்படிச் செய்ய வேண்டும் என்று உபதேசித்தாள்.

வாரன்ஸோவ் சந்தடி பண்ணுமல் வெளியே சென்று கதவை அடைத்தான்.

"மரீக்கா!"

அந்தப் புதிய மரியாவின் உத்தரவுக்கு இணங்கி, கிரிகோரியின் உருக்குலைந்த முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் மரியா. அவள் கண் முன்னுல் உலகமே அஸ்தமித்து விட்டது. அவள் எதையும் பார்க்கவில்லை. ஆனல் அந்தப் புதிய மரியா கொஞ்சங்கூட இரக்கமில்லாமல், கடுமையாக, இவள் இதைத்தான் செய்யவேண்டுமென்று கூறினுள்.

"நான் உன்னிடம் வர விரும்பவில்லை; உன்னைப் பார்க்க விரும்பவில்லை" என்று கம்மிய குரலில் சொல்லிக் கொண்டிருந்தான் அவன். அதற்கு அவள் பதில் சொல்ல வேணும். அவள் சரியான பதில் சொல்ல விரும்பினாள். முடியவில்லை. பொங்கி வந்த துக்கத்தில், தனக்குத் தோன்றிய முதல் வார்த்தையைப் பற்றிக் கொண்டாள்.

"எனக்குத் தெரியும்."

"என் கண்மணி, என்மேல் கோபம் கொள்ளாதே. விக்டர்தான் சொன்னான்......நீ என்னை......எனக்குத் தெரியும் அப்படிச் செய்யக் கூடாது என்று......"

ஓகோ! வாரன்ஸோவ்! அவளுடைய மனத்தில் இருந்த பளு கொஞ்சம் இறங்கியதுபோல் தோன்றியது. சொல்ல வேண்டிய விஷயங்களையெல்லாம் வாரன்ஸோவ் சொல்லி விட்டான். வேறு என்ன காரியத்தை அவளிடமிருந்து எதிர்பார்க்கவேணும்? எதை எதிர்பார்க்க வேணும்?

அவன் கை தன் கூந்தலின்மேல் இருப்பதை அவள் உணர்ந்தாள். 'இதுதான் அவனுக்கு இருக்கும் ஒரே கை!' இந்தப் பயங்கரமான எண்ணத்தை அவள் நினைக்காமல் இருக்க முடியவில்லை. அது பிடிவாதமாக அவள் மனத்தில் திரும்பத் திரும்பத் தோன்றிக்கொண்டிருந்தது. அவள் கொஞ்சம் அசைந்தாள். முன் நாளில் அவன் முழங்காலில் தன் முழங்கையை ஊன்றி வைத்ததுபோல இப்போது வைக்க முடியாது. திரும்பவும் அவள் அவனைப் பார்க்கவேணும். அவனைப் பார்ப்பதற்கு அவள் எவ்வளவு தூரம் பயந்தாள் என்று அவனுக்குத் தெரியக் கூடாது.

அவள் நடுங்கினாள்.

"என் கண்ணே! மரியா......"

அவள் கண்களைப் பாதி மூடிக்கொண்டாள். அவன் அந்தச் செயலைக் கரைகடந்த மனமகிழ்ச்சியின் அறிகுறியாக நினைத்துக் கொள்வான். திகிலும், குளிரும், வெறுமையும் நிறைந்து, துக்கமே உருவெடுத்த தன் உள்ளத்தைத்தான் அவள் பார்த்துக் கொள்ளுகிறாள் என்று அவன் ஒருபோதும் தெரிந்துகொள்ள மாட்டான்.

எத்தனையோ பெரிய பெரிய விபத்துக்களை, பயங்கரமான படுகாயங்களைக் கட்டுவதையும், குணமாக்குவதையும் இந்த வைத்தியசாலையில் அவள் கண்டிருக்கிறாள். அவை களிலெல்லாம் அவளுக்கு ஒருநாளும் வெறுப்புத் தோன்றியதில்லை. இப்போது......முதல் முறையாக......

தன் உடலில் பரவி இருந்த மரத்துப்போன தன்மையைத் தன் மனத்திடத்தால் வென்றாள். தன் குளிர்ந்த, உயிரற்ற கையினால் அவன் கையைத் தடவினாள் அவனைப் பாராமலே.

"திரும்பவும் உன்னோடு இருப்பது எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது......"

அவன் தலையை ஆட்டினான். அவன் எதையும் கவனிக்கவில்லை; எதையும் தெரிந்துகொள்ள வில்லை. அவள் பதில்சொல்லச் சந்தர்ப்பம் ஏற்படாதபடி அவன் கேள்வி மட்டும் கேட்காமலிருந்தால்.....வாரன்ஸோவ்.....வாரன் ஸோவ் கிரிஷாவிடம் என்ன சொன்னான்?

கதவு கொஞ்சம் திறந்தது.

"மரியா பவ்லோவ்னா, உன் கணவனிடமிருந்து கொஞ்ச நேரம் உன்னைப் பிரிக்க வந்திருக்கிறேன். நீ போய் இளைப்பாறு. நாங்கள் நோயாளியைக் கவனித்துக் கொள்கிறோம்.

"நான்......" மரியா தளர்ந்த குரலிலே எதிர்த்து மறு மொழி சொல்ல ஆரம்பித்தாள். ஆனால் டாக்டர் கையை உயர்த்திக் கூறினாள்:

"தயவுசெய்து பதில் ஒன்றும் வேண்டாம். இப் போது போய் இளைப்பாறு. அப்புறம் உனக்குச் சொல்லி யனுப்புகிறோம்."

சாய்வு-நாற்காலியில் அமர்ந்திருந்த நொண்டியைப் பார்த்துச் சிரிக்க முயன்றாள் மரியா. பிறகு அறையை விட்டு அகன்றாள். இளைப்பாறும் அறைக்குச் சென்று அங்கே இருந்த நாற்காலி ஒன்றில் துக்கத்தோடு உட் கார்ந்து, கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

இதுதான் கிரிகோரி. இன்பத்தின் முடிவு; இளமையின் முடிவு.

"மரியா !"

வாரன்ஸோவ் தன் கையை அவள் கைமேல் வைத்துக்கொண்டான். அவள் அவனை வன்மத்தோடு பார்த்தாள்.

"இப்படித் துக்கப்படாதே, மரியா. முதலில் இப்படித்தான் இருக்கும். நாங்கள் இன்னும் அவனுக்கு வைத்தியம் செய்யப்போகிறோம். அதனால் அவன் உடம்பு தேற வழியிருக்கிறது."

அவள் அவன் பக்கம் தன் முகத்தைத் திருப்பினாள். அந்த முகத்தில் வறண்ட, வெறுப்பு மிகுந்த ஒரு சிரிப்பு!

"உடம்பு தேற வழியுண்டா? உன் கை தேர்ந்த வைத்திய முறை என்ன காரியத்தைச் சாதிக்கமுடியும்?"

"செயற்கைக் கைகால்கள், சீமைக் களிமண், ரண சிகிச்சை."

"அதெல்லாம் எனக்குத் தெரியாதா?"

அவள் மனத்தில் நிறைந்திருந்த திகில் சூழ்ந்த நிலைமையைப்பற்றி வாரன்ஸோவுக்கு என்ன தெரியும்? அவள் ஆத்மாவில் குடிகொண்ட இருண்ட வெறுமையை அவன் அறிவானா? அந்தப் பாலைவனத்திலே—அவள் மனதிலே—காற்று அடித்து, மணலையெல்லாம் அங்கும் இங்கும் தூற்றிக்கொண்டு இருந்தது. இந்த மணலையும், துக்கத்தையும், அனல் காற்றையும் தவிர வேறு ஒன்றும் அவள் உள்ளத்தில் இல்லை.

"மரியா, நீ ஓய்வு எடுத்துக்கொள்ளவேணும். இந்த அனுபவம் உனக்குத் தளர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது. கொஞ்ச நேரத்தில் எல்லாம் சரியாய்ப் போகும். இதெல்லாம் எனக்குத் தெரியாதென்று நினைக்காதே."

ஒருநாளும் இல்லை. அவன் ஒன்றையுமே தெரிந்துகொள்ளவில்லை. எது அவளைத் தளர்ச்சியடையச் செய்தது? கிரிகோரியைப் பார்த்தபோது அவளுக்கு எந்த விதமான உணர்ச்சியும் ஏற்படவில்லை. அதிலேதான் வந்தது எல்லா மோசமும்! காரியம் இப்படித்தான்

முடியுமென்று எத்தனையோ நாட்களாக, தான் எதிர்பார்த்தது போல் அவளுக்குத் தோன்றியது. நடக்கப்போகும் காரியத்தைப்பற்றி அணுவளவும் பிசகாமல், தான் முன்னமே அறிந்திருந்த முறையிலே யாவும் நடந்துவிட்டன என்று தோன்றியது. இந்த விதமாகவே அவள் மனம் குளிர்ந்து, சூன்யமாகி, உலர்ந்து எவ்வித உணர்ச்சியையும் அனுபவிக்க முடியாமல் போய்விடும் என்று எதிர்பார்த்தாள்.

எதிரில் உட்கார்ந்து கொண்டு இரக்கத்தோடு தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் மனிதன்மேல் அவளுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அவள்மேல் அனுதாபப்பட அவனுக்கு என்ன தைரியம்! அவள் அனுதாபத்தை விரும்பவில்லை. தனக்குள், தானே துக்கப்பட்டுக்கொண்டு தனிமையா யிருக்கும்படி அவளை அவன் விட்டுவிட வேண்டும் என்பதுதான் அவள் விருப்பம்.

"கற்றறிந்த டாக்டரே, நீ எதை முறைத்துப் பார்க்கிருய்? நீ எனக்காக இரக்கப்படுகிருயல்லவா? நீ இரக்கமும் காட்டவேண்டாம்; முகத்தையும் நீட்டி வைத்துக் கொள்ளவும் வேண்டாம். எனக்கு வரும் கஷ்டங்களை எல்லாம் நானே சகித்துக் கொள்ளமுடியும். அவ்வளவுதான். தெரிகிறதா?"

"அந்தக் கஷ்டங்கள் எப்படி வரும், மரியா?"

அவன் தலையைத் தாழ்த்திக் கொண்டான்; அவள் முகத்தைப் பார்க்கவில்லை; உணர்ச்சி அற்றவன்போலத் தன் கையினுல் மேசை-விரிப்பின் சுருக்கங்களைச் சரிபண்ணிக் கொண்டிருந்தான்.

"அவை எப்படி வரும் என்று எனக்குத் தெரியாது, மரியா. உனக்குத்தான் தெரியும்" என்று மெதுவாகச் சொன்னுன்.

"உனக்குத் தெரியாதா? அதில் புதுமை ஒன்றும் இல்லை. அது சர்வ சாதாரணமான விஷயந்தான். நான் வைத்தியசாலையிலேயே வேலை செய்து கொண்டு, என் வாழ்நாள் எல்லாம் அவனைப் பாமரிப்பேன். நான் சொல்வது உனக்குக் கேட்கிறதா? என் வாழ்நாள்

எல்லாம், காலொடிந்து, கையிழந்து, உருக்குலைந்த முக முடைய அவனைப் பராமரிப்பேன். தெரியுமா? இதைத் தவிர வேறு என்னதான் இருக்க முடியும்?''

"ஆத்திரப் படாதே, மரியா. விஷயம் அப்படித் தான் இருக்கவேண்டும். ஆனால்...ஆனால், இப்போது அப்படி இல்லை, மரியா'' என்று அவள் கண்களைப் பாராமலே கூறினான்.

"என்ன சொல்லுகிறாய் நீ?''

"இதை எல்லாம் நீ வேறு குரலில் சொல்லி இருக்க வேணும், மரியா.''

"ஓகோ, அப்படியா? கண்ணீர் வடிய, மார்பின் மேல் கையை வைத்துக்கொண்டு பரிதாபக் குரலிலே சொல்லி இருக்கவேண்டும் போலிருக்கிறது!''

"நான் அதைச் சொல்ல வரவில்லை. நான் சொல்ல வந்தது என்ன என்பது உனக்கு வெகு நன்றாகத் தெரியும். இதில் பயனில்லை, மரியா. நீ இப்படிச் செய்யக் கூடாது.''

அவள் அவனைக் கோபத்தோடு பார்த்தாள். அவள் கண்களில் தீப் பொறி பறந்தது.

"ஓகோ, நான் இப்படிச் செய்யக் கூடாதா? நான் இப்படிச் செய்யக் கூடாது என்று சொல்வது யார்? என் வாழ்க்கைக்கு, என் இன்பத்திற்கு நேர்ந்த துன்பமெல் லாம் சர்வ சாதாரணமாக நிகழும் காரியங்களா? அது உன்னைக் கவலைக் குள்ளாக்கவில்லை, உனக்கு அதிர்ச்சி யைத் தரவில்லை! நான் மாத்திரம் என்றென்றைக்கும் தன்னடக்கத்துக்கும், அமைதிக்கும், அறிவுக்கும் உறை விடமாக இருக்க வேண்டுமோ? உன் கவலை எல்லாம் அதுதான்!''

"இந்தக் கஷ்டம் உனக்கு மாத்திரம் நேர்ந்து விட வில்லை, மரியா.'' அவன் குரல் கடுமையாக இருந்தது.

"கஷ்டப்படும் எத்தனையோ ஆயிரம் பேரில் நீ ஒருத்தி.''

"தெரியும். இதை உன் வாயால் நூறு தடவை சொல் லக் கேட்டிருக்கிறேன். இப்படித் துயரப் படுகிறவள் நான்

ஒருத்திதான் என்று சொல்ல முடியாத காரணத்தினலே நான் துக்கப் படாமல் இருக்க முடியுமா? அப்படியா நினைக்கிருய்?'' என்று குறுக்கிட்டாள் நிந்திக்கும் குரலிலே.

"ஆமாம். அதனுல்தான் நீ இவ்வளவு துக்கப்படக் கூடாது. நீ விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேணும். இதை எல்லாம் பேசி என்ன பயன்? பேசுவதற்கு ரொம்ப நேரம் பின்னுலே இருக்கும். இப்போது நீ இளைப் பாறவேணும். அமைதியாகப் படுத்து இளைப்பாறு. சொன்னதெல்லாம் உன் இயல்பான தன்மைக்குச் சற் றுமே பொருந்தாதவை. கொஞ்சங்கூடப் பொருந்தா தவை.''

"இல்லை. என் குணமே இதுதான்.''

"இல்லை. இப்போது நீ மாறி இருக்கிருய்.''

"என் குணத்தைப்பற்றி என்னைவிட உனக்குத்தான் அதிகமாகத் தெரியுமோ?''

"ஆமாம். எனக்குத் தெரியும்.''

"நீ எதை வேண்டுமானுலும் நினைத்துக் கொள். உன் அறிவு உன் வரைக்கும், என் அறிவு என் வரைக்கும்.''

கதவு தட்டும் சத்தம் கேட்டது.

"மரியா பவ்லோவ்னு, வைத்திய ப்ரொபஸர் உன்னைக் கூப்பிடுகிருர். உன் கணவனின் கட்டுகளை மாற்றப் போகிருர்கள்.''

அவள் வாரன்ஸோவைப் பார்த்துத் தலை யசைத்துவிட்டு, அறையிலிருந்து வெளியே சென்ருள். 'கணவன்'—என்ன புதிதான வார்த்தை அது? அதற்கு அர்த்தம் என்ன? முன் நாளில் அதற்கு கிரிகோரி என்ற அர்த்தம் இருந்தது. ஆனுல் இப்போது?

"வந்துவிட்டாயா, மரியா பவ்லோவ்னு. நீ இல்லாமல் ஆரம்பிக்க எங்களுக்கு விருப்பமில்லை. இப்போது உன் சொந்தக் கணவனுக்குக் கட்டுப் போட நீ உதவி செய்ய லாம்.'' வைத்திய ப்ரொபஸர் அன்போடு புன்னகை செய் தார்.

கட்டுகள், சீமைக் களிமண், சாராயம், இவைகளை யந்திரப் பதுமை போல எடுத்து அவர் கையில் கொடுத்தாள் மரியா. அவைகளைக் கொடுத்தபோது அவள் கை நடுங்கவில்லை. அவளுக்கு உணர்ச்சி எதுவுமே ஏற்படவில்லை. எல்லாம் வழக்கம் போலவே நடந்தது. கிரிகோரிக்குக் கட்டுக் கட்ட உதவி செய்வது அவளுக்குச் சந்தோஷத்தைத் தரும் என்று நினைத்தார் அந்த வயதான வைத்திய ப்ரொபஸர். அவளில்லாமல் ஆரம்பிப்பதற்கு அவர் விரும்பவில்லை.

நூற்றுக் கணக்கான கட்டுகளுக்கு இதே அறையில் அவள் உதவி செய்திருந்தாள். கட்டுகளையும் ஆயுதங்களையும் எடுத்து வைத்திய ப்ரொபஸருக்குக் கொடுத்திருக்கிருள். ரண சிகிச்சை செய்யும் மேசை மேல் கிடந்த சிதைந்துபோன மனித சரீரம் கிரிகோரி. அதைக் கிரிகோரி என்று சொல்வது அசம்பாவிதமாகத் தோன்றியது. அவளுடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வைத்திய ப்ரொபஸர் திடீரென்று கண்டுபிடித்துவிட்டால் என்ன செய்வார்? அவளை அந்தப் பக்கமே தலை காட்ட வேண்டாம் என்று கூறி அறையை விட்டு வெளியே தள்ளிவிடுவார். இப்போது அவர் அவளைப் பார்க்கும் கனிந்த, கருத்து மிகுந்த பார்வை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகும்.

ஆமாம்; பெயர் பெற்ற அந்த வைத்திய ப்ரொபஸருக்கு, இதெல்லாம் சாதாரண விஷயங்களாகவே தோன்றியிருக்கும். 'இறந்து விட்டான்' என்ற செய்தியைப் பொய்யாக்கித் திரும்பவும் வந்துசேர்ந்த கணவனைக் குறித்து மனைவிக்கு எல்லையற்ற சந்தோஷம் ஏற்பட்டிருக்கும் என்று நினைத்திருப்பார். இதைத் தவிர வேறு எந்த எண்ணமும் அவருடைய கற்பனையில்கூட உதித்திருக்க முடியாது. தன் சொந்தக் கணவனுக்குக் கட்டுத்துணிகளைச் சுற்றிக் கொடுப்பது அவளுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று அவர் நினைத்திருப்பார். அவள் இல்லாமல் புண்களைக் கட்ட ஆரம்பிக்கவும் அவர் விரும்பவில்லை. என்ன அன்பு! என்ன கவலை!

அந்த வெள்ளைக் கோப்பையில் இருந்த ரத்தம் கிரிகோரியின் ரத்தம். ஈரமாகக் கலைந்திருந்த தலைரோமம்

கிரிகோரியினுடையது. சல்லாத் துணிக் கட்டுகளின்கீழே குணமடைந்து வந்த முகம் கிரிகோரியின் முகந்தான்.

'என் வாழ்க்கை முழுவதிலும் இதே மாதிரித்தான் இருக்கும்' என்று ஜாக்கிரதையாகக் கட்டுகளைச் சுற்றும் போது நினைத்துக் கொண்டாள். கிரிகோரி வீட்டுக்கு வருவான்; தாங்கள் இருவரும் சேர்ந்து வசித்த அதே வீட்டுக்குத் திரும்பி வருவான். அந்த அறையில் ஒவ்வொரு சாமானும், ஒவ்வொரு சிறிய பொருளும் அவர்கள் இன்பமாகக் கழித்த நாட்களை நினைப்பூட்டின. அதே அறையில் அவர்கள் திரும்ப வசிக்க நேரிடும். ஆனால், இப்போது மரியாவும் இல்லை, கிரிகோரியும் இல்லை. அவர்களுக்குப் பதிலாக இரண்டு புதிய, பயங்கரமான மனிதர்களே இருந்தார்கள். அவளும் இப்போது கிரிகோரியைப் போலவே உருக்குலைந்து இருந்தாள். இந்தச் செய்தி இதுவரைக்கும் ஒருவருக்கும் தெரியாது; போகப் போக அது தெரிந்துவிடும். அவள் உள்ளத்தை யெல்லாம் ஆட்சி செய்த வெறுமையும், குளிர்ந்த இருளும், முகத்தில் கட்டாயமாக வெளிப்படும். அகத்தின் அழகு நிச்சயமாகவே முகத்தில் தெரிந்துவிடும்.

"எங்கள் கடமை முடிந்தது. நீ உன் கணவனை அழைத்துச் செல்லலாம்" என்று வைத்திய ப்ரொபஸர் சிரித்துக் கொண்டே சொன்னார். எத்தனையோ முறை செய்தது போலவே, அவள் கிரிகோரி படுத்திருந்த தள்ளு-வண்டியைக் கதவருகே தள்ளிக் கொண்டு போனாள்.

அவளுடைய கண்ணெதிரில் கரும்புள்ளிகள் மிதப்பது போல் தோன்றியது. அவளுக்கு அதிகக் களைப்பு; அவள் கை, கால்களில் சொல்லமுடியாத வேதனை. நம்பிக்கையற்ற ஏக்கமும், மனச் சோர்வும், அவள் உள்ளத்தில் நிறைந்திருந்தன. அவை எப்போதும் ஒரே தன்மையாக இருந்தன. எப்போதும் ஒரே நிலையில் இருந்தன. ஆறாவது படுக்கையறையில் காயமடைந்து கிடந்தவன் வழக்கம் போல் அலறிக்கொண்டிருந்தான்; இரண்டாவது மாடியில் ஒரு யுத்த வீரன் இறந்துகொண்டிருந்தான்; பத்தாவது படுக்கையறையில் வாலிப வீரன் ஒருவன் உடம்பு குணமாகி வெளியே செல்ல அனுமதி பெற்றிருந்தான்.

அவளுடைய வாழ்க்கையில் முதன் முதலாக இப்பொழுதுதான் வலிமை எல்லாம் வற்றி விட்டதுபோல் தோன்றியது. பிறர் அவளிடம் எதிர்பார்த்த காரியங்களைச் செய்து முடிக்க அவள் ரொம்பப் பிரயாசைப்பட வேண்டியிருந்தது. முன்பெல்லாம் கிரிகோரியின் சிரிப்பு, குரல், பார்வை—இவையாவும் அவளுக்கு வேண்டிய சக்தியைக் கொடுத்து அவளை மகிழவைத்தன. இரவும், பகலும் கிரிஷா அவளோடு இருந்தான்; காயமடைந்தவர்களின் கட்டிலின்மேல் அவளோடு அவனும் குனிந்தான்; அவள் அவர்களுக்குச் சொல்லவேண்டிய வார்த்தைகளைக் காதுக்குள் முணுமுணுத்தான்; பலவீனமான அந்த உடல்களைத் தூக்கிச் சுமக்க உதவி செய்தான்; சக்தியற்ற கைகளுக்குச் சக்தியை அளித்தான்; வைத்தியசாலை நடை - பாதைகளில் அவளோடு நடந்து சென்றான். அவள் எதையும் தனியாகச் செய்யவில்லை. அவனோடு சேர்ந்துதான் செய்தாள். தனக்கு அறிமுக மில்லாதவர்களின் காயங்களுக்குக் கட்டுப்போட்டபோதெல்லாம், கிரிகோரியின் காயங்களையே கட்டுவதாக எண்ணிக்கொண்டாள். ஜலம் நிறைந்த கண்ணாடி டம்ளரை தாகத்தால் வறண்டு போன உதடுகளின் அருகே வைத்தபோது, கிரிகோரிக்கு நீர் ஊட்டுவதாகக் கருதினாள். அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள். அவளுக்கு காயம்பட்ட ஒவ்வொரு மனிதனும் கிரிகோரியாகவே தோன்றினான்.

இப்போது கிரிஷா படுக்கையறையில் படுத்திருந்தான். விரும்பியபோது அவள் போய் அவனைப் பார்க்க முடியும்; அவன் குரலைக் கேட்கமுடியும். அவனைப் பார்ப்பதும், அவன் குரலைக் கேட்பதும் இப்போது தூக்கத்தில் நிகழும் கனவு நிகழ்ச்சியல்ல. உண்மையாகவே நிகழக் கூடிய காரியந்தான். ஆனால், அவை அவளுக்குச் சக்தியையும் கொடுக்கவில்லை, சந்தோஷத்தையும் கொடுக்கவில்லை.

"எது எப்படி இருந்தாலும் நான் முன்போலவே வேலை செய்து கொண்டு இருக்கிறேன்" என்று மரியா தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள். அதே சமயத்தில், தான் 'முன் போல' வேலை செய்யவில்லை என்பதும் அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்திருந்தது. காயமடைந்தவர்களுக்கு

இப்போது அவள் கொடுத்த தண்ணீர், அவர்களுக்கு உயிர் கொடுத்த மந்திரப் பானமல்ல; அது வெறும் தண்ணீர்தான். அவர்கள் நெற்றியில் வைத்த கை ஜுரவேகத்தைத்தான் மதிப்பிட்டது. அந்தத் தொடுகையின்பம் அவர்களுக்கு ஆரோக்கியமான நித்திரையை இப்போது தரவில்லை. அவள் உதட்டில் தவழ்ந்த புன்னகை முயற்சியின் விளைவுதான். அதில் முன்போல எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை சுடர்விட்டுப் பிரகாசிக்கவில்லை. அவள் செய்துவந்த வேலை அவளுக்குச் சக்தியைக் கொடுக்கவில்லை; அவளிடம் இருந்த சக்தியை உறிஞ்சிக் குடித்துத் தலைவலியைத்தான் கொடுத்தது. அவள் கையும் காலும் வலித்தன. அவள் ஊக்கம் குன்றி, உற்சாகமிழந்திருந்தாள். நோயாளிகளின் தனித் தனி முக வேறுபாடுகள் அவள் மனதில் கலந்து மயங்கிவிட்டன. எல்லாம் புதிய, அர்த்தமற்ற சூன்யமாகவே தோன்றியது அவளுக்கு. அவர்களுடைய கதைகள்—வாழ்க்கைச் சித்திரங்கள்—தத்தமக்குரிய வேற்றுமையற்று, வர்ண ஜாலத்தோடு துலங்கும் அழகை இழந்து, தொலையில் நிகழ்ந்த ரசமற்ற கதைகளாக மாறிவிட்டன.

இல்லை; இப்பொழுது வைத்திய ப்ரொபஸர் நோயாளிகளைத் தாம் குணமாக்கவில்லை என்றும் மரியாவே அவர்களைக் குணமாக்கினாள் என்றும் சொல்ல முடியாது. இப்பொழுது அவள் தனக்குக் குறித்திருந்த வேலைகளைத்தான் தவறில்லாமல் செய்து வந்தாள். தானாகை இயங்கும் யந்திரப் பதுமை போல, எதையும் உதாசீனமாகச் செய்து வந்தாள்; செய்து வந்த வேலைகளில் அவளுக்குக் கொஞ்சங்கூட ஊக்கமும், உற்சாகமும் இருக்கவில்லை. இப்படி வேலை பார்த்தால் போதாது என்று தோன்றியது. அவள் முன்பு செய்த விதமாக இப்பொழுது வேலை செய்யவில்லை. முன்பு, அவள் தன்னுடைய உள்ளக் களிப்பை, தனக்கிருந்த நம்பிக்கையை, தன் இளமையை, தன் வலிமையை, தனக்கிருந்த உற்சாகத்தை, காயம் அடைந்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தாள். ஆனால் இப்பொழுதோ, தண்ணீர், காயக் கட்டுகள், மருந்துத் துளிகள், மருந்துப் பொடிகள்—இவைகளைத் தவிர வேறொன்றையுமே அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

இப்படிச் செய்தால் என்ன? நூற்றுக் கணக்கான நர்ஸுகள் வழக்கமாக இப்படித்தானே வேலை செய்கிருர்கள். காயம் அடைந்தவர்களுக்கு உதவி புரிவதைத் தங்கள் வாழ்க்கையின் பிரதம நோக்கமாக, சிறந்த அழைப்பாகக் கருதி, தங்கள் மண்டையை உடைத்துக் கொள்கிருர்களா? இல்லையே. நான் எதிலே அவர்களுக்குத் தாழ்ந்து விட்டேன்? எதிலே அவர்கள் என்னிலும் உயர்ந்துவிட்டார்கள்?—இப்படி எல்லாம் மரியா தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். இதெல்லாம் உண்மை அல்ல என்று அவளுக்கு நன்ருய்த் தெரியும். இதற்கு முன் அவள் முற்றிலும் வித்தியாசமானவள், இப்பொழுதோ, இன்னதென்றே விளங்காத பயங்கரமான தன்மையிலே எல்லாம் முடிவடைந்து விட்டது.

அவளுடைய தாய்நாடு பகைவனுடைய கொடிய கைக்குள் அகப்பட்டுப் போராடி, ரத்தம் சிந்திக் கொண்டிருந்தது. இந்த நிலைமையில் மரியா விலகி நிற்கத் தொடங்கி விட்டாள்; எல்லாவற்றையும் சோர்வடைந்த கண்களோடு பார்த்துக் கொண்டிருக்க ஆரம்பித்து விட்டாள். அவள், இப்பொழுது, பகைவருக்கு எதிராகச் செல்லும் படையிலே முன்னேறிச் செல்லவில்லை; வெற்றிக் கொடி ஏந்திக்கொண்டிருக்கவும் இல்லை; பகைவரைத் தாக்கிப் போராடவும் இல்லை. போராடிக் கொண்டிருக்கும் உடம்பிலே செத்துச் செயலற்றிருக்கும் தசை போல் அவள் இருந்தாள். பெரிய புயற் காற்றிற்கு எதிராக வளர்ந்து நிற்கும் மிகப் பெரிய பசுமரத்தின் உலர்ந்த சுள்ளிபோல் அவள் தோன்றினாள்.

ஒன்றிலிருந்து மற்ருென்று தொடர்ந்து வரவில்லை என்று சில தருணங்களில், அவளுக்குத் தோன்றியது. அவளுடைய சொந்த வாழ்க்கை—அவளை மட்டுமே சார்ந்ததாகத் தோன்றும் சுய ஜீவியம்—முடிவடைந்து விட்டாலும், எந்தப் பெரிய லக்ஷியத்திற்காக உழைக்கத் தொடங்கினளோ, அந்த லக்ஷியம் இன்னும் முடிவடையவில்லை என்றும், தான் அதற்காக நன்ருய் வேலை செய்ய முடியும் என்றும், அவள் இப்பொழுது கூடச் சொல்லிக் கொள்ள முடியும்.

ஆனால், இப்படிக் கருதுவது தவறு என்று அவளுடைய உள்ளத்தின் ஆழத்திலே அவளுக்கே நன்றாகத் தெரிந்திருந்தது. ஒருவருடைய சுகஜீவியத்திற்கும், மனித சமூகத்தின் பொதுவான லக்ஷியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றும், ஜன சமூகத்தின் முழுத் தொகுதியையும் அமைக்கின்ற சின்னஞ்சிறு அங்கங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணித்த அவிழ்க்க முடியாத பந்தங்களால் கட்டுண்டு இருக்கின்றன என்றும் அவளுக்கு நன்றாய்த் தெரியும். முன்னொரு காலத்தில் இருந்த மரியாவின் வெளிறி மங்கிய வெறும் ஞாபகச் சின்னந் தான் இப்பொழுது தோன்றிய மரியா; கலங்கிய நீரில் பிரதிபலித்துத் தோன்றும் நிழல் போன்றவள். மிகவும் கடினமான ஓட்டுக்குள்ளே அவளுடைய உள்ளம் புதைந்து கிடந்தது. இனிமேல் அந்த உள்ளத்தை இன்பமோ, துன்பமோ, சுகமோ, துக்கமோ, எதுவுமே தீண்ட முடியாது. முதலிலே, அவளுக்குள் ஒரு பொழுதும் அணைந்து போகாமல் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த அந்த ஒளிகூட இப்பொழுது அவளுடைய இருதயத்தைத் தொட முடியாது.

காயம் அடைந்தவன் மரியாவின் பக்கமாகத் திரும்பினான். வெண்மையான துணிக் கட்டுகள் அவனுடைய முகத்தை மறைத்திருந்தன.

"உனக்கு எப்படி இருக்கிறது?"

"இப்போது சற்றுக் குணந்தான். எனக்கு உடம்பு சரியாகி விட்டது. இப்பொழுது இந்தக் கட்டுகளை நீக்கி விடலாமே."

"வேளை வரும்போது அதை எடுத்து விடுவார்கள். அதற்கு இன்னும் கொஞ்சம் நாட்கள் கூடக் காத்திருக்கவேணும்."

"நர்ஸ், உன் உடம்புக்கு என்ன? உடம்பு சரியாக இல்லையா?"

அவள் திடுக்கிட்டாள்.

"இல்லை; ஏன் அப்படிக் கேட்கிறாய்?"

"எனக்குத் தெரியாது. உனக்கு உடம்பு சரியாய் இல்லையோ என்று நினைத்தேன்."

"நீ கொஞ்ச நேரம் இங்கே இருக்க முடியுமா?"

"ஆமாம். கொஞ்ச நேரந்தான் இருக்க முடியும்."

அவள் அவனைப் பார்த்துப் புன்னகை செய்ய முயன்ருள்; ஆனல், புன்னகை வரவே இல்லை. வேதனையோடு அவளுடைய உதடு கோணிற்று. காயம் அடைந்தவனுடைய கரிய விழிகள் அடுக்காக அமைந்த துணிக் கட்டுகள் வழியாக அவளைக் கூர்ந்து பார்த்தன. அந்த வாலிபன் அவளை உள்ளூடாக ஆராய்ந்து அவளுடைய இருதயத்திலே நிகழ்வதை எல்லாம் பார்ப்பது போல அவளுக்குத் தோன்றியது. அதனல் அவள் கலக்கம் அடைந்தாள்.

"என் கடிதத்தை வாசித்துக் காட்ட உனக்கு இஷ்டமா, நர்ஸ்?"

"என்ன கடிதம்? உனக்கு இன்னெரு கடிதம் வந்ததா?"

"இல்லை" என்று காயமடைந்த மனிதன் முணுமுணுத்துக் கொண்டே முகத்தைத் திருப்பிக் கொண்டான். "அதே கடிதந்தான்."

"உனக்குத்தான் அது மனப்பாடம் ஆய்விட்டதே."

"அதைப் பற்றி என்ன கவலை? மனப்பாடமாய் தெரிவது ஒருவிதம்; அதை இன்னெருவர் வாசித்துக் கேட்பது வேறெரு விதம். ஒருவேளை உனக்கு அது சிரமமாயிருக்குமா, நர்ஸ்?"

"ஒரு சிரமுமில்லை, அசட்டு மனிதனே! நான் சந்தோஷமாக அதை வாசிக்கிறேன். எங்கே அந்தக் கடிதம்?"

இப்போது அந்தக் கடிதத்தை வாசிப்பது கஷ்டமாகத்தான் இருந்தது. கசங்கிய அந்தக் கடிதத்தை வாசித்து வாசித்து அதன் எழுத்துக்கள் கலைந்துவிட்டன; வேர்வையும், ஜுரத்தின் உஷ்ணமும் நிறைந்த கையினல் தொட்டுத் தொட்டு அந்தக் கடிதமே அழுக்கடைந்துவிட்டது. ஆனல், அவனைப் போலவே அவளுக்கும் அந்தக் கடிதம் மனப்பாடமாயிருந்தது.

"என் அன்பார்ந்த வஸ்யா!" என்று வாசிக்க ஆரம்பித்தாள்.

அவன் வார்த்தைகளைச் சரியாகக் கேட்க வேண்டி தலையணை மீது சாய்ந்து கொண்டான். தான் வெகு நன்ருக அறிந்திருந்த அந்த வார்த்தைகளுக்காகக் காத்திருந்த பொழுது, ரத்தமில்லாமல் வெளிறிய உதடுகளில் ஒரு புன்னகை தவழ்ந்தது.

"நானும், என் தாயும், என் சிறிய தங்கை பிரோஸ்யாவும், என் சித்தியும், இதர நண்பர்களும் உன்னை நமஸ்கரிக்கிருேம். நீ எங்கே காயம் அடைந்து கிடக்கிருய் என்பதை ஏன் எனக்கு எழுதவில்லை......"

"...நீ இருக்கிற இடம் தெரிந்தது...... எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்று குறுக்கிட்டுப் பேசிஞன் காயமடைந்தவன்.

"ஆமாம், மன்னிக்கவேண்டும். நான் அதை விட்டு விட்டேன். 'நீ இருக்கிற இடம் தெரிந்தது. உன் விலாசம் எனக்கு இப்போது தெரியும். ரொம்ப சந்தோஷம். நீ எங்கே காயம் அடைந்து கிடக்கிருய் என்பதை எனக்கு ஏன் எழுதவில்லை?'"

மரியா ஒரு நிமிஷம் நிறுத்திஞள். அடுத்த வாக்கியம் அவள் நினைவுக்கு வந்து அவள் உள்ளத்தைப் பிழிந்தெடுத்தது. காயமடைந்தவன் ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தான்.

"ஒரு நிமிஷம் பொறு. இங்கே எல்லாம் கலைந்திருக்கிறது."

"எங்கே இருந்தாலும், நானே வந்து..."என்று காயமடைந்தவன் அவளுக்கு நினைப்பூட்ட ஆரம்பித்தான்.

"ஆமாம், அதுதான். 'எங்கே இருந்தாலும், நானே வந்து உன்னை அழைத்துவருவேன் என்று உனக்குச் சொல்ல விரும்புகிறேன். உன் உடம்பிலே எங்கே காயம் பட்டிருக்கிறது என்பதைத் தயவுசெய்து விவரமாக எழுது. நீ ஒரு வேலையும் செய்ய முடியாத நிலைமைக்கு வந்திருந்தாலும் பரவாயில்லை. என் மனநிலை முன்பு இருந்ததைப் போலவேதான் இன்றும் இருக்கிறது.'"

அவள் குரல் கம்மியது. வஸ்யா தன் கையை நீட்டிஞன்.

"கடிதத்தை என்னிடம் கொடு."

"ஏன்? மீதியை நான் வாசிக்க வேண்டாமா?"

தன் குரல் எவ்வளவு துக்கமயமாக, உணர்ச்சியற்று இருந்தது என்று இப்போதுதான் அவளுக்குத் தெரிந்தது. அது அவளுக்கே பயமாக இருந்தது.

"இல்லை. வேண்டாம், கடிதத்தைக் கொடுத்துவிடு."

அவன் குரலில் ஆத்திரம் நிறைந்திருந்தது. கசங்கிக் கிழிந்திருந்த அந்தக் கடிதத்துண்டை அவளிடமிருந்து வாங்கி, வெகு ஜாக்கிரதையாகத் தலையணையின் கீழே வைத்தான்.

பின்பு அவளைக் கோபத்தோடு முறைத்துப் பார்த்தான்.

"வந்தனம், நர்ஸ். அவ்வளவுதான்."

"பிறகு, உன் இஷ்டம்."

"சரிதான்."

அவன் தன் முகத்தைச் சுவற்றின் பக்கமாகத் திருப்பிக் கொண்டான். அவர்கள் சம்பாஷணை அதோடு முடிந்துவிட்டது என்று குறிப்பிடுவதுபோல் இருந்தது அவனுடைய செய்கை.

"இப்போது தூங்கப்போகிறாயா?"

"ஆமாம். தூங்கலாமென்றுதான் நினைக்கிறேன்."

அவள், அவன் கம்பளியை நேராக இழுத்துப் போர்த்துவிட்டு, படுக்கை அறையிலிருந்து மெதுவாக வெளியே சென்றாள். வெளியே நடைபாதையில் ஜன்னலண்டை சற்று நேரம் நின்றாள். என்ன இது? ஏன் இப்படி நடந்தது? அவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுத்து, வாழ்க்கையிலும், மனித சமூகத்திலும், வருங் காலத்திலும் அவனுக்கு இருந்த நம்பிக்கையை உறுதிப் படுத்தி அவன் உள்ளத்தைக் களிக்கச்செய்த அந்த கடிதத்தை அவள் எத்தனைமுறை வாசித்திருக்கிறாள்! அப்படியானால், இப்போது புதிதாக என்ன மாறுதல் ஏற்பட்டு விட்டது. அந்தக் கடிதத்தைக்கூட அவள் சரியாக வாசிக்க முடியவில்லையே. முன்னாளில் அதன் வார்த்தை

களில் அடங்கியிருந்த ஒளியை அவள் குரலிலே கொண்டு வர முடிந்தது. இப்போது அதே குரலில் அந்த வார்த்தைகளுக்கு இயல்பாக இருந்த ஒளியும் மங்கிவிட்டது. தன் பராமரிப்பால் உலக வாழ்க்கைக்குத் திரும்பிவந்த இந்த வாலிபனின் நம்பிக்கையை, மன உறுதியை அகற்றிவிட அவளுக்கு என்ன உரிமை உண்டு ?

"உனக்கு என்ன நேர்ந்து விட்டது, மரியா? உன் மனதில் என்ன மாறுதல் ஏற்பட்டு விட்டது ?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள், தன் கொதிக்கும் தலையை குளிர்ந்த கண்ணாடி ஜன்னலின்மீது சாய்த்த வண்ணமே. "மரியா, இப்போது நீ யார் ?"

ஒன்றையும் அறியாத, ஒன்றையும் தெரிந்துகொள்ளவும் முடியாத ஒரு எளிய கிராமப் பெண்ணின் சாதாரணக் கடிதம்......முன்னாளில் அதே கடிதத்தை எவ்வளவு வித்தியாசமான குரலில் வாசித்திருக்கிறாள் ! அந்தக் குரலில்தான் என்ன மகிழ்ச்சி, என்ன நம்பிக்கை ! தன் உள்ளத்தில் கொலுவீற்றிருந்த உணர்ச்சியும் நம்பிக்கையும் குரலிலே பிரதிபலிக்க வாசித்தாளல்லவா ? ஆனால் இப்போது...அவளுக்குப் பின்னாலே நடைபாதையில் பேச்சுக் குரல் கேட்டது.

"அவன் நிலைமை இன்று மோசமாக இருக்கிறது. நீ போய் அவனிடம் உட்கார்ந்திரு, ராய்ஸா" என்று லேடி டாக்டர் சொல்லிக் கொண்டிருந்தார். ஆமாம்; புதிய நம்பிக்கையை ஊட்டி, சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுத்து வேதனையை ஆற்றித் தேற்றுவதற்கு இப்போது மரியாவை ஒருவரும் கூப்பிடுவதில்லை. வேதனையோடும் துக்கத்தோடும் எதிர்த்துப் போராட முடியாமல், இதற்கு முன்பு மரியாவின் உதவியை நாடிய அதே ராய்ஸாவை அவர்கள் அழைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

"உனக்கு என்ன நேர்ந்து விட்டது, மரியா ? உன் மனதில் என்ன மாறுதல் ஏற்பட்டு விட்டது, மரியா ? உன் மனச் சாட்சிக்கு விரோதம் இல்லாமல்தான் வேலை செய்கிறாய். ஆனால் அந்த வேலையில் ஜீவனில்லை, மனமில்லை, புன்னகையும் இல்லை ; அவ்வளவுதான்."

இத்தகைய நடத்தையினால் அவள் கிரிஷாவுக்கு மாத்திரம் துரோகம் செய்துவிடவில்லை, கிரிஷாவை விட முக்கியமான ஒருவனுக்கு, கிரிஷாவைவிட பெரிதான ஒரு லட்சியத்திற்குத் துரோகம் செய்து விட்டாள். இந்தத் துரோக சிந்தனைதான் அவள் உள்ளத்தைப் பாலைவனமாக மாற்றி விட்டது. இல்லை; பிறருக்குக் கொடுப்பதற்கு அவளிடம் இப்போது ஒன்றும் இல்லை. அவளே பிச்சைக்காரனைவிட பரம ஏழை என்று சொல்லும் நிலைமையிலே இருந்தாள். அவள் படிக்கட்டு வழியாக இறங்கி, தனக்கு ரொம்பப் பழக்கமான நடைபாதை வழியாக மெதுவாக நடந்து சென்றாள். அந்த நடைபாதை அவளுக்கு பழைய சம்பவங்களை நினைப்பூட்டியது. அதன் வழியாகத்தான் காயமடைந்தவர்களின் படுக்கை அறைகளுக்கும், ரண சிகிச்சை செய்யும் அறைக்கும் அவசரமாக நடந்து சென்றாள். அறிவும், காருண்யமும், அக மகிழ்ச்சியும், சுறுசுறுப்பும் நிறைந்த மரியாவாக இந்த நடைபாதை வழியாகத்தான், படுக்கை அறைகளில் கிடந்த வியாதியஸ்தருக்கு தன் அன்பைச் செயலிலே சாதித்துக் காட்ட வேண்டுமென்று அங்கு மிங்கும் ஓடினாள்.

இப்போது அதே நடை பாதையில் அமைதி குடிகொண்டிருந்தது. அது சர்வ சாதாரணமான குளிர்ந்த வெண்மையான நடைபாதை. அதில் சிவப்பு நடைபாய் விரித்திருந்தது. மூடியிருந்த படுக்கை அறைகளின் கதவுகள் ஓசை பண்ணாமல் நிசப்தமாக இருந்தன. கொஞ்ச நாட்களுக்கு முன் தன் சொந்த வீட்டுச் சுவர்கள் போல் தோன்றிய அதே சுவர்கள் இன்று அவளுக்கு எவ்வித உணர்ச்சியையும் தரவில்லை.

"நீதான் மாறிவிட்டாய்; நீதான் வேறு மனுஷி ஆகிவிட்டாய்," என்று படிக்கட்டில் இறங்கிச் சென்ற போது தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். அவள் பராமரித்து,பாதுகாத்து, யமன்கையிலிருந்து மீட்ட எத்தனை பேர் இந்தப் படிக்கட்டு வழியாக இறங்கிச் சென்றார்கள். இப்போது வஸ்யாகூட அவளை வெறுத்து விட்டான். அந்த வெறுப்பு அவள் கடிதத்தைச் சரியாக வாசிக்காத காரணத்தால் மட்டும் ஏற்படவில்லை. அவள் வஸ்யாவையும் அவனைப் போன்றவர்களையும் வஞ்சித்து

விட்டாள். இது அவனுடைய அந்தராத்மாவுக்குத் தோன்றியிருக்கவேண்டும். அவள் அவனையும் சேர்த்துத் தானே வஞ்சித்தாள்?

அல்லது, ஒருவேளை வாழ்க்கை, விதிப்பயன், அவள் நம்பியிருந்த காரியங்கள், அவள் முக்கியமானவை என்று நினைத்திருந்தவைகள், தோல்வியின்றி வெற்றி மாலையே சூடும் என்று அவள் நினைத்திருந்தவைகள், அவள் முழு உண்மையென்று மதித்திருந்தவைகள்—எல்லாம் சேர்ந்து அவளையே வஞ்சித்து விட்டனவோ?

அப்படியானல் ஏன் இந்தச் சஞ்சலம்? ஏன் இந்தக் குறுகுறுத்த மனப்பான்மை? தலையைத் தூக்கி, ஆவலோடும் கேள்விக்குறியோடும் அவளைப் பார்த்த வியாதியஸ்தரின் கண்களை நேருக்கு நேர் பார்ப்பதற்கு ஏன் இந்த வெட்கம்! முன்பெல்லாம் அதே கண்களின் கேள்விகளுக்கு அவள் விடையளிக்கவில்லையா?

"உனக்கு என்ன நேர்ந்து விட்டது, மரியா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள்.

* * * *

டாக்டர் வாரன்ஸோவுக்கு மிகவும் கடினமான இருள் சூழ்ந்த நாட்கள் தொடங்கிவிட்டன. இப்படிப் பட்ட நாட்கள் வரும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. அவன் உணருவதற்கு முந்தியே அந்த நாட்கள் மறைவாக வளர்ந்துவிட்டன. அது அவனைக் கெட்டி யாகப் பற்றிக்கொண்டது. கரிய உருவிலே தோன்றிய அந்தப் பொல்லாங்கு, நாளுக்கு நாள் மிகவும் வல்லமை பெற்று வளர்ந்தது. அதை எதிர்த்து நிற்க அவனுக்கு ஆற்றல் இல்லை.

நடைபாதை வழியாக நடந்து சென்ற மரியாவை அவன் பார்த்தான். அவளுடைய கண்களைச் சூழக் கருமை படர்ந்திருந்தது. அவளுடைய முக நரம்புகள் இழுப்புண் டிருந்தன; முகம் வெளிறியிருந்தது. அவள் தான் அவனுடைய காதலி மரியா; இந்த உலகத்திலே அவனுக்கு உகந்த ஒரே பெண். அவளுடைய கரங்கள் குழைந்து இரு பக்கத்திலும் தொங்கின. அவளுடைய தோள்கள் தொய்ந்திருந்தன. ஆ! அவளை அவன் இரு கைகளாலும் வாரி எடுத்து, வெகு தூரத்திற்கு அப்பால்

எங்கேயாவது வயல் வெளிகளில், அலர்ந்த மரங்களின் இடையிலே, பாறைகளினூடே 'களகள, குளுகுளு' என்று உளறிக்கொண்டு ஓடுகிற பளிங்கு—நீர்—ஓடைக் கரைக்குக் கொண்டுபோய் விடலாமே! சூரியனுடைய வெப்பம் படாமல் பசுமையான கிளையினால் அவளை மறைத்துக் காக்கலாமே; கருநீலமான வானத்தையே அவள் பார்க்கும்படிச் செய்துவிடலாமே. அவள் வேறு ஒன்றையும் நினைக்காமல், ஒன்றையுமே, நினைக்காமல் இருக்கலாமே!

வழக்கப்படியே மரியா அமைதியாகவும் வெகு திறமையாகவும் விரைவாகவும் ஆயுதங்களை அவனிடம் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். இதற்கு முன் ஒருபொழுதுமில்லாத சிறு சுருக்கங்கள் அவளுடைய அதரங்களின் கோடியிலே அமைந்திருந்தது. அவளுடைய கண்கள் ஒளி இழந்திருந்தன. ஆ! அவளை இந்த இடத்திலிருந்து வெகு தூரத்திற்கப்பால் ஒரு இடத்திற்குக் கொண்டுபோய், அவளிடம் அவன் தனக்குள்ள வேதனையையும், தன் காதலையும், தான் சொல்ல வேண்டியவைகள் எல்லாவற்றையும் சொல்லக் கூடுமானால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? அவனுடைய நீடித்த ஏகாந்தமான நாட்களையும், மனக்கலக்கமான இரவுகளையும், இதுவரைக்கும் அவன் வருந்திய வருஷங்களையும், அவளை முதன் முதலில் சந்தித்த நாள் முதலாக அதுவரைக்கும் நடந்தவைகளையும் — எல்லாம் அவன் அவளிடத்தில் சொல்லிவிட்டால் எவ்வளவு, ஆறுதலாக இருக்கும்?

அவன் செய்துவந்த வேலையைத் தவிர, அவனுடைய வாழ்க்கையில் வேறு நூதனமான சம்பவங்கள் எதுவுமே நிகழவில்லை. அவனுக்கு மனைவியாக இருந்த பெண் அவனை விட்டு வெகு காலத்திற்கு முந்தியே பிரிந்து போய் விட்டாள். அவள் அவனுக்குத் துயரத்தைத் தவிர வேறு ஒன்றையும் அளிக்க வில்லை. அந்த ஞாபகங்கள் எல்லாம் மங்கி விட்டன; கசப்பான ஞாபகங்களாக மறைந்து விட்டன. வாழ்க்கையைப் பற்றி ஒன்றுமே தெரியாத கற்றுக் குட்டி மாணக்கனுடைய புத்தியீனமான செய்கையாகவே அந்தக் கலியாணம் முடிவுற்றது. அதற்கப்புறம், முயற்சி குன்றாமல் படிக்கும் வித்யார்த்தியாகிய

மரியா அவனுடைய பள்ளிக்கூட வகுப்பறைக்கு முதன் முதலில் வந்த நாள் வரைக்கும் அவன் வேறு எந்தப் பெண்ணையும் காதலித்ததில்லை. அவளுடைய கூந்தலின் பிரகாசத்தால் அவனுடைய பிரசங்கக் கூடம் ஒளி பெற்றது. குழந்தை இயல்பிலே மனப்பூர்வமான சிந்தனைகளை வெளியிட்ட அவளுடைய விரிந்த கண்கள் அவனுடைய உள்ளத்தை மகிழ்வித்தன.

மரியா, கிரிஷா, இருவரும் ஒருவருக்கொருவர் பாராட்டினர், கபடமற்றுக் கவிந்து பாயும் பிரசண்டமான காதலையும் அவர்களுடைய மன ஒற்றுமையையும் கவனித்தபோது, அவன் எவ்வளவு தூரம் உள்ளத்திலே வருந்தினன்? எத்தகைய போராட்டங்கள் அவனுடைய உள்ளத்திலே நடைபெற்றன—என்பது தெரியவரும்.

இப்பொழுது, மூன்றுவது மாடியில், சாய்வு-நாற்காலியிலே, ஒரு மனிதன்—மிகவும் பரிதாபமான எஞ்சிய பாகம் என்று சொல்லும்படி—கை இழந்து கால் இழந்து கண் இழந்து இருந்தானே, அவன் தான், மரியாவின் கணவன். முன் ஒரு காலத்தில் அவர்களுக்குள்ளே இருந்த காதல் இப்பொழுது இல்லை. ஆமாம். அவனே இந்தச் செய்தியை அவளிடம் வெகு கடுமையாகவும் கொடூரமாகவும் சொன்னன். தன் வாழ்நாள் எல்லாம் கண்யமாகவும் யோக்கியமாகவும் வாழ்ந்த அவன், அவளை அளவின்றிக் காதலித்தான்; ஆகையால் அவளிடம் யோக்கியமாக நடந்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்திருந்தான். அந்தக் காரணத்தால் அவளுடைய கணவனைப்பற்றி அவளிடம் கண்டிப்பாகப் பேசி இருக்கலாம். எது எப்படிப் போனலும், முடிவு எப்படி ஆனலும், அவன் தான் கொண்ட கொள்கையிலிருந்து விலகாமலிருந்தான்.

இப்பொழுது அவனுடைய உள்ளத்தை ஒரு வேதனைப் புழு குடைய ஆரம்பித்தது. ஏன்? எதற்காக இந்த வசீகரமான இளம் பெண்ணின் வாழ்வு பாழாகவேண்டும்? அவளுடைய முகப் பொலிவு இப்பொழுதே வாட ஆரம்பித்துவிட்டதே. பிரகாசமான கண்கள் குழிவிழுந்து இருண்டு விட்டனவே. அவளுடைய கூந்தலின் பொன்

நிறமும் மங்கத் தொடங்கிவிட்டதே. அவனுடைய கண் எதிரிலேயே அவள் வாடத் தொடங்கிவிட்டாளே!

என்ன சம்பவித்து விட்டது? மரியாவின் நிலைமை ஏன் இப்படி மோசமாய்விட்டது? அவள் ஏன் இப்படித் தன்னையே பாழாக்கிக் கொள்ளவேண்டும்? மூன்ருவது மாடியில் கிரிகோரி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். மணிக்கணக்கிலே, வெகு நேரமாகச் சுவரில் ஓரே இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். கிரிகோரியை ஏமாற்றவே முடியாது. மரியாவின் புன்னகையும் அவளுடைய இனிமையான பேச்சும் அவனை வழி தவறச் செய்துவிடுமா? ஒருபோதும் இல்லை. அவனுக்குத் தன் சொந்த மனைவியைத் தெரியாதா? அவள் அவனை ஒரு காலத்தில் காதலிக்கவில்லையா? அவள் அவனை எவ்வளவாக நேசித்தாள்! நிகழ்வது ஒன்றையும் அவன் அறியாமலும், உணராமலும் இருக்கமுடியுமா? ஒருபோதும் முடியாது.

அப்படியானல், அந்த மூவரும் எதற்காகத் தங்களைத் தாங்களே சித்திரவதை செய்து கொள்ளவேணும்? பொல்லாத சிந்தனை ஒன்று அவனுடைய—வாரன்ஸோவுடைய—உள்ளத்திலே புகுந்து இப்படி முணுமுணுத்தது: 'கிரிகோரி தன்னைத் தானே சித்திரவதை செய்துகொள்ளட்டும். எப்படியோ, அவன் கதை எல்லாம் முடிந்துவிட்டது. மரியா அவனைக் காதலிக்கவில்லை. ஆனல், மரியாவோ இன்னும் யுவதியாகவே இருக்கிருள். அவளிடத்திலே உயிர், பிரவாகமாக ஓடிக்கொண்டிருக்கிறது; உடம்பிலே வலிமை ததும்பிக்கொண்டிருக்கிறது. அவள் திரும்பவும் ஒருவனைக் காதலிக்க முடியும். தன்னையே—வாரன்ஸோவையே—அவள் காதலிக்கலாம். அவன் அவளைப் பாதுகாப்பான். மரத்துப் போயிருக்கும் அவளுடைய இருதயத்திற்கு அவன் அனல் மூட்டுவான். அவளுக்குத் திரும்பவும் ' கலகல ' என்று சிரிக்கக் கற்றுக் கொடுப்பான். திரும்பவும், அவள் வாழ்வை விரும்பும்படி செய்துவிடுவான். அவன்தான் அவளுக்கு நெருங்கின நண்பன்; அதனலேதான் கிரிகோரி பகல் முழுவதும் மனக்கசப்போடு சுவரையே பார்த்துக்கொண்டு இருக்கிருன். இப்பொழுது அவள் வாரன்ஸோவைத் தவிர

வேறு யாரைக் காதலிக்க முடியும்? அவனும் அவளும் சந்தோஷமாக வாழ்வார்கள்.

அதே பொல்லாத குரல் அவனுக்குள்ளே இப்படி முணுமுணுத்தது: "எது முக்கியமானது? வாலிபத்திலே இருக்கும் சுகதேகிகளான இருவர் இன்பமாக வாழ்வது முக்கியமானதா? ஒரு நொண்டிக்குக் காட்டவேண்டிய வெறும் கடமை முக்கியமானதா? அந்த நொண்டியை அவள் இன்னும் காதலித்தால், அது தனி விஷயமாகிவிடும்; இந்த நியாயப்படி அதற்குத் தீர்ப்புச் சொல்ல முடியாது. ஆனால், அவள் அவனைக் காதலிக்கவில்லை என்பதும், இனிமேல் காதலிக்க முடியாது என்பதும் வெளிப்படையாகத் தெரிந்தது. அப்படியே திரும்பவும் காதலிக்கக் கூடிய... ...எப்படியானால் என்ன? மூன்றுபேர் நாசமாவதைப் பார்க்கிலும் ஒருவன் நாசமாவதே உத்தமம்."

இத்தகைய சிந்தனைகளை எதிர்த்துப் போராடினான் வாரன்ஸோவ்; அந்தச் சிந்தனைகளைச் சபித்தான். ஆனால் அவை திரும்பத் திரும்ப அவனை அலைக்கழித்தன. நடைபாதையிலே அவளைச் சந்திக்க நேர்ந்தாலும், அவளை எங்கேயாவது தற்செயலாகப் பார்த்து விட்டாலும், வேலை செய்கிற அறையில் அவளுடைய குரலைக் கேட்டாலும், திடீரென்று அவளை நினைத்தாலும் போதும்; உடனே, உள்ளே உறுத்திக் கொண்டிருந்த அந்த வஞ்சகக் குரல் விழித்துக்கொள்ளும்; அவனுடைய ஆத்மாவைக் களைவாடத் தொடங்கும்; இன்ப துன்பங்களைப்பற்றி முறுமுறுக்க ஆரம்பித்துவிடும்; அவன் காதலித்த பெண் நாசமடையாமல் அவளைக் காப்பது இன்றியமையாதது என்று வற்புறுத்திப் பேசத் தொடங்கிவிடும்.

"உன் உடம்புக்கு என்ன? ஏன் இப்படி வாடி இருக்கிறாய்?" என்று வைத்திய ப்ரொபஸர் ஒருநாள் அவனிடம் கேட்டார். வாரன்ஸோவ் சிறு பையனைப் போல் நாணம் அடைந்தான். ஏதோ திருட்டுத்தனத்தில் கையும் களவுமாக அகப்பட்டுக்கொண்ட சிறுவன் வெட்கப்படுவதுபோலப் பரக்க விழித்தான். 'ஊடாடிப் பார்க்கிற வைத்திய ப்ரொபஸருடைய விழிகள், அவன் கண்மணிபோலக் காத்துவந்த ஒரு ரகசியத்தைக் கண்டு

பிடித்துவிட்டன; அவனுடைய உள்ளத்தில் எழுந்த இழிவான அருவருக்கத் தகுந்த சிந்தனைகளையும் அறிந்து கொண்டன. அவனுடைய உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்த புழுவைப் பார்த்துவிட்டன. வாரன்ஸோவ் சமீப காலம் வரைக்கும் நேர்மையும் யோக்கியமுமான நடத்தை உடையவன்; தன் வாழ்க்கையிலே சிறந்த தென்று கருதியிருந்த நீதி நியாயங்களை எல்லாம் அவன் புறக்கணித்து விட்டான். இப்பொழுது அவன் தன்னிடத்திலே குடிகொண்டிருந்த தன்னயத்தை நிலைநாட்டுவதற்காகப் புதிய நீதி சாஸ்திரம் தயாரிப்பதை அவர் கவனித்து வருகிறார்'—என்று தோன்றியது வாரன்ஸோவுக்கு, வைத்திய ப்ரொபஸர் அந்தக் கேள்வியைக் கேட்டபோது.

திரும்பவும் அவன் தனக்குள்ளே தர்க்கம் பண்ணத் தொடங்கினான். தனக்கு ஏற்பட்டிருந்த நிலைமை முழுவதற்கும் பிரதம அங்கமாக இருந்தவள் மரியாதான்; அவள் அழிந்துபோகாதபடி எந்த வகையிலாவது அவளைக் காப்பாற்ற வேண்டும் என்று தனக்குள்ளே வழக்காடிக் கொண்டிருந்தான்.

வைத்திய ப்ரொபஸருடைய கேள்விக்கு நிதானமாக பதில் அளித்தான்: "எனக்குக் கொஞ்சம் களைப்பு; அவ்வளவுதான்" என்றான். பதில் அளித்தபோது, தன் கண்கள் மூலமாக வெளிப்படக்கூடிய உள்ளக் கிடக்கையை அவர் பாராமல் இருப்பதற்காக ரணசிகிச்சைக்குரிய ஆயுதங்களைப் பார்வை இடுவது போலத் தலை குனிந்தான். அவனுடைய உள்ளத்தில் பொல்லாத சிந்தனைகள் எழுந்தன; படுக்கையிலே படுத்துக் கொண்டு தூக்கம் வராமல் புரண்டு திண்டாடினான்; பயங்கரமான அவநம்பிக்கையினால் அடிக்கடி கையைக் கடித்துக் கொண்டான்; இப்படி எல்லாம் ஏற்பட்ட மனச் சஞ்சலங்கள் அவனுடைய முகத்திலே பிரதிபலித்துத் தோன்றின என்பது முற்றிலும் உண்மையே. ஓய்வு ஒழிவு இல்லாமல் வேலை செய்தால் உள்ளத்தில் குடிகொண்டிருந்த கொடிய ஆசையை உணர்வில்லாமல் செய்துவிடலாம் என்று அவன் முயன்ற முயற்சிகளும், மரியாவைப் பார்க்கவே கூடாது என்று அவளுடைய கண்ணுக்குத் தென்படாமல் தலைமறைவாய் இருந்ததும், எல்லாம் பயன் படாமலே போய்விட்டன.

மரியா எப்பொழுதும் அவனோடு இருந்தாள். கொஞ்ச நேரந்தான் அவனால் தூங்க முடிந்தது. அந்தக் கொஞ்ச நேரத்திலும், நாளுக்கு நாள் வெளிறி வந்த அவளுடைய ரத்தக் குறைவான முகத்தையும், நீல நரம்புகள் தெரியும் அவளுடைய கன்னப் பொறியையும், அவளுடைய வாயின் கோடியில் படிந்த வேதனைச் சுருக்கங்களையும் கனவு காணத் தொடங்கினான்.

இனிமேல் அவனுக்கு ஒரே வழிதான்: எங்கே யாவது போய்விடவேண்டும்; ஒருவரிடத்திலும் சொல் லிக்கொள்ளாமல் அறிமுகமில்லாத தேசத்துக்கு ஓடிப் போய்விடவேண்டும்; வெகு தூரத்திற்கு அப்பால் எங்கே யாவது ஒரு வைத்தியசாலைக்கு இடம் மாற்றிக்கொண்டு போய்விடவேண்டும். ஆனால், இப்படிச் செய்வது உசித மாக இருக்குமா? 'எப்படியாவது கஷ்டப்படட்டும்; துயர சிகரத்திலே கிடக்கட்டும்' என்று அவளைப் பயங்கரமான நிலையிலே விட்டுப்போவது நியாயமா? எங்கே போனாலும் உள்ளத்தின் உணர்ச்சிகள் அவனோடு கூடவே தொடர்ந்து சென்றன; சற்றுமே விட்டுவைக்காமல் நெஞ்சு புண் ணாகக் குத்திக்கொண்டிருந்தன. இந்த உணர்ச்சிகளி லிருந்து தப்பி ஓடுவது எப்படி? பிரிவினால், இவை முன்னினும் பன்மடங்கு பலத்துவிடுமே.

அவன் மரியாவைப் பார்ப்பதற்கே அஞ்சினான்; கிரி கோரியிடம் பேசுவதற்கு அஞ்சினான். ஆனால், கிரிகோரியோ வேதனையை உண்டுபண்ணும் எந்தச் செய்தியைப் பற்றியும் தன் சம்பாஷணையிலே குறிப்பிட மாட்டான். அவன் சீக்கிரமாகக் குணம் அடையவேண் டும் என்பதிலேயே அக்கறையாக இருந்தான். அவன் வெகு நேரம் ஒரே திசையைப் பார்த்துக்கொண்டிருப் பான்; அல்லது, அவனுடைய இடது கைக்கு, கிரமமாக விடாமல் பயிற்சி அளிப்பான். இவை யாவும் அவ்வளவு முக்கியமான காரியமாக இராதவைபோல யந்திரப் பதுமையின் இயல்பிலே நடைபெறும்.

அவன் சிந்தனைகள் எவை? அவன் அனுபவித்த மன வேதனைகள் எவை?—ஒன்றையும் ஒருவரிடத்திலும் சொல்லவே மாட்டான். அவனுக்கும் வாரன்ஸோவுக் கும் நிகழ்ந்த சம்பாஷணைகள் எல்லாம் வேணும் என்று

பேசுவதுபோல் இருந்தன. ஜுரநிலைமை எப்படி? நெருப்புப் புண்கள் ஆறிவிட்டதா?—என்றிவ்வாறான விஷயங்களை ஒட்டியே பேச்சு நிகழும். மரியா ரொம்ப நிதானமாக அந்த அறையிலே அதையும் இதையும் செய்துகொண்டிருந்தாள்; தன் கணவனிடம் மெல்லிய குரலிலே பேசினாள். அவன் தனக்குத் தேவையானவைகளைக் கேட்பான்; அவள் கொண்டுவந்து கொடுத்தால், நன்றி பாராட்டத் தவறமாட்டான். வைத்தியசாலையில் இருந்த மற்ற நோயாளிகளைப் போலவே அவளிடம் நடந்து கொண்டான். அவ்விருவருக்கும் இருந்த உறவெல்லாம் அவ்வளவுதான். இருவரும் தனித்திருக்க நேர்ந்தால், அவர்களுடைய உள்ளங்களிலே வேதனை செய்துகொண்டிருந்த விஷயங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். அவளுடைய உள்ளத்திலே வேதனைக்குக் காரணமாக இருந்தவைகள் ஒளி மழுங்கிய கண்களிலே நிழலிட்டுத் தோன்றும். அவனுடைய உள்ளத்தில் வேதனை செய்து கொண்டிருந்த விஷயங்கள், அவன் வெகு விரைவில் குணமடைவதற்குத் தடையாக இருந்தன.

இவர்களுடைய வெளித்தோற்றமான அமைதியின் மறைவிலே வேறு ஏதோ ஒன்று மறைந்து கிடந்தது. வாரன்ஸோவ் தன்னைப் பார்க்கவில்லை என்று தோன்றிய நேரத்திலே கிரிகோரி அவனைப் பார்த்த பார்வை விநோதமாக இருந்தது. இது வாரன்ஸோவுக்குத் தெரியும். அந்தப் பார்வையிலே மறைக்க முடியாத எரிச்சலும், கட்டுக்கு அடங்காத பகையும் மறைந்திருந்தன.

ஆதியில் கொண்டிருந்த தீர்மானத்தை விட்டு, வீட்டுக்கு வரும்படி தூண்டியவன் வாரன்ஸோவ்; அவனுடைய உபதேசங்களை நினைத்தபோதெல்லாம் அவனை ஒருபொழுதும் மன்னிக்க முடியாதென்றே கிரிகோரி கருதினான்; இப்பொழுது நிகழ்ந்தவைகளுக்கெல்லாம் வாரன்ஸோவ்தான் காரணம் என்று நினைத்தான். வாரன்ஸோவ் குறுக்கிட்டிராவிட்டால்......கிரிகோரியின் பார்வையிலே வன்மம் இருந்தது. இது வாரன்ஸோவுக்கு நன்றாய்த் தெரியும்.

புதிதாய் ஒரு தீர்மானம் செய்வதற்குப் போதுமான சக்தியும் துணிவும், இன்னும் கிரிகோரிக்கு ஏற்படவில்லை.

வரப் போகிறவைகள் எவையானலும், அவற்றிற்காகப் பொறுமையோடு காத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். அவன் மரியாவை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவளுடைய கண்களை நேருக்கு நேராகப் பாராமல் இருக்கத் தன்னால் இயன்றமட்டும் சிரமப் பட்டான் என்பது பகிரங்கமாகத் தெரிந்தது.

"நாங்கள் மூன்று பேரும் பொய்யர்கள்! நாங்கள் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறோம்!" என்று வாரன் ஸோவ் மனக்கசப்போடு, அடிக்கடி, விடாமல் சொல்லிக் கொண்டிருந்தான். இத்தகைய நிலைமையிலே, சிக்கலாய்ப் போன வலையை அறுத்தெறிந்து, மரியாவை வெகு தூரத்திற்கப்பால் எங்கேயாவது அழைத்துக் கொண்டு போய், போரில் நொண்டியான காப்டன் செர்ஞவ் என்றொருவன் உயிரோடு இருக்கிறான் என்பதை முற்றிலுமாக மறந்துவிட்டு, வாழ்வைப் புதிதாக ஆரம்பிப்பதல்லவா உத்தமம்? யௌவனமும், அழகும், உடல் வலிமையும் உடைய ஒரு பெண் நொண்டி ஒருவனோடு வாழ்நாள் எல்லாம் கட்டுண்டு கிடக்க வேண்டும் என்று சொல்ல யாருக்காவது உரிமை உண்டா? ரணசிகிச்சை வைத்தியத்தில் தேர்ந்த திறமை வாய்ந்த வாலிபனை ஒரு டாக்டர் என்றென்றும் தன் இன்பத்தைத் துறக்கவேண்டும் என்று யாராவது கேட்கமுடியுமா?

முதலிலே கிரிகோரியோடு வாதாடின சம்பாஷணையையும் பின்பு மரியாவோடு அவன் பேசிய வார்த்தைகளையும் நினைத்த போதெல்லாம் அவன் எவ்வளவு வன்மமாகச் சிரித்தான் தெரியுமா? யுத்தத்திலிருந்து நொண்டியும் முடமுமாக கிரிகோரியைப் போலத் திரும்பிய எத்தனையோ வீரர்களை அவர்களுடைய மனைவியர் வெகு அன்போடு தங்கள் வீட்டிலே ஏற்றுக்கொண் டிருப்பதையும், இந்த விஷயத்தில் மரியா ஒண்டியாக இல்லை என்பதையும் வெகு சமத்காரமாக விளக்கிக் காட்டினான்.

ஆனல், இந்தச் சதிபதிகளுடைய நிலைமை முற்றிலும் வித்தியாசமானது. இவர்களுடைய சூழ்நிலை-ஏதுக்களும் முற்றிலும் வேற்றுமையானவை.

"ஆமாம், முற்றிலும் வித்தியாசமானதுதான்; ஏன் என்றால் நீ—வாரன்ஸோவே நீ—அவளைக் காதலிப்பதனலே

இந்த விஷயம் முற்றிலும் வித்தியாசமானதுதான்" என்று அவன் தன் சிந்தனைப் போக்கிலே தன்னைத்தானே பரிகாசம் பண்ணிக்கொண்டான்.

குறிப்பிட்ட இந்த விஷயத்திலே எவ்விதமான விசேஷ வித்தியாசம் ஒன்றும் இல்லை என்பது அவனுக்கு நன்ருய்த் தெரியும். இந்த இரண்டாவது மகாயுத்தத்திலே இதைப் போன்ற கதைகள் ரொம்ப சகஜமானவைதான்.

வாரன்ஸோவ் தனக்குள் பொங்கி எழுந்த உணர்ச்சிகளை எல்லாம் அடக்கிக்கொண்டு, கொஞ்சங்கூட விட்டுக் கொடுக்காமல், உறுதியான தீர்மானங்கள் செய்தான். தொடர்ந்து சில நாட்களாக மரியாவைப் பாராமல் இருக்கவும், அவளுடைய வெளிறிய முகத்தையும் வேதனையால் நெரிந்த புருவத்தையும் கவனியாமல் இருக்கவும் முயன்ருன். தன்ருல் இயன்றவரைக்கும் கிரிகோரியோடு பொழுது போக்கினுன். ஒரு நிமிஷ நேரம் ஓய்வு கிடைத்தாலும், கிரிகோரியின் அறையிலே அவனோடு பேசிப் பொழுது போக்கினுன். அரசாங்க விஷயங்களைப் பற்றித் தர்க்கம் பண்ணினுன்; வைத்தியசாலைக் கதைகளை அவனிடம் அளந்தான். அவனோடு சம்பாஷணை செய்த போதெல்லாம், கிரிகோரி முன்னிலும் அதிகமாக அவனைப் பகைப்பதையும் உணர்ந்தான். அவன் காதலித்த பெண்ணை முன்னொரு தருணம் அவனிடத்திலிருந்து பிரித்துக்கொண்டு போனவன் கிரிகோரிதான்; திரும்பவும் தன் காதலிக்கும், தனக்கும் இடையிலே இடையூருக நிற்பவனும் அவன்தான்; முன்னொரு சமயத்தில் தனக்கு நண்பனுக இருந்தவனும் அவனே. இப்பொழுது அவனிடத்தில் தனக்கு இருக்கும் விரோதம் வளர்ந்து வந்ததை வாரன்ஸோவ் உணர்ந்தான்.

வாரன்ஸோவ் சில தருணங்களில் காப்டன் செர்னுவைத் தன் பகைவனுகவே கருதினுன். அவன் எதற்காக இப்படித் திரும்பி வரவேண்டும்? எதற்காக இப்படி இரண்டாவது தடவை அவர்கள் இருவருடைய வாழ்விலும் தடையாக இருக்க வேண்டும்? வாரன்ஸோவின் வாழ்விலே ஜோதியாக விளங்கக் கூடிய அந்தச் சுந்தர யுவதியோடு இப்படிக் கட்டுண்டு கிடக்க கிரிகோரிக்கு என்ன உரிமை உண்டு?

கிரிகோரியும் இதே நியாயத்தைத்தானே பல தருணங்களிலும் தன்னுள்ளத்திலே சொல்லிக் கொண்டிருந்தான்? அந்தக் காரணத்தினால் தானே அவன் வீட்டுக்குத் திரும்ப மனம் இல்லாமல் இருந்தான். அதே காரணத்தினால் தானே, மரியா சம்பந்தப்பட்ட வரையிலும் தான் இறந்தவனாகவே இருக்க விரும்பினான். வாரன்ஸோவ் வலுவிலே சென்று அவனை அழைத்து வரவில்லையா? திரும்பி வரக் கட்டாயம் செய்தவனும் அவன்தானே? அவனை அழைத்து வந்தவனும் அவன்தானே?

"அடே வாரன்ஸோவ்! நீ ரொம்ப இலேசாகப் பொய் சொல்லியிருக்கலாமே? அந்தத் தந்தியில் கண்ட செய்தி முற்றிலும் தவறு என்று ஒரே போடு போட்டிருக்கலாமே? கிரிகோரியின் தீர்மானமே ரொம்பச் சரி என்று ஆமோதித்து, நீ என் அதை உறுதிப்படுத்தவில்லை. அவனை இன்னான் என்று எவராலும் தெரிந்துகொள்ள முடியாத ஒரு வைத்தியசாலைக்கு நீயே அனுப்பியிருக்கக் கூடாதா? இந்த விவகாரங்கள் ஒன்றுமே தெரியாத அந்த சோன்யாவின் வாயை நீயே அடைத்திருக்கலாமே? இப்படி ஏதாவது செய்திருந்தாயானால், இன்றைக்கு மரியா தன்னிஷ்டப்படி செய்யக்கூடிய நிலையில் இருந்திருப்பாளே? இப்படிச் செய்திருந்தாயானால், சிலந்தி வலையில் அவஸ்தைப்பட்டு நாசம் அடைகிற ஈயைப் போல நீங்கள் மூவரும் ஓயாமல் துன்பம் செய்கிற வேதனை வலையிலே இப்படிச் சிக்கிக்கொண்டு அவஸ்தைப்பட நேர்ந்திராதே" என்று வாரன்ஸோவ் தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்.

ஆமாம்; இப்படி ஏதாவது செய்வது முதலில் ரொம்ப சுலபமாகத்தான் இருந்திருக்கும். ஐயோ! பாதகன்! அவன் மகா பாதகன்! இப்படிப்பட்ட துரோகச் சிந்தனைகள் ஒரு முறை தலையிலே புகுந்ததும், அவற்றைப் பற்றி யோசிக்கத் தொடங்கிவிட்டால், இம்மாதிரித் துரோகம் செய்யக்கூடிய நிலையிலே அவன் இருந்ததும் உண்மைதான்.

வைத்தியசாலைக்கு வெளியிலே இரவின் காரிருள்; பொழுது போகாமல் ரொம்பச் சலிப்பாகத் தோன்றிய மழை காலத்து இராப்பொழுது. வாரன்ஸோவின் நித்திரை

யற்ற விழிகளுக்கெதிரே சுவரில் விழுந்த நிழல்கள் விசித்திர விநோதமான தோற்றங்களை வகுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. இந்த தர்மசங்கடத்திலிருந்து தப்பி ஓட வழி உண்டா? அவன் என்ன செய்ய வேண்டும்? அவன் செய்யத் தகுந்த நியாயமான காரியம் எது?

எல்லாவற்றிலும் ரொம்ப மோசமானது என்ன வென்றால், செய்ய வேண்டியது என்ன என்பது வாரன்ஸோவுக்கு நன்றாகத் தெரியும் என்பதுதான். ஆனால், அது அவனுடைய சக்திக்கு மிஞ்சிய காரியம். அவன் தன்னைத் தானே மகாபாதகன் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய நெடும் பாதாளத்திற்கே கொஞ்சம் கொஞ்சமாகத் தனக்கே தெரியாதபடி இறங்கி விழுந்து கொண்டிருந்தான். தலை சுழலும் அந்தச் செங்குத்தான பாதாளத்திலே இறங்கத் தொடங்குகிற ஒருவன், கீழே விழுந்து சுக்கல் சுக்கலாக நொறுங்கும் வரைக்கும் எந்த இடத்திலும் நின்றுவிட முடியாது. அதுவரைக்கும் அவன் செய்யக்கூடியவை: நெஞ்சில் குடிகொண்ட தன்னயத்தை மறைக்கலாம்; மனச் சாட்சியை மழுப்புவதற்காகக் கபட மான நியாயங்களை உண்டுபண்ணலாம்; வரவரச் சிக்க லான பொய்களைப் புளுகலாம்; தான் காதலித்த ஒரு பெண் ணின் உயிரையும் க்ஷேமத்தையும் காப்பதற்கு முயற்சி செய்வதாகப் பெருமை அடித்துக் கொண்டிருக்கலாம்.

அவன் வீட்டிலே கழித்த நேரமும் வேதனைதான். ஆனால், வைத்தியசாலையில் செலவிட்ட நேரமோ என்றால், அதுவும் வேதனைதான். காயம் அடைந்தவர்கள் அனுப விக்கும் வேதனை, அவர்களுடைய வேதனையைத் தீர்க்க அல்லும் பகலும் பாடுபட்டுக்கொண்டிருந்த டாக்டர்களுடைய முயற்சிகள், அவநம்பிக்கையால் எழுந்த கூச்சல், மரணத்திற்கெதிராக நிகழ்ந்த போராட்டம், அன்றாடம் செய்ய வேண்டிய அலுவல்கள் — இவை யாவும் அந்த வைத்தியசாலையில் இருந்தன; இவற்றோடு, மூன்றுபேர் பேணி வளர்த்துவந்த சோகசிகரமான ஒரு நாடகமும் நடைபெற்று வந்தது. அந்த மூவரும் பல விதமான விஷயங்களைப் பற்றி ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள், அல்லது, ஒருவரோடு ஒருவர் ஒன்றுமே பேசாமலிருந்தார்கள். என்றாலும் மூன்று பேரையும் ஒரே

விதமான துன்பச் சங்கிலிகள் சேர்த்துக் கட்டி இருந்தன. இவை யாவற்றிலும் மகா மோசமானது, அந்த வாரன்ஸோவ் அனுபவித்த துயரம்தான். அது பரிசுத்த மானதன்று; அதில் உண்மையும் இல்லை. ஒருவனைத் தாழ்த்துகிற கீழான துன்பம்—ஒருவனை இருளிலே ஆழ்த்து கிற துன்பம்—ஒருவனைச் சேற்றிலே புதைக்கிற துன்பம்—அதிலிருந்து எவ்வளவுக்கெவ்வளவு அவன் தப்பித்துக் கொள்ள முயன்றானே அவ்வளவுக்கவ்வளவு அவனைக் கொடிய பொறியிலே சிக்கவைக்கிற இருண்ட சிந்தனை களும், தீய முணுமுணுப்புக்களும் எழுப்பிவிடும் துன்பம் தான் வாரன்ஸோவின் பங்கு.

* * *

"வஸ்யாவின் காதலி வந்துவிட்டாள்" என்றாள் ராய்ஸா. வைத்தியசாலையில் இருந்தவர்கள் எல்லாரும் அவனை வஸ்யா என்றே அழைத்தார்கள். முதன்முதலில் தன் அநியாய மான மனச்சோர்வை வைத்தியசாலை எங்கும் நிரப்பியவன் இந்த வாலிபன்தான். எல்லாருக்கும் ஓயாத தொல்லை அளித்தவனும் இவனே. வைத்தியசாலைச் சட்டங்களை எல் லாம் மீறியவனும், பிரத்தியேகமான அறையில் வைத்து ஒரு குழந்தையைப் பராமரிப்பதுபோலப் பராமரிக்கும்படி வைத்தியசாலை அதிகாரிகளை வற்புறுத்தியவனும் இவனே; பின்பு, முற்றிலும் அமைதி அடைந்து தனக்கு வாய்த்ததை பொறுமையாகச் சகித்தவனும் இந்த வாலிபனே. இவன் இப்படிப் பொறுமையோடு எல்லாவற்றையும் சகிப்பதற்கு ஒரு காலத்தில் அருந்துணையாக இருந்தவள் மரியாதான். அந்தக் காலத்திலே—அந்த நாட்களுக்கும் இந்த நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் ரொம்ப நீடித்ததாக இராவிட்டாலும், வெகுநாட்களுக்கு முன் நிகழ்ந்தது போல் தோன்றியது—ஒரு ஆண் குழந்தையைப் பெற்றவள் பெருமை பாராட்டுவதுபோல மரியா அவனைப் பராமரித்ததைப் பற்றிப் பெருமை பாராட்டினாள்.

ஆனால், இப்பொழுது அதெல்லாம் முடிந்து விட்டது. இப்பொழுது அவள் பெருமை பாராட்டுவதற்கு ஒன்றும் இருக்கவில்லை. முன் ஒரு தருணத்தில் "முழு உண்மை" என்று சொன்னாளே, ஏதோ ஒன்றை, அது இப்பொழுது பொய்யாகிவிட்டது. கள்ளம் கபடில்லாத அந்த வாலிபன்

அவளிடத்தில் முழு நம்பிக்கை வைத்திருந்தான்; அவனை அவள் ஏமாற்றிவிட்டாள். அணையும் அந்தி வெளிச்சத்திலே மூழ்கிக்கொண்டிருந்த அந்த இளைஞனைப் பலவந்தமாக வெளியே இழுத்து வந்து, அவனுடைய உள்ளத்திலே உயிரோடு இருப்பதற்கான புதிய ஆசையைப் புகுத்தியவள் அவள்தான். எந்த உரிமையிலே இப்படிச் செய்ய வேண்டும் என்று அவள் கருதினாளோ!

அந்தக் காலத்திலே அப்படிச் செய்யத் தனக்கு எல்லா உரிமையும் உண்டு என்று அவள் நம்பி இருந்தாள். அவளுடைய வாழ்க்கைச் சுடரை ஏற்றி வைத்த பரிசுத்தமான தீக்கொழுந்து இப்பொழுது அணைந்து போயிற்று. அவளுடைய முகத்தில் குடிகொண்டிருந்த புன்னகை கிரிஷாவினால் வாடிவிட்டது; அவளுடைய குரலில் இனிமையாக அமைந்திருந்த பிரதித்தொனி மறைந்து விட்டது—என்று பிறர் நினைத்தார்கள். அவளுடைய காதலனைத் தாக்கிய துரதிர்ஷ்டங்களினாலே அவள் துயரத்தில் மூழ்கி இருக்கிறாள் என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்களுடைய நினைப்பெல்லாம் மிகப் பெரிய தப்பிதந்தான். அவர்கள் நினைத்ததெல்லாம் சுத்தப் பொய். உண்மை என்னவென்றால் அவளுக்குச் சக்தியையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது எதுவோ அதிலே அவளுக்கு இருந்த நம்பிக்கை ஒழிந்து போயிற்று; அவளுடைய உள்ளத்திலே இருள்மயமான சூன்யப் பிரதேசந்தான் வாய்பிளந்து கொண்டிருந்தது.

இப்பொழுது வஸ்யாவின் காதலி வந்துவிட்டாள். மரியா அவனிடம் சொல்லியிருந்தபடியே அவன் மனமகிழ்ச்சியான நம்பிக்கையோடு அவளுடைய வரவுக்காகக் காத்திருந்தான். அவள் விட்டு வந்த கிராமம் வெகு தூரத்திற்கப்பால் இருந்தது. பிரயாணம் செய்வதற்கும், தன் காதலனை வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்கும் அதிகாரிகளிடம் இருந்து வெகு சிரமப்பட்டு அனுமதி பெற்றாள். தான் காதலித்த மனிதன் இரக்கமற்ற யுத்த ராக்ஷசனுடைய கையால் நொண்டியாகி, உருக்குலைந்து, இன்னவன் என்று அறியமுடியாதபடி விகாரத் தோற்றம் அடைந்துவிட்டான் என்பதை அவள் இப்பொழுது நேரிலே பார்க்க முடியும்; தான் கேட்ட செய்தி எல்லாம் உண்மைதான்

என்று தெரிந்துகொள்ள முடியும். அவன், முன் ஒருகாலத்தில் அவளுக்குத் தெரிந்திருந்த அதே மனிதன் இல்லை. ஏதோ ஒரு இலந்தைப் பழத் தோட்டத்திலே அவள் முதன் முதலாகச் சந்தித்த வஸ்யாவாக அவன் இப்பொழுது இல்லை. அவன் முற்றிலும் வித்தியாசமான அறிமுகமில்லாத ஒரு புது மனிதன்.

"நான் அவனை அழைத்துக்கொண்டு போகட்டுமா, அல்லது இங்கேயே காத்திருக்கட்டுமா?"

"அவளை அவனிடம் அழைத்துக்கொண்டு போ. அவளுக்கு இஷ்டம் இருந்தால், அவன் புறப்படுவதற்குவேண்டிய உதவிகளை அவளே செய்யலாமல்லவா?" மரியாவின் விநோதமான குரலைக் கேட்டு ராய்ஸா ஆச்சரியம் அடைந்தாள். "அதென்ன, 'அவளுக்கு இஷ்டம் இருந்தால்!' எனக்கு விளங்கவில்லையே உன் கருத்து" என்றாள் ராய்ஸா.

மரியா தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு, காதுக்கு இனிமை இல்லாத வறட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

"உனக்கென்ன? அறிவில்லையா? நோயாளி ஒருவன் வைத்தியசாலையை விட்டு ஊருக்குப் புறப்படும் பொழுது, அவனுடைய சாமான்களை எலலாம் கட்டிக் கொடுப்பது உன் வேலை. அப்படித்தானே?"

"ஆமாம்; அப்படித்தான்," என்று ராய்ஸா அதை ஆமோதித்தாள், அங்கிருந்து அகன்றாள்.

ராய்ஸா ஒன்றையும் தெரிந்து கொள்ளவில்லை. கிரிஷாவைக் கலியாணம் செய்து கொண்டவள் ராய்ஸாவா? இல்லவே இல்லை. காதலித்த கணவன் கால் ஒடிந்து நொண்டியாகிச் சீரழிந்து வந்ததைப் பார்க்கும் அனுபவம் அவளுக்கு ஏற்படவில்லையே. அந்தக் காதலி நொண்டியான கணவனை அழைத்துப் போக வந்திருக்கிறாள் என்பது ராய்ஸாவுக்கு மிகவும் சுலபமான ஒரு செய்திதான். ஆனால், வஸ்யாவை இப்பொழுது அந்தப் பெண் முதன் முதலில் பார்ப்பாளே. எதற்கும் தான் தயாராக இருப்பதாகக் கடிதத்திலே எழுதுவது ஒருவிதம், உண்மை நிலைமையை நேரிலே பார்ப்பது மற்றொரு விதம் என்று அவள் இப்பொழுது பிரத்தியக்ஷமாகத் தெரிந்துகொள்ளப் போகிறாளே. முதன் முதலில், சில தினங்களாக

வஸ்யா அழுத விதமாகவே அவளும் அவனைப் பார்த்த வுடனே அழப்போகிருளா? அல்லது பிரக்ஞை தவறிக் கீழே விழப்போகிருளா? அறையை விட்டு வெளியே ஓடப்போகிருளா? அவளுக்குப் பயித்தியமே பிடித்து விடப் போகிறதா?

மரியா கதவருகில் சென்ருள். மாடியிலே என்ன நடக்கப்போகிறது என்று பார்க்கவேண்டும் என்ரெரு மன-எவுதல் அவளுடைய உள்ளத்திலே தடுக்க முடியாமல் எழுந்தது.

ராய்ஸாவின் காலடி ஓசை நடைபாதை வழியாக நெருங்கி வருவதை அவள் கேட்டாள். உடனே அவ ளுடைய உள்ளத்தில் சிந்தித்தாள்: "நிச்சயந்தான், ராய்ஸா என்னை அழைத்துச் செல்லவே வந்துகொண்டிருக்கிருள். அவளுக்கு என்னுடைய உதவி தேவையாக இருக்கும். நான் அந்தப் பெண்ணுக்குப் பக்கத்திலே உட்கார்ந்து அவ ளுடைய கையைப் பிடித்துக்கொண்டே எல்லாவற்றையும் அவளிடம் விரிவாகச் சொல்ல வேண்டும் என்று ராய்ஸா விரும்புகிருள். அவளுடைய மனம் அமைதி அடையச் செய்யவேணும்; அவள் ஒப்புக் கொள்ளக்கூடிய விதத் திலே பேசவேணும். சேர்த்துக் கட்டியிருந்த சகல பந்தங் களையும் கிழித்துக் காலின் கீழே மிதித்துப் பாழாக்கிப் பிரிவை உண்டுபண்ணிய விதிவசத்திற்கு ஆளான அவ்விரு சதிபதிகளையும் திரும்பவும் ஒன்ருய்ச் சேர்க்கவேணும். இதற்கெல்லாம் நான் உதவி செய்ய வரவேணும்.''

காலடி ஓசை, கதவைக் கடந்து சென்று மெதுவாகக் குறைந்து மறைந்தது. இவ்வளவுதானு? அது ராய்ஸா இல்லையா? எல்லாவற்றையும் நேரிலே பார்க்கவேண்டும் என்ற மன—எவுதல் அவளுடைய உள்ளத்திலே வெகு தீவிர மாய் விட்டது. குற்றம் செய்த இடத்திற்கு ஒரு குற்ற வாளியை இழுக்கும் ஏதோ ஒருவகையான கவர்ச்சி, மாடிக்குச் செல்லும்படி அவளை இழுத்தது. அவ்விரு வரும் இப்படிச் சந்திப்பதற்குக் காரணமாய் இருந்தவள் அவள் அல்லவா? அவள் உதவி செய்திராவிட்டால் வஸ்யா ஒரு பொழுதும்......

மரியா கதவைத் திறந்துகொண்டு சந்தடி பண்ணுமல் மாடிப் படிகளில் ஏறிச் சென்ருள். மூச்சு விடும் சத்தம் கூட கேளாதபடி அறையை அணுகினுள். கூச்சலிடும் சத்தம் ஒன்றும் கேட்கவில்லை. எல்லாம் அமைதியாக இருந்தது.

இன்னதென்று உணர முடியாததும், எதிர்பாராததும், நிகழ்வதற்கு அரியதுமான சத்தம் ஒன்று திடீரென்று கேட்டது; மரியா பிரமித்துவிட்டாள். கதவுக்கு உள் பக்கத்திலே உரத்த சத்தமாக எழுந்தது ஒரு சிரிப்பு. மனம் உடைந்து போனதினுல் எழும் வெறித்த சிரிப்பு இல்லை அங்கே கேட்ட சிரிப்பு. ரொம்பச் சாதாரணமாகவும் இயல்பாகவும், தோன்றக் கூடிய ஒரு சிரிப்புத்தான் அது.

மரியா கதவைத் திறந்தாள். முழுவதும் உடை அணிந்தவனுக வஸ்யா ஒரு நாற்காலியிலே உட்கார்ந்திருந்தான். கை இல்லாமல் வெறுமையாக இருந்த சட்டைக் கை அவன் பக்கத்திலே தொங்கிக் கொண்டிருந்தது. இழந்த கண்ணின்மேல் சிறு கற்றை - ரோமத்தை வெகு நாசுக்காகப் படிய வைத்திருந்தது.

அந்த நாட்டுப் புறத்துப் பெண், அவன் இருந்த நாற்காலிக்குப் பக்கத்தில் முழங்காலில் நின்று, கால்சட்டையிலே, கால் இல்லாத உறையை மடித்து ஊசியால் குத்தி வைக்க முயன்று கொண்டிருந்தாள். இருவரும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். குத்த முடியாமல் ஊசியைக் குத்தி இறக்க முயன்று கொண்டிருந்த அப் பெண்ணைப் பார்த்து வஸ்யா சிரித்தான்; முழங்காலில் நின்ற பெண்ணும் வஸ்யாவைப் பார்த்துச் சிரித்தாள். ராய்ஸா நாற்காலிக்குப் பக்கத்தில் நின்று வஸ்யாவின் துணிமணிகளை மடித்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பெண் முழங்காலில் இருந்த நிலையை விட்டு எழுந்து நின்ருள்; அப்பொழுதுதான் மரியா அவளுடைய கூந்தலின் அழகைக் கவனித்தாள். முதலிலே பார்த்த போது, அவள் கூந்தலின் மேல் ஒரு கைக்குட்டையைக் கட்டியிருந்தாள்; அந்தக் கூந்தலின் அழகு கைக்குட்டைக்குள் மறைந்து இருந்தது. அழகிய கூந்தலோடு நீலமான விழிகளையும் சந்தோஷத்தால் புன்னகை பூத்த வட்ட முகத்தின் வனப்பையும் கவனித்தாள்.

ஸ்தூலமான இடையூறு ஒன்று குறுக்கிட்டது போல திடீரென்று மரியா நின்ருள். வஸ்யா தன் ஒற்றைக் கரு விழியால் ஏறெடுத்துப் பார்த்து அவளை நோக்கிக் கண் சிமிட்டினன்.

"ஆல்யா, இதோ பார்! நான் ஒரு நர்ஸைப் பற்றிக் கடிதத்தில் எழுதி இருந்தேனே, அந்த நர்ஸ் இவள்தான். நர்ஸ் மரியா."

உடனே அந்தப் பெண் மரியாவுக்குக் கைலாகு கொடுப்பதற்காகக் கையை நீட்டினள். பாடுபட்டு வேலை செய்கிற சொரசொரப்பான கையினல் அந்தப் பெண் அளித்த கைலாகிலே மரியா நட்பை, உணர்ந்தாள்; திகைப் படைந்து இன்னதென்று உணர முடியாதவளாக அந்த நாட்டுப்புறத்துப் பெண்ணின் நீல விழிகளை நிதானமாகப் பார்த்தாள்.

"நீ செய்த உதவிகளுக்கெல்லாம் நன்றி பாராட்டு கிறேன்" என்று சாதாரணமாகச் சொல்லிவிட்டு வஸ்யா வின் பக்கமாகத் திரும்பினள். வஸ்யாவைத் தவிர வேறென்றிலும் அவளுக்கு விருப்பம் இல்லை என்பது அவ ளுடைய செய்கையினல் வெகு தெளிவாகத் தெரிந்தது. அவள் வஸ்யாவைத் தன்னேடு ஊருக்கு அழைத்துப் போகி ருள்; இதுதான் மிகவும் முக்கியமான விஷயம். இந்த விஷ யத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மற்றவை யாவும் அவ் வளவு முக்கியமான விஷயங்களாக அவளுக்குத் தோன்ற வில்லை. அவள் ஜாக்கிரதையாக அவனுடைய கழுத்துப் பட்டையின் பொத்தானை மாட்டினள். சட்டைக் கையில் தூசி ஒன்றுமே இல்லை; என்ருலும் கண்ணுக்குத் தெரி யாத தூசியைத் தட்டி எறிந்தாள். சுவர்ப் பக்கமாகச் சாத்தி வைத்திருந்த கக்கதண்டங்களை எடுத்தாள்; அவற்றை ஒரு முறை நெடுகப் பரிசோதித்தாள்.

"இவை உறுதியாக இருக்குமா?"

"கவலைப்படாதே. அவை என்னைத் தாங்கும். இப் போது ஒரு காலும் ஒரு கையும் இல்லை. அதனலே நான் முன்போல் அவ்வளவு கனமாக இல்லை" என்று வேடிக்கையாகப் பேசிச் சிரித்தான் வஸ்யா. அதை ஆல்யா ஒரு வேடிக்கைப் பேச்சாகவே எடுத்துக் கொண்டாள்.

புன்னகை பூத்த அவளுடைய அதரங்களுக்கு இடையே ஈரமான வெண்ணிறப் பற்கள் பிரகாசித்தன.

"இன்னும் சில நாட்களுக்குள்ளே அவனுக்குச் செயற்கைக் காலும் கையும் கொடுப்பார்கள். அவை அவனுடைய இயல்பான காலும் கையும் அல்ல என்று கூட உனக்குத் தோன்ருது" என்று ராய்ஸா வெகு ஆவலாக அவளுக்கு ஆறுதல் சொல்ல முயன்ருள்.

ஆல்யா அதைப் பொருட்படுத்ாதவள்போலத் தோளைக் குலுக்கினுள்.

"எதற்காக? செயற்கைக் காலும் கையும் ரொம்பக் கனமாக இருக்கும் என்று சொல்லுகிருர்கள். சென்ற உலகமகா யுத்தத்திற்குப் போய்வந்த போர் வீரன் ஒருவன் எங்கள் கிராமத்திலே இருக்கிருன். அவனுக்கும் கால் இல்லை. அவனிடம் செயற்கைக் கால் ஒன்று இருக்கிறது. கக்கதண்டந்தான் செயற்கைக் காலைவிடச் சிறந்தது என்று அவன் சொல்லுகிருன். செயற்கைக் கால்கள் ரொம்ப அவலக்ஷணமாக இருக்குமாம். மேலும், கால் இழந்திருப்பதற்காகக் கொஞ்சங்கூட வெட்கப்படத் தேவையே இல்லை. கால் கை இல்லாக்குறையை என் கணவன் எதற்காக மறைக்க வேண்டும்? அவன் ஒருபோதும் அப்படி ஒன்றும் செய்யமாட்டான். அவன் போருக்குப் போய்த் திரும்பினவன் என்பதை எல்லாரும் பார்க்கட்டுமே. அதனுல் என்ன? என்ன, வல்யா, அப்படித் தானே?"

தருணம் வாய்த்தது என்று, திரும்பவும் குறுக்கே விழுந்து பேசினுள் ராய்ஸா.

"அதெல்லாம் பழங்காலத்துச் செயற்கைக் கால்களும் கைகளும்; புது மாதிரிச் செயற்கைக் கால்களும் கைகளும் முற்றிலும் வித்தியாசமானவை."

"ஆகா! அப்படியா? ரொம்பச் சரிதான்" என்று அலக்ஷியமாக ஒப்புக்கொண்டாள் ஆல்யா. "அதுவரைக்கும் இந்தக் கக்கதண்டங்களே போதுமானவை. வல்யா, இவை போதும் அல்லவா? தோட்டத்திலும் ரஸ்தாவிலும் நீ இவைகளை வைத்துக்கொண்டு நடந்து பழகப்போகிருய்.

வெகு சீக்கிரம் இவைகளை உபயோகிக்கப் பழகிவிடுவாய். ஆனால், இவைகளை இங்கே உபயோகிப்பது கஷ்டமாகத் தான் இருக்கும்'' என்று சொல்லிக்கொண்டே சித்திர வேலையோடு மழமழப்பாக இருக்கும் தளத்தை ஒரு முறை ஆராய்ந்து பார்த்தாள்.

"ஆமாம்; நான் இவைகளை வைத்துக் கொண்டு நடக்கப் பழகிவிடுவேன்'' என்று ஒப்புக்கொண்டான் வஸ்யா.

"அப்படியே இருக்கட்டும்; நாம் போகலாம்.''

புறப்பட்டுப் போவதற்கு அவள் அவசரப்பட்டாள். வைத்தியசாலையிலிருந்து வஸ்யாவை வெளியே அழைத்துக் கொண்டு போய்விடவேண்டும்; அவனை முற்றிலுமாகத் தன் சொந்தப் பாதுகாப்பிலே வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பினாள்.

"ஸ்டேஷனுக்கு மோட்டார்கார் போகிறது. அந்த வண்டியிலே ஏறிக்கொண்டு நீங்கள் ஸ்டேஷனுக்குப் போகலாம்'' என்று மரியா மெதுவாகச் சொன்னாள்.

"நல்லது.'' ஆல்யாவுக்கு அது சந்தோஷம் அளித்தது. "இப்பொழுது, இந்த நாட்களிலே, எல்லாம் ரொம்ப மாறி விட்டன. நாங்கள் ஒருவேளை வழியை இழந்து விடலாம்.''

நாற்காலியிலிருந்து எழுந்திருக்க வஸ்யாவுக்கு உதவி செய்தாள் ராய்ஸா. ஆல்யா வெகு பரபரப்போடு கக்கதண்டங்களை அவனிடம் கொடுத்தாள். அவன் அவற்றைத் தன் கக்கத்தின் கீழ் மாட்டிக் கொண்டான்; யாவரும் அதிசயிக்கும்படியாகத் திடமொன்று திட சரீரமும் நல்ல உயரமும் உடைய வாலிபனாகத் தோன்றினான்.

"ரொம்ப இளைத்துப் போயிருக்கிறான். இல்லையா?'' என்று கேட்டாள் ஆல்யா உரத்த சத்தமாக. "இங்கே சாப்பாடு ரொம்ப மோசமோ?'' என்று கேட்டாள், அங்கே இரண்டு நர்ஸ்கள் இருந்ததை மறந்தவள் போல. ஏற்கெனவே அவள் வைத்தியசாலையிலிருந்து வெகு தூரத்திற்கப்பால் போய்விட்டாள் மானஸீகமாக. அவனும் வைத்தியசாலையைச் சார்ந்தவன் இல்லை. அவன் அவளுக்கே சொந்தமானவன்.

"ரொம்ப அழகுதான்! நான் இங்கே எத்தனை மாதங்களாக முதுகின்மேல் படுத்த படுக்கையாக இருந்தேன் தெரியுமா? அது விளையாட்டுச் சமாசாரம் இல்லை என்று நான் உனக்குச் சொல்லுகிறேன்."

"ரொம்பச் சரி; கவலைப்படாதே. நான் உன்னை நன்றாய்க் கொழுக்க வைக்கிறேன்" என்றாள் ஆல்யா; தரையில் இருந்த மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டாள். வஸ்யா மரியாவுக்குக் கைலாகு கொடுத்தான். பின்பு அவலக்ஷணமாகக் கக்கதண்டத்தை ஊன்றி இரண்டு மூன்று அடி தூரம் நடந்து மரியாவுக்கு எதிரே போய் நின்றான்.

"நர்ஸ், நான் உனக்குக் கடிதம் எழுதினால் எனக்குப் பதில் எழுதுவாயா?" அவனுடைய குரல் மரியாவின் மனத்தை உறுத்தியது. இந்த வைத்தியசாலையிலே பட்ட கஷ்டங்களை எல்லாம் அவன் மறந்துவிட்டான் அல்லவா? ரொம்பக் கவலைக்கு இடமான இரவுகளையும் அந்த இரவுகளில் ஏற்பட்ட பயங்கரமான வேதனைகளையும் மறந்துவிட்டான். எத்தனையோ தடவைகளில், திடீர் திடீர் என்று அவன் நம்பிக்கை இழந்தவனாக வருந்தினான்; அந்த நேரங்களில் எல்லாம் மரியா வந்து அவனை ஆற்றித் தேற்றி அமர்த்த வேண்டி இருந்தது. அவளே நேரில் வந்து பணிவிடை செய்ய வேண்டும் என்று அவன் முரண்டு அடித்த மாதங்களையும் அவன் மறந்துவிட்டான். அந்த நாட்களிலே வேறு யாருமே அவன் கிட்டக்கூட நெருங்க முடியாமல் இருந்தது.

"ஆமாம்; நிச்சயமாகப் பதில் எழுதுவேன்" என்றாள் வறட்டுக் குரலிலே. அந்த இளைஞன் தன் கக்கதண்டத்தைக் கைவிரல்களால் வருடிக் கொண்டே தயங்கித் தயங்கி நின்றான். அவனுடைய விருப்பம் இன்னதென்று மரியாவுக்குத் தெரியவில்லை. அப்பொழுது அவன் திடீரென்று தன் எஞ்சிய ஒரு கையால் அவளைத் தழுவி, அவளுடைய கன்னத்தை முத்தம் இட்டான். அவனுடைய கரிய தலை ரோமம் அவளுடைய கண்களிற் பட்டது. அவளுடைய தொண்டையை ஏதோ நெறித்துக்கொண்டிருந்தது. அவன் காயம் அடைந்தவனாக நோயுற்று, சுற்றிய

வெள்ளைத் துணிக்கட்டுகளுக்குள்ளே, கூண்டுப் புழுவைப் போல் அடைபட்டு, வைத்தியசாலை அறையிலே படுத்திருந்த காலத்தில், அவள் எத்தனையோ தடவைகளில் அவனுடைய தலையைத் தடவிக்கொடுத்த விதமாகவே—இப்பொழுதும் அவனுடைய தலையை மெதுவாக வருடினாள்.

"வஸ்யா, உன் பிரயாணம் க்ஷேமமாக முடிவடையட்டும்!"

மகா பரிசுத்தமும் பிரகாசமுமான ஏதோ-ஒன்றை இழந்து விடுவது போன்ற ஒருவகை உணர்ச்சி மரியாவுக்கு ஏற்பட்டது. இந்த நாட்களிலே, இதைத்தான் அவள் பரிசுத்தமும் பிரகாசமுமானதென்று நினைத்திருந்தாள். இறந்த காலத்தின் துலக்கமான உயிர் நாடியாக விளங்கிய மரியாவை, பழைய நாட்களில் எப்பொழுதோ நறுமணமாய் விளங்கிய மரியாவைத் திரும்பவும் நினைக்காதபடி தன் மனத்தை அந்த நேரத்திலே அடக்கி ஆள முயன்றாள்.

திரும்பவும் ஆல்யாவுக்குக் கைலாகு கொடுத்தாள்.

"சகல சுகபோக இன்பங்களையும் நீ குறைவின்றி நெடுங்காலம் அனுபவிக்க வேணும்—உன்னை வாழ்த்துகிறேன்."

கக்கதண்டங்களின் பெரும் சத்தம் நடை-பாதை நெடுகக் கேட்டது. அவற்றைச் சரியாக உபயோகிக்கத் தெரியவில்லை. அதனாலே, வேடனால் சிறகு இழந்த பெரிய பறவைபோலக் குதித்து அவலக்ஷணமாக நடந்தான் வஸ்யா.

மோட்டார்கார் புறப்பட்டது. வைத்தியசாலையை விட்டுத் தத்தம் வீடுகளுக்குப் புறப்பட்ட நோயாளிகள் பிரிவுபசாரமாகத் தங்கள் கைகளை மரியாவுக்கு எதிரே அசைத்தார்கள். காரின் ஜன்னல் வழியாக ஆல்யாவின் வர்ணக் கைக்குட்டையைக் கடைசி முறையாக அவள் பார்த்தாள்.

மரியா, வேலை பார்த்த அறைக்குத் திரும்பினாள். அவள் கன்னம் கதகத என்று எரிந்து கொண்டிருந்தது.

அவள் அறையைக் கடந்து ஜன்னல் அருகே சென்று கன்னத்தைக் குளிர்ச்சியான ஜன்னல் கண்ணாடியோடு அணைத்துக் கொண்டாள். இது எப்படி நிகழ்ந்து இருக்க முடியும்! ஏன்? அந்த நாட்டுப்புறப் பெண்ணைவிட அவள் மோசமானவளா? திகிலுக்கும் நம்பிக்கைச் சிதைவுக்கும் ஆளாகாமல், காதலனைச் சந்தித்தபோது, உல்லாசமாகச் சிரிக்கவும், அமைதியாக இருக்கவும், வழக்கப்படி சம்பாஷணை செய்வதற்கு அமைந்த வார்த்தைகளை உபயோகிக்கவும் அந்த ஆல்யாவுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று? அங்கவீனனான அந்த நொண்டியைத் தன் காதலன் வஸ்யாவாக வெகு சந்தோஷத்தோடு அறிந்து, சற்றுமே முறுமுறுப்பில்லாமல் அவனை ஏற்றுக் கொண்டாளே. இதைப் பற்றி ஆல்யாவின் உள்ளத்திலே எந்த இரவிலும் தர்க்கமோ போராட்டமோ ஏற்படவில்லை; அவள் தன் மனத்திற்கு எதிராகப் போர்புரியவுமில்லை. தன் இயல்பிலே வந்தாள்; கடிதத்தில் எழுதி இருந்தபடியே வந்து தன் வஸ்யாவைச் சந்தோஷத்தோடு அழைத்துக் கொண்டு போனாள். அவளுடைய கடிதங்கள் எல்லாம் மனப் பூர்வமாகவும் உண்மையாகவும் இருந்த அவளுடைய உள்ளத்தையே வெளிப்படுத்தின. அவனுடைய அங்க சேதங்களை மறைக்கவும் அவள் விரும்பவில்லை; அவளுடைய வஸ்யா எப்படிப் போர் புரிந்தான் என்பதை இந்த உலகம் முழுவதும் பார்க்கவேண்டும் என்றே விரும்பினாள்.

மரியா அடக்க முடியாத துயரத்தால் முனங்கிக் கொண்டே உதட்டைக் கடித்தாள். இவை எல்லாம் எதற்காக? இந்த நாட்டுப் புறத்துப் பெண், தாய் நாடு, உயர்ந்த லக்ஷியங்கள், சிறந்த தியாகங்கள் முதலிய பெரிய விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டுமென்று கனவிலும் நினைக்காமலே வாழ்நாளைக் கழிக்கலாம். அவளுக்கு எதுவும் தியாகமாக இருக்கவில்லை. தன் காதலனை வழக்கப்படி வரவேற்றாள்; அவனை பெருமையாகக் கருதினாள்; அவனுக்கு நர்ஸாகவும், உதவியாளாகவும் இருக்கும் ஸ்தானத்தை வெகு சந்தோஷமாக ஏற்றுக்கொண்டாள். இதற்கெல்லாம் பாத்திரமாய் இருந்தவன் நாட்டுப் புறத்திலே வாழும் ஒரு சாதாரணக் குடியானவ இளைஞன்.

கைவேலை செய்து பாடுபட்டுப் பிழைப்பவன்; இப்பொழுது கை இழந்து கால் இழந்து செல்கிருன்.

மரியா தன் உதடுகளை நன்ருய் அழுத்திக்கொண்டாள். கதவுவரைக்கும் நிதானமாக அடி பெயர்த்து நடந்தாள். எதையோ செய்யத் துணிந்துவிட்டாள் என்பது தெளிவாயிற்று அவள் கதவைத் திறந்த மாதிரியிலே. அவள் கிரிஷாவிடம் போகத் தீர்மானித்து விட்டாள்; அவனை இப்பொழுதே பார்த்து, அவளுடைய மனத்திருப்திக்காகவே அவனிடம் சில விஷயங்களை விசாரிக்க வேண்டும்.

ஆனால், அவள் கிரிஷா இருந்த அறையின் கதவை நெருங்கியபோது அவளுடைய மன வலிமை அவளை விட்டகன்றது, கிரிஷாவுக்குச் சம்பவித்த விபத்தை அவள் திரும்பவும் ஒரு முறை பார்க்க முடியாது. சீரழிந்து கிடந்த அந்த மனிதன் கிரிஷா இல்லை. இஷ்டமானதை எல்லாம் அவள் தனக்குத் தானே சொல்லிக் கொண்டிருக்கலாம்; ஆனால் அவன் கிரிஷா இல்லை. அவன் அன்னியன்; அவளுக்கு அறிமுகம் இல்லாத ஒருவன். வைத்தியசாலையில் காயம் பட்டுக் கிடந்த மற்றெல்லா நோயாளிகளிடத்திலும் காணப்படாத ஒரு விசேஷம் இவனிடத்திலே இருந்தது. மற்றவர்களுடைய காயத்தை அமைதியாகவும் மெதுவாகவும் கட்டும் பொழுது அவளுடைய கைகள் நடுங்குவதில்லை. அவர்களுக்கு உதவியும ஆறுதலும் கிடைக்க வேண்டுமென்ற ஆழமான ஆர்வத்தோடு எதையும் செய்வாள். ஆனால், அந்த மனிதனைக் கண்ட உடனே அவளுடைய உள்ளம் திகில் அடையும்.

* * *

"கிரிகோரி, இப்பொழுது நீ வீட்டுக்குப் போகலாம் என்று வைத்திய ப்ரொபஸர் கூறுகிருர்" என்ருள் மரியா; வழக்கப்படியே தன் கணவனுடைய கண்களைப் பாராமலே முகத்தை ஒரு பக்கமாகத் திருப்பிக்கொண்டாள்.

"வீட்டுக்கா?" என்ருன் அவன். அந்த ஒரே வார்த்தையை மட்டும் பிரித்தெடுத்துக் கேள்வியாகக் கேட்டான்.

"இனிமேல் நீ இங்கே இருக்கத் தேவை இல்லை." என்று பதில் சொன்னுள்; அவனிடத்தில் ஏதோ கரிசனை

கொண்டவள் போல அவளுடைய குரல் தொனித்தது. "வைத்தியசாலைகளில் வாழ்ந்த வாழ்விலே உனக்கு இன்னும் சலிப்பு ஏற்படவில்லையா?"

அவன் ஒரு வார்த்தைகூடப் பதில் சொல்லாமல் அவளைக் கபடமாகப் பார்த்தான். ஏதோ ரொம்ப அலுவலாக இருப்பது போல நடித்துக் கொண்டே அவனுடைய சாமான்களை எல்லாம் மூட்டை கட்டத் தொடங்கினாள். அவன் மட்டும் கவனிக்காமல் இருந்தால்... அவன் மட்டும் கவனிக்காமல் இருந்தால்...........

இதிலும் மோசமானது இனிமேல்தான் வரப் போகிறது. அது அவளுக்காகக் காத்துக்கொண்டிருந்தது. வீடு! அங்கே அவள் ரொம்ப அலுவலாக இருப்பதுபோல நடிக்க முடியாது. சாக்குப் போக்குச் சொல்லமுடியாது. அங்கே அவள் அவனை ஒரு நோயாளி போல நடத்த முடியாது. அங்கே அவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வழக்கமான இயல்பிலே இருக்க வேண்டும்; அவன் அவளுடைய கணவனாக அங்கே இருப்பான். வாழ்க்கை ஒரே கிரமமாக நடைபெறவேண்டும். அவளுடைய தாயின் கண்கள் இருவரையும் கவனித்துக் கொண்டிருக்கும். தாய் அவளைச் சந்தேகத்தோடு பார்ப்பாள். வைத்தியசாலையில் சமாளித்த நிலைமையை விட நூறு மடங்கு அதிகச் சங்கடமாக இருக்கும் வீட்டிலே.

இதை எல்லாம் நினைத்தபோது, திகில் கொடிய குளிராகி அவளுடைய உள்ளத்தை நடுக்கத் தொடங்கியது. ' "ஐயா, அப்படி இல்லை; அவன் இப்பொழுது வீட்டுக்கு வரவேண்டாம்; தயவுசெய்து, கொஞ்சம் தயவுசெய்து, இன்னும் கொஞ்ச நாட்களுக்கு—இன்னும் எத்தனை நாட்கள் இங்கே இருக்கலாமோ அத்தனை நாட்களுக்கு—அவனை இங்கேயே வைத்துக்கொள்ளவேணும்' என்று மன்றுடிக் கேட்டுக் கொள்கிறேன்; 'வீட்டிலே நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ்கிற கொடிய காலம் நெருங்கி வாராதபடி கூடிய மட்டும் அதை ஒத்தி வைக்கவேணும்; நாங்கள் இருவரும் எங்களுடைய காதல் நாட்களை இன்பமாகக் கழித்த அதே அறையில் இருவரும் மறுபடியும் சேர்ந்து வாழுங்காலம் நெருங்கி வாராதபடி ஒத்தி வைக்கவேணும்' "

என்று ஏன் அந்த வைத்திய ப்ரொபஸரிடம் அவள் சொல்ல வில்லை? அதற்குத் தைரியம் இல்லை.

கள்ளங் கபடில்லாத அந்த வைத்திய ப்ரொபஸர் கிரிகோரி குணம் அடைந்ததைப் பற்றி மகிழ்ச்சி அடைந் தார். அவரை ஏமாற்றுவதற்காக, அவள் தன் உள்ளத் தில் இருந்த திகிலை அடக்கி, அவர் முன்னே திரும்பவும் ஒரு முறை கள்ளச் சிரிப்புச் சிரித்தாள்.

உண்மைதான்; அவளுடைய தாய்க்கு வாயை வைத் துக்கொண்டு சும்மா இருக்க முடியவில்லை; அண்டை அயல் வீட்டார் யாவருக்கும், இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டாள். ஒருவேளை அவர்களே ஊகித்துத் தெரிந்து கொண்டிருக்கலாம். எல்லோரும் அவனுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரு வரும் சேர்ந்து வீட்டுக்குப்போன பொழுது வீடுகளிலே இருந்த ஜன்னல் கதவுகளில் முகங்கள் பல தெரிந்தன; மாடிகளுக்குச் செல்லும் படிக்கட்டுக் கதவுகள் திறந்தன. அவனை வீட்டுக்கு அழைத்துச் சென்றது ஒரு வெற்றிக் கொண்டாட்டமாக, ஊர்வலமாகத்தான் இருந்தது.

இதோ இங்கே முதலாவது மாடி! அடுத்தது இரண் டாவது மாடி! சிலுவையில் இறந்தவரைக் கொண்டு போன கல்வாரி மலைக்குப் போகும் பாதை போல, அடுக் கிற்கு மேல் அடுக்காகச் செல்லவேண்டும். இதோ இங்கே இருக்கிறது, இஷ்டமானபோது அவர்களை அடைத்து விடக்கூடிய கதவு. உளவு பார்க்கும் கண்க ளுக்கு மறைவாக அவர்களை அடைத்துக் காக்கும் கதவு இதுதான். அனுதாபம் காட்டும் கண்களில் இருந்து அவர்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ள விரும்பினல் இந்தக கதவே உதவும்.

இதோ இருக்கிறது அவர்களுடைய அறை.

உணர்ச்சிப் பெருக்கால் கிரிகோரியின் முகம் வெளிறி விட்டது. முன் ஒரு காலத்தில் அவர்கள் இன்பம் அனுப வித்த அதே அறை இதோ இருக்கிறது. எழுதுவதற்காக உபயோகிக்கும் மேசையை அவன் தொட்டான். அதன் மேல் இருந்த மரியாவின் படத்தை வேறொரு இடத்தில்

கொண்டுபோய் வைத்தான். இப்பொழுது இல்லாமற் போன கிரிகோரியின் படத்தை—வெள்ளிச் சட்டத்திலே இருந்த அவனுடைய சொந்தப் படத்தை — கையில் எடுத்துக் கொண்டான். "நான் அந்தப் படத்தை முந்தியே மறைத்து வைத்திருக்க வேண்டும்" என்று தன்னையே கடிந்து கொண்டாள் மரியா. "இப்பொழுது பிந்திப் போய்விட்டது" என்று சொல்லிக்கொண்டாள்.

தத்யானு பெத்ரோவ்னு அடிக்கடி எதையோ முகர்வது போல மூச்சு இழுத்து 'துறு துறு' என்று சுற்றிக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்ணீர் எல்லாம் ஆனந்தக் கண்ணீர். அவள் அடிக்கடி கிரிகோரியிடம் சிறிது அச்சத்தோடு ஜாக்கிரதையாகச் சென்று அவனுடைய தோள்களை வருடினுள். அவளுக்கு கிரிகோரி வழக்கப்படியான என்றைக்கும் உள்ள கிரிகோரிதான். என்றைக்கும் உள்ள மாமூல்படி அவள் தன் மகளுடைய உள்ளத்தை வருத்திய துயரத்தைக் கொஞ்சங்கூடத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

நோயாளியைத் தூக்கிக் கொண்டு வந்த வைத்தியப் படை வீரர் வந்தனம் அளித்து அங்கிருந்து அகன்றுர்கள். இந்தமாதிரிச் சமயங்களிலே, எல்லாவற்றிலும் முன்னுக்கு நிற்கும் வாரன்ஸோவ்கூட விடை பெற்றுக் கொண்டு போய்விட்டான். தங்கிப் போகும்படி அவள் எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. அவளுடைய கருத்து அவனுக்கு விளங்கவே இல்லை. அவனுக்கு எப்பொழுதுமே அவளுடைய கருத்து விளங்காது. மரியா புகலற்றுப் போனவள் போல அவளுடைய தாயை விடாமல் தொடர்ந்து சென்று, வேண்டாததும், அர்த்தமில்லாததுமான பல கேள்விகளை ஓயாமல் கேட்டுக் கொண்டே இருந்தாள். கேட்ட கேள்விகள் ஒன்றிற்காவது பதில் வரும் மட்டும் காத்திருக்கவில்லை. அவள் ஊசி முனையிலே நிற்பது போலத் துடிதுடித்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் தேயிலைப் பானம் அருந்தினர்கள். மின்னல் வேகத்திலே கடிகாரத்தின் முட்கள் சுழன்று கொண்டிருந்தன. கிழவி கிரிகோரியை முத்தம் இட்டாள்; இரவு வந்தனம் சொல்லி நித்திரைக்குப் போய்விட்டாள். மரியா

துடித்து எழுந்தாள். மேசை விரிப்பை எடுத்து மடித்தது கொஞ்சங்கூடத் தேவை இல்லாத காரியம்; என்றாலும் அதை எடுத்து ரொம்ப நிதானமாக மடிக்கத் தொடங்கினாள். அது முடிந்தது. அதற்கு அடுத்தது என்ன? அதற்கும் அப்புறம் என்ன?

கிரிகோரி நிதானமாகச் சொன்னான்:

"மரியா, நீ படுப்பதற்காகப் பக்கத்தில் இருக்கும் ஸோபாவை இங்கே கொண்டு வந்து போட்டுக் கொள்."

மரியா அவன் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. தாய் ஒரே பிரமிப்போடு மகளைப் பார்த்துக் கொண்டிருக்கையில், மரியா அந்த அறையிலிருந்த ஸோபாவை கிரிகோரி இருந்த அறைக்குள் இழுத்துக்கொண்டு வந்தாள். அந்த அறையில் அதைப்போட இடம் இல்லை. என்றாலும் அது வரவேற்பு-உபசாரம் பெறாத விருந்தாளி போல அறையின் நடுவிலே கிடந்தது.

"எனக்கு ரொம்பக் களைப்பாக இருக்கிறது; நீ பொருட்படுத்தவில்லை என்றால், நான் தூங்கப்போகிறேன்" என்றான் கிரிகோரி.

படுக்கையில் படுத்ததும், நிதானமாக, "குட்நைட்!" என்றான். அப்புறம் சுவற்றின் பக்கமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

மரியா தனியாக அந்த ஸோபாவிலே சயனித்துக் கொண்டாள். அவளுக்குத் தூக்கமே வரவில்லை. ஓயாமல் கொடிய வேதனையை உண்டுபண்ணிக் கொண்டிருந்த வெட்கம் அவளுடைய உள்ளத்தில் குடி புகுந்தது. அவள் எதற்காக இப்படிப் பயந்து நடுங்கினாள்? தான் அற்பமாகவும் ஈனமாகவும் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. அந்த நேரத்திலே நொண்டியாக இருந்தவன் கிரிகோரி இல்லை. ஆனால், யார் நொண்டி? அங்க வீனம் அடைந்து அழுக்குப்பட்டு உதவாமற் போன அவளுடைய உள்ளமே நொண்டியாகக் கிடந்தது.

* * *

சமநிலத்திலே சேறு இருந்தது. இலைகள் இல்லாமல் மொட்டையாக இருந்த மரக்கிளைகளில் இருந்து பெரிய மழைத் துளிகள் விழுந்துகொண்டிருந்தன. விரிந்து

கொண்டிருந்த நீர் தேங்கிய பள்ளங்களை மரியா பார்த்துக் கொண்டே நடந்து சென்றாள். இப்பொழுது அவளும் வாரன்ஸோவும் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். இன்னும் பனிக்கட்டி உருகவில்லை பனிக்கட்டிக்கும் சமநிலத்தில் இருந்த சேற்றிற்கும் வித்தியாசமே தெரிய வில்லை. நடந்து சென்றவர்களுடைய காலடி பதிந்து அழுந்திய இடுக்கமான ஒற்றையடிப்பாதை ஒன்று நதியின் குறுக்கே தெரிந்தது. அந்தப் பாதை, விழுந்த இலைகளினால் ஆன போர்வை அணிந்து அசுத்தமாக இருந்தது.

பக்கத்திலே வேலியாக இருந்த சட்டங்களைக் கோப்ப தற்காக நட்டிருந்த கல்-தூணின் மேல் மரியா தன் முழங் கையை ஊன்றியபடியே, கீழே இருந்த பனிக்கட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிறிது காலத்திற்கு முன்பு இங்கே தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. முத்துப் போல் தெளிந்த நீர் பெருக்கருமல் சிற்றலைகளை வீசி எறிந்து நெடுந் தொலையில் போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்தது. இந்த நதியில் பட குகள் மெதுவாக இழைந்து சென்றன; அந்தப் படகு களில் 'கலகல' என்று சிரித்துக் கொண்டே பிரயாணம் செய்த ஜனங்களும் இருந்தார்கள். இதெல்லாம் சிலநாட் களுக்கு முன் இந்த இடத்திலே கண்ட காட்சிகள். 'பளபள' என்று பிரகாசிக்கிற நீர்ப் பரப்பைக் கிழித்து, 'புஸ்! புஸ்!' என்று புகை விட்டுக் கொண்டு நீராவிக் கப்பல் ஒன்று அந்த நாளிலே இந்த வழியாகச் சென்றது. பஞ்சுக் குவியல் போன்ற மேகங்களோடு விளங்கிய நீல வானத்தையும், புன்னகை செய்து கொண்டிருந்த தளிர் இலைகளையும் இங்கே ஓடிக் கொண்டிருந்த நீர் சமீப காலம் வரைக்கும் பிரதிபலித்துக் காட்டிக் கொண்டிருந்தது. இப்பொழுது அந்தக் காட்சிகள் யாவும் மறைந்து விட்டன. காலின் கீழே மிதியுண்டு அழுக்குப் படிந்து, பாழான பனிக்கட்டி தான் இப்பொழுது இருந்தது.

வாரன்ஸோவ் தன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். மரியா அவன் பக்கமாகத் திரும்பினாள். அவன் அவளைப் பார்த்தான். அவனுடைய பார்வையில் நம்பிக்கையின்மையும் மனக் குழப்பமும் வெகு தெளிவா கத் தெரிந்தன. அவன் தன் உள்ளத்தில் எழுந்த

உணர்ச்சிகளை அடக்க முடியாமல் கஷ்டப் பட்டான்; அவனுடைய தொண்டை அடைத்துக் கொண்டது. அவனுடைய தொண்டைமணி அசைவதையும், அதோடு அவனுடைய மீசை அவலக்ஷணமாகக் கோணுவதையும் அவள் கவனித்தாள். இந்தச் சந்திப்புக்கு அவன் ஏற்பாடு செய்ததின் காரணத்தை அவளிடம் சொல்ல நாவெழாமல் திண்டாடினான்.

அவன் பேச்சை ஆரம்பிப்பதற்கு அவள் உதவி செய்திருக்கலாம்; ஆனால், அப்படிச் செய்ய அவளுக்கு இஷ்டம் இல்லை. ஆகையால், அவள் தன் சட்டையின் கழுத்துப் பட்டைப் பொத்தான்களை எல்லாம் ஒவ்வொன்றாக இழுத்து மாட்டினாள். உறைந்து போயிருந்த நதிக்கரை ரொம்பக் குளிராக இருந்தது. முன் ஒரு தருணம் ஓடிக் கொண்டிருந்த தண்ணீர், இப்பொழுது பார்த்துப் பார்த்துச் சலித்துப்போன சாம்பல் நிறத்தில், ஓடுபோல நீரை மூடியிருந்த அழுக்குப் பிடித்த பனிக்கட்டியை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

" மரியா, நான் பக்கத்திலே நின்று இதை எல்லாம் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. நான் உன்னைக் காதலிக்கிறேன்; நீ கிரிகோரியை மணப்பதற்கு முந்தியே நான் உன்னைக் காதலித்தேன் என்பது உனக்கு நன்றாய்த் தெரியும்."

"உன் மாணாக்கர்களில் ஒருத்தியாக நான் இருந்த காலத்திலே தானே?" என்றாள் மரியா; அவன் வேறு யாரிடத்திலோ பேசியது போல அலக்ஷியமாகவும், எவரையும் குறிப்பிடாமல் ஆராயும் மனப்பான்மையோடும் அவள் கேள்வி கேட்டாள்.

" ஆமாம்; அந்தக் காலத்திலிருந்து தான்; நீ அதைக் கவனிக்கவில்லை; ஒரு வேளை என் மன நிலையைக் கவனிக்க விருப்பம் இருக்கவில்லையோ என்னவோ?"

" எனக்கு அதைப் பற்றி ஒன்றுமே தெரியாது; அப்படியே தெரிந்திருந்தாலும் என்ன?" என்று அவள் அமைதியாகச் சொன்னாள்.

" அப்படியா? தெரிந்துகொண்டேன். நான் காதலித்தாலும் காதலிக்காவிட்டாலும் உனக்கு அதைப்பற்றி

அக்கறை இல்லை என்று சொல்ல விரும்புகிறாயல்லவா?'' என்று அவனுக்கு வழக்கமில்லாத வெடுவெடுப்போடு குறுக்கிட்டுப் பேசினான். "நீ எனக்கு அதை எல்லாம் சொல்லத் தேவை இல்லையே. எனக்கு அதெல்லாம் ரொம்ப நன்றாகத் தெரியும். ஆனால்...சரிதான்...அதன் பிறகு என் வாழ்க்கையிலே பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. நீ கிரிஷாவைக் கலியாணம் செய்துகொண்டாய். ரொம்ப நல்லது; நான் அதை ஏற்றுக்கொண்டேன். நான் உன் நேசத்தைத் தேடவோ, கிரிஷாவோடு போட்டி போடவோ முயற்சி ஒன்றும் செய்யவில்லை என்பதை நீயே தெரிந்து கொண்டிருப்பாய். நான் எப்பொழுதும் உனக்கு உற்ற நண்பனாகத்தான் நடந்து கொண்டேன்; அப்படித்தானே மரியா?''

நதியையும், பின்பு எதிரே இருந்த சாம்பல் நிறமான வீடுகளையும் பார்த்த பார்வையோடு, "ஆமாம்" என்று ஒப்புக்கொண்டாள். அவள், தன் உள்ளத்திலே, "ஜன்னல், ஜன்னல், முடிவில்லாமல் வரிசையாக இருக்கும் ஜன்னல்'' என்று சிந்தனை செய்தாள்.

"ஆனால், பின்பு...'' வாரன்ஸோவின் குரல் நெரிந்தது. "பின்பு நான் நினைத்தேன்...உனக்கு நான் தேவை என்று எனக்குத் தோன்றியது. என்னோடு உறவாடுவதிலே உனக்குச் சலிப்பு ஏற்படவில்லை என்று நினைத்தேன். நம் இருவருடைய மனத்தையும் கவர்ந்த பொதுவான விஷயங்கள் பல. நாம் இருவரும் ஒரே மாதிரியான வேலையில் ஈடுபட்டிருக்கிறோம். எல்லாம் பின்னால் சரியாகிவிடும்; நான் முதன் முதலில் உன்னைச் சந்தித்த போது நிறைவேறாமல் போனது இப்பொழுது நிறைவேறலாம்—என்று எண்ணத் தொடங்கினேன்.''

அவன் சொல்வதைக் கவனித்துக் கேளாமலே அவள் தலையை அசைத்தாள். அவன் சொன்னதெல்லாம் மெத்தென்றிருக்கும் கனமான மூடு பனிபோல்—ஒரு கனவு போல் இருந்தது. வார்த்தைகள், சம்பவங்கள், பொருள்கள் எல்லாம் தத்தமக்குரிய உண்மை நிலைமையை இழந்துவிட்டன அவள் சம்பந்தப்பட்ட அளவிலே. அவள் கனவுலகத்திலே வாழ்ந்து வந்தாள்; அந்தக் கனவுலகத்திலே

சாம்பல் வர்ணமான கொடிய கனவுகள் வெகு பாரமாக அவளை அழுத்திக் கொண்டிருந்தன. அவள் அந்தக் கனவுலகத்திலே வாழத் தொடங்கி நெடுங்காலமாயிற்று.

"ஆனால், நான் இப்பொழுது அதைப் பார்த்துக் கொண்டிருக்க நேர்ந்துவிட்டது. இனிமேல் என்னால் அதைச் சகிக்கமுடியாது. நீ உன்னையே வேதனைகளுக்கு ஆளாக்கிக்கொள்கிறாய்; என் கண் எதிரிலேயே உலர்ந்து வாடிப்போகிறாய். உருத் தெரியாதபடி மாறிவிட்டாய்..."

இந்த விஷயம் அவனுக்குக்கூடத் தெரிந்துவிட்டது. அவன்கூட அதைப் பார்க்க முடிந்தது. மரியா எப்படி மாறிவிட்டாள் என்பதை அவனும் பார்க்க முடிந்தது. பழைய மரியா இப்பொழுது இல்லை என்பதை அவன் கூடத் தெரிந்துகொண்டான்.

"காதலுக்காக ஒருத்தி தன்னையே தியாகம் செய்து கொள்ளக்கூடும் என்பதை நான் தெரிந்துகொள்ள முடியும். அப்படித் தியாகம் செய்ய முடியும் என்றாலும், தன்னையே முற்றிலுமாகத் தியாகம் செய்துகொள்வது இரு திறத்தாருக்கும் எப்பொழுதும் நன்மையாக இராது. ஆனால், இப்பொழுது நிகழ்ந்திருக்கும் விஷயத்திலே...... மரியா, நீ இப்பொழுது அவனைக் காதலிக்கவில்லை; இனி ஒருபொழுதும் அவனைக் காதலிக்கவும் முடியாது; இதெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும்."

மரியா மௌனமாக இருந்தாள். சாம்பல் நிறமான நதி; சாம்பல் நிறமான வீடுகள்; சாம்பல் நிறமான நாள். எதற்காக இந்த வாரன்ஸோவ் இப்படி ஒரே அடியாக மனக்கிளர்ச்சி அடைகிறான். அவன் எதை உத்தேசித்துத் தன்னை இப்படி வேதனைக்கு ஆளாக்கிக்கொள்கிறான்? ஏன், ரொம்ப சமீபத்திலேதான் அவன் இப்பொழுது சொல்லிவந்த கருத்துக்களுக்கு முற்றிலும் விரோதமான விஷயத்தைப் பேசினான். அவன் சொன்ன விஷயங்களிலே, அவனுடைய துன்பங்களிலே ஏதோ ஒன்று ரொம்ப அருவருப்பாக இருந்தது. மேலும் இந்த உலகத்திலே துயரமும் வேதனையும் இருந்தால் என்னதான் குடிமுழுகிப் போய்விடும்? இந்த உலகத்திலே எது எப்படி இருந்தால் என்ன? இந்த அருவருப்பான

விஷயங்களைச் சொல்லிக்கொண்டு அவளை அணுகலாம் என்று அவன் நினைத்தானே. இது இருக்கட்டும்; இதைவிடச் சிறந்த நன்னெறி ஒழுக்கத்தை அவனிட மிருந்து எதிர்பார்க்க அவளுக்குத்தான் என்ன உரிமை இருந்தது?

"நீ மறைக்கப் பார்க்காதே. உனக்கு அவனிடத்தில் கொஞ்சங்கூடக் காதலே இல்லை; நீ அவனைக் காதலிக்க வில்லை என்பது எனக்கு நன்றாய்த் தெரியும்."

அவன் ஏன் அப்படிக் கேட்டான்? அவனுக்குப் பதில் சொல்ல அவள் வாயைத் திறந்தாளா? இல்லையே. அவனுடைய வார்த்தைகள் வெகு தூரத்திற்கப்பால், சாம்பல் நிறமான தடித்த மூடுபனிக்குள் இருந்து வருவது போல அவளுக்குத் தோன்றியது. அந்த வார்த்தைகள் அவளைப் பார்த்துச் சொன்னவைகள் அல்ல; அவளைக் கடந்து எங்கேயோ மிதந்துபோன வார்த்தைகள்; பனிக் கட்டிக்கு அடியிலே சேறு நிறைந்த பாதை வழியாகக் குளுகுளு என்று கொப்பளித்துப் பாய்ந்து எங்கேயோ ஓடிப்போகிற நதியின் நீரைப்போல் அந்த வார்த்தைகளும் எங்கேயோ சென்றன.

"நீ அவனைக் காதலிக்காமல் இருப்பதோடு நின்று விடவில்லை; நான் சொல்லப்போகிற விஷயத்திற்காக உனக்குக் கோபம் வேண்டாம்; என்னை மன்னிக்கவேணும்; அவனைக் கண்டு நடுங்கி ஓடுகிறாய். அவனைப் பார்க்கும் பொழுதெல்லாம் திகில் அடைகிறாய். இதெல்லாம் எனக்குத் தெரியும். கிரிகோரிக்கும் உன் மன நிலை தெரியாமல் போகாது. வெகு சீக்கிரம் அவனுக்கும் தெரிந்துவிடும். இப்பொழுது நீ அவனுக்கு அளிப்பது என்ன? ஒரு நர்ஸ் அளிக்கக்கூடிய பராமரிப்புத்தான். அவனுக்கு மனைவியாக இராத எந்த நர்ஸிடத்திலும் அவன் இதே பராமரிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். அவளுக்கு எந்தவிதமான மன வேதனையையும் கொடுக்காமலே அவன் அந்த உதவியை அவளிடம் இருந்து பெறமுடியும்."

ஆமாம்; இதெல்லாம் உண்மைதான். ஆரம்பத்திலிருந்தே வாரன்ஸோவ் சொல்லி வந்ததெல்லாம் சரிதான்

என்று அவள் உணர்ந்தாள். ஏற்கெனவே கிரிகோரி அவளுடைய மன நிலையைத் தெரிந்துகொண்டு விட்டான். அவளுடைய மன நிலையை கிரிகோரி யிடமிருந்து மறைக்க முடியாது என்பது முதலிலேயே அவளுக்கு ஏன் உதயமாகவில்லை?

"நீயும் இன்பமாக வாழவில்லை; அவனையும் இன்பமாக வாழவிடவில்லை. முன் ஒருகாலத்தில் அவன் காதலித்த அதே பெண் இப்பொழுது அவனைப் புறக்கணிக்கிறாள்; இதைச் சகித்துக் கொண்டிருப்பது அவனுக்கு இலேசான விஷயம் என்று நினைக்கிறாயா? இல்லை மரியா. கிரிகோரிக்கு இப்படி அநியாயம் செய்வது உனக்குத் தகுதியே இல்லை. இப்படிச் செய்ய உனக்கு உரிமையும் இல்லை. அதே சமயத்தில் உன் வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளவும் உனக்கு உரிமை இல்லை. இப்படி எல்லாம் செய்வது விவேகமாகவும் இராது. கிரிகோரி ஊருக்குத் திரும்பிவர மனம் இல்லாமல் இருந்தது எவ்வளவு நியாயமான காரியம் என்பதை நான் இப்பொழுதுதான் உணருகிறேன். அந்தக் காலத்திலே எனக்கு அவனுடைய தீர்மானம் மூடத்தனமாகத் தோன்றியது."

இல்லை; இப்பொழுது கேட்பது பனிக்கட்டிக்கு அடியிலே ஓடுகிற தண்ணீரின் 'குளுகுளு' ஓசை அன்று. வாரன்ஸோவ்தான் அவளிடத்தில் பேசுகிறான். சாம்பல் நிறமான மூடுபனித் திரையைக் கிழித்தெறிந்து வாரன்ஸோவ் சொல்லுகிற வார்த்தைகளைக் கவனமாகக் கேட்க முயன்றாள் மரியா. அவனுக்குப் பதில் அளிக்கவேண்டும்; ஏதாவது செய்யவேண்டும். ஆனால், அவள் மௌனமாக அசையாமல், பனிக்கட்டி மேலே ஒற்றை அடிப்பாதையில் வெகு தெளிவாகப் பதிந்து கிடந்த ஏதோ அடிச்சுவடுகளைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே நின்றாள். அது யார்? அந்த வழியாக நடந்து சென்றது யார்? அவ்வளவு தெளிவான வடிவத்திலே அழிந்துபோகாதபடி அடிச்சுவடுகள் பதிய நடந்து சென்றவர்கள் யார்? அவர்கள் சந்தோஷமாக, இன்பமாக, இருப்பவர்களா? அல்லது அவர்கள் கரைகவிந்த துயரச் சுமையைச் சுமந்து சென்றவர்களா? அந்த அடிச் சுவடுகள் மனிதருடைய சந்தோஷத்தைப் பார்க்கிலும், மனிதருடைய வாழ்வைப் பார்க்கிலும்,

மனிதருடைய முன் எச்சரிக்கையான ஏற்பாடு களைப் பார்க்கிலும் அதிக நேரம் நீடித்திருப்பவை அல்லவா?

"உயிரை மாய்த்துக்கொள்ள உனக்கு எவ்வித உரிமையும் இல்லை. இளமை, உடல் வலிமை, திறமை எல்லாம் பெற்றிருக்கிறாய்; வயதுக்கும் மிஞ்சிய அனுபவமும், வேலைத் திறமையும் உடையவள். நீ கிரிகோரியோடு கட்டுப்பட்டுக் கிடந்தால் எந்த நன்மையையும் அடைய மாட்டாய்......"

உண்மைதான்; அவள் ஒரு காலத்தில் இளமையோடு விளங்கினாள். இளமைக்கு முடிவே இல்லை என்று ஒரு காலத்தில் அவளுக்குத் தோன்றியது. இந்த அறிவை உலக முழுவதும் பரவச்செய்ய முடியும் என்றும் அவள் கருதியிருந்தாள். உடல் வலிமை? ஆமாம்; அவள் உடல் வலிமையோடு ஒரு காலத்தில் இருந்தாள். ஒரு பொழுதும் வற்றாததுபோல் தோன்றியதும் பறந்து செல்லும் ஆற்றலை உடையதுமாகிய சக்தி ஒன்று அவளை வாழ்நாள் எல்லாம் சுமந்து சென்றது. அந்தச் சக்தி நோயாளிகளைக் கட்டிலுக்குக் கட்டில் சுமந்துசெல்ல வலிமை அளித்தது; முதன் முதலில் காயம் அடைந்தவர்கள் வரத் தொடங்கிய நாளிலிருந்து நாற்பத்தெட்டு மணி நேரம்வரைக்கும் ஒரே அடியிலே தொடராகச் சோராமல், ஓயாமல் வேலை செய்யக்கூடிய உடல் வலிமையை அவளுக்கு அளித்தது. ஆனால், இப்பொழுதோ, அந்தச் சக்தி அவளைவிட்டு அகன்றது. அது அவளைக் கைவிட்டது; காற்றைத் திறந்துவிட்ட பலூன்போல் அவள் இப்பொழுது தோன்றினாள்.

குழந்தைகள் வைத்து விளையாடும் ஒரு வர்ண பலூன் மேலும் கீழும் எழும்பி விழுந்து பிரகாசமான நிறத்தோடு மேலே பறக்கிறது. சிறு குழந்தைப் பாதங்கள் அதைப் பிடிக்க ஓடுகின்றன. உல்லாசக் களிப்பால் சிறு கைகள் கரகோஷம் செய்கின்றன. பெரியவர்கள் புன்னகை பூத்த முகத்தோடு, சூரிய கிரணம் பிரதிபலிக்கிற சோப்பு நீர்க் குமிழி போலவும், வானவில்லின் வர்ணங்களோடு கூடிய கனவுபோலவும் அந்த பலூன் கிளம்பிப்போவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் பலூனின்

உடல் வெடிக்கிறது; தரையின்மேல் வந்து விழுவ தெல்லாம், நிறமற்று, கவர்ச்சியற்று, ஒருவருக்கும் தேவை இல்லாமல், குப்பையில் போடத்தகுந்த நிலைமை யிலே சுருக்கும் சுளுக்கும் பெற்றுக் கசங்கிக் கிழிந்து போயிருக்கும் ஒரு கந்தல்தான். அவளுடைய இளமையும் உடல் வலிமையும் இப்படித்தான்—சில மணி நேரங்கள் வாழ்கிற வர்ணபலூனைப் போலத்தான் — கடந்து போய்விட்டன.

"மரியா, நான் சொல்வதை எல்லாம் கவனித்துக் கேட்கிறாயா?"

அவள் தலையை அசைத்தாள். அவள் அவனுடைய வார்த்தைகளை நன்றாய்க் கேட்டாள்; நிச்சயந்தான். சாம்பல் நிறமான மூடு பனித்திரையினூடே ஓயாமல் பிடி வாதமான இயல்போடு புகுந்து வந்து கொண்டிருந்தன அந்த வார்த்தைகள்.

"நீ வாழவேணும் மரியா. இயற்கைக்குப் பொருத்த மான இயல்பிலே கட்டாயமாக வாழ வேணும். நான் உன்னைக் காதலிக்கிறேன், மரியா. நான் சொல்வது உன் காதில் விழுகிறதா? நான் உன்னைக் காதலிக்கிறேன்."

"ஆனால், விக்டர், நான் உன்னைக் காதலிக்கவில்லையே" என்றாள் வெகு தெளிவான குரலிலே நிதானமாக. அவள் அப்படிப் பதில் சொன்னபோது அவளுடைய பார்வை, அதே அடிச்சுவடுகளிலே பதிந்து கிடந்தது. அழுக்கான பனிக்கட்டி மீது பதிந்து கிடந்த அந்த அடிச்சுவடுகள் யாருக்குரியவை என்று தெரியவில்லை.

"மரியா, நீ என்னைக் காதலிக்கவில்லை என்று எனக் குத் தெரியும்; தற்சமயத்திற்கு நான் அதை ஏற்றுக்கொள் கிறேன். அப்படித்தான் இருந்தாலும், நீ என்னோடு வா. நாம் இந்த ஊரை விட்டுப் போய்விடலாம். நான் உன்னை வேறு எந்த இடத்திற்காவது அழைத்துச் செல்கிறேன். நாம் வெகு தூரத்திற்கப்பால் எங்கேயாவது போய் விடு வோம். அங்கே மிகவும் உயரமான மலைகளைப் பார்க்க லாம். இந்த இடத்திலிருந்து முற்றிலும் வித்தியாசமான காற்றை உட்கொள்ளலாம். அங்கே ரோஜா மலர்கள் நிறைந்த பூந்தோட்டங்கள் உண்டு. நீ பழையவைகளை

எல்லாம் மறந்து விடுவாய். காலம் எல்லாவற்றையும் மறக்கப் பண்ணிவிடும். எது எப்படியானாலும், உனக்கு நான் வெறுப்பானவன் இல்லை; நீ என்னை வெறுக்கிருயா மரியா? கொஞ்ச நாளாக நீயும் என்னிடத்திலே பிரியம் உடையவளாக இருக்கிருய். உனக்கு என் உள்ளும் புறமும் தெரியும். மரியா, நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ இன்பமாக வாழ்வதற்கு என்னால் ஆன மட்டும் பிரயாசைப் படுவேன். என்னால் இயன்றதெல்லாம்..."

நதிக்கு அப்பால் ஒரு வீட்டில் புகைப் போக்கி வழியாகக் கரிய புகை சுழன்று மேலே எழுந்தது. காற்று அந்தப் புகையைக் கீழே, வீட்டுக் கூரை மேலே அடித்து அழுத்தியது. புகை மெதுவாகப் பரவிக் கரியமேகமாகத் தெருவெங்கும் நிரம்பியது. சுழலும் புகையையும், புகைப் போக்கியின் வாய்வழியாகப் புதுப் புது உரு-வடிவங்களை அடைந்து வெளியேறி வந்த கரிய புகை-அலைகளையும் மரியாவின் கரிய விழிகள் பராக்காகப் பார்த்துக்கொண்டிருந்தன. அந்தப் புகையின் விநோதமான வாசனையைக் கூட அவள் முகர்ந்து அறிய முடிந்தது. அன்றைக்கு, அவள் போயிருந்த அந்த நாளில், பெரிஸோவ்காவிலே அடித்த புகைச்சல் நாற்றம்போல் இருந்தது இந்தப் புகையின் வாசனையும்.

"நாம் இங்கிருந்து போய் விடலாம். மரியா நான் சொல்வதைக் கேட்கிருயா? நாம் இருவருமாக வாழ்க்கையைத் திரும்பவும் ஆரம்பிக்கலாம்; புதிதாக ஆரம்பிக்கலாம். நாம் இருவரும் சேர்ந்து வாசிக்கலாம், பாடலாம். உனக்குப் போதுமான இளைப்பாறுதல் இருக்கும்."

"அப்புறம் கிரிகோரியின் கதி என்னவாகும்?" என்று நிதானமாகக் கேட்டாள்.

"எனக்கு விளங்குகிறது. என்றாலும், மரியா, இப்பொழுது இருக்கிற நிலைமை எல்லாம் உனக்குத் தெரியும். நீ அவனோடு தங்குவதனாலே அவனுக்குக் கொஞ்சங்கூடச் சுகம் இல்லை. நீ அவனைப் பற்றிக் கவலைப்படமாட்டாய். உன் மன நிலைமை அவனுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிருய்? இதை அவன் ஏற்கெனவே

தெரிந்து கொண்டான். அதனாலேதான் திரும்பி வர மனம் இல்லாமல் இருந்தான். சோன்யாவே இல்லை என்று நினைத்துக்கொள். இந்தச் சம்பவம் ஒன்றும் நிகழாதது போலக் கருதமாட்டாயா?..."

ஆமாம்; ரொம்பச் சரிதான். அப்பொழுது எல்லாம் ரொம்ப வித்தியாசமாகத்தான் இருக்கும். திடீரென்று, அந்தச் சாம்பல் நிறமான மூடுபனி இரண்டாகப் பிளந்தது. அந்தப் பிளப்பினூடே கிரிகோரி இறந்து விட்ட காட்சியைப் பார்த்தாள். இது எப்படி நிகழ்ந்ததோ? அதை அவள் அறிய முடியவில்லை. அவன் வெகு தூரத்திற் கப்பால் எங்கேயோ இறந்து விட்டான். அவள் அவனை இனிமேல் என்றுமே பார்க்க முடியாது. பெரிஸோவ்காவுக்குச் சென்ற பிரயாணமும், அங்கே அவள் தன்னந் தனிமையாகக் கழித்த நேரமுந்தான் முந்திய கதையின் முடிவு. கிரிகோரி போய்விட்டான். அவன் இனிமேல் திரும்பி வரமாட்டான்.

இந்தச் சிந்தனை, திடீரென்று வேதனையோடு எழுந்த திகிலாக மாறி, அவளுடைய உள்ளத்தை ஊடுருவிக் குத்த ஆரம்பித்தது. அந்த நாளைத் தொடர்ந்து வந்த தந்தி, அதைப் பற்றிய உறுதி, பிறகு கிரிகோரி திரும்பி வந்தது—யாவும் உருகி மறைந்துபோய் விட்டன. அவள் நின்ற நிலையிலே ஊசலாடினாள்.

"மரியா, உடம்புக்கு என்ன?" என்று வாரன்ஸோவ் வெகு கவலையோடு கேட்டான்.

"ஒன்றும் இல்லை; நான் நன்றாய்த்தான் இருக்கிறேன்."

ஆனால், அதே நேரத்தில் கிரிகோரி திரும்பி வந்து விட்டான்; அவள் வாரன்ஸோவுடன் இங்கே நதிக் கரையிலே பேசிக் கொண்டிருந்த இதே நேரத்தில் அவன் தன் வீட்டில் இருந்தான். இது அவளுக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. மற்றக் கதைகள் எல்லாம் முற்றுப் பெற்றவை; மற்றவை எல்லாம் முற்றிலுமாக ஒழிந்து போனவை.

"மரியா, எதைப் பற்றி நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்? என்னிடம் சொல்லமாட்டாயா? ஏன் இப்படி ஒன்றுமே பேசாமல் சும்மா நின்று கொண்டிருக்கிறாய்?"

திரும்பவும் மூடுபனித் திரை விழுந்து எல்லாவற்றையும் மறைத்து விட்டது. பனிக்கட்டி மீது அதே காலடிச் சுவடுகள் தெளிவாகத் தெரிந்தன. கரிய புகைத் தூள் அந்தச் சுவடுகளின் ஓரத்தில் படிந்து, அவற்றை இன்னும் வெகு தெளிவாக எடுத்துக் காட்டியது. நிஜமாகவே வாரன்ஸோவ் அவளிடத்திலே விரும்பியதுதான் என்ன? அவன் அவளைச் சும்மா விடமாட்டானா? அவளிடம் பேசாமல் இருக்க மாட்டானா? அவளை இப்படி நெருக்கிக் கேளாமல் எங்கேயாவது தொலைந்து போக மாட்டானா? இதுதான் அவளுடைய எண்ணம். எவருடையது என்று அறிய முடியாத அடிச்சுவடு படிந்த அந்த ஒற்றை அடித் தடத்தைத் தன்னந்தனிமையாகப் பார்த்துக் கொண்டிருக்க விரும்பினாள். இதைத் தவிர அவள் வேறொன்றையும் விரும்பவில்லை. இதே நேரத்தில் அவள் உள்ளத்தில் ஏதோ ஒன்று நிகழ்ந்தது. ஏதோ ஒன்று பிடிக்கு அகப்படாமல் நழுவி அவளைக் கடந்து செல்வதை உணர்ந்தாள். இப்பொழுது அவள் அந்தச் சாம்பல் நிறமான மூடுபனியில் இருந்து விடுதலை அடைந்து, ஏதோ ஒன்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள விரும்பினாள். எதைப்பற்றியோ முடிவான தீர்மானத்திற்கு வர வேண்டும் என்று நினைத்தாள்.

"மரியா, நான் ரொம்ப நாளாகக் காத்துக்கொண்டிருக்கிறேன். நான் எல்லாவற்றையும் ஆற அமர்ந்து யோசித்துப் பார்த்தேன். உன்னைப் பற்றியும், என்னைப் பற்றியும், கிரிகோரியைப் பற்றியும் யோசித்துப் பார்த்தேன். நெடுங் காலமாக எனக்குள்ளே போராடிக்கொண்டிருந்தேன். நான் செய்வது தப்பிதமான காரியமா என்றுகூட ஆராய்ந்து பார்த்தேன். நீ என்னை நம்ப வேணும். இப்படிச் செய்வதுதான் நம் எல்லோருக்கும் க்ஷேமமாக இருக்கும் என்று உண்மையாகவே தீர்மானம் செய்து விட்டேன். ஒரு வேளை இந்த நேரத்தில் இப்படிச் செய்வது உசிதம் இல்லை என்று உனக்குத் தோன்றலாம். ஆனால், தற்கால நிலைமை இன்னும் எத்தனை நாட்களுக்கு

நீடிக்கிறதோ அத்தனை நாட்களுக்குள் உங்கள் இருவருடைய நிலைமையும் கேடாகவே முடியும். மரியா, நான் உன்னிடத்தில் எல்லாவற்றையும் சொல்லவில்லை; நான் ஏற்கெனவே இடமாற்றத்திற்கு மனுச் செய்துவிட்டேன். எனக்கு இஷ்டமான நேரத்திலே நான் இங்கிருந்து போய் விடலாம். நீயும் என்னோடு வரலாம். ஏற்பாடுகள் எல்லாம் செய்து விட்டேன்.''

" நானா? உன்னோடு வந்து விடவேண்டுமா?''

'' ஆமாம்; நான் வைத்தியசாலைத் தலைவரிடம் இதைப் பற்றிப் பேசிவிட்டேன். அவர் இதற்குத் தடை ஒன்றும் சொல்லமாட்டார். இப்பொழுது செய்ய வேண்டிய பாக்கி அலுவல், உன் பெட்டியில் சாமான்களை அடுக்கி வைத்துப் புறப்பட வேண்டியதுதான்.''

"என் பெட்டியில் சாமான் அடுக்குவதா?''

" ஆமாம். இவ்வளவு நேரம் நான் சொன்னதை எல்லாம் நீ கேட்கவில்லையா?''

'' இல்லை; ஆமாம். கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன்.''

" அப்படியானால் இதற்கு என்ன சொல்லுகிறாய், மரியா?''

"என்ன?'' என்று யந்திரப் பதுமைபோல் கேட்டாள், பனிக்கட்டிமேல் படிந்திருந்த ஒற்றை அடித் தடத்தை இன்னும் பார்த்தபடியே.

வரான்ஸோவ் அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டான்.

" மரியா, இதைத் தவிர நாம் வேறொன்றும் செய்வதற்கு இல்லை. நாம் இருவரும் சேர்ந்து போய்விடுவோம்; நம்முடைய வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிப்போம். ஆமாம் என்று சொல்லு.''

அவள் ஒப்புக்கொண்டாள் என்பதை உணர்த்துவதற்காக ஒரு யந்திரப் பதுமை போலத் தலையை அசைத்தாள். அவளுடைய கண்கள் பனிக்கட்டி மீது கிடந்த ஒற்றை அடித் தடத்தின் மேல் பதிந்திருந்தன.

அவளுடைய பெட்டியிலே சாமான்களை அடுக்கவேணும். ரோஜா மலர்கள் நிறைந்த பூஞ்சோலை. ஆமாம், ஜார்ஜியாவிலே இந்தக் காலத்தில் உஷ்ணமாக இருக்கும். வாரன்ஸோவோடு போய்விட வேண்டும்; வாரன் ஸோவோடு. நிஜந்தான்.

“மரியா, இப்போதோ பிந்தியோ நீ தீர்மானம் செய்ய வேண்டிய விஷயந்தானே இது? எதற்காக இதை ஒத்தி வைக்கிறாய்? எதற்காக இதைத் தட்டிக் கழிக்கிறாய்? நாம் மூன்று பேரும் பெரிய வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.”

திரும்பவும் அவள் யந்திரப் பதுமை போலத் தலையை அசைத்தாள். சாம்பல் நிறமான மூடுபனி பொருமியது; சுழன்றது; அவளுக்கு எதிரிலே சாம்பல் நிறமான சுவர்போல் எழுந்தது. அந்தச் சுவரிலே அவனுடைய வார்த்தைகள் மோதி விழுந்தன. அந்தச் சுவர் அவனுடைய வார்த்தைகளை விழுங்கிவிட்டது. உடனே, அந்தச் சொற்களின் குரலும் நிறமும் அழிந்துபோயின.

வாரன்ஸோவ் சுற்றுமுற்றும் பார்த்தான். எவரையுமே காணவில்லை. அவன் மரியாவுடைய கையை எடுத்து அதை முத்தம் இட்டான்.

* * *

நடைபாதையில், மெலிந்த உடலோடு ஒற்றை-நாடி முகம் உடைய பெண் ஒருத்தி மரியா போகும் வழியில் குறுக்கிட்டாள்.

“தயவு செய்து வைத்தியசாலை சூப்பரின்டென்டின் அறை எங்கே இருக்கிறது என்று எனக்குச் சொல்ல முடியுமா?”

“நான் வழி காட்டுகிறேன்” என்று சொல்லி, மரியா முன்னே நடந்தாள். அவளுக்குப் பின்னாலே அந்தப் புதிய பெண்ணின் பாதரட்சை தாளம்போடுவது போல் சத்தம் செய்தது. அவள் மரியாவோடு சேர்ந்து நடந்தாள். அவள் கறுப்பான தொப்பியை அணிந்திருந்தாள். அதன் அகன்ற விளிம்பு சரிந்து தொங்கியது. தொப்பியின் கருமையான விளிம்பிற்குள் அவளுடைய அழகிய வெளிறிய முகத்தின் வரிவடிவம் வெகு நன்றாகத்

தெரிந்தது. மரியா ஏதோ வாசனையை முகர்ந்தாள். "அது என்ன வாசனை?" என்று யந்திரப் பதுமைபோல தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். அந்தப் பெண் மெதுவாக நடந்தாள். நாகரிகப் போக்கிற்கு ஏற்றபடி நடையும், உடையும் இருந்தாலும், அவளுடைய வெளிறிய முக பாவனையைப் பார்த்தால், அவள் கவலைக்கிடமான செய்தியை எதிர்பார்ப்பதாகத் தெரியும்.

"தயவு செய்து இந்த வழியாக வரவேணும்."

மரியா கதவைத் தட்டினாள். கதவைத் திறந்து அந்தப் பெண்மணியை உள்ளே விட்டாள்.

"நல்ல வேளையாக நீ வந்தாய், மரியா பவ்லோவ்னா. தயவு செய்து இங்கேயே இரு" என்றான் சூப்பரிண்டெண்டு. மரியா அறையிலேயே இருந்தாள்.

நெட்டையான அந்தப் பெண் தன் நீண்ட வெண்மையான கரத்தால் சூப்பரிண்டெண்டுக்குக் கைலாகு கொடுத்தாள்.

"நான் வந்து விட்டேன். என் கணவனைத் தேடிக் கொண்டு இருக்கிறேன். அவன் இங்கே, இந்த வைத்திய சாலையிலே இருப்பதாகக் கேள்விப்பட்டேன்" என்று மெதுவான குரலிலே சொன்னாள். அவள் குரல் நெரிந்திருந்தது. வார்த்தைகள் சரியாகவே கேட்கவில்லை.

சூப்பரிண்டெண்டு அவளைப் பராக்காகப் பார்த்தான். அவன் மனமெல்லாம் வேறு எங்கேயோ இருந்தது என்னும் விஷயம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"இங்கேயா? அவன் பெயர் என்ன?"

"அனேக்கின். கர்னல் அனேக்கின், இல்யா அலெக்சாந்ரோவிச்."

மரியா அவசரமாகத் தன் மனதைத் துளாவினாள். கர்னல் அனேக்கின்! ஆமாம், அவன்தான்.

"இதோ பார்த்துச் சொல்லுகிறேன்." மேசைமேல் கிடந்த பெரிய புத்தகத்தை எடுக்கக் கையை நீட்டினான் சூப்பரிண்டெண்டு. அந்தப் பெண்மணியின் முதுகுப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மரியா, அவர் கவனத்தைக் கவர அதி தீவிரமாக முயற்சி செய்துகொண்டிருந்தாள்.

சூப்பரிண்டெண்டு அவளை ஆச்சரியத்தோடு பார்த்தான். அந்தப் பெண்ணும் பயத்தோடு அவளைத் திரும்பி பார்த்தாள்.

"என்ன சமாசாரம், நர்ஸ்? உனக்கு அவனைத் தெரியுமா?"

கர்னல் அனேக்கின்! 'கிரிகோரி இறந்து விட்டான்' என்ற தவறான செய்தி வந்தபோது, இறந்துகொண்டிருந்த நோயாளி அவன்தான். அவனுக்கு அடிவயிற்றில் காயம். அவன் உயிர் அவனை விட்டுப் பிரிய வெகு நேரம் சென்றது. அவன் ரொம்ப வேதனைப்பட்டான்.

"நான் வீட்டில் இல்லை. கொஞ்சநாளாக நான் எந்த இடத்திலும் நிலைத்து நிற்கவில்லை. ஆகவே எனக்கு நிலையான மேல் விலாசமும் கிடையாது. அதனால்தான் அவன் இருப்பிடத்தை அறிவிக்கும் செய்தி எனக்கு இதுமட்டும் வந்துசேரவில்லை. அந்தச் செய்தியில் அவனை இந்த வைத்திய சாலைக்கு மாற்றியதாகக் குறித்திருந்தது. அது பழைய செய்தி. ஒருவேளை அவன்......அவன் எப்படிக் காயமடைந்தான்?" அந்தப் பெண் தன் வறண்ட உதட்டை ஒரு அழகான கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள்.

"இதோ, பார்த்துச் சொல்லுகிறேன்" என்று முணுமுணுத்துக் கொண்டே புத்தகத்தின் ஏடுகளைத் திருப்பினான் சூப்பரிண்டெண்டு. அந்த ஏடுகள் அடிக்கடி அவன் கையில் ஒட்டிக்கொண்டன.

"அனேக்கின்......அனேக்கின்......எப்போது அவன் இங்கே வந்ததாகச் சொன்னாய்?"

"நவம்பர் மாதத்திலே" என்று மரியா உடனே பதில் சொன்னாள். பிறகு, 'உளறி விட்டோமே' என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

"உனக்கு அவனைத் தெரியுமா, நர்ஸ்?" அந்தப் பெண் குதித்தெழுந்தாள். அவளுடைய கண்ணையும் நடுங்கித் துடித்த கண்ணிமைகளையும் மரியா பார்த்தாள்.

சூப்பரிண்டெண்டு புத்தகத்தின் ஏடுகளைத் திருப்புவதை நிறுத்தினான்; பதிலை எதிர்பார்த்து, மரியாவை

ஏறிட்டுப் பார்த்தான். அவன் உள்ளத்தின் குறுகுறுப்பு கண்களிலே தெரிந்தது.

"ஆமாம்......கர்னல் அனேக்கின்......" மரியா முணு முணுக்க ஆரம்பித்தாள். நெட்டையான அந்தப் பெண் அவள் அருகே சென்றாள்.

"எனக்குச் சொல். உன்னை வேண்டிக் கொள்கிறேன். சீக்கிரம் சொல். என் கணவன் எப்படியிருக்கிறான்?"

அவள் குரல் நெரிந்தது. அந்த அசாதாரணமான, வெளிறிய கண்களைவிட்டுத் தன் பார்வையை மரியா வேறு எங்கும் திருப்ப முடியவில்லை.

"தயவுசெய்து ஆத்திரம் வேண்டாம். உட்காரு. எல்லாம் தெரிந்து கொள்ளலாம்." சூப்பரின்டெண்டு குறுக்கிட்டுப் பேசினான். அதற்குக் கீழ்ப்படிந்து அந்தப் பெண் உட்கார்ந்தாள்.

"கர்னல் அனேக்கின்......டிசம்பர் மாதம், ஐந்தாம் தேதி, இந்த வைத்தியசாலையிலே கர்னல் அனேக்கின் மரணமடைந்தான்."

"என்ன?"

"அவன் மரணமடைந்தான். அவனுக்கு அடிவயிற்றில் கொடிய காயம். அவன் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அந்த அறிக்கை உனக்குக் கிடைக்காதது ஆச்சரியமாக......"

"அந்தச் சமயத்தில் நான் வெளியே போயிருந்தேன்." அந்தப் பெண்மணிக்கு விஷயத்தை விளக்க ஆரம்பித்தாள். திரும்பவும் ஒரு முறை தன் உலர்ந்த உதடுகளைச் சிறிய கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள். ஒளி ஊடுருவிப்பாயுமோ என்று நினைக்கக்கூடிய விதமாக மெலிந்திருந்த விரல்கள் கொஞ்சம் நடுங்கின. கொஞ்ச நேரம் தலை கவிழ்ந்து இருந்தாள். திரும்பவும் தன் வெளிறிய கண்களை மரியாவின் பக்கம் திருப்பினாள்.

"என் கணவனை நீ பராமரித்தாயா?"

அவள் பேசிய விஷயத்துக்குச் சற்றுமே பொருந்தாத சாதாரணக் குரலில் பேச முயன்றாள். நடக்கப் போகும்

ஏதோ ஒரு காரியத்துக்கு தன் மனத்தைத் தயாரித்துக் கொண்டாள் மரியா.

"ஆமாம்."

"நீ......அவன் மரணமடையும்போது பக்கத்தில் இருந்தாயா?"

மரியா தலையை அசைத்தாள்.

"ஆமாம்."

"அவனை உனக்கு நினைவிருக்கிறதா, நர்ஸ்?"

"அது நடந்து எத்தனையோ நாளாகிவிட்டது. இங்கே தினந்தோறும் மனிதர் இறந்துகொண்டிருக்கிறார்கள் அல்லவா?"

"குணமடைபவர்களின் சதாம்சம்......" என்று ஆரம்பித்தான் சூப்பரிண்டெண்டு. அந்தப் பெண் அசட்டையாகக் கையை அசைத்தாள்.

"அதைப்பற்றிக் கவலையில்லை இப்போது......உனக்கு அவனை நினைவிருக்கிறது, இல்லையா நர்ஸ்? நர்ஸ், தயவு செய்து என்னைப் பார்." அவள் குரலில் மன—உறுதி தொனித்தது. மரியா மந்திர சக்தியால் கட்டுண்டவள் போல, சஞ்சலம் அடைந்து வெளிறிய அந்தக் கண்களையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஆமாம். அவனை நினைவிருக்கிறது......" என்றாள் மரியா.

"மரணநேரத்தில் அவன் எப்படி இருந்தான்? நன்றாக நினைத்துப் பார். எனக்கு அது தெரியவேணும். கட்டாயம் தெரியவேணும். எல்லா விவரமும் தெரியவேணும்."

அதிகாரத் தோரணையிலே பார்த்த அந்தக் கண்களுக்கு மரியா கீழ்ப்படிந்தாள்; உபாத்தியாயனி கேட்ட கேள்விக்குப்பதில் சொல்லும் மாணவிபோலப் பதில் சொன்னாள்.

"ஏழாவது படுக்கையறையில் வியாதியாய் இருந்த நோயாளி இறந்துகொண்டிருக்கிறான் என்று கேள்விப்பட்டேன். அதுதான் கர்னல் அனேக்கின்......"

"ஆமாம், ஏழாவது படுக்கையறையில் இருந்த நோயாளி..." மரியாவின் வார்த்தைகளை மனதில் பதித்துக்

கொள்ள விரும்புவதுபோல அவைகளைச் சொல்லிப் பார்த்துக் கொண்டாள் அந்தப் பெண். "அப்புறம்?"

"நான் மாடிக்குப் போனேன்......"

"அவன் உண்மையாகவே இறந்து கொண்டிருந்தானா?"

"ஆமாம்."

"அப்புறம்? அப்புறம்?"

"நான் அவன் படுக்கைத் துணிகளையும், தலையில் வைத்திருந்த பனிக்கட்டிப் பையையும் சரியாக வைத்தேன்......"

"ஆமாம். தலையில் வைத்திருந்த பனிக்கட்டிப் பையைச் சரியாக வைத்தாய். ஆனால் அவன் அடிவயிற்றில் அல்லவா காயமடைந்திருந்தான்?"

"ஆமாம், அடிவயிற்றில்தான் காயம்...ஜுரத்தைத் தணிப்பதற்குத்தான் பனிக்கட்டிப் பை வைத்திருந்தது."

"தெரிகிறது......அவன் ஏதாவது சொன்னானா? வாய் திறந்து பேசினானா?"

மரியா நினைத்துப் பார்த்தாள். அந்தப் பெண் கண் இமைக்காமல் மரியாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"தயவுசெய்து நினைத்துப் பார். அது ரொம்ப முக்கியம். ரொம்ப முக்கியம்."

"ஆமாம். அவன் கேட்டது என்னவென்றால்..."

வெளிறிய அந்த முகத்தில், அவன் எதிர்பார்த்த ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றிய துடிப்புத் தோன்றியது:

"அவன் என்ன கேட்டான்?"

இந்தக் கேள்வியை மென்மையான முணுமுணுப்புக் குரலிலே கேட்டாள். நாற்காலியின் பின் பக்கத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண் டிருந்தாள். மெலிந்த அவளுடைய உடலில், முழங்காலுக்குக் கீழே ஒரேயடியாக வெளிறிப் போய் இருந்தது.

"அவன் யுத்தச் செய்தி என்ன என்று கேட்டான். ஏனென்றால், அப்போதுதான் யுத்தச்செய்தி வந்தது."

அந்தப் பெண் முன்னாலே குனிந்தாள். அவள் மரியா மேல் விழுந்து விடுவாளோ என்று தோன்றியது.

"இன்னும் என்ன கேட்டான்?"

"ஒன்றுமில்லை. நான் யுத்தம் செய்தியைச் சொன்னேன். அப்புறம் அவன்...அவன் இறந்து விட்டான்."

"அந்தக் கடிதம்?"

"எந்தக் கடிதம்?" என்று கேட்டாள் மரியா. அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"அவன் ஒரு கடிதம் கொடுத்திருப்பான்...கட்டாயம் ஒரு கடிதம் இருக்கவேண்டும்...எனக்கு எழுதிய கடிதம். அவன் வாய் திறந்து பேசவில்லையென்றால், கட்டாயம் எழுதி இருப்பான்."

"கடிதம் ஒன்றும் அவன் கொடுக்கவில்லை. அவனுக்கு எழுதவே முடியவில்லை."

"ஆமாம், ஆமாம். அப்படியானால், 'கடிதமே இல்லை. அவன் கேட்டதெல்லாம் யுத்தச் செய்திதான் என்று சொல்லுகிறாயா?"

"ஆமாம்."

அந்தப் பெண் நாற்காலியின் பின் பக்கம் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

"யுத்தச் செய்தி! யுத்தச் செய்தி!"

அவள் வெறி பிடித்தவள் போல அழ ஆரம்பித்தாள். "யுத்தச் செய்தி!" இந்த ஒரு வார்த்தை அவளை அலைக்கழித்தது.

"யுத்தச் செய்தி!"

சூப்பரிண்டெண்டு, அவளுக்கு உதவி செய்யப் பக்கத்தில் சென்றான்.

அவள் எதிர்பாராத முரட்டுத் தனத்தோடு அவனைத் தள்ளிவிட்டாள். மெலிந்து வதங்கிய அவள் உடல் கீழே விழுந்தது. மரியா அவள் தலையைப் பிடித்துக்கொள்ள ஓடினாள். அவள் கண் சுழன்றது; வலிப்பு ஏற்பட்டது போல உடல் நடுங்கியது; உலர்ந்த உதடுகளிலிருந்து ஒரு வார்த்தை வெளிவந்தது. "யுத்தச் செய்தி! பிறகு,"

"அவன் இறந்து விட்டான்; இறந்து விட்டான்! இறந்து விட்டான்!"

இன்னொரு டாக்டர் வந்தார். இன்னும் சில நர்ஸுகளும் ஓடி வந்தார்கள். மரியா அந்த அறையை விட்டு வெளியே சென்ருள்; நடைபாதையில் ஓடினுள். அப்போது அந்தப் பயங்கரமான, அமானுஷ்யக் குரல் "இறந்துவிட்டான்! இறந்து விட்டான்! இறந்து விட்டான்!" என்று கூச்சலிட்டுக்கொண்டு அவளைத் தொடர்ந்து சென்றது.

சண்டைச் செய்தியைப் பற்றியே நினைத்துக்கொண்டு உயிர் துறந்த கர்னல் அனேக்கினுக்கும், வெளிறிய முகமுடைய அந்தப் பெண்மணிக்கும் உள்ள தொடர்புதான் என்ன? கணவனுடைய மரணத்தால் மனைவிக்கு ஏற்படக் கூடிய துக்கம் அல்ல அது. அந்தத் துக்கத்தில் இன்னும் ஏதோ மறைபொருள் இருந்தது. துக்கத்துக்குக் காரணமான ஏதோ ஒரு சிக்கலை மரணம் அறுத்து விட்டது; அந்தச் சிக்கல்-புதிர் வெளியாகாதபடி அதை ஓரே அடியாகத் துண்டித்து விட்டது. வெளிறிய அந்தக் கண்களில் அடங்கிக் கிடந்த ரகசியம் என்ன? கர்னல் அனேக்கின் தன்னேடு பிரேதக்குழிக்கு எடுத்துச் சென்ற ரகசியம் என்ன? அந்தப் பெண் தன் கணவனிடமிருந்து எதைத் தெரிந்துகொள்ள விரும்பினுள்? மரணத்திற்கு முன் அவனிடம் எதைக் கேட்கலாம் என்று எதிர்பார்த்தாள்? எதற்காக அவள் காத்திருந்தாள்? அவன் மரணமடைந்த காரணத்தால் அவள் என்றைக்குமே தெரிந்துகொள்ள முடியாத அந்த ரகஸ்ய விஷயம் என்ன?

திடீரென்று தோன்றிய கண்கூசும் மின்னல் வெளிச்சத்திலே, இடியின் பெரு முழக்கத்திலே, பெரிய சுவர்கள் இடிந்து விழும் ஓசையிலே கேட்பது போல மரியாவுக்கு நம்ப முடியாத ஒரு உண்மைச் செய்தி காதில் கேட்டது. 'கிரிகோரி உயிரோடு இருக்கிருன்.'

ஆற்றங்கரையிலே, வான்ஸோவ் அவளைக் கெஞ்சி மன்ருடிய சமயத்திலே அவளுக்குத் தோன்றிய தோற்றமல்ல இது. இது முற்றிலும் வித்தியாசமானது. இப்போது, பெரிய சத்தத்தோடு திரைச் சீலை கிழிந்து விட்டது 'கிரிகோரி உயிரோடு இருக்கிருன்!' என்று ஒரு

வெளிச்சம் உருண்டு, புரண்டு, ஆயிரம் குரல்களிலே ஒன்று சேர்ந்து கூச்சலிட்டது.

திரும்பவும் ராக்ஷஸ ரீதியான ஒரு பயம்; ஒரு வேளை அவள் பிந்திப் போனால்...அவள் வீடு போய்ச் சேருமுன் அவன் இறந்துவிட்டால்...அவள் கட்டாயம் சொல்லியே தீரவேண்டும் என்று தீர்மானித்த வார்த்தைகளைச் சொல்லச்சந்தர்ப்பம் வாய்க்காவிட்டால்...இதுவரைக்கும் நடந்த விஷயங்களைத் தவிர, இப்போது உள்ள மரியாவின் மனநிலையை அவன் அறியாமலே இறந்துவிட்டால்......

சீக்கிரம்! சீக்கிரம்! அவள் மற்றெல்லா விஷயங்களையும் மறந்துவிட்டாள். சட்டையை மாட்டிக்கொள்வதற்கும் காத்திருக்கவில்லை. வெளியே தெருவுக்கு ஓடினாள். கூலிக்காரன் அவளை ஏதோ கேட்டான். அவள் பதில் சொல்லவில்லை. ''சீக்கிரம்!'' என்றது தெரு. 'ஓடு'' என்று சத்தம் செய்தது டிராம் வண்டி. ''சீக்கிரம்! சீக்கிரம்!'' என்று அவளைத் துரத்தித் துரத்தித் தாளம் போட்டது உள்ளம். அவள் சமயத்தில் அங்கே போய்ச் சேர்ந்து விட்டால்... பிந்திப் போகாமல் இருந்தால்...

மாடியிலே பயங்கரமான, அமானுஷ்யமான குரலிலே அந்தப் பெண் ''அவன் இறந்து விட்டான்! இறந்து விட்டான்! இறந்துவிட்டான்!'' என்று அலறிய சத்தம் மாத்திரம் மரியாவைத் துரத்திச் சென்ற மனப் புயலிலே கேட்கவில்லை.

* * * *

மாடிக்குச் செல்லும் படிகளை இரண்டு இரண்டு படிகளாக, மூன்று மூன்று படிகளாகத் தாவிக்கொண்டே ஏறினாள். அவளுடைய உள்ளத்திலே அளவு கடந்த சந்தோஷம் நிறைந்திருந்தது; அதோடு கொடிய பயமும் இருந்தது. அவள் செய்ய உத்தேசித்திருந்த காரியத்திற்குப் பிந்திவிட்டால்...? இதுவே பயத்திற்குக் காரணம். அவள் காற்றாய்ப் பறந்து செல்வதற்கு அந்தச் சந்தோஷமும் பயமும் இரண்டு இறக்கைகளைப் போல் அவளுக்கு உதவின. சாவி! கைப் பையில் இருந்த சாவி! விரல்கள் நடுங்கப் பரபரப்போடு தன் கைப் பையிலே தேடிப் பார்த்தாள். அகப்படவில்லை. கண்ட கண்ட காகிதங்கள்,

கசங்கிக் கிடந்த ரூபில் நோட்டுக்கள், சிறு கைக்குட்டை —இவைகளே அவளுடைய கைக்கு அகப்பட்டன. அப்ப! சாவி கிடைத்து விட்டது. அவளுக்கு இருந்த பரபரப்பில், கதவிலே சாவித் துவாரம் அவளுடைய கண்ணுக்குத் தென்படவில்லை. கிரிகோரி இறக்கவில்லை. சர்க்கார் அறிக்கை எல்லாம் தப்பிதந்தான். அவளுடைய கண்கள் இனிமேல் ஒரு பொழுதும் அவனுடைய முகத்தைப் பார்க்க முடியாது; அவளுடைய கரங்கள் இனி என்றுமே அவனைத் தொட முடியாது; செவிகள் அவனுடைய குரலைக் கேட்கமுடியாது—என்றெல்லாம் அவள் நினைத்திருந்த நம்பிக்கையற்ற கொடிய நாட்கள் ஒழிந்துவிட்டன.

இது வரைக்கும் அவளை அழுத்திக் கொண்டிருந்த கொடிய பாரம் கீழே விழுந்துவிட்டது. இதுவரை அவளை மயக்கிக் கட்டிவைத்திருந்த கோரமான இராக்கனவும் அவளை விட்டு அகன்றது. உயிரோடு இருப்பவன்! கிரிகோரி உயிரோடு இருப்பவன்!

இப்பொழுதும் ...இப்பொழுதும்....இப்பொழுதும்.... கருணை மிகுந்த விதிவசமே! இப்பொழுதும் பிந்திவிடாமல் இருக்க வேணுமே! சாவியைப் பூட்டிலேயே விட்டு விட்டு, ஒரே ஓட்டத்தில் கூடத்தைத் தாண்டினாள்; அறைக்குள் பாய்ந்தாள். அவன் அங்கே உயிரோடு இருந்தான். ஜன்னலின் அருகில், மேசைக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். நல்ல ஸ்திதியிலே இருந்த கையால் ஒரு காகிதத்தில் எதையோ சிரமப்பட்டு வரைந்து கொண்டிருந்தான்.

கைகால்களை இழந்த இந்த நிலைமையிலே தேவையானதையெல்லாம் சமாளித்துக்கொள்ளக் கூடிய அளவில் அவனுக்கு இன்னும் பழக்கம் ஏற்படவில்லை. அதனாலே, அவன் முனைந்திருந்த வேலையை முடிப்பதற்காக எவ்வளவு சிரமப்பட்டான் என்பது வெகு தெளிவாகத் தெரிந்தது. தன் காரியங்களைத் தானே சமாளித்துக் கொள்ள முடியாத ஒரு குழந்தையின் நிலைமையிலேதான் அவனும் இருந்தான். பார்ப்பவர் உள்ளத்திலே, இரக்கத்தை உண்டுபண்ணும் ஒரு குழந்தையின் இயல்பிலே அவன் தோன்றினான். மரியாவின் உள்ளத்திலே கரை கடந்த இரக்கம் பொங்கி விட்டது. ஆதரவில்லாமல்

துன்பப்படும் ஒரு குழந்தையின் மனத்தை நோகப்பண்ணி விட்டாளே. அவனிடத்திலே கொண்டிருந்த காதலுக்கு அமைந்த புது நிலை ஒன்றை அவள் உணர்ந்தாள். இப்பொழுது அந்த அறையிலே இருந்தவன் அவளுக்கு வெறுங் காதலனாகவும் தோன்றவில்லை; வெறும் கணவனாகவும் இருக்கவில்லை; உற்ற தோழன் என்ற நிலையிலும் நின்று விடவில்லை. அவளுடைய அன்பை எல்லாம் கொட்டிப் பொழிந்து ஆதரிக்கத் தகுந்த நிலையிலே, அவளுக்கே சொந்தமான குழந்தையாகவும் இருந்தான். அவளுடைய பாதுகாப்பும் உதவியும் கனிந்த பராமரிப்பும் அவனுக்கு மிகவும் தேவையாக இருந்தது. காதலுக்கு அமைந்த இந்தப் புதுநிலையை அவள் உணர்ந்தவுடனே, என்றுமே அனுபவித்து அறியாத அன்பு-வெள்ளம் அவளுடைய உள்ளத்திலிருந்து மடைதிறந்ததுபோல் பெருகலாயிற்று.

"கிரிஷா!"

அவனுடைய காலடியிலே விழுந்தாள். அவனுடைய முழங்காலின்மேல் சாய்ந்தாள்; அவனுடைய காலைத் தழுவிக் கொண்டாள். இதோ! இவன்தான் அவளுடைய கிரிஷா! அன்பு மிகுந்த அவனுடைய சரீரம், இதோ இங்கே, அவளருகிலேயே இருந்தது. இன்பப் பெருக்கினாலே அவளுக்கு மூச்சு விடமுடியவில்லை.

"மரியா!" என்றான். உணர்ச்சி வேகத்திலே அவனுடைய குரல் விசைகொண்டு எழுந்தது. அவனுடைய கை அவளுடைய கூந்தலைத் தடவி மகிழ்ந்தது. இன்பம் ததும்பிய கண்களோடு அவனுடைய முகத்தை அண்ணாந்து பார்த்தாள். ஏன்? இவன்தான் அவளுடைய கிரிஷா! யுத்த ராக்ஷசனுடைய கொடிய கை அவனுடைய முகத்தைச் சிதைத்துவிட்டது. பகைவனுடைய குண்டு அவனுடைய ஒரு கண்ணைப் பறித்துவிட்டது. என்றாலும், அந்த முகம், அவளுடைய கிரிஷாவின் முகந்தான். அதில், தையல்களும், தழும்புகளும், வெட்டு வடுக்களும் இருந்தன. ரொம்பப் பக்கத்திலே இருந்து அந்த முகத்தை அவள் இப்பொழுதுதான் முதன் முதலிலே பார்த்தாள். இப்பொழுது அந்த முகம் முற்றிலும் புதிய இயல்பிலே அவளுக்குத் தோன்றியது. அவளுடைய கிரிஷாவை, அவளுடைய சொந்தக் காதலனை, அவளுக்கு இன்பமாக

இருந்தவனை, அவளுக்குரிய ஒரே ஒரு ஆருயிர் நேசனை அடையாளம் தெரிந்துகொள்ள முடியாமல் போனதற்கு அவனுடைய முகத்தில் இருந்த தழும்புகளும் வெட்டு வடுக்களுமே காரணமாக இருக்கமுடியுமா? இல்லவே இல்லை. இது உண்மை அன்று. அவளுடைய உள்ளத்திலே இப்பொழுது ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. கிரிஷா இங்கே இப்பொழுது அவளோடு இருந்தான். அவன் உயிரோடு இருந்தான். அவள் அவனைக் கட்டித் தழுவ முடிந்தது. அவனுடைய கரத்தின் ஸ்பரிசத்தைத் தன் கூந்தலின் இடையிலே உணர முடிந்தது. அவனுடைய இருதய ஓட்டத்தின் சத்தத்தைக் கேட்க முடிந்தது.

அவன் திரும்பவும் "மரியா" என்றான். அவனுடைய கண்ணில் நீர் ததும்பியதை மரியா பார்த்தாள்.

மரியா எழுந்து நின்றாள். அவனுடைய ஆசை முகத்தைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"கிரிஷா! கிரிஷா! கிரிஷா!" என்று அவள் திரும்பத் திரும்பக் கூறினாள். நெடுங்காலமாகத் தேடிய பிறகு அவள் அவனைக் கண்டுபிடித்தாள். இப்பொழுது அவள் காரிருள்-குவியலுக் குள்ளிருந்து வெளிப்பட்டு வெயில் அடிக்கும் பிரகாசமான பள்ளத்தாக்கிலே வந்து கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் உலகத்தை— இந்த உலகம் முழுவதையும் தன் கைகளில் ஏந்திக்கொண்டிருந்தாள். பொல்லாத கனவுகள் ஒழிந்துவிட்டன. கொடிய இராக்கனவுகள் அவளைவிட்டு அகன்றன. அவள் விழிப்பு நிலைக்கு வந்துவிட்டாள்! கிரிஷாவும் உயிர் பெற்று எழுந்தான்! அவள் அவனுடைய பிரகாசமான தலை-ரோமத்தை முத்தமிட்டாள். ஆஹா! எவ்வளவு மெத்தென்று நேர்த்தியாக இருந்தது கிரிஷாவின் தலை-ரோமம்! அதன் வாசனைகூட அவளுக்கு ரொம்பப் பழக்கமானது.

திடீரென்று உள்ளத்தில் பொங்கிவழிந்த இன்பப் பெருக்கால் மனக்கிளர்ச்சி அடைந்து, "நீ உயிரோடு இருக்கிறாய்! உயிரோடு இருக்கிறாய்! உயிரோடு

இருக்கிறாய்!" என்று திரும்பத் திரும்பக் கிசுகிசுத்த குரலிலே கூறினாள். அவள் பிந்திப்போகவில்லை. ஏற்ற காலத்திலேயே அவனிடம் வந்துவிட்டாள். அவள் ஒன்றையும் இழந்துவிடவில்லை. மரணதூதனுடைய செந்தழல்—கரத்தினால் எதுவுமே எரிந்துபோகவில்லை.

"நீ உயிரோடு இருக்கிறாய்! உயிரோடு இருக்கிறாய்! உயிரோடு இருக்கிறாய்!"

அவள், அவனிருந்த நாற்காலியின் கையின்மேல் உட்கார்ந்து அவனைத் தழுவிக்கொண்டாள். வெகு தொலையிலிருந்து திரும்பி வந்த ஆருயிர் நேசத்தை, தேடித் திரிந்து கண்டுபிடித்த செல்வத்தை, அவளுக்கே சொந்தமான அந்தப் பொக்கிஷத்தைத் தன் இருதயத்தோடு அழுந்தும்படி இறுகக் கட்டி அணைத்துக்கொள்ள விரும்பினாள்.

அவன் தன் கையால் அவளை அணைத்துக் கொண்டான். அவன் கையில்லாத முடவன் என்பது இப்பொழுது அவளுக்கு அருவருப்பாக இருக்கவில்லை. அவளுக்கு இரண்டு கைகள் இல்லையா? இளமையும் வலிமையும் பொருந்திய இரண்டு கைகள் இல்லையா? அவனுடைய கை முன் இருந்தபடியே வன்மை மிகுந்த திண்ணிய தவிட்டு நிறக் கையாக இப்பொழுதும் இருக்கவில்லையா?

"கிரிஷா! என் கிரிஷா!"

அவனுடைய பெயரின் இசைக்கு ஏற்றவிதமாக, அப்படியும் இப்படியும் அசைந்தாடி, தாய் தன் குழந்தையைக் கையில் வைத்துச் சீராட்டுவதுபோல், அவனையும் அசைத்து ஆட்டினாள். அணைத்துக்கொண்டிருந்த அவளுடைய கைகளுக்குள்ளே, அவளுடைய குழந்தையாக, காதலனாக, கணவனாக, ஏன் இந்த முழு உலகமுமாக, அவளோடு கூடவே இருந்தான்.

அவள் அவனுடைய பரந்த நெற்றியையும், கரிய புருவத்தையும், தெளிந்த கண்ணையும் அவனுடைய உதடுகளையும் முத்தம் இட்டாள். கண்களில் இருந்து நீர் பெருகியது. அந்தக் கண்ணீர் யாருடையது? அவளுடையதா? கிரிகோரியினுடையதா? இருவர் கண்களிலும் இருந்து கண்ணீர் பெருகி ஒன்றாய்க் கலந்தது. இருவரின் அதரங்களிலும் படிந்த கண்ணீர் உப்புக் கரித்தபோதிலும்,

இனிமையாக இருந்தது. இருவருடைய முழுத் தன்மயமும் அந்தக் கண்ணீர்ப் பெருக்கிலே கரைந்துவிட்டது. இருவரும் மெல்லச் சிரித்தார்கள். அந்த இன்பச் சிரிப்பு அதரத்திற்கு அதரம் தவழ்ந்தது.

அவன் கேள்வி ஒன்றுமே கேட்கவில்லை. வியாக்கியானங்களும் தேவையாக இல்லை. அவர்கள் முன் இருந்த இயல்பிலே திரும்பவும் அமைந்துவிட்டார்கள். நெஞ்சொடு நெஞ்சும், கண்ணொடு கண்ணுமாகப் பொருந்திப் பேச்சுக்கே தேவை இல்லாமல் யாவற்றையும் உணர்ந்து கொள்ளும் நிலையிலே நின்றார்கள்.

விநாடிகள் நிமிஷங்களாகி, நிமிஷங்களும் மணிகளாகிக் காலமும் பறந்துவிட்டது. திடீரென்று அவளுடைய கண்கள் கடிகாரத்திலே பதிந்தது. அவள் துடித்தெழுந்தாள்.

"இதென்ன? ரொம்ப நேரம் ஆயிற்றே! நான் உன்னைப் பட்டினி போட்டுவிட்டேனே! கிரிஷா, நாம் நடனம் ஆடலாம்! உன்னையும் அழைக்கிறேன்."

"நன்றி பாராட்டுகிறேன். எனக்கு ரொம்ப சந்தோஷம்." அதைச் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டவன் போலத் தலை குனிந்தான்.

முந்திய நாட்களில், அவர்கள் இருவரும், வேறு அலுவல்கள் இல்லாத மாலைக் காலத்தில் வெளியே சென்று பொழுது போக்குவதற்காக ஏற்பாடுகள் செய்யத் தொடங்குவார்கள். அப்பொழுது, 'நாடகம் பார்க்கப் போகலாமா?' என்ற கேள்வி எழும். டிக்கெட் எல்லாம் விற்பனையாகி விட்டன என்ற செய்திதான் கிடைக்கும். படம் பார்க்கப் போகலாமா? சினேகிதர்களைப் பார்க்கப் போகலாமா? இப்படி எல்லாம் ஆலோசனை பண்ணிக் கடைசியில், "உனக்குத்தான் தெரியுமே. நாமே நமக்கு ஒரு விருந்து அளித்துக் கொண்டால் என்ன?" என்ற கேள்வி எழும். முடிவிலே அந்தப்படியே ஏற்பாடு செய்து விடுவார்கள்.

உடனே விருந்துக்காக இருவரும் ஆயத்தம் பண்ணுவார்கள். மிகவும் சிறந்த கோப்பை, பீங்கான், தட்டு, பாத்திரங்களை எல்லாம் மேசைமேல் அணியாக வைப்பார்கள்

நேர்த்தியான பானங்களையும் தயாரித்து எடுத்து வைத்துக் கொள்வார்கள். "மரியா உன் சுகத்திற்காக" என்பான் கிரிகோரி. "கிரிஷா! உன் சுகத்திற்காக!" என்பாள் மரியா. இருவருமாகப் பானத்தை அருந்து வார்கள்.

பிறகு இப்படியே முந்திய நாட்களில் விருந்து நடத்திய நேரங்களைக் குறிப்பிட்டுப் பேசத் தொடங்குவார்கள். "அன்றைக்கு எவ்வளவு நேரத்திற்கப்புறம் நாம் தூங்கப்போனோம்? எவ்வளவு நேரமாக பேசிக்கொண்டிருந்தோம்?" என்றெல்லாம் பேசிப் பேசி மகிழ்வார்கள்.

மரியா பரபரப்பாக வேலை செய்யத் தொடங்கினாள். அழகிய தையல் வேலை செய்திருந்த மேசை விரிப்பை எடுத்து விரித்தாள். பானத்திற்காக இரண்டு கண்ணாடி டம்ளர்களை எடுத்து வைத்தாள். கொஞ்சம் பால்கட்டி, அது கொஞ்சம், இது கொஞ்சம் என்று மேசைமேல் தின்பண்டங்களை எடுத்து வைத்தாள். முடிவிலே ஒரு புட்டித் திராக்ஷ ரசத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"தக்கை திறக்கும் திருகாணி எங்கே? கிரிஷா! நீதான் திறக்கவேணும்" என்றாள். மறதியாக புட்டியை அவனெதிரில் மேசைமேல் வைத்தாள். அப்பொழுதுதான் மறந்துபோன விஷயம் அவளுக்கு ஞாபகம் வந்தது.

ஆனால், கிரிகோரியோ தன் தலை ரோமத்தைப் பின் பக்கமாக ஒதுக்கிவிட்டுக் கொண்டு, "அம்மா, புட்டியைத் திறக்கவேண்டுமா? ரொம்ப நல்லது அம்மா" என்றான்.

அவன் புட்டியை முழங்கால்களின் நடுவில் வைத்து துடையால் அழுத்திப் பிடித்துக் கொண்டான்; வலது கையின் தக்கை திறக்கும் திருகாணியை எடுத்து தக்கையைக் கழற்றி விட்டான்.

"அம்மா! இந்தாருங்கள்!" என்று திறந்த புட்டியை மேசைமேல் வைத்தான்.

"அடடா! எவ்வளவு சீரான வணக்க மரியாதைகள்!" என்று சொல்லிக் கொண்டே சிரித்தாள். கிரிகோரி டம்ளர்களில் பானத்தை ஊற்றினான். மரியா நாற்காலிகளை மேசை அருகிலே இழுத்துப் போட்டாள்.

"தயவுசெய்து, எனக்கு எதிரிலே ஒழுங்காக நாற்காலி ஒன்றிலே உட்காரம்மா!"

"இல்லை. நான் உன் பக்கத்திலேதான் உட்காரப் போகிறேன்."

கிட்ட, ரொம்பக் கிட்ட உட்கார்ந்து மெய் தீண்டும் இன்பத்தை அனுபவிக்க விரும்பினாள். இனிமேல் அவர்களை எதுவுமே பிரிக்கக்கூடாது; எதுவுமே அவர்களுக்கிடையிலே மனவேற்றுமையை உண்டு பண்ணலாகாது, என்று அவள் தீர்மானித்து விட்டாள்.

திராக்ஷாரசம் சூரிய வெளிச்சத்தை, தெளிந்த ஒளி மிகுந்த வானத்தின் கீழ் மலைச்சரிவில் வளர்ந்த திராக்ஷைப் பழங்களை, நினைப்பூட்டியது. சூரிய வெளிச்சமா? அன்றைக்கு ஆற்றங்கரையில் வாரன்ஸோவ் இதைப் பற்றிப் பேசவில்லையா? ஆனால் அவன் சொன்னதின் சாராம்சம், சோன்யா மட்டும் இல்லாமலிருந்தால்......

"நீ உயிரோடு இருக்கிறாய்! உயிரோடு இருக்கிறாய்! உயிரோடு இருக்கிறாய்!" என்று மரியா திடீரென்று சந்தோஷமாகப் பாட ஆரம்பித்தாள். அந்தப் பாடலின் இன்னிசை நீரருவியைப் போல் புரண்டோடியது.

"அதை இப்போதுதான் கண்டுபிடித்தாயா?" என்று கேட்டான் கிரிகோரி.

அவள் சிரித்துக் கொண்டே தன் கன்னத்தை அவன் கன்னத்தோடு வைத்தாள். பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்தது. ஆனாலும் அது உண்மைதான். அவன் உயிரோடு இருக்கிறான் என்று அவள் கண்டு பிடித்தது இன்றைக்குத்தான். அந்த இரண்டு வார்த்தைகளில் இருந்த சந்தோஷத்தையும், மன மகிழ்ச்சியையும், வெற்றியையும் அவள் உணர்ந்தது இன்றைக்குத்தான்!

"உன் நன்மைக்காக, கிரிஷா!"

"வெற்றிக்காக, மரியா!"

"வெற்றிக்காக!"

அவர்கள் கண்ணாடி டம்ளர்களை மோதிக்கொண்டார்கள். அந்தத் டம்ளர்கள் ஸ்படிக மணிகள் போல கணீரென்று ஒலித்தன.

" குடித்துவிடு, கிரிஷா."

அவள் கண்ணை மூடிக்கொண்டாள். கிரிஷாவின் பாட்டைப் பற்றி நினைத்தாள். கிரிஷா! அந்தச் சிறுவன்! தாய் நாட்டின் புல் வெளிகளில் காற்றில் தலை ரோமம் பறக்க சுற்றி வந்த கிரிஷா! காற்று அவன் கீதத்தை வெகு தூரத்திற்குத் தாங்கிச் சென்றது. கரங்களை விரித்துப் புல் வெளிகளில் நடந்து சென்ற அந்தச் சிறுவன்! கிரிஷா! மேன்மையான காரியத்தில் அவன் ஈடுபட்டிருக்கிறான். சுத்தமான காற்று அவன் முகத்திலே வீசியது.

கிரிஷாவின் குரல்! அவனைப் போல அந்தப் பாட்டை வேறு யாராலும் பாட முடியாது. பெரிஸோவ்க்காவில் இருந்தபோது—ஏன்? அதன் பிறகு தனியாக இருந்த நாட்களிலும் கூட—கிரிஷாவின் குரல் சமீபத்தில் எங்கேயோ பாடுவதைக் கேட்டிருக்கிறாள். ஒருவேளை அந்தப் பாடல் அவளுடைய உள்ளதிலேதான் கேட்டதோ?

இங்கேதான் காதலின்பத்தின் நேர்மையான உறுதி நிலை. அவளுடைய கிரிஷா—பெரிஸோவ்க்காவிலிருந்த அதே கிரிஷா—ஆப்பிள் மரத்தின் அடியிலே முன்னொரு காலத்திலிருந்த அதே கிரிஷா—இப்பொழுது வெகு தூரத்திலிருந்த யுத்தத்தின் பாதையிலிருந்து இங்கே திரும்பி வந்துவிட்டான். இப்பொழுது அவள்தான் அவனுக்கு உதவி செய்ய வேண்டும். அவனுடைய உருக்குலைந்த நிலையை எதிர்த்துப் போராடுகிற போராட்டத்திலே அவனைத் தாங்கி ஆதரிக்க வேண்டும். அவனுக்கு மிச்சமாக இருந்தது ஒரே கை; அது இடது கை. அந்தக் கையினால் அவன் செய்து முடிக்கத் தீர்மானித்திருந்த வேலையிலே அவனுக்கு உதவி செய்ய வேண்டும்.

சென்ற ஒரு மாதமாக அவளுக்கு வேதனை விளைத்த, நம்ப முடியாத கொடிய இராக்கனவு என்னவாயிற்று? ஒருவேளை அவள் ஒரு கொடிய கனவு கண்டாளா?

" மரியா......"

" என் கண்மணி, என்ன?"

" என்னை மன்னிக்க வேணும்."

அவள் பயந்துவிட்டாள்.

"என் தேனே, எதற்காக உன்னை மன்னிக்க வேண்டும்?"

"நான் அப்படி........நான் அப்படி நினைத்தபோது உனக்குத் தெரியாதா........"

அவள் குறுக்கிட்டுப் பேசினாள்.

"வேண்டாம். தேவையில்லை........இருக்கிறபடியே நன்றாய் இருக்கிறது. ஆகா! என்ன நன்றாய் இருக்கிறது!"

ஆமாம், ஆமாம். அவனுக்கு அவளைப் பற்றிய சந்தேகம் இருந்தது. அவளைவிட்டு அகன்று போக, எங்கேயாவது ஓடிப்போக, அவளைத் தனியே விட்டு எங்கேயாவது போய் ஒளிந்துகொள்ள, அவள் விஷயத்தில் என்றென்றைக்கும் இறந்தவனாகவே இருந்துவிட அவன் விரும்பினான். அவன் உள்ளத்திலே இந்தச் சந்தேகம் தோன்றிய அதே நிமிஷத்தில் அல்லவா அவளுடைய உள்ளத்திலும் பொல்லாத சிந்தனைகள் எழுந்தன? அந்தச் சந்தேகமல்லவா அவளுடைய வாழ்வு முழுவதும் இருண்டு, நெருக்குண்டு பாழாகும்படி விஷப் பூண்டுகள் அவளுடைய இருதயம் எங்கும் முளைப்பதற்கான நச்சு விதைகளை விதைத்து விட்டது? இந்தப் பழிக்கு முதன் முதலில் ஆளானது யார்? அவர்களுடைய உயிருக்கே, அவர்களுடைய காதலுக்கே, தீங்கு இழைக்கக் கூடிய பாவத்தை முதன் முதலில் செய்தது யார்? இனிமேல் இந்தக் கேள்விகளைப் பற்றி அக்கறை இல்லை. அவளுக்கும் கிரிஷாவுக்கும் இருந்த உறவு முற்றிலும் சரிப்பட்டு விட்டது. அவர்களுடைய இன்பம் எல்லையற்றது.

"கிரிஷா, எனக்காக ஒரு பாட்டுப் பாடு."

யுத்த ராக்ஷசனுடைய கொடிய கரம் அவனைத் தாறுமாறாகக் கிழித்திருந்தது. என்றாலும் அவன் அவளுடைய கிரிஷாதான். அவனுடைய குரலும், புன்னகையும் பார்வையும், எல்லாம் முன்னிருந்தபடியேதான். கடந்து போன நாட்கள்—பெரிய இன்பங்களும், சிறிய இன்பங்களும், பறந்து சென்ற துன்பங்களும், ஆழமான துயரங்களும மிகுந்த அந்த நாட்கள்—அவர்களைச் சூழ நின்று ஒன்று சேர்த்துக் கட்டிவிட்டன. பகைவனின் கத்தியும்

தாக்குதல்களும் அதையெல்லாம் மாற்றிக் கலைத்து, அழித்துத் துடைத்து விடவில்லை. கிரிஷா, கிரிஷாவாகவே அவர்களுடைய வாழ்க்கையின் முடிவு மட்டும் மாருமல் இருப்பான்.

ஆனல் 'முடிவு' என்ற வார்த்தை, சூன்யமான வார்த்தை; அர்த்தமில்லாத வார்த்தை; எந்த விதமான லட்சணமும் இல்லாத வார்த்தை. இதுதான் ஆரம்பம். இது முடிவு அன்று. இளமையும் இன்பமும் மிகுந்த பிரகாசமான ஒரு நாளின் காலைப்பொழுது உதயமாயிற்று.

"கிரிஷா, கிரிஷா, கிரிஷா!"

"மரியா!"

ஆமாம். அவை யாவும் பொல்லாத கொடிய கற்பனைக் கனவுகள்தான். அந்த நாளிலே அவனைச் சந்தித்த போது அவள் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகளைச் சற்றே நினைத்துப் பார்க்க விரும்பினுள். அவை யாவும் எப்படி நிகழ்ந்திருக்கலாம் என்று அறிய ஆசை கொண்டாள். ஆனல், அவள் கண்டதெல்லாம் அவளுக்குப் பழக்கமான,—ரொம்ப நன்ருகப் பழக்கமான — அவள் அடிக்கடி முத்தமிட்ட, பிரியமான முகந்தான். காயங்களும, தழும்புகளும் வெறும் வெளித் தோற்றந்தான். அவை அவ்வளவு முக்கியமானவை அல்ல. கிரிஷா இப்பொழுதும் கிரிஷாதான். உலகத்தில் எதுவுமே அதை மாற்ற முடியாது. அவளுடைய குரலும், புன்னகையும், அவனிடத்தில் சிறந்து விளங்கிய தன்மைகளும், அவனுக்கே சொந்தமாயிருந்த இயல்புகளும், யாவும் சிறிதுமே மாறவில்லை.

பகைவனுடைய கொடிய கை தாய் நாட்டைச் சீரழித்திருந்த விதமாகவே கிரிகோரியையும் சீர்குலைத்திருந்தது. தாய் நாட்டின் நகரங்களெல்லாம் இதே விதமாக வாய் பிளந்த காயங்களையும், கொடிய தழும்புகளையும் காட்டிக் கொண்டு இருந்தன. படையெடுத்து வந்த பகைவனுடைய காலடிகள், இரும்பு-லாடம் தரித்த பூட்ஸ்கள் அவர்களுடைய ஜென்ம தேசத்தை மிதித்துத் தேய்த்து விட்டன. ஜென்ம தேசத்தின் நகரங்கள், கிராமங்கள், பாதுக் கட்டடங்கள், ஆலைகள், உற்பத்திச் சாலைகள்

எல்லாம் நெருப்பினால் நேர்ந்த கரிய தழும்புகளால் உருக் குலைந்து போயின. மனிதர் குடியிருந்த வீடுகளும், ஊர் களும் பகைவனுடைய காலால் மிதியுண்டு மண்ணுக் குள்ளே புதைந்து போயின; இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயின. அவர்களுடைய காடுகளெல்லாம் வெட்டுண்டு பாழாகிவிட்டன. இப்படிப்பட்ட குரூர மான காட்சிகளெல்லாம் முன்னிலும் பன்மடங்கு அவர் கள் தம் தாய்நாட்டை நேசிக்கும்படி செய்துவிட்டன. தேசத்திற்கு நேர்ந்த காயங்களைக் குணமாக்கி முன்னிருந்த வாழ்வுக்கு அதைக் கொண்டு வரவும், சுதந்திர சூரிய னுடைய கொஞ்சிக்குலாவும் இளங்கதிரிலே தேசம் முழு வதும் செழிப்படைந்து, வாழ்வுபெற்று, புன்னகை பூக்க, ஆண்களும் பெண்களும் முன்னிலும் நூறு மடங்கு அதிக மான தியாகம் செய்யத் துணிந்து விட்டார்கள்.

"மரியா, நீ என் கூட இல்லாதபோது எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருந்தது" என்றான் கனிந்த குரலிலே.

அவர்கள் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் வெகு தூரத்திற்கு அப்பால் பிரிந்திருந்த நாட்களைப் பற்றிப் பேச வில்லை அவன்; திரும்பி வந்த பிறகு வைத்தியசாலையிலும், பின்பு, இதே அறையிலும் கழித்த அந்தப் பொல்லாத காலத்தைப் பற்றித்தான் பேசினான் என்பதை அவள் அறிந்து கொண்டாள்.

"நான்தான் இப்பொழுது உன்னோடு இருக்கிறேனே. எப்போதும் உன் கூடவே இருப்பேனே. நான் சொல்வது உனக்குத் தெரிகிறதா?" ஏதோ பரம ரகசியத்தைச் சொல்வதைப்போல அவனுடைய காதுக்குள்ளே கிசுகிசு என்று பேசினாள். "நீ எப்போதும் என்கூட இருப்பாய். அப்படித்தானே?"

"என் கண்ணே, எப்போதும்."

"என்னைத் தனியே விட்டுப் போக மாட்டா யல்லவா?"

"என் தேனே..........."

ஜன்னலுக்கு வெளியிலே அந்த நாள் முடிவுக்கு வந்து கொண்டிருந்தது. அந்திப் பொழுது ஆயிற்று. தெருவில்

இருட்டடிப்போடு கூடிய விளக்குகளை ஏற்றிவிட்டார்கள். பாலத்தின் வரிவடிவமும் அதற்கு அப்பால் க்ரோம்லினின் மதில்களும் அவர்களுடைய கண்களுக்குத் தெரிந்தன.

வைத்தியசாலையில் எப்படிப் பேசவேண்டும் என்று தெரியாமல் திக்குமுக்காடிய போது அகப்படாமல்போன வார்த்தைகள் எல்லாம் இப்பொழுது அவளுக்குத் தாராளமாகக் கிடைத்தன. 'அங்கே நீ அனுபவித்த அந்தக் கொடிய நாட்களை நீ பாராதபடி உன் கண்களை மறைத்து விடுவேன். முன்போலவே புன்னகை செய்ய உனக்குக் கற்றுக் கொடுப்பேன். முன்பு நீ வாழ்வை அனுபவித்த விதமாகவே வெகு இன்பமாய் அனுபவிக்க உன்னை எழுப்பிவிடுவேன். உன் பாதத்தை உறுத்தக் கூடிய கற்களையெல்லாம் பாதையிலிருந்து விலக்குவேன். உனக்கு நேரிடக் கூடிய இடறல்களை எல்லாம் வென்று வெகு ஜாக்கிரதையாக விலக்குவேன். உனக்குத் தேவையானவைகளை எல்லாம் நீ எளிதில் எட்டி எடுக்கக் கூடிய இடத்திலே வைத்துவிடுவேன். ஒரு கையில்லாத குறையை நீ ஒருபொழுதும் உணராதபடி செய்துவிடுவேன். தழும்புகள் உன்னை உருக்குலைத்து விட்டன என்று ஒருவரும் கருதாதபடி, அவ்வளவு மகிழ்ச்சியோடு உன் முகத்தை எப்பொழுதும் பார்த்து ஆனந்திப்பேன்.—என்றெல்லாம் மரியா—உள்ளத்திலே சிந்தித்தாள்.

ஆனால், இனிமேல் வார்த்தைகளே தேவையில்லை. வார்த்தைகள் இல்லாமலே, பேசாத பேச்சிலே அவர்கள் எல்லாவற்றையும் அறிந்து கொண்டார்கள். உள்ளத்தின் ஆழத்தைக் கூடத் தெரிந்துகொள்ளக்கூடிய நிலையிலே இருந்தார்கள். ஆகையால் அவளும் அறிந்தாள், அவனும் அறிந்தான்.

திடீரென்று கிரிகோரி பேச ஆரம்பித்தான்.

"ரேடியோவைத் திருப்பு, சீக்கிரம்!"

அவள் ரேடியோவைத் திருப்பினாள். கிரிகோரி திரும்பவும் சரியான காரியத்தையே செய்தான். முதலிலே ரேடியோவில் ஒரு இரைச்சல் கேட்டது. அப்புறம் கொதிக்கிற தண்ணீர் கொப்பளித்து எழும்புகிற விதமாகச்

சத்தம் கேட்டது. பின்பு, கிண்கிணி மணியோசை போல இனிமையாக ரேடியோவில் அறிக்கை ஆரம்பித்தது.

"உழைப்பாளிக்கு அருமையான சோவியத் நாடு."

ஸ்படிகம் போலத் தெளிந்து, வெள்ளிபோல கணீர் என்று ஒலிக்கும் தொனிகள். அவை ஒரு பாட்டின் வெறும் ஸ்வரங்களாக இருக்கவில்லை. மென்மையான, இளங்குரலிலே தாய் நாடு அவர்களுக்குச் செய்தி சொல்லிக் கொண்டு இருந்தது. கோடிக்கணக்கான மனிதர்களுடைய நம்பிக்கைகள், சந்தோஷங்கள், இன்பங்கள் எல்லாம் அந்தத் தொனிகளிலே விளங்கின.

கிரிகோரி அதை அறிந்தான்; உணர்ந்தான். அந்தச் செய்திகள் நிகழ்ந்த இடங்களோடு ரகசியமான மெல்லிய கயிறுகள் அவனைச் சேர்த்துக் கட்டியிருந்தனவா? அவன் சில தருணங்களில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பான். அப்பொழுது திடீரென்று திடுக்கிட்டு விழித்தெழுந்து "ரேடியோவைத் திருப்பி வையுங்கள்! சீக்கிரம்! சீக்கிரம்!" என்று கத்துவான். அப்பொழுது ரேடியோ மிகவும் இன்னிசையான குரலிலே பாடத் தொடங்கி விடும்:

"உழைப்பாளிக்கு அருமையான சோவியத் நாடு."

வேறு சில தருணங்களில் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டு இருப்பான். திடீரென்று அதை ஒரு பக்கமாக விலக்கிவிட்டுச் சீக்கிரமாக ரேடியோவைத் திருப்பி வைக்க அவளிடம் சொல்வான்.

இந்த விஷயத்தில் அவன் ஒரு நாளும் தவறினதே இல்லை. அவன், வாண வெடியிலிருந்து புறப்பட்ட ஊதா, பச்சை, பொன்னிறங்களிலே தோன்றிய நட்சத்திரங்கள் வானவெளி எங்கும் பரவுவதைப் பார்த்த பொழுது மன உறுதியோடு சொன்னான்:

"இன்றைக்கு, இன்னொரு வாழ்த்து வந்தனக் கொண்டாட்டம் இருக்கும்."

அவன் ஒரு பொழுதும் தவறுவதே இல்லை. வெகு தூரத்திற்கு அப்பால் இருந்த போர் முனையோடு சரீரப்

பிரகாரமான தொடர்புடையவன் போலவே தோன்றி ஞன். போர்வீரர்கள் இடம் பெயர்ந்து செல்லும் இயக் கங்களோடும், தாய் நாட்டோடும், நாள்தோறும் பகைவ ருடைய கைகளில் இருந்து மீட்ட நாட்டின் பாகங்க ளோடும் அதே தொடர்பு உடையவனுகத் தோன்றினன்.

"உழைப்பாளிக்கு அருமையான சோவியத் நாடு..."

தலை வாசலில் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. மரியா கதவைத் திறக்க விரைந்து சென்ருள். வாரன் ஸோவ் வெளியே நின்று கொண்டிருந்தான். அடி பட்டவள் போல மரியா பின் வாங்கினள்.

அவள் அவனை 'உள்ளே வா' என்று அழைக்க வில்லை. வாசலில் நின்றபடியே நடுக்கத்தோடு அவனை உற்றுப் பார்த்தாள்.

"நாளைக் காலையில் பத்து மணிக்கு ரயில் புறப்படும். நான் ஸ்டேஷனுக்குப் போகும் வழியில், ஒன்பது மணிக்கு வருகிறேன். தயாராக இரு."

மரியாவின் முகம் வெளிறியது. அவனிடம் எல்லா வற்றையும் சொல்ல விரும்பினள். ஆனல், குரல் எழ வில்லை.

"பிரயாணச் சீட்டு, முதலுரிமைச் சீட்டு, எல்லாம் தயாராக இருக்கின்றன."

மரியா தன் சுய உணர்வை அடைந்தாள். மெது வாக, என்ருலும் வெகு தெளிவாக, வெகு அழுத்தமாக, ஒவ்வொரு எழுத்தையும் உச்சரித்துச் சொன்னள்:

"விக்டர், நான் எங்குமே வரப் போகிறதில்லை."

அவனுக்கு விளங்கவில்லை.

"நாம் வெள்ளிக் கிழமை அங்கே போய்ச் சேர லாம்."

"நான் எங்குமே வரப் போகிறதில்லை" என்று திரும் பவும் கூறினள். "கோபம் கொள்ளாதே. ஆனல் நான்......"

"மரியா! என்ன நிகழ்ந்தது? நேற்று...ஏன்? நேற்றுத்தானே எல்லாவற்றையும் தீர்மானித்தோம்! இது என்ன, மரியா?"

அவள் தலை குனிந்தாள்.

"இல்லை, விக்டர், எல்லாம் தப்பிதந்தான்."

அவன் அவளுடைய கையைப் பற்றிக் கொண்டான்.

"நீ என்ன சொல்லுகிறாய்? எது தப்பிதம்? தப்பிதம் செய்தவர் யார்? நானா? இல்லை. நான் உன்னைக் காதலிக்கிறேன். உனக்கு அது நன்றாய்த் தெரியும். நெடுங்காலமாக உன்னைக் காதலிக்கிறேன். நீயா? நீ தானே என்னிடம் தெளிவாகச் சொன்னாய்?"

"நான் சொன்னதெல்லாம் தப்பிதம்" என்று திரும்பவும் கூறினாள்.

"தப்பிதமா? எதிலே? நீ என்னைக் காதலிக்கவில்லை என்றுதானே சொன்னாய்? அதில் என்ன தப்பிதம் இருக்க முடியும்?"

திடீரென்று அன்று நிகழப் போகும் விஷயத்தைக் கூறிய ரேடியோவின் சத்தம் அறையிலிருந்து கேட்டது. மரியா அதை உற்றுக் கேட்டாள். எந்த நகரத்தை அவர்கள் திரும்பவும் கைப்பற்றினார்கள் என்று அறிய விரும்பினாள்.

"மரியா, ஏன் பதில் சொல்ல மாட்டேனென்கிறாய்?"

அவள் சிதைந்தோடிய மனதைத் திருப்பிக் கொண்டு வந்தாள்.

"ஆமாம், உண்மைதான். நான் உன்னைக் காதலிக்கவில்லை யென்றுதான் சொன்னேன். என்றாலும் உன்னோடு ஓடிவிட ஆயத்தமாக இருந்தேன்......"

"ஆமாம். அப்படித்தான் சொன்னாய்."

"ஆனால் நான் சொன்னது தப்பு."

"கொஞ்சம் கவனி, எனக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்கிறாயே! என்ன நடந்தது?"

"ஒன்றுமில்லை. ஒரே ஒரு விஷயந்தான் எனக்குத் தெரியாமலிருந்தது."

"என்ன விஷயம்?"

"நான்......நான்......"

"உனக்குப் புண்ணியமுண்டு மரியா, இதெல்லாம் என்னவென்று எனக்குத் தெளிவாகச் சொல்லு."

அவள் வாரன்ஸோவின் தலைக்கு மேலே, கதவுப் பக்கமாக எட்டிப் பார்த்தாள்; நன்றாய் மூச்சு வாங்கிக் கொண்டாள்.

"நான் கிரிகோரியைக் காதலிக்கிறேன் என்ற விஷயத்தைப் பற்றித்தான்."

அவன் ஒரு அடி முன்நோக்கி வந்தான்.

"மரியா, என்ன சொல்லுகிறாய்?"

மரியா திரும்பவும் மௌனம் சாதித்தாள். அவளுடைய உள்ளத்திலே இன்பக் கனல் கொழுந்து விட்டு எரியலாயிற்று. இதே கனல்தான் இருள் மிகுந்த அந்தப் பழைய நாட்களிலே அவளுக்கு சக்தியையும், ஆனந்தத்தையும் அளித்தது. சத்தியத்தின் சக்தியை அவளுடைய வார்த்தைகளுக்கு அளித்தகனலும் அதுவே. அந்த இன்பக் கனல்தான் மனிதர்களைக் காக்கவும், நம்பிக்கையற்ற இருளிலிருந்து அவர்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரவும் பெருந்துணையாக இருந்தது. அவளுக்கு இயல்பாக இருந்த சக்தி, சித்தம், ஊக்கம் எல்லாம் அவளுக்குத் திரும்பவும் சொந்தமாகிவிட்டன.

"நீ அவனோடு இருக்க விரும்புகிறாயா?" என்று வாரன்ஸோவ் கம்மிய, உயிரற்ற குரலிலே கேட்டான்.

"ஆமாம்; அவனோடுதான் இருக்க விரும்புகிறேன்." என்று சத்தியம் செய்து கொடுப்பவள்போல அவன் சொன்ன வார்த்தைகளையே திரும்பச் சொன்னாள்.

"இவ்வளவு பெரிய தியாகமா, மரியா........"

அவள் குறுக்கிட்டாள்:

"விக்டர், நீ நினைத்தது முற்றிலும் தவறு. இதில் தியாகமே இல்லை."

"தியாகமில்லாவிட்டால் வேறு என்ன?"

"தனி............தனிக் காதல்" என்று அவள் வெகு நிதானமாகவும் தெளிவாகவும் பதில் சொன்னாள்.

வாரன்ஸோவ் நடுங்கினான். அவளுடைய குரல் இன்னிசை மிருந்த கீதமாய் ஒலித்தது. அவளை முதன் முதலில் சந்திப்பவன்போல ஏற இறங்கப் பார்த்தான் வாரன்ஸோவ். மாலையிலே அணையும் சூரியனுடைய செங்கதிரில் மூழ்கிப் பொன்னிறமாகப் பிரகாசிக்கிற மேகம்போல விளங்கிய கூந்தலோடு அவன் எதிரே நின்றாள். அவளுடைய முகத்தில் சாந்தம் குடிகொண்டு இருந்தது. அவளுடைய தெளிந்த நிர்மலமான கண்கள், அவனுடைய கண்களை நிலைபெயராமல் உற்று நோக்கின. அவன் பிரமித்துப் போனான். இப்பொழுது அவன் எதிரே நின்ற இந்தப் பெண்தான் அந்தப் பழைய மரியா, 'கிரிகோரி இறந்துவிட்டான்' என்ற செய்தி வருவதற்கு முன்னே அவன் பார்த்த மரியா இவள்தான். கிரிகோரியோடு இன்ப வாழ்க்கையிலே ஈடுபட்டு இருந்தபோது, அவன் பார்த்த மரியா இவள்தான்.

அவளுடைய கண்ணின் கீழே இருந்த கருமையும், உதட்டின் ஓரங்களில் இருந்த சுருக்கங்களும் மறைந்து விட்டன. தெய்வீகக் கரமொன்று சில மாதங்களாக அனுபவித்த துன்பத்தின் காரணமாய் தோன்றிய அந்தக் கருமையையும், சுருக்கங்களையும் முற்றிலுமாகத் துடைத் தகற்றி, குழந்தையின் புதுமுகம் போன்ற இயல்பையும், அக ஒளியையும் அமைத்துவிட்டது.

ஆமாம், இவள்தான் அந்தப் பழைய மரியா! இதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை.

"சரி, அப்படியானால், மரியா, உனக்கு எல்லா நலன்களும் உண்டாகட்டும்" என்றான் வாரன்ஸோவ். அவன் தலையிலேதான் தொப்பி இருந்தது; கையிலேதான் அவனுடைய கைப்பெட்டியும் இருந்தது. என்றாலும் எதையோ தேடுபவன் போல சுற்று முற்றும் பார்த்தான்.

"நான் சந்தோஷமாக இருக்கிறேன். விக்டர், என் மீது கோபம் வேண்டாம். நீ..........."

"என்னைப் பற்றி நீ கவலைப்படத் தேவையில்லை" என்று குறுக்கிட்டுச் சுறுக்கென்று பேசினான். "நீ கவலைப்படத் தேவையில்லை."

அறையிலிருந்து கிரிகோரி அவளைக் கூப்பிட்டான்.

"மரியா, சீக்கிரம் வா."

கதவை அடைத்துவிட்டு வான்ஸோவ் வெளியேறுவதற்கு முன்னே அவள் மறைந்து விட்டாள்.

"எங்கே போயிருந்தாய்? வெற்றி விழாக் கொண்டாட்டத்தின் முதல் அதிர் வேட்டு வெடித்து விட்டதே."

அவனிருந்த நாற்காலிக்-கையின் மேல் அவள் உட்கார்ந்து தன் கையால் கிரிகோரியின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். பீரங்கிகளின் வெடி முழக்கத்தால் வாயு மண்டலம் அதிர்ந்தது. வெகு தூரத்திலே செங்கனல் ஒன்று ஜொலித்தது. அதிர் வெடிகள் வெடித்து கரிய வானத்தினூடே பச்சை, ஊதா, பொன்னிற நட்சத்திரங்களாகச் சிதறி விழுந்தன; இடி முழக்கம் போல அதிர்ந்து, திக்கு திசைகளுக்கு அப்பால் புரண்டு மறைந்தன. பூமி அதிர்ந்து அலறியது. வானவெளியிலே சிதறிய நட்சத்திரங்கள் பல நிறங்களோடு பூமியை நோக்கி விழுந்து கொண்டு இருந்தன. சிவப்பான மின் வெளிச்சமொன்று ஆகாயததில் சற்று நேரம் இருந்த பிறகு காற்றில் அடிபட்ட இலை கீழே விழுவதுபோல மெதுவாகப் பூமியை நோக்கி இறங்கி வந்தது. இடி முழக்கத்தின் எதிரொலியும் மறைந்தது. திரும்பவும் வெளியே இருள் குவிந்தது.

"இரண்டு!" என்று எண்ணினான் கிரிகோரி. கண்ணைப் பறிக்கிற பேரொளியொன்று திரும்பவும் வானத்திலே பரவியது. திடீரென்று கொத்தளங்களோடு கூடிய மதில்களும் க்ரெம்லின் கோபுரங்களும், ஒளி பெற்றுப் பிரகாசித்தன. வெற்றி விழாக் கொண்டாட்டத்தின் அதிர் வேட்டு முழங்கியது. இரவும் பகல்போலப் பிரகாசித்தது.

"ஆகா! அதோ! அங்கே பார்!"

வாண வெடிகள் பச்சை வர்ண ஒளி-ஊற்றாக வானத்திலே பீறிட்டு எழுந்தன. பிறகு பொறிகளைச் சிதறி, வில்லோச் செடியின் கிளைகள் போல வில் வளைவாக வளைந்து விழுந்தன; இமைப் பொழுதிற்கு ஆகாயத்திலே

தோன்றி மறைந்தன. அவை மறைந்த பொழுது பொன் நிறமான பொறிகள் மேகமாகச் சிதறின. அந்தப் பொன்னிறமான பொறிகள் இருண்ட வானத்திலே துடி துடிப்போடு பிரகாசித்தன.

"மூன்ருவது அதிர்வேட்டு!"

மரியா, மூன்ருவது அதிர் வெடியை வெகு தீவிரமாக எதிர்பார்த்தபடியே கிரிகோரியின் கையை அழுத்திஞள். திரும்பவும் கண்ணைப் பறிக்கும் மின்ஞெளியும், நட்சத்திர மழையும் தோன்றின.

"பொன்மயம்! பொன்மயம்!"

இத்தகைய காட்சியை அவள் இதற்குமுன் எங்கே பார்த்திருந்தாள்? ஒரு ஆப்பில் மரத்தின் இருண்ட கிளை களின் வழியாகப் பொன் மயமான நட்சத்திரங்கள் அவளுடைய இன்ப மயமான கண்ணெதிரே ஒரு காலத் தில் பிரகாசித்தன. அந்த ஆப்பில் மரம் இப்பொழுது வளர்ந்து விட்டது. அதன் நிழல் மிகுந்த கிளைகள் தாய்-நாட்டின் கடைசி எல்லை வரைக்கும் பரவி சலசலத்தன. அந்த ஆப்பில் மரத்தின் பசுந்தழை போர்த்த, மிகப் பெரிய மகுடம் தாய் நாட்டிலே எல்லைக்கு எல்லையாகப் பரவி யிருந்தது. பொன் மயமான நட்சத்திரங்கள், மாணிக்க மயமான நட்சத்திரங்கள், மரகத மயமான நட்சத்திரங் கள் எல்லாம் அந்த கரு நிழல் குவிந்த கிளைகளினூடே ஜொலித்தன. இன்ப விழிகள் அந்த நட்சத்திரங்களைக் கண்டு களித்தன. மகிழ்ந்து மலர்ந்த அதரங்கள், இனிய கண்ணீர்ப் பெருக்கினூடே புன்னகை பூத்தன. தாய் நாடெங்கும் இன்ப ஒளி வீசி மலர்ந்து பிரகாசித்தன. தாய் நாட்டின் வீரர்கள் மேற்றிசை நோக்கி விரைந்து சென்ருர்கள். அவர்களுடைய சட்டைகளிலே அணிந் திருந்த சிவப்பு நட்சத்திரங்கள் சுதந்திரத்தை வாக்களித் துக் காரிருளிலே பிரகாசித்தன.

"மரியா" என்ருன் கிரிகோரி மெல்லிய குரலிலே.

அவள் ஒரு குழந்தைபோல அவனைத் தழுவி நின்ருள். இவன்தான் அவளுடைய கிரிஷா. இவனுக்காகத்தான் பீரங்கிகள் முழங்கின; வானம் பல வர்ணமான நட்சத் திரங்களைப் பொழிந்து பிரகாசித்தது. அவனுடைய

தைரியத்தை, அவன் அடைந்த காயத்தை, அவன் சிந்திய ரத்தத்தை இந்த அதிர்வேட்டுக்களால் வாழ்த்தியது மாஸ்கோ நகரம். அவள் தன் கணவனின் உருக்குலைந்த முகத்தைக் கடைக்கண்ணுல் பார்த்தாள். அந்த உருக் குலைந்த முகம் அறைக்குள் பெருகி வந்த ஒளிப்-பிரவாகத் திலே வெகு தெளிவாகத் தெரிந்தது. கண்ணின் கீழே, அவனுடைய கன்னத்தில் இருந்த தழும்பை அவள் மெது வாகத் தொட்டாள். அவனுடைய முகத்தில் அந்த இடத்திலேதான் யுத்த ராக்ஷசனுடைய கரத்தின் அடி விழுந்தது. பகைவன் எறிந்த குண்டு அங்கேதான் தாக் கியது. அவளுடைய ஆருயிர்க் காதலனுடைய முகத் திலே ஏற்பட்ட தழும்பைப் பாராட்டுவதற்காகவே பீரங்கிகள் வெடித்து முழங்கின. அதற்காகவே அந்த ஜோதியெல்லாம் வான வீதியிலே தோன்றின.

நல்ல ஸ்திதியிலே இருந்த அந்த ஒரே கையால் அவளு டைய இடையை அவன் வெகு ஜாக்கிரதையாக அணைத் துக் கொண்டான். வெள்ளைத் தழும்புடைய விரல் இருந்த தாம்பிர வர்ணமான வலிமை மிக்க மற்றக் கை ஒடிந்து போயிற்று. கை இருக்க வேண்டிய இடததிலே வெறும் சட்டைக் கைதான் இருந்தது. அவள் அந்தச் சட்டைக் கையை மெதுவாய் வருடினுள். கிரிகோரி, இழந்து விட்ட அந்தக் கையினுலே பகைவருடைய எஃகு வரிசை யைப் பிளந்து சுதந்திரத்துக்காக ஒரு பாதை வகுத்து வைத்தான்; தாய் நாட்டுக்கு விலங்கிடுவதற்காகப் பகை வன் தயாரித்த சங்கிலிகளை உடைத்தெறிந்துவிட்டான்.

"பத்து!"

தாய் நாட்டுப் போர்வீரர்கள் மேற்றிசை நோக்கி மேலும் மேலும் முன்னேறிச் சென்றார்கள் நல்ல காலம் வருகிறதென்று முன்னதாகவே உணர்த்திய சுதந்திர அடையாளமாக விளங்கும் சிவப்பு நட்சத்திரங்கள் அவர்க ளுடைய தொப்பிகளிலே சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. வெகு தூரத்திற் கப்பால் எங்கேயோ ஒரு போர்க்களத்திலே அவன் ஒரு கையை இழந்து விட் டான். அதனுல் என்ன? பரவாயில்லை. அவன் அந்தப் போர்வீரர்களோடு சேர்ந்து மேற்றிசையிலே முன் னேறிய படையோடு சென்றான். அவனுடைய தலை

நிமிர்ந்து நின்றது. அவன் ஒரே அளவிலே, உறுதியாக அடி பெயர்த்து நடந்தான். அவனுடைய கிரிகோரி லட்சம் பேரிலே சிறந்தவன். இந்த உலகத்திலே அவன் ஒரு தனி மனிதன்! அவர்கள் எல்லாம் வெற்றிப் பாதையிலே மேற்றிசை நோக்கி நடந்தார்கள். பின்வாங்கிய அந்தக் கொடிய இருள் மிகுந்த நாட்களிலே அழிந்தவர்களும், காயமடைந்தவர்களும், நொண்டிகளும், குருடர்களும், யாவரும் 'வெற்றி, வெற்றி' என்று மேற்றிசை நோக்கி அவர்களோடு சென்றார்கள். இவர்கள் யாவரும் செம்படை வீரரோடு முன்னேறிச் சென்றனர். அந்த வீரர்களுடைய வலிமை முழுவதும் இவர்களுடைய வலிமையினால் ஆனது. அவர்களுடைய ரத்தத்தில் இவர்களுடைய ரத்தம் கலந்திருந்தது. அவர்களுடைய தைரியம் இவர்களுடைய தைரியத்தினால் ஆனது. தேச பக்தியின் சிறு உணர்ச்சியும், விரோதத்திலே எழுந்த சிறு வார்த்தையும், சிறு உயிரும், ஒரே ஒரு மணி நேரத்திற்கே நீடித்திருந்த சிறு துன்பமும், எதுவுமே பாழாகிப் பயனற்றுப் போகவில்லை. க்ரெம்லின்—மதில்களுக்கப்பால் இப்பொழுது பீரங்கிகள் முழுங்கிக் கொண்டிருக்கின்றன. இவை யாவும் வெற்றி விழாவின் அங்கமாக அமைந்தவை.

"க்ரெம்லினுக்கு மேல் நட்சத்திரங்கள் கடந்து செல்லும் வரைக்கும் காத்திரு" என்றான் கிரிகோரி. ஒரு பொழுதும் அணையாத நெருப்புப்போல் பிரகாசிக்கிற மாணிக்கக் கற்களாக விளங்குகிற நட்சத்திரங்கள் ஏற்கெனவே பிரகாசமாக எரியத் தொடங்கி விட்டதாக மரியாவுக்குத் தோன்றியது. அவை எரிந்து கொண்டிருப்பவை.—எப்பொழுதும் எரிந்து கொண்டிருப்பவை; இருள் குவிந்த அந்த நாட்களிலும் வெற்றி முரசு முழங்குகிற இந்த நாட்களிலும் எரிந்து கொண்டிருப்பவை. அந்த நட்சத்திரங்களின் ஜோதி அவர்களுடைய இருதயங்களிலும் கண்களிலும் எந்த நேரமும் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டே இருப்பது.

"பதினைந்து!"

வெற்றி விழாக் கொண்டாடிய அதிர் வேட்டுக்கள் முழங்கின. வானம் தீப்பட்டு எரிந்தது. அவர்களுடைய உள்ளத்திலே மகிழ்ச்சி ததும்பி வழிந்தது. நேராகச்

செல்லும் பிரகாசமான பாதை—இன்பப் பாதை—அவர்களுக்கு எதிரிலே திறந்தது.

தாய் நாட்டின் சார்பிலே மாஸ்கோ நகரம் கிரிகோரிக்கு வாழ்த்து வந்தனம் அளித்துக் கொண்டிருந்தது. வெற்றிக் களிப்பால் வெறிகொண்டு நெருப்பாலும், பொன்னாலும், நட்சத்திரங்களாலும் அவனுக்கு வாழ்த்து வந்தனம் அளித்துக் கொண்டிருந்தது.

"வெற்றியின் விலை........" இப்படிப் பேசினவன் யார்? அவன் எப்பொழுது பேசினான்? வாரன்ஸோவ் தான்! நிஜமாகவே அவன்தான். ஆனால், அவன் கூறியது உண்மை அன்று. அவை யாவும் முற்றிலும் தவறு. ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லை வரையிலும் தாய் நாடு முழுவதும் அடைந்த விடுதலையோடு, சுதந்திரத்தின் ஆனந்த பரவசத்தோடு வெற்றியின் குதூகலத்தோடு ஒப்பிடக் கூடியது ஒன்றுமே இல்லை. மிகப் பெரிய மரத்திலே ஒரு இலை போல மனிதன் வளரவில்லையா? பேரிரைச்சலோடு ஓடும் நதியின் நீரிலே ஒரு துளியாக அவன் ஒழுகி ஓடவில்லையா? மேகங்களுக்கும் அப்பால் வானளாவிய மலைச் சிகரத்தில் இருக்கும் ஒரு பாறையிலே சிறிய ஸ்படிக மணியாக அவன் வாழவில்லையா?

ஆமாம், வஸ்யாவின் காதலி—அந்த நாட்டுப் புறத்துப் பெண் சொன்னது சரிதான். மாஸ்கோ நகரம், தாய் நாட்டின் சார்பிலே, எண்ணிறந்த அதிர் வெடிகளால் வாழ்த்து வந்தனங்கள் அளித்துக் கொண்டாடுகிற கிரிகோரியை, அவளுடைய கிரிகோரியை, எல்லாரும் பார்க்கட்டும்!

"தியாகமா?" ஐயோ பாவம்! அந்த வாரன்ஸோவ்! அவனுக்கு ஒன்றுமே விளங்காது. பரிதாபமான வாரன்ஸோவ்! அவன் அடுத்த நாள் அங்கிருந்து போய்விடுவான். வெகு தூரத்திற்கப்பால் எங்கேயாவது போய் விடுவான். அனேகமாக, அவளும் உயிரோடு இருக்கும் நாளெல்லாம் அவனைப்பற்றி நினைக்கமாட்டாள். அவன் மூடத்தனமாக நடந்து கொண்டான். அதெல்லாம் என்ன என்று அவன் தெரிந்துகொள்ளவில்லை; எல்லாம் "மெய்க்காதல்."

" மரியா, என்ன சொல்கிருய்? "

" அதுவா? ஒன்றும் இல்லை. ஏதோ எனக்குள்ளே பேசிக்கொண்டிருந்தேன்."

" காதல்!" என்று முழங்கின வாண வெடிகள்.

" காதல்!" என்று முழங்கின பீரங்கிகள்.

" காதல்!" என்று வானமெங்கும் பச்சை, ஊதா, பொன் நிறங்களால் ரகசிய எழுத்துக்களிலே எழுதி விட்டார்கள், ஒளி மூலமாகச் செய்தி அனுப்புகிறவர்கள்.

நண்பனைப் போன்ற அந்த நல்ல ஆப்பில் மரம், இலைகளின் சல சலப்போசையோடு வளர்ந்து, தன் கிளைகளால் தாய் நாடு முழுவதையும் தழுவி நின்றது. அதன் கிளைகளிலே வெற்றி–நட்சத்திரங்கள் பிரகாசித்தன. ஆழ்ந்து, நிலைத்த யதார்த்தமான இன்ப கீதத்தோடு தலைசிறந்து விளங்கிய, ஆனந்த வெள்ளம் உலகம் எங்கும் வழிந்து ஓடியது.

ஸ்ரீ காமராசர் பல்கலைக்கழக அல்லை தி. சு. சண்முகம் நூலகம்

Printed by Shakti Press Ltd., (Shanti Press), Royapettah, Madras.
P. I. C. No. MS. 23

அடுத்து வெளிவரும் புத்தகங்கள்

●

வ. ரா. எழுதிய

வாழ்க்கைச் சித்திரம்

பல சிறப்பட்ட
கட்டுரைகள் தொகுப்பு

●

சகுந்தலா ராஜன் எழுதிய

வனிதாலயம்

நாவல்

●

பவானி பிரசுரம்

பவானி பிரசுரம்

ராயவரம், புதுக்கோட்டை சமஸ்தானம்

வ. ரா.

சுந்தரி (நாவல்) ரூ. 5-0

வாண்டா வாஸிலெவ்ஸ்கா

வான வில் ,, 5-0

'லக்ஷ்மி'

பவானி ,, 2-8

சகுந்தலா ராஜன்

வனிதாலயம் ,, (அச்சில்)

கொத்தமங்கலம் சுப்பு

மஞ்சி விரட்டு (கதைத் தொகுப்பு) 3-8

'குகப்ரியை'

சஞ்சீவி ,, 3-4

துர்கனேவ்

ஜெயகாதல் கீதம் (கதை) 0-8

(தபால் செலவு தனி)